உ

ஸ்ரீமத் பகவத் கீதை

அனுபவ உரை

(முதல் மூன்று அத்தியாயங்கள்)

வாளாடி அ. கிருஷ்ண சர்மா இயற்றியது
ரிட்டயர்டு ஹைதராபாத் இஞ்சினீயர்
நெ. 140, மலைக்கோட்டை, வடக்குத் தெரு
திருச்சினாப்பள்ளி

[நவம்பர் 1949]

[விலை ரூ. 1—4—0

உ

ஸ்ரீமத் பகவத் கீதை


அனுபவ உரை

(முதல் மூன்று அத்தியாயங்கள்)

வாளாடி அ. கிருஷ்ண சர்மா இயற்றியது
ரிட்டயர்டு ஹைதராபாத் இஞ்சினீயர்
நெ. 140 மலேக்கோட்டை, வடக்குத் தெரு
திருச்சிறுப்பள்ளி

[நவம்பர் 1949]

 [விலை ரூ. 1—4—0.



வாலாடி அ. கிருஷ்ண சர்மா

உ

ஸ்ரீமத் பகவத் கீதை.

ஓம் ஸ்ரீ வாசுதேவாய நம:

முகவுரை

குருவணக்கம்—சாந்தி பஞ்சகம்

1. உயிர்க்கல் பிள்ளையாரே - கல்லெழுத்துக்குள் புதைந்திருக்கும் உயிரெழுத்தை யுணர்வால் காட்டுவாய்
2. வள்ளிக்கு வாய்த்த பெருமாளே - உள்ளத்தை நோக்க அருள்வாயே
3. குருவாய் வருவாய் அருள்வாய் குகனே குருபரனே.
4. போலிப் பண்டிதனுகாமல் என்னை ரக்ஷிப்பாய் அண்ணமலை அண்ணு ரமண
5. என் அந்தக் கரணத்திலுள்ள ரகசிய சிந்தனைகளுக்கு சாக்ஷியாயிருக்கும் அந்தர்யாமியே, தலைவனே, உன் அருளாகிய தாளால் எண்ணங்களை அழுந்த புதைத்து நடராஜ நடனம் புரிவாய்.

கலியுக ஆரம்பத்துக்கு சற்று முன்னல் அதாவது இற்றைக்கு சுமார் 5050 வருஷங்களுக்கு முன்னல் பாண்டவர்களும் துரியோதனுதியர்களும் போர்புரியத் தயாராய் இருந்த யுத்த பூமியாகிய குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனனுடைய தேர்ப்பாகனுகயிருந்த ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு இந்த பகவத் கீதையை உபதேசித்ததாக ஸ்ரீ வியாசர் எழுதிய மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 18 அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டு மொத்தம் 700 சுலோகங்கள் அடங்கிய இந்த கீதையை யுத்த பூமியின் கண்ணே இரண்டு சேனைகளுக்கு மத்தியிலுள்ள ஆவாரத்தில் உபதேசிப்பது எப்படி சாத்தியமாகுமென்று அறியாமையோடு கூடிய சிலர் சந்தேகிக்கிருர்கள். இதற்கு சமாதானம் என்னவென்ருல் கீதையில் அடங்கிய உயிர் அனுபவத்தை அற்ப நேரத்தில் பக்குவமுடையவனுக்கு நாடகக் காட்சியைப்போல காட்டக்கூடிய ஆற்றல் பகவானிடம் உண்டு. அதையே உயிரில்லாத செத்த எழுத்துக்களால் எழுதுவதற்கு 700 சுலோகங்களாயிருக்கின்றன. இதின் உண்மை ஆத்மாநுபவம் அடைந்தவனுக்குத்தெரியும்.

இற்றைக்கு சுமார் 1150 வருஷங்களுக்கு முன்பு பிறந்த ஸ்ரீ சங்கரர் இந்த பகவத் கீதைக்கு உரை எழுதினர். அவருடைய உரையையே சத்தியமாகக்கொண்டு தங்களுடைய பகுத்தறிவையாவது அனுபவத்தையாவது கொஞ்சம்கூட உபயோகிக்காமல் அனேகம்பேர்கள் கிளிப்பிள்ளையைப்போல அனேக பாஷைகளில் உரைகள் என்னும் பெயரால் ஸ்ரீசங்கரர் உரையை அப்படியே ஒப்பித்திருக்கிறார்கள். இந்த உரைகளை வைத்துக் கொண்டு கீதையை படிக்க முயலுவோர்கள் குழப்பத்தை அடைந்து ஒருவித முடிவுக்கும் வரமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் என்னவெனில் அவர்கள் உரை பிறகாரம் ஓரிடத்தில் கர்மயோகமே உயர்ந்ததென்றும், ஓரிடத்தில் பக்தியோகமே உயர்ந்ததென்றும் ஓரிடத்தில் ராஜயோகமே உயர்ந்ததென்றும், ஓரிடத்தில் ஞானயோகமே உயர்ந்ததென்றும், கர்மம் உயர்ந்ததா, ஞானம் உயர்ந்ததா என்று நிச்சயித்துச் சொல்லும் என்று அர்ச்சுனன் கேட்ட கேள்விக்கு பகவான் நேரான பதில் சொல்லமுடியாமல் போனதாகவும் அவர்கள் உரை எழுதியிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் உரை புத்தி குழப்பத்தை உண்டுபண்ணுகிறது. அவர்களுக்கு புத்தக ஞானம் இருந்ததேயொழிய அனுபவ ஞானமில்லாததால் பகவான் கீதையை எந்த அர்த்தத்தில் சொல்லியிருக்கிறாரோ அதற்கு நேர் மாறாக அவர்கள் உரை எழுதி இந்த 1150 வருஷங்களாக தாங்கள் கெட்டதுமல்லாமல் மற்றவர்களையும் முன்னுக்குவராதபடி கெடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அனுபவ ஞானமில்லாதிருந்தும் அனுபவ ஞானமுள்ளவர்களைப்போல பாசாங்கு செய்வதில் அவர்கள் சமர்த்தர்கள். ஆதலால் பாமரர்களும் புத்தகப் படிப்பில் நிபுணர்களும்கூட அவர்கள் சொல்லியிருப்பதே உண்மையென்று நம்பி ஏமாந்து போகிறார்கள். அவர்கள் வலைக்குள் அகப்படாத ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ மாணிக்கவாசகர், ஸ்ரீ தாயுமானவர், ஸ்ரீ அருணகிரியார், ஸ்ரீ ராமலிங்கசுவாமி, ஸ்ரீ ரமணமகரிஷி போன்ற சிலர்களே உன்னத நிலையை அடைந்திருக்கிறார்கள்.

பகவத் கீதையில் உள்ளபடி தத்துவங்களின் பிரிவு பின்வருமாறு:—பூமி, ஜலம், நெருப்பு, வாயு, ஆகாசம் ஆகிய தூல

பூதங்கள் 5, தூல மனது 1, ஞானேந்திரியங்கள் 5, கர்மேந்திரியங்கள் 5, ஆக மொத்தம் 16ம் தூலதத்துவங்கள்.

சூக்ஷ்ம மகாபூதங்கள் 5, சூக்ஷ்ம மனது 1, புத்தி 1, அவ்யக்தம் 1, ஆக மொத்தம் 8ம் சூக்ஷ்ம தத்துவங்கள்.

இவைகளில் 23வது தத்துவமாகிய புத்தியின் கண்ணே இருப்பவர்களே எல்லா ஜீவர்களும். இதற்கு அடுத்தபடியாக மேலேயுள்ள 24வது தத்துவமாகிய அவ்யக்தத்தில் இருப்பவனை க்ஷரபுருஷன் என்றும் 25வது தத்துவமாகிய அந்ய அவ்யக்தத்தில் இருப்பவனை அக்ஷர புருஷன் என்றும் 26வது தத்துவத்திலிருப்பவனை சிருஷ்டி செய்யும்பொழுது புருஷோத்தமனென்றும் வாசுதேவனென்றும், சிருஷ்டி செய்யாதபொழுது நிஷ்தத்துவமாகிய பிரஹ்மமென்றும் (சிவமென்றும்) சொல்லப்படும். 23வது தத்துவமாகிய புத்தியிலுள்ள ஜீவனானவன் தன்னுடைய உண்மையான சொரூபமாகிய 26வது தத்துவமாகிய புருஷோத்தமனை மறந்து 22வது தத்துவம் முதல் 1 வரையுள்ள கீழ் தத்துவங்களில் பின்னிக்கொண்டு, சரீரங்களே தானென்றும் மனைவி புத்திர தனதான்யாதிகளை தன்னுடையதென்றும் அபிமானித்துக்கொண்டு பிறப்பு இறப்பாகிய சம்சார சக்கரத்தில் சுற்றுகிறான். இந்த ஜீவனானவன் தனக்கு ஆதாரமாகிய 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷனை புருஷோத்தமனது அருளால் முதலில் தரிசித்து, பின்னர் க்ஷரபுருஷனுக்கு ஆதாரமாகிய 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷன் மூலமாய் இந்த அக்ஷரபுருஷனுக்கு ஆதாரமாகிய 26வது தத்துவமாகிய புருஷோத்தமனை எப்பொழுது தரிசிக்கிறானோ அப்பொழுது அவனுக்கு பிறப்பு இறப்பாகிய சம்சாரம் நிவிருத்தியாகும். இதுவே மோக்ஷம், விடுதலை பரமபதம் என்று பலவாறாக சொல்லப்படும். இந்த உயர்ந்த நிலையை அடைவதற்கு உபாயம் பகவான் கீதை 8-12, 8-13 சுலோகங்களில் சொல்லியிருக்கிறார். அவைகளாவன :

(8-12) ஸர்வ த்3வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி3 நிருத்3ய ச
மூர்த்4நி ஆ4தாய ஆத்மந: ப்ராணம் ஆஸ்தி2த: யோக3தா2ரணாம்

(8-13) ஓம் இதி ஏகாக்ஷரம் ப்3ரஹ்ம வ்யாஹரந் மாம் அனுஸ்மரந்
ய: ப்ரயாதி த்யஜந் தே3ஹம் ஸ: யாதி பரமாம் க3திம்

இவைகளுக்கு ஸ்ரீசங்கரர் கீழ்கண்ட அர்த்தம் கொடுத்திருக்கிறார் :—எல்லா கதவுகளையும் அடைத்துவிட்டு மனதை ஹ்ருதயத்தில் கட்டுப்படுத்தி பிராணனை தலையில் நிற்கும்படி செய்து யோகதாரணையில் ஊன்றி பிரஹ்மமாகிய ஓரெழுத்தாகிய 'ஓம்' என்னும் சப்தத்தை உச்சரித்து என்னையே நினைத்துக்கொண்டு எவன் சரீரத்தை விட்டுச்செல்லுகிறானோ அவன் மேலான பதவியை அடைகிறான்.

அனுபவ ஞானமுள்ளவர்கள் இப்படி அர்த்தம் எழுதமாட்டார்கள். ஏனென்றால் இந்திரியங்கள் மனம் எல்லாம் ஹ்ருதயத்தில் லயத்தை அடைந்திருக்கும்பொழுது ஓம் என்னும் சப்தத்தை எப்படி எந்த கருவியால் உச்சரிக்கமுடியும்? உச்சரிப்பதற்காக லயத்தை அடைந்திருந்த மனதையும் இந்திரியங்களையும் வெளியே கொண்டு வந்தால் இதற்காக கீழே வரவேண்டியிருக்கிறதால் மறுபடியும் மேலுள்ள தத்துவங்களுக்கு எவ்விதமாய் போகமுடியும்? மேலும் பிராணனை கொண்டுபோய் தலையில் நிற்கவைக்க வேண்டுமென்று சொல்லுகிறார். இதை யாராவது செய்து பார்த்து ஜயமடைந்திருக்கிறார்களா? இப்படி செய்தால் அபாயத்தை உண்டுபண்ணக்கூடிய அடயோகமாகும். ஆகையால் இந்த உரைபிறகாரம் அப்பியாசம் செய்வதென்பது முடியாத காரியமென்று உணரலாம். பகவான் இந்த சுலோகங்களை எந்த அர்த்தத்தில் சொல்லியிருக்கிறார் என்பதை கீழே எழுதியிருக்கிறேன்.

எல்லா இந்திரியங்களையும் மனதில் அடக்கி இப்படிப்பட்ட மனதை (ஹ்ருதி) புத்தியில் நிறுத்தி மேலும் இப்படிப்பட்ட ப்ராணன் (புத்தியை) மூர்த்நி (அவ்யக்தத்தில்) வைத்து யோகதாரணையில் ஊன்றி ஓம் என்ற ஓரெழுத்தாகிய பிரஹ்மத்தின் வியஷ்டியாகிய அணுரூபமான அக்ஷரபுருஷனை உள்ளுக்குள் இழுத்து அதாவது சமஷ்டியில் சேர்ப்பித்து என்னை இடைவிடாமல் நினைத்துக்கொண்டு எவன் தேகத்தைவிட்டு செல்கிறானோ அவன் பரமகதியாகிய மோக்ஷத்தை அடைகிறான்.

குறிப்பு :—அநேக இடங்களில் பகவான் ஒரே சுலோகத்தில் ஒரே அர்த்தமுள்ள இரண்டு பதங்களை உபயோகித்திருக்கிறார்.

இதை அறியாமல் அந்த பதங்களுக்கு வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுத்து ஸ்ரீ சங்கரர் குழப்பத்தை உண்டுபண்ணியிருக்கிறார். இதைப்பற்றி விரிவாய் கீ. 2-39 உரையிலும் இந்த முகவுரையில் இன்னும் பின்னும் எழுதியிருக்கிறேன். மேலே சொன்ன 8-12ல் வரும் ஸ்ருதி ப்ராணம் என்னும் பதங்களுக்கு புத்தி என்று ஒரே அர்த்தம். இதற்கு அத்தாக்ஷி கௌஷிதகி உபநிஷத்து 3-3ல் பிராணனே புத்தி, புத்தியே பிராணன் என்று சொல்லியிருக்கிறது. மூர்த்நி என்னும் பதத்துக்கு ஸ்ரீசங்கரர் தலையாகிய அவயவத்தை அர்த்தமாகக் கொடுத்திருக்கிறார். தலையென்பது என்னவோ சரிதான். ஆனால் இங்கு தலை என்னும் அவயவத்தை பகவான் குறிப்பிடவில்லை. தலைக்காவேரி என்பதில் தலை என்னும் பதத்திற்கு உற்பத்தி இடம் என்று அர்த்தம் செய்து கொள்வதைப்போல புத்தியின் உற்பத்தியிடமாகிய அவ்யக்தத்தையே பகவான் இங்கு மூர்த்நி என்னும் பதத்தால் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலான பதவியைக் கொடுக்கக்கூடிய இந்த அப்பியாசத்தை எவ்விதம் செய்தால் அனுபவத்திற்கு கொண்டுவர முடியுமென்பதை ஆராய்ச்சி செய்வோம். இந்திரியங்களை மனதில் வைப்பதும் மனதை புத்தியில் வைப்பதும் புத்தியை அவ்யக்தத்தில் வைப்பதும் ஒரு புத்தகத்தை எடுத்து ஒரு பெட்டியில் வைப்பது போல அவ்வளவு சுலபமான காரியமல்ல. இதை அனுபவத்திற்கு கொண்டு வருவதற்கு முறை என்னவென்றால் பகவானுடைய நாமம் ஏதாவது ஒன்றை முதலில் வாயினாலும் பின் மனதினாலும் தனியிடத்திலிருந்துகொண்டு ஜபம் செய்வதாகும். இந்த அப்பியாசத்தை விடாமல் தினந்தோறும் இராத்திரி படுக்கு முன் 1 மணி நேரம், காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் 1 மணி நேரமும் செய்தால் 3 வருஷம் முதல் 5 வருஷகால அளவுக்குள் கீதை 8-12, 8-13 சுலோகங்களில் சொல்லியிருக்கிறபடி இந்திரியங்கள் மனதிலும், மனது புத்தியிலும், புத்தி அவ்யக்தத்திலும் லயத்தை அடைந்து புருஷோத்தமனுடைய அருளால் 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷ தரிசனம் கிடைக்கும். காலக்கிரமத்தில் 26வது தத்துவமாகிய புருஷோத்தம பதவியை அடைந்து தேன் குடிப்பான். நான் இந்த தேன் குடிக்கும்

நிலையில் தினந்தோறும் சிறிது நேரமாவது இருந்து கொண்டு வருவதால்.

"காகமுறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ
போக மென்னும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேக வுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிட நா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"

என்று ஸ்ரீ தாயுமானவர் அழைத்ததைப்போல் இந்த காசமும் இதைப் படிப்பவர்களை புருஷோத்தம ஆனந்தத்தை அள்ளிப் பருகும்படி கூவி அழைக்கிறது. வேறு எவ்விதமான பிரதி பிரயோஜனத்தையும் நான் கருதவில்லை. இதில் அக்கறையுள்ள வர்கள் எந்த மதம், ஜாதி, ஆசிரமத்தவராயினும் சரி, சந்தேகங் கள் இருந்தால் என்னை நேரில்கண்டு தெளிந்து கொள்ளலாம்.

பாமர ஜனங்களை மதக்குருக்களாகிய ஆச்சாரியர்களும் போலி சந்நியாசிகளும் புத்தகப் பண்டிதர்களும் தப்பு வழிகளை பின்பற்றும்படி செய்து அவர்களை முன்னுக்கு வராதபடி கெடுத் துக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி ஸ்ரீராமலிங்க சுவாமிகள் 13ம் உபதேசத்திலுள்ள திருவுள்ளக்கிடையில் கீழே கண்டபடி கதறியிருக்கிறார்.

"நாம் நாளும் பார்த்தும் கேட்டும் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனென்றால் அவைகளில் ஒன்றிலாவது குழூவுக்குறியன்னியில் தெய்வத்தை இன்னபடியென்றும் தெய்வத்தினுடைய உண்மை இன்னதென் றும் கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மறைத்துவிட்டார்கள். அனுமாத்திரமேனும் தெரி விக்காமல் பிண்டலக்ஷணத்தை அண்டத்தில் காட்டினார்கள். யாதெனில்? கைலாயபதி என்றும் வைகுண்டபதி என்றும் சத்தியலோகாதிபதி யென்றும் பெயரிட்டு இடம், வாகனம், ஆயு தம், வடிவம், ரூபம் முதலியவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப் பது போல் அமைத்து உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக் கின்றார்கள். தெய்வத்துக்கு கை கால்கள் இருக்குமோவென்று கேட்பவர்க்கு பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கின்றார்கள். இது உண்மையாகவே இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள

'பெரியவர்கள்' என்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையறியாது அப்படியே கண்மூடிக்கொண்டு உளறியிருக்கிறார்கள். ஆனால் ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்த பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை. அவைகளில் ஏகதேச கர்மசித்திகளை கற்பனைகளாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஒவ்வொரு சித்திக்குப் பத்து வருஷம் எட்டுவருஷம் பிரயாசை யெடுத்துக்கொண்டால் அற்ப சித்திகளை அடையலாம் அதற்காக அவற்றில் லக்ஷியம் வைத்தால் ஆண்டவரிடத்தில் வைத்துக்கொண்டிருக்கிற லக்ஷியம் போய்விடும். ஆண்டவரிடத்தில் வைத்த லக்ஷியம் போய்விட்டால் நீங்கள் அடையப்போகிற பெரிய பிரயோஜனம் போய்விடும். அல்லது அதில் முயற்சி செய்து அவ்வளவு காலம் உழைத்து அந்த அற்பப் பிரயோஜனத்தை தெரிந்துகொண்டு அதனால் ஒரு லாபத்தை ஏகதேசம் அடைந்தால் முக்கிய லாபம் போய்விடும். ஆதலால் அவைகளில் லக்ஷியம் வைக்காமல் ஆண்டவரிடத்திலேயே வைக்கவேண்டியது. நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக்கொண்டிருந்தது இவ்வளவு என்று அளவு சொல்ல முடியாது. ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்பொழுது இருந்ததென்றால் அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது. இப்போது ஆண்டவன் என்னை ஏறாத நிலைமேல் ஏற்றியிருக்கின்றார். இப்போது எல்லாவற்றையும் விட்டுவிட்டதனால் வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டுவிட்டீர்களானால் என்னைப்போல் பெரிய லாபத்தை பெறுவீர்கள். இதுவரைக்கும் விடாமல் வைத்துக்கொண்டிருந்தவர்கள் ஏதாவது லாபத்தை பெற்றுக்கொண்டார்களா? பெற்றுக்கொள்ளவில்லை. நான் அப்படி அந்த சமயத்தில் வைத்திருந்த லக்ஷியமே என்னை இந்த நிலையில் தூக்கி விட்டதென்றாலோ, அந்த லக்ஷியம் தூக்கிவிடவில்லை. என்னை இந்த ஏறா நிலமிசை ஏற்றிவிட்டது யாதெனில்? தயவு, தயவு என்னும் கருணைதான் தூக்கிவிட்டது. அந்த தயவுக்கு ஒருமைவரவேண்டும். அந்த ஒருமையிருந்தால்தான் தயவு வரும். தயவு வந்தால் தான் பெரிய நிலைமேல் ஏறலாம்".

இவ்வாறு மன ஒருமையே முக்கிய சாதனமென்று ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் சொல்லிய பிறகாரமே பகவானும் கீதை 6-3 சுலோகத்தில் அருளியிருக்கிறார். அதாவது

ஆருருக்ஷோ: முநே: யோகம் கர்ம காரணம் உச்யதே
யோகாருடஸ்ய தஸ்ய ஏவ சம: காரணம் உச்யதே.

இந்த சுலோகத்திற்கு அனுபவ பூர்வமான என்னுடைய அர்த்தம் பின்வருமாறு:— யோகத்தை அடைய இச்சிக்கிற முனிக்கு (24வது தத்துவமாகிய ஒரே இடத்தில் இடைவிடாமல் சலித்துக் கொண்டிருக்கும் சித் சக்தியாகிய க்ஷரபுருஷ தர்சனமாகிய) கர்மாவே சாதனமாகும் என்று சொல்லப்படுகிறது. இந்த யோகத்திலிருப்பவனுக்கு (25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷன் மூலமாய் பரமபதமாகிய 26வது தத்துவமாகிய புருஷோத்தமனை யடைய) மனசமாதானம் அல்லது ஒருமையே சாதனம் என்று சொல்லப்படுகிறது.

இந்த சுலோகத்துக்கு ஸ்ரீ சங்கரர் என்ன அர்த்தம் கொடுத்திருக்கிறார் என்று கவனியுங்கள். யோகநிலையில் ஏற விரும்பும் முனிக்கு தொழிலே கருவியாகக் கூறப்படுகிறது. இந்த யோகத்தில் ஏறிய பின்னர் அவனுக்கு தொழில் செய்யாமலிருத்தலே கருவியாகிறது என்று அர்த்தம் செய்திருக்கிறார்.

கர்ம என்னும் பதத்துக்கு பகவான் கீதை 8-3ல் லக்ஷணத்தோடுகூட அர்த்தம் கொடுத்திருக்கிறார். அதாவது

பூத பாவ: உத்பவ கர: விஸர்க: கர்ம ஸம்ஜ்ஞித:

இந்த அடியின் அர்த்தம்:—(மனதோடு கூடிய) பிராணிகளின் தோற்றத்தை உற்பத்தி செய்விக்கும் சிருஷ்டி, சித்சக்தியே, கர்ம என்று சொல்லப்படுகிறது. கர்ம என்னும் பதத்தின் இந்த பகவானுடைய அர்த்தம் ஸ்ரீசங்கரர் கண்ணில் பட்டதாகவே தெரியவில்லை. ஏனென்றால் அவர் எல்லாவிடங்களிலும் கர்ம என்னும் பதத்திற்கு தொழில் என்னும் அர்த்தத்தையே கொடுத்திருக்கிறார். இந்த கீதை 6-3லும் தொழில் என்றே அர்த்தம் செய்து வியாக்கியானத்தில் பயனை எதிர்பாராது செய்யும் தொழில் யோகத்துக்கு சாதனம் என்கிறார். பலனை எதிர்பாராது தொழில்

செய்வது அவர் சொல்வதைப்போல அவ்வளவு லேசான காரிய மல்ல. ஞான அனுபவம் வந்தவனுக்குத்தான் இது சாத்திய மாகும் என்று விரிவாய் மேற்கோள்களுடன் கீ. 2-15, 2-48 உரைகளில் எழுதியிருக்கிறேன். ஸ்ரீ சங்கரரோ நிஷ்காமமாய் தொழில் செய்த பிறகுதான் ஞான அனுபவம் வருமென்று தலை கீழாக சொல்லுகிறார். மேலும் சம: என்னும் பதத்துக்கு மன சமாதானம் அல்லது ஒருமை என்னும் சரியான அர்த்தத்தை சொல்லாமல் தொழில் செய்யாமல் இருத்தல் என்னும் தப்பான அர்த்தத்தை கொடுத்திருக்கிறார். ஏனென்றால் பகவான் கீதை 3-5ல் எந்த புருஷனும் ஒரு க்ஷணநேரம்கூட வேலை செய்யாமல் சும்மா இருக்கமுடியாதென்றும் 3-33ல் தன்னை அறிந்த ஞானி கூட ஏதாவது தொழிலில் அவனவன் இயல்பின் பிறகாரம் ஈடுபடாமல் இருக்கமுடியாதென்றும் கீதை 18-11, 18-40ல் தேகத்தை தரித்த பிராணி மானுடதேவ பாதாள லோகத்தில் இருந்தாலும் தொழிலில் ஈடுபடாமல் சும்மா இருக்கமுடியா தென்றும் சொல்லியிருக்கிறார். ஆகையால் தொழில் செய்யா மல் இருத்தல் என்று சம: என்னும் பதத்திற்கு ஸ்ரீ சங்கரர் அர்த்தம் கொடுத்திருப்பது தப்பு அர்த்தம் - இவ்விதம் ஸ்ரீ சங்கரர் தப்பு அர்த்தங்கள் கொடுத்திருப்பதால் அவருடைய அர்த் தத்தை வைத்துக்கொண்டு கீதையை படிப்பவர்களை தப்பான வழிகளை பின்பற்றும்படி செய்து உயர்ந்த பதவியை அடையா வண்ணம் செய்திருக்கிறார். இதற்கு உதாரணங்களாக கீதையி லுள்ள இன்னும் சில சுலோகங்களை அவருடைய தப்பு அர்த்தத் துடனும் என்னுடைய அனுபவ பூர்வமான அர்த்தத்துடனும் கீழே கொடுத்திருக்கிறேன்.

(1) 5-16. ஜ்ஞாநேத: து தத் அஜ்ஞாநம் ஏஷாம் ஆத்மந:
தேஷாம் ஆதித்யவத் ஜ்ஞாநம் ப்ரகாசயதி தத் பரம்.

இதற்கு ஸ்ரீ சங்கரர் உரை :—ஆத்ம ஞானத்தினாலே யாருடைய அந்த அஞ்ஞானமானது நசிப்பிக்கப்பட்டிருக்கிறதோ அவர் களுக்கு ஞானமானது சூரியனைப்போல பரப் பிரஹ்ம சொரூ பத்தை பிரகாசிப்பிக்கிறது.

என்னுடைய வியாக்கியானமும் உரையும்:— சூரியன் தனக்கு கீழேயுள்ள எல்லா வஸ்துக்களையும் பிரகாசிக்கச் செய்கிறான். கீழேயுள்ள வஸ்துக்கள் சூரியனைப் பிரகாசிக்கச் செய்ய முடியாது. சூரியன் மேகங்களால் மறைக்கப்பட்டபொழுது பிரகாசம் மங்கிப்போயிருக்கும். அம்மேகங்கள் காற்றால் கலைந்தவுடன் சூரியன் தானே பிரகாசிக்கிறான். அதைப் போலவே. ஞானம் அஞ்ஞானத்தை நசிப்பித்தபொழுது சுயஞ்சோதியாகிய பரமாத்மா தானேபிரகாசிக்கிறது. இதுவே சரியான அர்த்தம். ஞானம் பரப்பிரஹ்ம சொரூபத்தை பிரகாசிப்பிக்கிற தென்பது தப்பு அர்த்தம். இந்த சுலோகத்தில் ஜ்ஞானம் என்னும் பதத்தை பரம் என்னும் பதத்துடன் பரம்ஜ்ஞானம் என்று சேர்த்து சுயம்ஜோதியாகிய புருஷோத்தமன் என்று அர்த்தம் செய்யவேண்டும்.

(2) 10-23 ருத்[3]ராணும் சங்[5]கர: ச அஸ்மி வித்தேச[5]: யக்ஷரக்ஷஸாம்:
வஸூநாம் பாவக: ச அஸ்மி மேரு[5 2]: சிகரிணும் அஹம்.

ஸ்ரீ சங்கரர் அர்த்தம்:—ருத்திரர்களுக்குள்ளே சங்கரன் என்னும் ருத்திரனாக நான் இருக்கிறேன். யக்ஷர்கள் இராக்ஷஸர்களுக்குள்ளே குபேரனாக இருக்கிறேன். வசுக்களுக்குள்ளே அக்னியாக இருக்கிறேன். பருவதங்களுக்குள்ளே மேரு பருவதம் நானே.

என்னுடைய வியாக்கியானமும் அர்த்தமும்:—இந்த சுலோகத்தில் யக்ஷரக்ஷஸா: என்பதற்கு யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் என்று ஸ்ரீ சங்கரர் அர்த்தம் செய்திருப்பது தப்பு. ஏனென்றால் இந்த 10வது அத்யாயத்தில் ஒரே குணமுள்ள வஸ்துக்களில் எது மிகவும் உன்னதமோ அதையே தனது அம்சமாக பகவான் சொல்லிக்கொண்டு வருகிறார். நதிகளுக்குள் கங்கை, பர்வதங்களுள் இமாலயம் போல. யக்ஷர்கள் ராக்ஷஸர்களுக்கும் குபேரனுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. யக்ஷ என்பதின் சரியான அர்த்தம் புஷ்டி, தனம், ஸ்ரீ (ஐஸ்வர்யம்). யக்ஷ என்றால் ஸ்ரீ அல்லது லோகமாதா என்று கேனோபநிஷத்தில் சொல்லியிருக்கிறது. சமஸ்கிருத பாஷையில் சில பதங்களை திருப்பி எழுதினால் எதிரிடையான அர்த்தத்தைக் கொடுக்கும்.

உதாரணம் மரா = மரணம் ராம = சாஸ்வத உயிர்
க்ஷய = தரித்திரம் யக்ஷ = தனம், செல்வம்.

ஆகையால் வித்தேச: யக்ஷரக்ஷஸ என்பதற்கு செல்வவந்தர்களுக்குள்ளே குபேரன் என்பதே சரியான அர்த்தம்.

(3) 11-36.........ரக்ஷாம்ஸி பீதாநி திச: த்ரவந்தி.........

இதற்கு ஸ்ரீ சங்கரர் உரை. இராக்ஷஸர்கள் பயத்தை அடைந்து எல்லா திக்குகளிலும் ஓடினர்.

என்னுடைய வியாக்கியானமும் உரையும்:—பகவானது விஸ்வ ரூபத்தை தரிசிக்க அருச்சுனனுக்கு மாத்திரம் திவ்ய சக்ஷு (ஞானக்கண்ணை) கொடுத்தார். பகவானுடைய விஸ்வ ரூபத்தை நாரதரைத் தவிர வேறொருவரும் அதற்குமுன் பார்த்த தில்லை என்றும் பாகவதத்தில் சொல்லியிருக்கிறது. இப்படியிருக்க இராக்ஷஸர்கள் விஸ்வரூபத்தை எப்படி பார்த்து பயந் தார்கள்? அப்படி பயந்தாலும் பகவானுடைய விஸ்வரூபமே எங்கும் வியாபித்திருப்பதால் எந்த திக்கில் ஓடினாலும் விஸ்வ ரூபம் தானே தென்படும்.

கீதை 11-23, 11-24ல் அர்ச்சுனன் பகவானுடைய விஸ்வ ரூபத்தைப் பார்த்து வியாகூலத்தை யடைந்து தைரியத்தையும் சாந்தியையும் இழந்ததாகச் சொல்லியிருக்கிறார். மேலும் 11-35ல் தேக நடுக்கத்துடன் பயத்தை அடைந்ததாக சொல்லப் பட்டிருக்கிறது. ஒரு குழந்தை தட்டாமாலை சுற்றினால் அதற்கு சுற்றியுள்ள திக்குகளெல்லாம் கூட சுற்றுவது போலத் தோன் றும். இதைப்போலவே அர்ச்சுனனுடைய அந்தக்கரண நடுக் கத்தாலும் தலை சுற்றலாலும் திக்குகள் பூராவும் சுழலுவது போல அர்ச்சுனனுக்கு தோன்றி பயம் அதிகரித்தது. அப் பொழுது அவன் பகவானைப் பார்த்து ஸித்தர் கூட்டங்கள் நடுங் காமல் இருக்கிற மாதிரியாக தன்னையும் நடுங்காமல் இருக்கும் பொருட்டு பயத்திலிருந்து காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ளு கிறான்.

ரக்ஷாம்ஸி என்னும் பதத்திற்கு சரியான அர்த்தம் காப் பாற்று என்பதுதான். ராக்ஷஸர்களை இந்தவிடத்தில் ஸ்ரீ சங்கரர் என்ன காரணத்தைக்கொண்டு புகுத்தினரோ தெரியவில்லை.

(4) 18-78 யத்ர யோகே[3]ஸ்வர : க்ருஷ்ண : யத்ர பார்த்த : த[4]நுர்த[4]ர :

தத்ர ஸ்ரீ : விஜய : பூ[4]தி : த்[4]ருவ நீதி : மதி : மம.

இதற்கு ஸ்ரீ சங்கரர் அர்த்தம் :—எந்த விடத்தில் யோகேஸ்வர ராகிய கிருஷ்ணபகவான் இருக்கிறரோ எந்த விடத்தில் (காண் டீபம் என்னும்) வில்லைத் தாங்கிய அர்ச்சுனன் இருக்கிறனே அந்த இடத்தில் இராஜ்ய சம்பத்தும் வெற்றியும், அபிவிருத்தி யும் நிச்சயமாய் இருக்கின்றனவென்பது என்னுடைய அபிப் பிராயம்.

என்னுடைய வியாக்கியானமும் அர்த்தமும் :—தநு என்ப தற்கு அஉம ஆகிய மூன்றெழுத்துகளோடு கூடிய ப்ரணவம் என்று முண்டகோபநிஷத்து 2-3, 2-4ல் சொல்லியிருக்கிறது. பிரக்ருதிதான் இந்த அஉம முக்குணங்களோடு கூடி சலிக்கும் தன்மையது. சலிப்பதால் இதற்கு அடையாளம் மூன்றும் பிறைச் சந்திரன். இது வில்லின் உருவத்தை உடையதால் பரி பாஷையில் பிரக்ருதிக்கு தனு(வில்) என்று பெயர். சஸ்த்ரம், தநு, ப்ரணவம், ப்ரக்ருதி, க்ஷேத்ரம், அவ்யக்தம் என 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷனுக்கு பல பெயர்கள் உண்டு. தனுர் தர : என்பதற்கு சரியான அர்த்தம் 24வது தத்துவத்தை தரித்துக்கொண்டு 25வது அக்ஷரபுருஷனைத் தொட்டவன் என்ப தாம். இங்கே அர்ச்சுனனுக்கு இது சொல்லப்பட்டபோதிலும் இந்த நிலையிலுள்ள எல்லா சாதகர்களுக்கும் பொதுவாய் சொல் லப்பட்ட சுலோகமே இது.

ஸ்ரீ முதற்கொண்டு மம முடிய ஏழும் புத்தி 1, மனம் 1, பஞ்சமகா பூதம் 5 ஆக ஏழையும் வரிசைக் கிரமமாக அருத்த முடையவை ஆகும். மோக்ஷ தர்மம் 235வது அத்தியாயத்தில் லக்ஷ்மிதேவி இந்திரனைப் பார்த்து 'நான் வசிக்கிற இடத்தில் ஜயாதேவியோடு கூடிய ஏழுதேவிமார்களும் வாசம் செய்வார் கள்' என்று சொல்லியிருக்கிறர். மம என்னும் எட்டாவது தேவி எல்லோருக்கும் இளையவளானதால் இவள் அவர்கள் எல் லோருக்கும் மம (என்னுடைய) தங்கை ஆவதால் மம என்னும் பெயரால் அழைக்கப்படுகிறள். இந்த சுலோகத்தின் அர்த்தம் :—

எங்கே யோகத்துக்கெல்லாம் அதிபதியாகிய புருஷோத்தமன் இருக்கிறுனே எங்கே 24வது தத்துவமாகிய அவ்யக்தத்தை தரித்துக்கொண்டிருக்கும் அக்ஷரபுருஷன் இருக்கிறுனே அந்த விடத்தில் 23 முதல் 17 ஈருக உள்ள புத்தி மனது பஞ்சமகா பூதங்களும் இருக்கின்றன.

(5) 3-14, அந்நாத் பவந்தி பூதாநி.........

ஸ்ரீ சங்கரர் அர்த்தம்:— ஆகாரத்திலிருந்து பிராணிகள் பிறக்கின்றுர்கள்.

என்னுடைய வியாக்கியானமும் அர்த்தமும்:—தைத்திரியோபநிஷத்தில் பிரம்மாநந்தவல்லி 2வது அத்தியாயத்தில் பிராணிகள் அன்னத்திலே பிறந்து அன்னத்திலே வளர்ந்து அன்னத்திலே லயத்தை அடைகிறுர்கள் என்று சொல்லியிருக்கிறது. பிராணிகள் ஆகாரத்திலே லயமடைவது பொருத்தமற்றதாயிருக்கிறது. பிராணிகள் சூக்ஷ்ம பஞ்சபூதங்களில் லயமடைகின்றன. ஆகையால் அன்னம் என்பதற்கு பஞ்சமகா பூதம் என்பதுதான் சரியான அர்த்தம். அன்னுத்பவந்தி பூதாநி என்பதற்கு மகாபூதங்களினின்றும் பிராணிகள் உண்டாகின்றன என்பதே சரியான அர்த்தம்.

மேலும் ஸ்ரீ சங்கரர் சரித்திரத்தில் கீழ்கண்டவாறு எழுதியிருக்கிறது.

(1) கங்கை நீராடி தினப்படி நதிக்கரையில் செய்யவேண்டிய கருமானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு கமண்டல தாரியாய் யோகதண்டம் தாங்கி திரும்பி வரும் வழியில் ஒரு நாள் சண்டாளன் ஒருவன் குறுக்கிட விட்டும் விடாமலும் பற்றிக்கொண்டிருக்கும் கர்மானுஷ்டான வழக்கத்தால் தீண்டாதே என்று உணர்வூட்டும் சைகையைச் சங்கரர் காட்ட, சண்டாளன் வெகுண்டவன்போல நடித்து சங்கரருடைய அத்துவித அனுபவக் குறையை சுட்டிக்காட்டிப் பரிகசித்தான்.

(2) மண்டனமிசிரரது மனைவியாராகிய ஸரஸவாணி அம்மானை காம சாஸ்திர வாதத்தில் வெல்லும்பொருட்டு ஸ்ரீ சங்கரர் தனது யோக சக்தியால் இறந்துபோன அமருகன் என்ற அரசன்

சரீரத்தில் பரகாயப் பிரவேசம் செய்து அவனுடைய பட்ட மகிஷிகளுடன் கூடவிருந்து காமசாஸ்திர அனுபவம் பெற்ருர்.

இந்த இரண்டு சம்பவங்களிலிருந்தும் தேகம் நான் என் னும் அஞ்ஞானம் போகவில்லை என்றும் ஆத்ம ஞானம் வரவில்லை என்றும் சொல்லவேண்டியிருக்கிறது.

ஸ்ரீ சங்கரர் விவேகசூடாமணியென்ற ஒரு நூல் எழுதி யிருக்கிருர். அதில் 32வது சுலோகத்தில் மாமிச பிண்ட மாகிய ஒரு குரு தன்னுடைய சிஷ்யனை பிறப்பு இறப்பாகிய சம் சாரத்தினின்றும் விடுதலை செய்ய முடியும் என்று சொல்லியிருக் கிருர். அடுத்தாற்போல் அந்த நூலிலேயே 54, 55, 56, 346, 365வது சுலோகங்களில் சுவானு பூதியால் (சொந்த அனுபவத் தினுல்) தான், ஒருவன் சம்சாரத்தினின்றும் விடுதலையடைய முடியுமென்றும், வெளியிலுள்ள மானிடகுரு எவரும் விடுவிக்க முடியாதென்றும், குரு சிஷ்ய சம்வாதத்தில் குருவாக்கிலிருந்து வந்ததாக எழுதியிருக்கிருர். இந்த குருவாக்கு அனுபவத்தை ஒட்டியிருக்கிறது. இவர் 32வது சுலோகத்தில் சொன்னது அனுபவத்திற்கு நேர் மாருயிருக்கிறது. இதிலிருந்தும் ஸ்ரீ சங் கரர் ஆத்மஞானம் பெறவில்லையென்று ஊகிக்கவேண்டியிருக் கிறது. புருஷோத்தமனே சகலருக்கும் குரு என்ற விஷயத் தைப்பற்றி விவரமாய் கீதை 2-5 உரையில் எழுதியிருக்கிறேன்.

ஸ்ரீ சங்கரர் உலகத்துக்குச் செய்திருக்கும் சேவையெல் லாம் தன்னுடைய ஜாதியினராகிய பிராம்மணரை உன்னத ஸ்தானத்தில் வைத்ததுதான். இந்த பிராமமணர்கள் மத சம் பந்தமான எந்தவிடத்திலும் தலைமை வகித்துக்கொண்டு உழைப் பில்லாமல் இதர ஜாதியின் உழைப்பால் வரும் பலன்களை அனுப வித்துக்கொண்டு வந்திருக்கிருர்கள். மடங்களை ஸ்தாபனம் செய்து இந்த மடங்களுக்கு காவி வேஷ்டிதரித்த ப்ராம்மண சன்னியாசிகளே மடாதிபதிகளாய் இருக்கலாம் என்று நிபந்தனை செய்தார். இந்த வேற்றுமையைக் கண்டு சகியாமல் இதர ஜாதி யினரும் இதே மாதிரி மடங்களை ஸ்தாபித்துக்கொண்டு அவை களுக்கு மடாதிபதிகளாக காவிவேஷ்டி கட்டின தங்கள் குலத் தாரை நியமித்திருக்கிருர்கள். இந்த மடங்களிலெல்லாம் சமாதி பூஜையிலும், விக்கிரகங்கள் பூஜையிலும், புத்தகங்களைப் படிப்பதி

னும் காலத்தை வீணாகக் கழிக்கிறார்களேயன்றி புருஷோத்தமனை யடையும் சாதனங்களை அப்பியசிக்கிறதில்லை. சந்நியாசம் என்பது சங்கல்பத்தை விடுவது என்று கீதை 6-2ல் பகவான் சொல்லியிருக்கிறார். பூணூலைக் கழற்றி எறிந்துவிட்டு காவி வேஷ்டி கட்டிக்கொள்வதே சந்நியாசம் என்று பகவான் கீதையில் எந்தவிடத்திலும் சொல்லவில்லை. கர்மாவாகிய சித் சக்தியானது நுணுக்கமான சங்கல்பத்தை சிருஷ்டி செய்கிறது. எவன் இந்த சங்கல்பத்தை அதனுடைய உற்பத்தி ஸ்தானமாகிய 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷனிடம் அர்ப்பணம் செய்கிறானோ—அவன்றான் எந்த ஜாதியைச் சேர்ந்தவனாயிருந்தாலும் சந்நியாசி என்று அழைக்க யோக்கியதையுள்ளவன். காவி வேஷ்டி தரித்த மாத்திரத்தால் சந்நியாசியாகமாட்டான். சந்நியாசியைப்பற்றி உபநிஷத்தில் கீழ்கண்டபடி சொல்லியிருக்கிறது.

நிராலம்ப உபநிஷத்து:—ப்ரஹ்ம சொரூபத்தில் நிலைத்தலாகிய நிர்விகல்ப சமாதியை சதா அப்பியசிக்கிறவனே சந்நியாசி. இளம்பருவத்தில் சந்நியாசம் எடுத்துக்கொள்ளக்கூடாது. சந்நியாசி கோவில் குளம் முதலிய கட்டிடங்கள் கட்டுவதில் ஈடுபடக்கூடாது. மைத்திரேய உபநிஷத்து:—அத்துவித பாவனையில் இருப்பதே சந்நியாசிக்கு பிக்ஷையாகும். விக்கிரக பூஜை பிறவிக்குக் காரணமாகும். ஆதலால் சந்நியாசி தன்னுடைய ஹ்ருதயத்திலுள்ள ஆத்மாவையே பூஜைசெய்யவேண்டும். சந்நியாசி வேதத்தை படிக்கவேண்டிய அவசியமில்லை. எந்த நூலுக்கும் அவன் பாஷ்யம் (அர்த்தம்) எழுதவேண்டிய அவசியமுமில்லை. கர்மானுஷ்டானம் செய்யாத கிரகஸ்தனும் கர்மானுஷ்டானம் செய்கிற சந்நியாசியுமாகிய இருதிறத்தாரும் பதிதர்கள் (கெட்டுப்போனவர்கள்). சந்நியாசி ஸ்திரீயின் படத்தைக்கூட பார்க்கக் கூடாது. ஸ்திரியுடன் பேசக்கூடாது. பொறாமை, பொய், ஏமாற்றுதல், உபந்நியாசம் செய்தல், ஆசை, பிச்சையெடுத்தல் வைத்தியம் செய்தல், தவம், தீர்த்த யாத்திரை இவைகள் சந்நியாசிக்கு கூடாது. சந்நியாசிக்கு தண்டம் என்பது ஆத்மஞானம். மரக்கட்டையினால் செய்து கையில் பிடித்துக்கொண்டிருக்கிற தூல தடியானது தண்டமாகாது. சந்நியாசி சிஷ்யர்களை வைத்துக்கொள்ளக்கூடாது. பிறருடன் வாதம் செய்வதில் ஈடுபடக்கூடாது.

இந்த விதமாக உபநிஷத்துகளில் சந்நியாசி எதைச் செய்ய வேண்டுமென்றும் எதைச் செய்யக்கூடாதென்றும் சொல்லி யிருக்கிறது. ஆனல் இந்தக் காலத்தில் சந்நியாசி என்னும் பெயரை வைத்துக் கொண்டிருப்பவர்கள் எதைச் செய்யவேண்டு மென்று உபநிஷத்துகளில் சொல்லியிருக்கிறதோ அதைச் செய்கிறதில்லே. எதைச் செய்யக்கூடாதென்று சொல்லியிருக் கிறதோ அதைச் செய்துகொண்டு வருகிருர்கள். ஸ்ரீ சங்கரரும் மடங்களே இந்தியாவில் நாலாபக்கத்திலும் கட்டி தன்னுடைய சிஷ்யர்களே அங்கு மடாதிபதிகளாக நியமித்து விக்கிரக பூஜை ஆங்கு நடைபெறும்படி செய்ததிலிருந்து அவர் உபநிஷத்து வாக்கியங்களே பின்பற்றி நடக்கவில்லேயென்று தோன்றுகிறது. வித்வத் சந்நியாசி (ஆத்மானுபவம் வந்த சந்நியாசி) அல்ல வென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது.

ஸ்ரீ சங்கரரை பின்பற்றும் அனுபவமில்லாத அத்வைத புத்தக பண்டிதர்களும் போலி சந்நியாசிகளும் அநேக விஷயங் களில் சுருதி யுக்தி அனுபவங்களுக்கு நேர் விரோதமானவை களேச் சொல்லியும் எழுதியும் பாமரர்களே தப்பான வழியை பின் பற்றும்படி செய்து வருகிருர்கள். அவைகளில் சிலவற்றை கீழே எழுதியிருக்கிறேன்.

(1) கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகம் ஆகிய நான்கு யோகங்களும் வெவ்வேறுபடிகள் என்றும் வரி சைக்கிரமமாக ஒன்றிலிருந்து மற்றென்றில் ஏறி கடைசியாக ஞானயோகத்தை அடையவேண்டுமென்று அவர்கள் சொல்லு கிருர்கள்.

இந்த நான்கு யோகங்களும் வேறுவேறல்ல. நான்கிலும் அனுபவம் ஒன்றே. இந்த நான்கிற்கும் சாதனம் சித்தநிரோதம் ஒன்றே. ஒரு யோகத்தை அடைந்தால் மற்ற மூன்று யோகங் களேயும் அடைந்தவனுவான். அவைகளே கடுதாசியில்தான் எழுதி பிரித்துப் பார்க்கலாமே யொழிய அனுபவத்தில் பிரிக்கவே முடி யாது என்பதைப்பற்றி விரிவாய் 2-15, 2-49 உரைகளில் எழுதி யிருக்கிறேன்.

ஸ்ரீ ரமண மகரிஷி உபதேசசாரம் 10வது செய்யுளில்
உதித்தவிடத்தி லொடுங்கி யிருத்த
லதுகன்மம் பக்தியு முந்தீபற
வதுயோக ஞானமு முந்தீபற

அவருடைய அனுபவத்தை எழுதியிருப்பதை இங்கே கவனிக்கவும்.

(2) சிரவணம் என்றால் மாமிசபிண்ட குருக்கள் முன்னிலையில் வேதாந்த நூல்களைக் கேட்பதும் மந்த்ரோபதேசம் பெறுவதுமாகும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

24வது தத்துவமாகிய க்ஷரபுருஷ அனுபவமே சிரவணம். இந்த சிரவணம் சகலருக்கும் குருவாகிய 26வது தத்துவமாகிய வாசுதேவன் அருளால்தான் கிடைக்கும். 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷ அனுபவம் மனனம். 26வது தத்துவமாகிய வாசுதேவ அனுபவம் நிதித்தியாசம். இந்த விதமாக விரிவாய் 2-29. உரையில் எழுதியிருக்கிறேன். ரிபு கீதை 28வது அத்தியாயத்தில் மஹாவாக்கிய அர்த்தத்தை உணர்தலே சிரவணமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(3) பாபங்கள் எல்லாம் போனபிறகு ஆத்மதரிசனம் உண்டாகுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆத்ம தரிசனத்துக்குபின்பே பாபம் (மலம்) நீக்கம் ஆரம்பமாகிறது. ஆத்ம தரிசனத்துக்குபின் ஆத்ம சுத்தி, ஆத்ம லாபம், ஆத்மானுபவம் வரிசைக்கிரமமாக உண்டாகிறது என்பதைப் பற்றி விரிவாய் 2-48 உரையில் எழுதியிருக்கிறேன்.

(4) வேதம் பிரமாணமென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

வேதம் பிரமாணமல்லவென்றும் வேதாந்த அனுபவமாகிய பிரத்தியக்ஷமே பிரமாணமென்று விரிவாய் 2-52 உரையில் எழுதியிருக்கிறேன்.

(5) மாமிசபிண்ட குருக்களிடமிருந்து நீ பிரஹ்மம் என்னும் உபதேசத்தைப்பெற்று நான் பிரஹ்மம் என்று மனனம் செய்வதால் பிரஹ்ம சொரூபத்தை அடையலாம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

வாசுதேவன் அருளால் வலது மார்பு பிரதேசத்தில் தன்னை தரிசிக்காத வரைக்கும் மேல் நோக்கிப் போக முடியாதென்று விரிவாய் 2-53 உரையில் எழுதியிருக்கிறேன்.

(6) அறியாமையோடு கூடிய பாமரர்களிடம் எல்லா கர்மங்களையும் ஈச்வரார்ப்பணம் அதாவது நிஷ்காமமாய் செய்யவேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

தன்னையும் ஈச்வரனையும் தரிசித்த பின்னரே, கர்மங்களை ஈச்வரார்ப்பணம், அல்லது நிஷ்காமமாய் செய்யமுடியுமென்று விரிவாய் 3-9 உரையில் எழுதியிருக்கிறேன்.

(7) துவிதத்தையும் விசிஷ்டாத்துவிதத்தையும் கண்டித்து ஒரே யடியாய் அத்துவிதத்தைப் பிடிக்கும்படி அவர்கள் போதிக்கிறார்கள்.

த்வைதம் என்பது 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷ அனுபவ தரிசனம். விசிஷ்டாத்வைதம் 25வது தத்துவமாகிய அக்ஷர புருஷ அனுபவ தரிசனம். அத்வைதம் 26வது தத்துவமாகிய வாசுதேவனை தரிசித்து அவனுடன் ஐக்கியமடைதல். இம்மூன்றையும் வரிசைக் கிரமமாக ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்காமல் நேரே ஒரேயடியாய் அத்துவிதத்துக்கு போகமுடியாது என்பதுபற்றி விரிவாய் 3-10 உரையில் எழுதியிருக்கிறேன்.

(8) அக்னிஹோத்ரம் என்னும் கர்மாவை பிராமண ஜாதியில் பிறந்தவர்கள்தான் செய்யலாமென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

அக்னி ஹோத்ரம் என்பது உடம்பையும் கையையும் ஆட்டிக்கொண்டு வாய் முணுமுணுத்துக்கொண்டு செய்யும் கர்மமல்ல —கீழேயுள்ள தத்துவங்களை மேலேயுள்ள தத்துவங்களுக்கு அர்ப்பணம் செய்வதே அக்னிஹோத்ரம். ஆதலால் எந்த குலத்தில் பிறந்தவர்களும் இதைச் செய்யலாம் என்பதைப்பற்றி விரிவாய் 3-13 உரையில் எழுதியிருக்கிறேன்.

(9) உள்ளே ஞானப்பிரகாசத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் வெளிபிரஹ்மச்சரியம் முதலிய இந்திரிய நிக்கிரகங்களுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

உள்ளே பிரகாசமில்லாமல் வெளியே இந்திரிய நிக்கிரக வேஷம் போடுதல் சமயம் வந்தபொழுது ஏமாற்றிவிடும் என்பதைப்பற்றி 3-13ன் உரையில் விரிவாய் எழுதியிருக்கிறேன்.

மேலும் ப்ரஹ்மச்சரியம் என்பதின் சரியான அர்த்தம் பிரஹ்மஸ்பர்ஸம் அதாவது 26வது தத்துவமாகிய புருஷோத்தமனைத் தொடுதல். இந்த அப்பியாசத்தினல் காலகிரமத்தில் புருஷோத்தமனின்றும் நழுவாத நிலையை அடையலாம். புருஷன் பிரக்ருதியை தன் வசமாக்கிக் கொள்வதே ப்ரஹ்மச்சர்யம். புருஷன் பிரக்ருதியின் வசமாதலே வியபசரியம்.

(10) ஸ்ரீ சங்கரர் 6 மதங்களையும் கண்டித்து அத்துவித மதத்தை ஸ்தாபித்தார் என்று அவர்கள் சொல்லுகிருர்கள்.

ஸ்ரீ சங்கருடைய குரு ஸ்ரீ கோவிந்தபாதர், ஸ்ரீ கோவிந்தபாதருடைய குரு ஸ்ரீ கௌடபாதர், இந்த ஸ்ரீ கௌடபாதர் மாண்டுக்கிய உபநிஷத்துக்கு காரிகை (விரிவுரை) ஒன்று எழுதியிருக்கிருர். பண்டிதர் ஏ. மகாதேவ சாஸ்திரி ஆங்கில பாஷையில் எழுதியிருக்கிற அமிர்தபிந்து உபநிஷத்தில் இந்த காரிகையை முழுதும் மேற்கோளாகக் கொடுத்திருக்கிருர். இதைப் படித்துப் பார்த்தால் 6 மத கண்டனமும் முன்னமேயே ஸ்ரீ கௌடபாதர் செய்திருக்கிருர் என்பது தெரியவரும். ஸ்ரீ சங்கரர் அதையே திருப்பி ஒப்பித்து தானே அந்த கண்டனத்தை செய்ததாக பிறர் நம்பும்படி செய்திருக்கிருர்.

கீதை படிக்கும் விதம்

கீதையில் உபயோகித்திருக்கும் ஒவ்வொரு முக்கிய பதத்திற்கும் பகவான் கீதையிலேயே பல்வேறு இடங்களில் லக்ஷணத்தோடு அர்த்தம் சொல்லியிருக்கிருர் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பகவான் கொடுத்த அர்த்தத்தை வைத்துப் படிக்கவேண்டும். அனுபவ ஞானமில்லாதவர்களுக்கு இந்த பகவானுடைய அர்த்தங்கள் கண்ணில் தென்படா. ஆகையால் அவர்கள் ஸ்ரீ சங்கரர் கொடுத்த அர்த்தத்தை அப்படியே கிளிப்பிள்ளையைப்போல் ஒப்பிக்கிருர்கள். இவர்களுடைய அர்த்தங்களை வைத்து வாசித்தால் மனக்குழப்பத்தையடைந்து ஒரு

முடிவுக்கும் வரமுடியாது. மேலே சொன்னபடி பகவான் லக்ஷ ணத்தோடு அர்த்தம் கொடுத்திருக்கிற பதங்களில் சிலவற்றை மேற்கோளுடன் கீழே காட்டியிருக்கிறேன்.

(1) கர்ம:—கீதை 8-3ல் பிராணிகளின் தோற்றத்தை உற் பத்தி செய்விக்கும் சிருஷ்டி சித் சக்தியே கர்மா என்று பக வான் சொல்லியிருக்கிறார்.

(2) ஜ்ஞானம்:—கீதை 13-2ல் தேகம் ஆத்மா இவைகளின் பகுத்தறிவு ஞானம் என்று பகவான் சொல்லியிருக்கிறார். கீதை 13-11ல் 25வது தத்துவமாகிய அத்யாத்ம தத்துவத்திலிருந்து பிராக்ருதி தத்துவத்தை அன்னியமாக பார்ப்பதே ஞானம். என்று சொல்லியிருக்கிறார். ஸ்ரீ சங்கரர் 3-41க்கு வியாக்கியா னம் எழுதியிருக்கிறதில் ஞானம் என்னும் பதத்திற்கு சாஸ்திரங் களிலிருந்தும் குருவினிடமிருந்தும் அடைந்த ஆத்மாவினுடைய ஞானம் என்றும் விஞ்ஞானம் என்னும் பதத்திற்கு அதினுடைய அனுபவ ஞானமென்றும் எழுதியிருக்கிறார். புத்தக ஞானம் கர்மத்தைப் பொசுக்கக் கூடிய சக்தியுடையதாவென்று நீங்களே யோசித்துப் பாருங்கள்.

(3) குரு:—கீதை 2-5ல் மஹா அனுபவம் அதாவது சமஷ்டியின் அனுபவமுடையவன் குரு என்று பகவான் சொல்லி யிருக்கிறார்.

(4) பக்தன்:—கீதை 12-19ல் ஸ்திரமதி அதாவது சலன மற்ற புத்தியுடையவன் பக்தன் என்று பகவான் சொல்லியிருக் கிறார். கீதை 7-17ல் ஞானியே ஏக பக்திமான் என்று சொல்லி யிருக்கிறார்.

(5) தீரன்:—கீதை 2-13ல் மோகத்தின் வசமாகாதவன் தீரன் என்று பகவான் சொல்லியிருக்கிறார்.

(6) பண்டிதன்:—கீதை 5-18ல் சமதர்சனத்தையுடையவன் பண்டிதன் என்று பகவான் சொல்லியிருக்கிறார்.

(7) ஸ்வபாவம்:—கீதை 8-3ல் அத்யாத்மம் (25வது தத்துவ மாகிய அக்ஷரபுருஷன்) ஸ்வபாவம் என்று சொல்லியிருக்கிறார்.

ஒரே அர்த்தமுள்ள இரண்டு வெவ்வேறு பதங்களை பகவத் கீதையின் சில சுலோகங்களில் உபயோகித்திருக்கிறது. புத்தக பண்டிதர்கள் இந்த பதங்களுக்கு வெவ்வேறு அர்த்தத்தைக் கொடுத்து மனக்குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள். அவை களில் சிலவற்றை கீழே எழுதியிருக்கிறேன்.

(1) கீதை 5-14, 5-15ல் வரும் ஸ்வபாவம், விபு என்னும் பதங்களுக்கு 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷன் என்று ஒரே அர்த்தம். இதற்கே அத்யாத்மா, விஷ்ணு என்னும் பெயர்களும் உண்டு.

(2) கீதை 4-8ல் அதிபூதம் தைவம் என்னும் பதங்களுக்கு 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷன் என்னும் ஒரே அர்த்தம். அதிதைவதம் யஜ்ஞன் என்னும் பதங்களுக்கு 25வது தத்துவ மாகிய அக்ஷரபுருஷன் என்று ஒரே அர்த்தம். அதியஜ்ஞனே 26வது தத்துவமாகிய புருஷோத்தமன் அல்லது வாசுதேவன்.

(3) கீதை 8-12ல் ஹ்ருதி ப்ராணன் என்னும் பதங்களுக்கு 23வது தத்துவமாகிய புத்தி என்று ஒரே அர்த்தம்.

வியாசர் எழுதிய மகாபாரதத்தில் சாந்தி பர்வத்தில் உள்ள மோக்ஷதர்மம் என்னும் பாகமானது பகவத் கீதைக்கு பாஷ்யம் (உரை) மாதிரி இருக்கிறது. ஆகையால் இந்த மோக்ஷ தர்மத்தை வாசித்தால் கீதையிலுள்ள அநேக விஷயங்கள் நன்றாய் விளங்கும்.

வேதாந்த சித்தாந்த நூல்களில் சில பரிபாஷைகள் உபயோ கப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த பதங்கள் உண்மையாக எவைகளைக் குறிக்கின்றனவென்பதை தெரிந்துகொள்ளவேண் டியதவசியம். அவைகளில் சிலவற்றை கீழே கொடுத்திருக்கிறேன்.

(1) தலை = சிவன்.

கீதை 8-12ல் மூர்த்நி = தலை = உதித்த இடம்

(2) தாள் = பாதம் = சக்தி.

(3) மூக்கு நுனி = திரிபுடியற்ற இடம் (தேஜோபிந்து உப நிஷத்து பிறகாரம்)

(4) புருமத்தி, சுழிமுனை, அண்டஉச்சி என்னும் பதங்கள் 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷனை தரிசிக்கும் இடத்தைக் குறிக்கின்றன. இந்த இடம் வலது மார்பு பிரதேசத்தில் உள்ளது என்பதை அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

இந்த புத்தகத்தில் பகவத்கீதை முதல் மூன்று அத்தியாயங்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். முதல் அத்தியாயம் கதை ரூபமானபடியால் ஒவ்வொரு சுலோகத்திற்கும் அர்த்தம் எழுதாமல் கதையின் சுருக்கத்தை எழுதியிருக்கிறேன். 2வது 3வது அத்தியாயங்களுக்கு சுலோகங்களை தமிழ் எழுத்துகளில் எழுதி அவைகளின் அர்த்தங்களையும் வியாக்கியானங்களையும் (அவைகள் சம்பந்தமான விஷயங்களின் ஆராய்ச்சிகளையும்) எழுதியிருக்கிறேன். தமிழில் ஒரே எழுத்தாயுள்ள க, ச, ட, த, ப, க்களுக்கு கிரந்தத்தில் சப்தபேதத்தால் 4 எழுத்துக்கள் உண்டு. இவைகளின் பேதம் தெரிவதற்காக இவ்வெழுத்துகளின் மேலே 2, 3, 4 இலக்கங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. க² என்றால் இரண்டாவது சப்தமுள்ள க என்று வாசிக்கவும் ட³ என்றால் 3வது சப்தமுள்ள ட என்று வாசிக்கவும் ப⁴ என்றால் 4வது சப்தமுள்ள ப வென்று வாசிக்கவும். ச⁵ என்று எழுதியிருக்கும் இடங்களில் கிரந்தத்தில் ஶ என்னும் எழுத்தின் உச்சரிப்புடன் வாசிக்கவும். இந்த உரை எழுதினதில் நான் சுதந்திரமாய் செய்ததாக பாராட்டவில்லை. ஏனென்றால் சுதந்திரமுடையவன் வாசுதேவன் ஒருவனே. மற்ற எல்லோரும் பரதந்திரர்களே. ஒவ்வொரு சுலோகத்தையும் என்னுடைய அப்பன் வாசுதேவன் பாதங்களில் வைத்து அனுபவத்தில் உதித்ததை உரையாக எழுதியிருக்கிறேன். இதை நீங்கள் கண்மூடிக்கொண்டு அங்கீகரிக்க வேண்டுமென்று நான் கோறவில்லை. இதுவரை ஸ்ரீ சங்கரர் உரை படித்து என்ன தெரிந்துகொண்டீர்கள்? அவர் சொல்லிய சாதனங்களை அப்யசித்து என்ன பலனை அடைந்தீர்கள்? இப்பொழுது நான் சொல்லிய சாதனங்களை அப்யசித்து நான் எழுதிய உரையை வாசித்து அனுபவத்தில் சீர்தூக்கிப் பாருங்கள். அப்பொழுதுதான் உண்மை விளங்கும். கிருஷ்ண பகவான் மதமே என்னுடைய மதமும். உண்மை ஒன்றேயாத

லால் உண்மையை உரைக்கும் புத்த மதம், கிறிஸ்து மதம், இஸ்லாம் மதம் முதலிய எல்லா மதங்களும் என்னுடையவையே. எல்லா மதங்களின் கொள்கை சுயஞ்சோதியை தரித்துக்கொள்ளுதலாம். உண்மையை உரைக்கும் எல்லா மதங்களும் "மனிதனே முதலில் உன்னை நீ உணர்ந்துகொள்" என்றுதான் சொல்லுகின்றன. ஸ்வானுபூதி (அனுபவமே) உண்மையான மதம். இன்னது தேசம் தேஹி என்று உணர்ந்தவனாகிய 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷ தரிசனம் செய்தவன் இந்த புத்தகத்தைப் பார்த்து பழிக்கமாட்டான். மிகுந்த அறியாமையோடு கூடியவர்களும் பழிக்கமாட்டார்கள். வெறும் புத்தகப் படிப்போடு கூடினவர்களாய் புத்தகத்தில் "நான் தேகமல்ல நான் இந்திரியமல்ல நான் மனது அல்ல நான் புத்தியல்ல நான் அவித்தை அல்ல. இவைகளுக்கெல்லாம் அதீதமாயிருக்கப்பட்ட கூடஸ்தனே நான். இந்த நானே பிரஹ்மம்" என்று அப்படியே கிளிப்பிள்ளையைப் போல ஒப்பித்துக்கொண்டு பிரஹ்மானுபவம் வந்துவிட்டதாக மயங்கித் திரியும் புத்தக பண்டிதர்களும் போலி சந்நியாசிகளுமே இதைப் பழிப்பார்கள். ஆனால் இதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. என்னுடைய சன்மானமெல்லாம் என்னப்பன் வாசுதேவனிடத்திலே.

இந்த உரை எழுதுவதிலும் அச்சடிப்பதிலும் எனக்கு மிகவும் ஒத்தாசையாயிருந்து வரும் எனது பாலிய சிநேகிதர்களான அ. சிதம்பரம் பிள்ளைக்கும், மு. ரத்தினசபாபதி பிள்ளைக்கும் என்னுடைய நன்றியை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீதியுள்ள 4 முதல் 18 அத்தியாயங்களுக்கும் இந்த புத்தகத்தில் உள்ள மாதிரியாகவே வாசுதேவன் அருளை முன்னிட்டு தமிழில் அர்த்தம் எழுதிமுடிப்பதாக உத்தேசம். ஆனால் அவைகளை அச்சிடுவதா இல்லையா என்பது இப்பொழுது அச்சிட்ட புத்தகத்திற்கு எவ்வளவு தூரம் பொதுமக்கள் ஆதரவு கொடுக்கிறார்கள் என்பதை பொறுத்திருக்கிறது.

ஹரி ஓம் தத் சத்.

என்னுடைய ஹ்ருதயத்திலும் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு பிராணிகளின் ஹ்ருதயத்திலுமுள்ள அந்த ரமணீயத்துக்கு இந்த நூல் அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

வாளாடி அ. கிருஷ்ண சர்மா.

ஓம் ஸ்ரீ வாசுதேவாய நம:

பகவத் கீதை—1வது அத்தியாயம்

சுருக்கம்

பாண்டவருக்கும் துரியோதனாதியருக்கும் பாரதப் போர் நடக்கும்பொழுது துரியோதனனுடைய தகப்பனாகிய திருத ராஷ்ட்டிரன் குருடனாயிருந்தும் அப்போரின்கண் நடக்கும் சம்பவங்களை அப்போதைக்கப்போது அறிய ஆவலுற்றான்.

இந்த ஆசையை நிறைவேற்றும்பொருட்டு ஸ்ரீ வியாசர் சஞ் சயன் என்னும் மந்திரிக்கு போரில் நடக்கும் சம்பவங்களை அரண் மனையிலிருந்தே அறிந்துகொள்ளக்கூடிய 'ஞானதிருஷ்டி'யை கொடுத்து திருதராஷ்ட்டிரனுக்கு சொல்லும்படியான திறமையை உண்டுபண்ணினார்.

திருதிராஷ்ட்டிரன் சஞ்சயனைப் பார்த்து "என்னுடைய குமாரர்களும் பாண்டு குமாரர்களும் குருக்ஷேத்திர யுத்த பூமி யின்கண் சண்டைக்கு அணிவகுத்து ஒருவர்க்கொருவர் எதிராய் நின்று கொண்டு என்ன செய்தார்கள்" என்று கேட்டான்.

அதற்கு சஞ்சயன் பின்வருமாறு சொல்லுகிறான்:—பாரதப் போரில் அர்ச்சுனனது தேர்ப்பாகனாயிருக்க ஒப்புக்கொண்டு தேர் ஓட்டும் வேலையில் ஈடுபட்ட ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச் சுனனது விருப்பப்பிரகாரம் எதிரி சேனையிலுள்ளவர்களைப் பார்ப்பதற்காக இருசேனைகளுக்கு மத்தியில் அருச்சுனனு டைய தேரைக் கொண்டுவந்து நிறுத்தினார். அப்பொழுது அர்ச் சுனன் எதிரி சேனையில் அணிவகுத்து நிற்பவர்கள் அவனுடைய தகப்பன், பாட்டன், ஆசாரியன், மாமன், சகோதரன், குமாரன், பேரன், மித்திரன் இந்த விதமாக நெருங்கிய உறவினர்களாக இருக்கக் கண்டு, மனதிலே மிகுந்த துக்கம் அடைந்தவனாய், மெய் சோர்ந்தவனாய், நாக்கு வரட்சியடைந்தவனாய், கையிலுள்ள காண்டீபமென்னும் வில்லை கையிலிருந்து நழுவ விட்டவனாய் பயத்தை யடைந்து ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி பின்வருமாறு சொல்லுகிறான்.

4

" பந்துக்களாகிய இவர்கள் எல்லோரையும் கொல்லுவதால் எனக்கு என்ன நன்மையுண்டாகப் போகிறது? இவர்கள் எல்லோரும் இறந்த பிறகு இந்த இராச்சியம் சுகபோகங்களினுல் எனக்கு என்ன சந்தோஷம் உண்டாகப்போகிறது? குலத்தை நாசம் பண்ணுவதால் சாதிக்கலப்பு உண்டாகும். இதனுல் குல பதிவிரதை தர்மங்கள் நாசமடையும். இதனுல் நரகப்பிராப்தி உண்டாகும். இவர்கள் என்னைக் கொன்ருலும் கொல்லட்டும். நான் இவர்களை கொல்ல இஷ்டப்படவில்லை ".

அர்ச்சுனன் இவ்வாருகிய வசனங்களைச் சொல்லி வில்லையெறிந்துவிட்டு தேர்த்தட்டில் மோக சோகத்துடன் உட்கார்ந்து கொண்டான்.

ஓம் ஸ்ரீ வாசுதேவாய நம:

பகவத் கீதை—2வது அத்தியாயம்

சஞ்சயர் திருதராஷ்டிருக்கு சொன்னர்.

1. தம் ததா[2] க்ருபயா ஆவிஷ்டம் அச்ரு[5] பூர்ண ஆகுல ஈக்ஷணம்

விஷீ[3]தந்தம் இதம் வாக்யம் உவாச மது[4] ஸூ[3]தந:

(அர்த்தம்) அர்ச்சுனன் இந்த விதமாய் பந்துக்களிடத்துள்ள விசுவாசத்தினல் வியாபிக்கப்பட்டவனுய் கண்களில் நீர் ததும்பி துக்கத்தை அடைந்திருக்கும் அவனிடம் மோகத்தை நாசம் செய்பவராகிய கிருஷ்ண பகவான் பின்வருமாறு கூறினர்.

(வியாக்கியானம்) மது என்றால் மோகம் என்னும் அசுர குணம். இந்த குணத்துக்கு நாம ரூபத்தையும் கொடுத்து மது என்னும் அசுரனையும் கைதவன் என்னும் அசுரனையும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் நாசம் செய்ததாக புராணங்களில் சொல்லப்பட்டிருப்பதால் ஈண்டு அர்ச்சுனனுக்கு ஏற்பட்டிருக்கும் மோகத்தை நாசம் செய்வதற்கு வேண்டிய உபதேசம் செய்ய இவரைவிட வேறுயார் உயர்ந்த யோக்கியதையுடையவர்கள் இருக்கிறார்கள்? ஒருவரும் இல்லையென்றபடி: இந்த அர்த்தத்தை ஒட்டிய சந்தர்ப்பங்களில் தான் பகவானுக்கு மதுஸூதந என்னும் வார்த்தை கீதையில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. (ஸ்லோகங்கள் 2-4, 6-33 பார்க்க) சாந்திபர்வம் 358வது அத்தியாயத்தில் "பிறக்கின்றவனான எந்த புருஷனை மதுஸூதனர் பார்க்கிறாரோ அவன் ஸாத்விகனாக அறியத்தக்கவன். அவன் மோக்ஷத்திற்கு நிச்சயிக்கப்பட்டவனுவான்" என்று சொல்லியிருப்பதை இங்கு கவனிக்கவும். அதாவது ஆத்ம தரிசனம் பெற்றவன் கிரமமாக ஆத்ம சுத்தியடைந்து ஸாத்விகனாகி ஆத்ம லாபம் ஆத்மானுபவம் அடைகிறான்.

2. குத: த்வா கச்[5]மலம் இதம்[3] விஷமே ஸம் உபஸ்[2]திதம்

அநார்யஜுஷ்டம்[3] அஸ்வர்க்யம் அகீர்த்திகரம் அர்ஜுந.

(அ-ம்) ஹே அர்ச்சுன இந்த முக்கியமான சமயத்தில் ஆர் யன் அல்லாதவனுக்கு உரித்தானதும் சுவர்க்க பதவி அடைவ தற்கு விரோதமானதும் வெட்கக்கேடுமான இந்தத் தகாத மனத் தளர்ச்சி உனக்கு எங்கிருந்து வந்தது ?

(வி-ம்) 1வது ஸ்லோகத்தில் மோகத்தை நாசம் செய்பவனை மதுஸூதனனென்று சொல்லப்பட்டிருப்பது போலவே இந்த ஸ்லோகத்தில் மோகத்தை உடையவனை ஆர்யன் அல்லாதவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தன்னை அறிந்தவன் ஆர்யன். கீதை 16-1, 2, 3 ஸ்லோகங்களில் பயமில்லாதிருத்தல் முதல் கர்வமில்லாதிருத்தல் ஈறாக சொல்லப்பட்ட தெய்விக குணங்களை யுடையவன் ஆர்யன். தன்னை மறந்து சரீரத்தில் ஐக்கியத்தை அடைந்து சரீரமே நான் என்று கருதி அதற்கு ஏற்படும் ஸுக துக்கத்தை தனதாக பாவித்து மோகத்தை அடைகிறவனே ஆர் யன் அல்லாதவன். ரஜஸ்-தமஸ் அசுர குணங்களோடு கூடியவன் ஆர்யன் அல்லாதவன்.

3. க்லைப3்யம் மாஸ்மக3ம: பார்த2 நைதத் த்வயி உபபத்3யதே
க்ஷுத்3ரம் ஹ்ருத3ய தௌ3ர்ப3ல்யம் த்யக்த்வா
உத்திஷ்ட2 பரந்தப

(அ-ம்) ஹே பார்த்த ! நீ இந்த அமானிடத்தன்மையை அடையாதே. ஏனென்றால் அது உன்னிடத்தில் தகுதியுடைய தன்று. இந்த இழிவான மனத்தின் பலமற்ற தன்மையை உதறித் தள்ளிவிட்டு, ஹே பரந்தப ! எழுந்திரு.

(வி-ம்) பார்த்த என்னும் வார்த்தை யோகத்தை அதாவது 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷனிடம் நிச்சலனத்தன் மையை உபதேசிக்கும் இடங்களிலும், பரந்தப என்னும் வார்த்தை பரம்—தபஸாகிய 25வது தத்துவமாகிய அக்ஷரபுரு ஷனை அடையும் தன்மையை உபதேசிக்கும் இடங்களிலும் உப யோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பார்த்த (2-21, 32, 39, 42, 55, 72, 3-16, 22, 23, 4-11, 33, 6-40, 7-1, 10, 8-8, 14, 19, 22, 27, 9-32, 10-24, 11-5,

12-7, 16-6) ஸ்லோகங்களிலும் பரந்தப (2-9, 4-2, 5, 33, 7-27, 9-3, 10-40, 11-54) ஸ்லோகங்களிலும் பார்க்க.

தௌர்பல்யம்—ஹ்ருதயம் அதாவது மனதுக்கேயொழிய சாக்ஷி பூதமாயிருக்கும் புருஷனுக்கு அல்ல என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

4. கத^{2}ம் பீ^{4}ஷ்மம் அஹம் ஸங்க்^{2}யே த்^{3}ரோணம் ச மது^{4} ஸூத^{3}ந
இஷுபி^{4}: ப்ரதியோத்ஸ்யாமி பூஜார்ஹா அரிஸூத^{3}ந.

(அ-ம்) அர்ச்சுனன் சொல்லுகிறான்:—ஹே மோகத்தை ஜயித்தவரே! (கிருஷ்ண பகவானே!) பீஷ்மரையும் துரோணரையும் யுத்தத்தில் எப்படி பாணங்களால் எதிர்த்து சண்டை போடமுடியும். ஹே பகைவரை வென்றவரே! அவர்கள் என்னால் பூஜிக்கப்படுவதற்கு தகுதியுடையவர்கள் அல்லவா?

(வி-ம்) ஸங்க்யா என்பதற்கு யுத்தம் என்று அர்த்தம். முதல் எழுத்தில் உள்ள குறில் அ நெடில் ஆ வானால் அதற்கு நேர் எதிரிடையான அர்த்தத்தைக் கொடுக்கிறது. உதாரணமாக.

ஸங்க்யா = யுத்தம், எண்ணிக்கை.

ஸாங்க்யா = சமாதானம், எண்ணிக்கையில்லாத.

கஷாயம்=மலம், காமம். காஷாயம்=மலமற்றது, காமமற்றது.

நிதநம்=மரணத்தின் இடம். நிதாநம்=உற்பத்தியின் இடம்.

முனி=மனதை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டவன்.

மௌனி=மனதை அடக்கியவன்.

பவ=காரியம். பாவ=காரணம்.

வனம்=காடு, மலத்தோடு கூடிய மனம். வானம்=ஆகாசம், சுத்தமனது.

கரணம்=காரியம். காரணம்=காரணம்.

ஸஸ்த்ரம்=வில், இரண்டு எழுத்துடைய ப்ரணவம் (24வது தத்வமாகிய) க்ஷரபுருஷன்.

ஸாஸ்த்ரம்=குறி, வித்யாகண், ஓர் எழுத்து ப்ரணவம் (25வது தத்வமாகிய) அக்ஷரபுருஷன்.

மேல்கண்ட சிலவற்றிற்கு ஆதாரம். கீதை, மோக்ஷதர்மம் 216வது அத்தியாயம், முண்டகோபநிஷத்லு 2வது அத்தியாயம்.

இந்த ஸ்லோகத்திலும் அடுத்த ஸ்லோகத்திலும் கெட்ட குணத்தோடு கூடிய துரியோதனுதியரைக் கொல்லுவதிலாவது கொஞ்சம் நியாயம் இருக்கலாம் நல்ல குணத்தோடுகூடிய பீஷ்மாதியரை கொல்வதில் நியாயம் என்பதே இல்லையென்று அர்ச்சுனனுக்கு தோன்றுகிறது. நல்லதும், கெட்டதுமாகிய துவந்தங்களை ஜெயித்தாலன்றி மோக்ஷபதவி கிட்டாதென்பதை பகவான் ஆங்காங்கு பின்னுல் உபதேசிக்கிருர். ஏனென்ருல் நல்லதென்பது பொன் சங்கிலி, கெட்டதென்பது இரும்பு சங்கிலி, இந்த இரண்டும் மனிதனை சம்சாரத்தில் கட்டுப்படுத்தும் தன்மையில் ஒரே ஸ்வபாவத்தை உடைத்தாயிருக்கிறது. மனது இரண்டு விதம் சுமதி-துர்மதி. இவை இரண்டும் இணைபிரியாத ஜோடி ஆகையால் இரண்டையும் ஒன்று சேர்த்து ஒரே காலத்தில் ஜயித்தால் தான் விடுதலையடைய முடியும். இங்கே சுமதி என்பது பீஷ்மாதியர்கள். துன்மதி என்பது துரியோதனுதியர்கள். இந்த சுக துக்க முதலான துவந்தங்களில் சமபுத்தியுடையவனே ஒரே வஸ்துவை அடைய மார்க்கங்களான சகலவித யோகங்களுக்கும் அதிகாரி என்பதை பகவான் கீழ்கண்ட ஸ்லோகங்களில் உபதேசித்திருக்கிருர். இதை ஊகித்து உணர்க.

ஸாங்கிய புத்தி அதாவது ஞானயோகம் 2-14, 15, 38,
கர்மயோகம் 3-34, ராஜயோகம் 6-7
பக்தியோகம் 12-13, 17, 18,

5. குருந்[3] அஹத்வா ஹி மஹா அனுபாவாந்[4]
ச்ரேயோ[5] போக்தும்[4] பைக்ஷம்[4] அபி அஹலோகே
ஹத்வா அர்த்த[2] காமாந் து குருந்[3] இஹ ஏவ
புஞ்சீய[4] போகாந்[4] [3] ருதிர[4] ப்ரதித்தாந்[3 3 4]

(அ-ம்) மேலான அனுபவத்தையுடைய குருமார்களை கொல்வதைவிட இந்த உலகத்தில் பிச்சை வாங்கி வயிறு வளர்ப்பது நிச்சயமாக நல்லது. ஏனெனில் குருமார்களை கொன்று இந்த

உலகத்தில் அனுபவிக்கும் இன்பங்களாகிய போகங்கள் ரத்தத்திலை பூசப்பட்டதாகும்.

(வி-ம்) இந்த ஸ்லோகத்தில் குருவின் லக்ஷணம் மஹா அனுபவத்தையுடையவனென்று சொல்லப்பட்டிருக்கிறது. மஹா அனுபவமாகிய 26வது தத்துவமாகிய புருஷோத்தமனே அறிந்தவனே குரு. சோகமில்லாதவன் குரு. மோக்ஷ தர்மம் 347 அத்தியாயத்தில் புருஷோத்தமனே ஜகத்துக்கு குருவும் ஈசனும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் புருஷோத்தமனே தானுய் இருப்பவர்களைத் தவிர இதர மாமிச மல பிண்டங்கள் குருவாகமாட்டார்கள். அவர்கள்கூட தங்களை மற்றொரு மாமிச பிண்டத்தின் குருவாகவாவது சிஷ்யனென்ருவது சொல்லிக் கொண்டு திரியமாட்டார்கள். உண்மையான குரு யார் என்ருல் அதிகாரி பக்குவம் அடைந்தபொழுது வலது மார்பின் பிரதேசத்தில் சொல்லாமல் (வாயில்லாமல்) சொல்லும் புருஷோத்தமனே. அந்த உபதேசத்தை கேட்காமல் (செவியில்லாமல்) கேட்கும் அதிகாரியே சிஷ்யன். இதன் உண்மை அனுபவத்தில்தான் புலப்படும். சிஷ்யனுடைய லக்ஷணம் பின் 7வது ஸ்லோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

6. ந. ச ஏதத்[3] வித்[3]ம : கதரந் ந : கரீய[3] :
யத்[3]வா ஜயேம யதி[3] வா ந : ஜயேயு :
யாந் ஏவ ஹத்வா ந ஜிஜீவிஷாம :
தே அவஸ்த்[2]திதா : ப்ரமுகே[2] தார்த்[4]தராஷ்ட்ரா :

(அ-ம்) எவர்களை கொன்ற பிறகு ஜீவித்திருப்பதில் பயன் இல்லையோ அப்பேர்பட்ட எதிரில் நிற்கும் திருதராட்டிர புத்திரர்கள் நம்மை ஜெயிக்க விடுவதா அல்லது நாம் அவர்களை ஜெயிக்கிறதா இவை இரண்டில் எது நமக்கு நல்லது என்று நான் அறிகின்றேனில்லை.

7. கார்ப்பண்ய தோ[3]ஷ உபஹத ஸ்வபா[4]வ :
ப்ருச்சாமி த்[2]வாம் த்[4]ர்ம ஸம்மூட சேதா[4] :
யத் ஸ்ரேய : ஸ்யாத் நிச்சிதம்[5] ப்ரூஹி[3] தத்மே
சிஷ்ய[5] : தே அஹம் சாதி[5] மாம்[4] த்வாம் ப்ரபந்நம்

(அ-ம்) (கீதை 8-12ல் சொல்லியுள்ள யோகதாரணையைச் செய்து அதாவது இந்திரியங்கள், மனது புத்தி, அவ்யக்தம் இவைகளை கிரமமாக ஒன்றில் ஒன்றை லயம்செய்து என்னுடைய நிஜ ஸ்வரூபமாகிய அக்ஷரபுருஷனை அறியாத) க்ருபண ரூப பாபத்தால் பீடிக்கப்பட்டவனும் என்னுடைய மனது (சரீரங்களே நானென்றும் மனைவி புத்திர தனாதிகள் என்னுடையதென்றும்) மோஹத்தை அடைந்தும் இருக்கிறேன். ஆகையால் உம்மை கேட்கிறேன். எனக்கு எது நல்லதாயிருக்கிற தென்பதாகிய அதை நிச்சயமாகச் சொல்லும். நான் உம்முடைய சிஷ்யன். உம்மை சரணடைந்தேன். உபதேசியும்.

(வி-ம்) இந்த ஸ்லோகத்தில் சிஷ்யனுடைய லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சரணம் அடைகிறவனே சிஷ்யன். 24வது தத்வமாகிய க்ஷரபுருஷனிடம் சரணம் அடைகிறதை கீதை 2-49லும், 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனிடம் சரணமடைகிறதை 18-62லும், 26வது தத்வமாகிய புருஷோத்தமனிடம் சரணமடைகிறதை 18-66லும் பகவான் சொல்லியிருக்கிறார். இவ்விதம் மூன்றுவித சரணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே அர்ச்சுனன் சரணமடைந்தேனென்று சொல்வது வாக்கு மாத்திரமே. மனப்பூர்வமாக சரணம் செய்யவில்லை. ஏனெனில் பகவான் உபதேசம் செய்வதற்கு முன்னதாகவே (கீதை 9வது ஸ்லோகத்தில்) யுத்தம் செய்யமாட்டேனென்று சொல்லிவிட்டான். கீதை 18-73ல் தான் மனப்பூர்வமாக சரணத்தை செய்து பகவான் ஆணைப்பிறகாரம் செய்வதாக ஒப்புக்கொள்ளுகிறான். ஸ்வாபவ: என்பது கீதை 8-3ல் அத்யாத்மம் அல்லது அக்ஷரபுருஷன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கார்ப்பண்ய தோஷ உபஹதஸ்வபாவ: என்றும் தர்ம ஸம்மூட சேதா: என்றும் ஹ்ருதய தௌர்பல்யம் என்றும் ப்ரக்ருதியின் சலன க்ஷர குணத்தை புருஷன் தன்மேல் ஏற்றிக்கொள்ளும் ஒரே மோஹத்தோடு கூடிய தன்மையே பலவிதமாக சொல்லப்பட்டிருக்கிறது.

8. ந ஹி ப்ரபச்5யாமி மம அபநுத்3யாத் யத்3 சோ5கம்
உச்2சோஷணம் இந்த்3ரியாணாம்
அவாப்ய பூ4மௌ அஸபத்நம் ருத்3த4ம்
ராஜ்யம் சு5ராணாம் அபி ச ஆதி4பத்யம்

(அ-ம்) பூலோகத்தில் எதிர்இல்லாத வளம்பெருகும் ராஜ்யாதிபதித்துவம் இன்னும் தேவர்கள் மீது அதிபதித்துவம் கிடைத்தபோதிலும் என்னுடைய இந்திரியங்களை வருத்துகின்ற துக்கத்தை நிவர்த்திக்கவல்லதை நான் காண்கிலேன்.

9. ஏவம் உக்த்வா ஹ்ருஷீகேசம் கு3டா3கேச5: பரந்தப:
ந யோத்ஸ்ய இதி கோ3விந்த3ம் உக்த்வா தூஷ்ணீம்
ப3பூ4வஹ.

(அ-ம்) குடாகேசன், பரந்தபன் ஆகிய அர்ச்சுனன் இந்த விதமாக ஹ்ருஷீகேசராகிய பகவானிடம் பேசின பிறகு "நான் யுத்தம் செய்யமாட்டேன்" என்ற இதை கோவிந்தனாகிய பகவானிடம் சொல்லிவிட்டு சும்மா இருந்தான்.

10. தம் உவாச ஹ்ருஷீகேச: ப்ரஹஸந் இவ பா4ரத
ஸேநயோ: உப4யோ: மத்4யே விஷீத3ந்தம் இத3ம் வச:

(அ-ம்) சஞ்சயர் சொல்லுகிறார். திருதராட்டிரனே! இரண்டு சேனைகளின் மத்தியில் துக்கித்துக்கொண்டிருந்த அவனுக்கு (அர்ச்சுனனுக்கு) ஹ்ருஷீகேசராகிய பகவான் புன்சிரிப்புடையவர் போல் இருந்துகொண்டு இந்த வார்த்தைகளை பேசினார்.

11. அசோ5ச்யாந் அந்வசோ5ச:
த்வம் ப்ரஜ்ஞாவாதா3ந் ச பா4ஷசே5
க3தாஸூந் அக3தாஸூந் ச ந அநுசோ5சந்தி பண்டி3தா:

(அ-ம்) துக்கிக்கத் தகாதவர்களைக் குறித்து நீ துக்கிக்கின்றனை, ஞானம் போன்ற வாக்கியங்களை பேசுகின்றாய். ஆனால்

பண்டிதர்கள் இறந்தவர்களைக் குறித்தும் இறக்காதவர்களை குறித்தும் துக்கிக்கமாட்டார்கள்.

(வி-ம்) கதாஸூந் என்பது எப்பொழுதும் விகாரத்தோடு கூடிய சரீரத்தை அதாவது க்ஷேத்திரத்தை குறிக்கிறது. அகதாஸூந் என்பது ஒரு பொழுதும் விகாரத்தையடையாத சரீரி அதாவது க்ஷேத்திரஜ்ஞனைக் குறிக்கிறது. பண்டிதர்கள் க்ஷேத்திரத்தைப்பற்றியும் க்ஷேத்திரஜ்ஞனைப் பற்றியும் துக்கிக்கமாட்டார்கள். இந்த ஸ்லோகத்தின் இரண்டாவது வரியில் பண்டிதர்களின் லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. 26வது தத்துவமாகிய புருஷோத்தமனை அடைந்தவன் பண்டிதன். கீதை 5-16ல் ப்ராம்மணனிடத்திலும் பசுவினிடத்திலும் யானையினிடத்திலும் நாயின் மாமிசத்தை பாகம் செய்யும் நீசனிடத்திலும் ஸமமான ப்ரஹ்ம திருஷ்டியுடையவர்கள் பண்டிதர்கள் , என்று பகவான் அருளுகிறார்.

அனுசோசந்தி என்னும் வார்த்தையில் அனு என்பதற்கு திருப்பித்திருப்பி என்று அர்த்தம். தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும். வசிஷ்டருக்குக்கூட அவருடைய குமாரன் இறந்தபொழுதும், ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கும் ஆடிற்று. ஆனால் கூட கூட திரும்பித்திரும்பி குழிப்பிள்ளையை நினைத்து சோகிக்க மாட்டார்கள்.

12. ந து ஏவ அஹம் ஜாது ந ஆஸம் ந த்வம் ந இமே ஜநாதிபா:
ந ச ஏவ ந பவிஷ்யாம: ஸர்வே வயம் அத: பரம்

(அ-ம்) நான் ஒரு காலத்திலும் இல்லாமல் இருந்தது நிச்சயமாக இல்லை. நீயும் இல்லாமல் இருந்ததில்லை, இந்த அரசர்களும் இல்லாமல் இருந்ததில்லை. அப்படியே வருங்காலத்திலும் நாம் எல்லோரும் இல்லாதிருப்போம் என்பதும் இல்லை (நாம் எல்லோரும் நித்தியர்களாய் எல்லா காலத்திலும் இருக்கிறோம்.)

(வி-ம்) பகவத் கீதை பூராவும் ஆங்காங்கே 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷனைப்பற்றியும் 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷனைப்பற்றியும் பகவான் சொல்லிக்கொண்டு போகிறார். இந்த

ஸ்லோகம் முதற்கொண்டு 25வது ஸ்லோகம் முடிய அக்ஷரபுருஷனைபற்றியும், 26 முதல் 29 முடிய க்ஷரபுருஷனைபற்றியும் சொல்லுகிறார். இந்த இரண்டுவித புருஷர்களைப்பற்றி மோக்ஷ தர்மம் 245வது அத்தியாயத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. "ஆத்மாவிற்கு அக்ஷரம் என்றும் க்ஷரம் என்றும் இரண்டு விதமான பிரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் நசிக்கின்ற ஜடமான க்ஷரமானது சகல பூதங்களிலுமிருக்கிறது. சைதன்யமான அக்ஷரமானது அழிவற்ற சுயம் ப்ரகாசமான ஸ்வரூபத்திலிருக்கிறது. அந்த அக்ஷரமானது ஸ்தாவர ஜங்கமங்களான ஸகல பூதங்களுக்கும் ஈசனும் ஒன்பது துவாரங்களையுடைய சரீரத்தை யடைந்து ஹம்ஸமாயும் (சலனமுள்ளதாயும்) பரமஹம்ஸமாயும் (சலனமற்றதாயும்) பரவசமில்லாததாயுமிருக்கிறது. தத்வத்தை அறிந்தவர்கள் பிறவியில்லாததான அக்ஷரத்திற்கு சரீரத்தின் நாசம், குறைபடுதல் மாறுதல் முதலியவைகளை அடைவதாலும் புதிய சரீரங்களை அடைவதாலும் ஹம்ஸத்தன்மை என்று சொல்லுகிறார்கள். ஹம்ஸமாக சொல்லப்பட்ட ஜீவனும், ஈசனான அக்ஷரமும் விகாரமற்ற ப்ரஹ்ம ரூபமான அக்ஷரந்தான். அந்த கூடஸ்தமான ப்ரஹ்மத்தை அறிந்தவன் அதை அடைந்து ஜனன மரணங்களை விலக்கிக்கொள்ளுகிறான்"

பகவான் கீதை 15-16ல் சகல பூதங்களையும் க்ஷரமென்றும் விகாரமற்ற கூடஸ்தனை அக்ஷரம் என்றும் சொல்லியிருக்கிறார். பகவத் கீதை 10-41ல் க்ஷரபுருஷனை மம (என்னுடைய) அம்ஸம் என்றும் 10-42ல் அக்ஷரபுருஷனை அஹம் (நான்) ஏக அம்ஸம் (ஒரு அணு) என்றும் சொல்லியிருக்கிறார். பகவான் கீதை 8-12ல் அருளியிருக்கிற இந்திரியங்கள் மனது புத்தி அவ்யக்தம் இவைகளை ஒன்றிலொன்றை வரிசைக் கிரமமாக நிறுத்தும் யோக தாரணை அனுபவத்தில் க்ஷரபுருஷன் மின்மினிப்பூச்சிபோல் சலித்துக்கொண்டிருக்கும். அக்ஷரபுருஷன் அசையாது சலனமற்றிருக்கும் துருவ நக்ஷத்திரம்போல் காணப்படும்.

13. தே[3]ஹிந: அஸ்மிந் யதா தே[2]ஹே கௌ[3]மாரம் யௌவநம் ஜரா
ததா[2] தே[3]ஹாந்தர ப்ராப்தி: தீ[4]ர: தத்ர ந முஹ்யதி.

(அ-ம்) தேகத்தை அடைந்தவனுக்கு இந்த தேகத்தில் பாலியம் யௌவனம் மூப்பு எப்படி சம்பவிக்கிறதோ அப்படியே இந்த தேகத்திற்குபின் வேறு ஒரு தேகத்தை அடைவதும் சம்பவிக்கிறது. அதைப்பற்றி தீரர்கள் மயங்கமாட்டார்கள்.

(வி-ம்) தேஹி என்பது கீதை 13-5ல் பகவான் அருளியிருக்கும் மஹாபூதம் 5, அஹங்காரம் (அல்லது கீதை 7-4 பிறகாரம் மனது) 1, புத்தி 1, அவ்யக்தம் (அல்லது கீதை 7-4 பிறகாரம் அஹங்காரம்) 1ஆக சூக்ஷ்ம தத்துவங்கள் 8ம் இந்திரியங்கள் 10, தூலமனது 1, தூல பூதங்கள் 5 ஆக தூலதத்துவங்கள் 16ம் ஆக மொத்தம் 24 தத்துவங்கள் அடங்கிய க்ஷேத்திரமாகிய தேகத்தை அடைந்திருக்கும் கீதை 13-2ல் சொல்லியிருக்கும் க்ஷேத்திரஜ்ஞனாகிய 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷன். இந்த 24 தத்துவங்களோடுகூடிய ஸர்வபூதங்களையும் க்ஷரபுருஷன் என்றும், கூடஸ்தனை 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷனென்றும், க்ஷரபுருஷனை அதிக்கிரமித்தவனையும் (மேலுள்ளவனையும்) அக்ஷரபுருஷனைக் காட்டிலும் உத்தமனையுமுள்ள வஸ்துவை 26வது தத்துவமாகிய புருஷோத்தமனென்றும் கீதை 15-16, 17, 18ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸ்லோகத்தில் தீரனுடைய லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஹ்ருதய தௌர்பல்யம் நீங்கி, ஹ்ருதயஸ்திரம் அடைந்து இருப்பதால் மோஹம் இல்லாதவன் தீரன். 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனில் நிலைபெற்றிருக்கும் ஆத்மவித்தை தீரன் என்றும் 26வது தத்வமாகிய புருஷோத்தமனில் நிலைபெற்றிருக்கும் ப்ரஹ்மவித்தை பண்டிதன் என்றும், 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷனை அறிந்தவனை மேதாவி என்றும் அழைப்பார்கள்.

14. மாத்ரா ஸ்ப[5]ர்சா: து கௌந்[5]தேய சீதோஷ்ண
ஸு[2]க[3]து[2]க்க[3]தா:
ஆ[3]கமாபாயினோ: அநித்யா: தாந் திதிக்ஷ[4]ஸ்வ பாரத

(அ-ம்) ஹே குந்திமைந்தனே! இந்திரியங்கள் விஷயங்களோடு சம்பந்தப்படுவதினால் குளிர் வெப்பம் இன்பதுன்பங்கள் உண்டாகின்றன. அவை உற்பத்தி நாசத்தோடு கூடியவை.

அநித்யமானவை. ஹே! பாரதவம்சத்தில் பிறந்த அர்ச்சுன அவைகளை நீ சகித்துக்கொள்.

(வி-ம்) பெண்மை குணம் மேலிட்டபொழுது கௌந்தேய என்றும், ஆண்மை குணம் மேலிட்டவிடத்து பாரத என்றும் அர்ச்சுனன் அழைக்கப்படுகிறான் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

கௌந்தேய கீதை 2-37, 60, 3-9, 39, 6-35, 7-8, 8-6, 16, 9-7, 10, 23, 27, 31, 14-7, பாரத-கீதை 2-10, 28, 4-7, 42, 7-27, 9-6, 14-17, 16-3 ஸ்லோகங்களில் வந்திருக்கின்றன.

15. யம் ஹி ந வ்யதயந்தி ஏதே புருஷம் புருஷர்ஷப
ஸம துக்க ஸுகம் தீரம் ஸ: அம்ருதத்வாய கல்பதே

(அ-ம்) ஹே! புருஷர்களில் முக்கியமானவனே! துக்க சுகம் ஆகிய இவைகளில் சமானனாகி எந்த புருஷனை (மேற் சொன்ன மாத்ராஸ்பர்ஸங்கள்) பேதிக்காவோ (கலக்கத்தை உண்டுபண்ணாதோ) அவன் நிச்சயமாக அம்ருதத்வமாகிய மோக்ஷத்திற்கு உரியவன்.

(வி-ம்) ஸம துக்க ஸுகம் :—ஒரே வஸ்து ஒரு சமயம் சுகம் ஒரு சமயம் துக்கம் தரும்—புருஷஸூக்தம்.

"நி வார சூக வத்தந்வி பீதாபாஸ்வத் யணுபமா
தஸ்யா சிகாயமத்யே பரமாத்மா வ்யவஸ்த்தித:
ஸ: பிரும்ம ஸ: சிவ ஸ: ஹரி ஸேந்திர ஸோ க்ஷர
பரமஸ்வராட்"

ஒரே ஈஸ்வரன் சிருஷ்டி செய்யும்பொழுது ப்ரஹ்மா, அதை விழுங்கும்பொழுது ருத்திரன் அல்லது சிவன். ஆகையால் நிதானமே நிதனம். ஒரே சித் சக்தியே சிருஷ்டி செய்து அதை விழுங்குகிறது. ஆகையால் எல்லா துவந்துவங்களும் ஏக வஸ்துவே. இது அநுபவ ஞானம் விஞ்ஞானம் வந்த பிறகுதான் தெரியும். அநுஷ்டானமும் அப்பொழுதுதான் செய்ய முடியும். நிஷ்காம கர்மமும் இந்த அநுபவம் வந்த பிறகுதான் செய்ய முடியும். 26வது தத்துவமாகிய புருஷோத்தம ஸ்திதியை

அடைந்த பண்டிதர்கள்தான் நிஷ்காம கர்மம் செய்வார்கள். காம பிண்டங்களாகிய நமக்கு காமத்தில் பிறந்து காமத்தில் சுகம் நக்கி காமப்பேச்சே கர்ணாம்ருதமாக கொள்ளுகிற அஞ்ஞானிகளுக்கு பகவான் நிஷ்காம கர்மம் சொல்லவில்லை. ஸ்வானுபூதி வந்தவன் காட்டுக்குபோய் தன் வயிறு தண்டியாய் இதை பிறருக்கு சொல்லாமல் ஒளித்து வைத்துக்கொண்டிருக்கக் கூடாதென்றும் மற்றவர்களுக்கு உபகாரமாயிருக்க வேண்டுமென்றும் அவன் ஏது செய்தாலும் நிஷ்காமமாய் செய்வான் என்றும் அவனுடைய நிஷ்காம கர்மத்தை பகவான் உரைக்கிறார். இது பாமர ஜனங்களுக்கல்ல. ஞான அனுபவம் வருவதற்குமுன் மனது சஞ்சலம் நிற்காது. மனது சஞ்சலம் ஒழியாமல் நிஷ்காமகர்மம் கிடையவே கிடையாது என்று பகவான் கீதை 4-42, 5-7ல் சொல்லியிருக்கிறார்.

மேதாவியும் தீரனும்கூட கர்மத்தை செய்து பலனை பகவானுக்கு அர்ப்பணம் செய்ய முடியாது. பகவான் யார் என்னும் அனுபவம் வராமல் யார் யாருக்கு அர்ப்பணம் செய்யக்கூடும். பகவானுக்கு அர்ப்பணம் அவ்வளவு லேசானதல்ல. முலைப்பாலுக்குப் பேயாய் பறக்கும் நாம் நிஷ்காம பல அர்ப்பணம் என்று மனப்பால்தான் குடிக்கலாம். நிர்யாண காலம் (மரணம்) வரும் பொழுது "ஐயோ போகிறேனே" என்று மலம் மூத்திரம் பயத்தால் விட்டுக்கொண்டு சாகத்தான்வேண்டும்.

ஸாங்கிய யோகம், கர்ம யோகம், ராஜ யோகம், புத்தி யோகம் இவை எல்லாவற்றிற்கும் பொது சித்த நிரோதம்தான்.

1. கீதை 2-38 ஜ்ஞானயோகம்—(ஸாங்க்ய யோகம்)
2. ,, 2-48, 50, 3-34—(கர்ம யோகம்)
3. ,, 6-4, 7, 8, 9, 18—(ராஜ யோகம்)
4. ,, 12-13, 14, 17, 18, 19—(பக்தி யோகம்)

ஸ்திரமதி = பக்திமான் = ஸாங்க்யபுத்தி = ஸ்திரதீ = ஸ்திரப்ரஜ்ஞன் = தீரன். மேல் சொன்ன 4 யோகமும் வெவ்வேறல்ல— நான்கிலும் அனுபவம் ஒன்றே. அதை இரண்டுவிதமாக காட்டலாம், அதையே இரண்டு இரண்டு அல்லது 4 ஆகக்காட்டலாம். ஒரே பூஷணிக்காயை பலவிதமாக சமைத்து 4 விதமாக உப்பேரி,

கறி, எரிச்சகறி, கூட்டு முதலியவைகளாக பகவான் காட்டுகிறார். பகவத் கீதை 3-3ல் பகவான் இந்த 4 யோகத்தையும் 2 விதமாக பின்வருமாறு காட்டுகிறார். இந்த லோகத்தில் நிஷ்டை (புருஷோத்தமனிடத்தில் தன்மயஸ்திதி (தாரசு நுனிபோல் சமாதி) யாகிய ஒரே ஸ்திதியை இரண்டு விதமாக நான் முன்பு சொன்னேன். ஒரே சித்சக்தி நிலையை 2 விதமாக வர்ணித்தேன். கபில ஸாங்க்யர்கள் அந்த சித்சக்தியில் சித் அதாவது ஞ்ஞான ஸமத்துவ நிலையையும், பதஞ்சலியோகிகள் அந்த ஒரே சித் சக்தியிலிருக்கும் சக்தி அதாவது பௌருஷத்தில் ஸமத்துவ நிலையையும் சுட்டிக்காட்டி பிரதானமாகச் சொன்னார்கள். இதையே நான் இரண்டு யோகம் அல்லது நிஷ்டை அல்லது ஸமத்வம் (1) புத்தி ஸமத்துவமென்றும் (2) கர்ம கௌஸலமென்றும் சொன்னேன்.

பகவான் கீதை 5-11ல் சரீரம், இந்திரியங்கள், மனது புத்தி இவைகளால் செய்வதை யெல்லாம் கர்மம் என்று சொல்லியிருக்கிறார். கர்மம் என்றால் கை கால்கள் செய்யும் காரியங்கள் மட்டுமல்ல. சித் சக்தி சிருஷ்டி செய்யும்பொழுது அதினுடைய ரேதஸ் சலிதமாதிரியான சலனம் கர்மம். பகவத் கீதை 8-3ல் கர்மத்தின் லக்ஷணம் அதாவது பூதபாவங்களை (மனிதன், பசு, பக்ஷி முதலிய பிராணிகளை) உண்டு பண்ணுகிற ஈஸ்வர பீஜம், ரேதஸ், சுக்லம், சக்தியின் சலனமே கர்மம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரியதனமான கர்மம் என்னும் வார்த்தையை பாமரஜனங்கள் ரொபவும் கீழே கொண்டுவந்து விட்டார்கள். யானை அடியில் எல்லா ஜந்துக்களின் அடிகளும் அடங்கியது போல வாசுதேவ (புருஷோத்தம) சக்தியில் எல்லாவிதமான கர்மங்களும் அடங்கியிருக்கின்றன. மேலே சொன்ன ஈஸ்வர ரேதஸை (24வது தத்துவமாகிய சலிக்கிறரேதஸை) ஊர்த்துவ ரேதஸாக (25வது தத்துவமாகிய சலிக்காத ரேதஸாக) செய்து சுத்த சித்து அதாவது சிவம் அல்லது வாசுதேவத்தில் சலனமில்லாமல் வைத்திருக்கும் நிலையே நிஷ்காம கர்மம்.

“ ரிதகும் சத்யம் பரம்ப்ரஹ்மம் புருஷம் க்ருஷ்ண பிங்களம்
ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விஸ்வரூபாயவை நமோநம :”

இதில் நிலைபெற்றிருப்பவனே நிஷ்காம கர்மம் செய்ய முடியும். இந்த நிலையே சுக்லாம் பரதரம் விஷ்ணும் அல்லது காஷாய அல்லது தூய வெள்ளை கிளாஸ்கோ மஸ்லினைப் போன்ற சுத்த சித்தத்தை தரித்துக்கொள்ளுவதாகும்.

அம்ருதம் என்பது சாகாமலிருக்கும் நிலையோடுகூட ஆனந்தானுபவத்தையும் குறிக்கிறது. கீதை 4-31ல் அம்ருதம், யஜ்ஞசிஷ்டம் அதாவது முடிவான யஜ்ஞமாகிய அக்ஷரபுருஷனை புருஷோத்தமனிடம் வைக்கும்போது சேஷம் (உச்சிஷ்டம், மிச்சம்) ஆனந்த வமுதமாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உயிரே வெல்லம்—(1) க்ஷரத்தை அக்ஷரம் தரித்துக்கொள்வது ஸம்சாரம் (2) அக்ஷரத்தை க்ஷரம் தரித்துக்கொள்வது அம்ருதம் அல்லது நிர்வாணம். பாமர ஜனங்கள் 1வது வகுப்பையும் முக்தர்கள் 2வது வகுப்பையும் சேர்ந்தவர்கள். வெளிக்கு இருவர்களும் ஒரு மாதிரிதான் இருப்பார்கள். ஜீவன் முக்தனுக்கு கொம்பு வால் முதலிய பிரத்தியேகமான அடையாளங்கள் (அறிகுறி) இருக்காது. மனது நிலையே பந்தம் மோக்ஷம் இரண்டும்—வைகுண்டம் எங்கோ இல்லை. அங்கு போனவர்கள் திரும்பி வரமாட்டார்கள் என்பதும் இல்லை. வைகுண்டத்தில் நாராயணர் இருக்கிறார், நரகத்தில் யமன் இருக்கிறார் என்று சொன்னால் பகவானும் யமனும் வைகுண்டம், நரகங்களில் தங்கச் சங்கிலி இரும்புச் சங்கிலி கைதிகளாக இருக்கவேண்டும். அப்படியானால் இந்த பூமியில் யார் இருக்கிறார்கள்? வைகுண்டமும் நரகமும் இரண்டும் ஸர்வ ஆகாசமே. வெவ்வேறு தனி இடம் இல்லை. வாசுதேவனே யமன். அப்படியில்லாவிட்டால் யமன் எப்படி நசிகேதஸுக்கு (கதா உபனிஷத்தில்) ப்ரஹ்ம உபதேசம் கொடுக்கமுடியும். பகவத்கீதை 11-32ல் பகவான் தானே யமனுகிற காலன் என்று சொல்லியிருக்கிறார்.

16. ந அஸத: வித்யதே பாவ: ந அபாவ: வித்யதே ஸத:
உபயோ: அபி த்ருஷ்ட: அந்த: து அநயோ:
தத்வதர்சிபி:

இந்த ஸ்லோகத்தின் அர்த்தத்தை எழுது முன்னதாக பகவத் கீதையில் சொல்லியுள்ள தத்துவங்களை தெரிந்துகொள்ள

வேண்டும். தத்துவம் என்னும் பதத்திற்கு பாமரர்கள் உண்மை என்று கொடுக்கும் அர்த்தம் சரியானதல்ல. உண்மையைப் போல தோன்றும் பொய் என்பதே சரியான அர்த்தம்.

தத்துவங்களின் பிரிவு

பகவத் கீதை 13-5ல் (சில புத்தகங்களில் 13-6)ல் கபில ஸாங்கியத்தை எவ்வளவு எடுத்துக் கொள்ளவேண்டுமோ அவ்வளவு மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மஹாபூதம்-5, அஹங்காரம்-1 புத்தி-1, அவ்யக்தம்-1	ஆக 8 சூக்ஷ்ம தத்துவங்கள்
இந்திரியம்-10, மனது-1, பூமி, ஜலம், நெருப்பு, வாயு, ஆகாயம் ஆகிய விஷயங்கள் 5	ஆக 16 விகார ஸ்தூல தத்துவங்கள்

மொத்தம் 24 தத்துவங்கள்.

இந்த 24ம் ஒன்று சேர்ந்து க்ஷேத்ரம்—இதற்கு தத்துவம் என்றும் பெயர்.

க்ஷேத்திரஜ்ஞன் 25வது தத்துவம்.

24வது தத்துவம்:—க்ஷரபுருஷன் அல்லது ஸ:=அதிபூதம் =தைவம்=தத்வம்=அபரம்=விராட்=வைஸ்வானரன்.

25வது தத்துவம்:— அக்ஷரபுருஷன் = புருஷ: ஸ: = அதிதைவம்=யஜ்ஞன்=கூடஸ்தன் = தத்வம்பரம் = ஹிரண்ய கர்ப்பன்=சூத்திராத்மா=அந்தர்யாமி=பிரத்தியகாத்மா.

26வது தத்துவம்:—புருஷோத்தமன்=வாசுதேவன்=அதிதத்வம்= அதியஜ்ஞன்=பகவான்=சர்வாந்தர்யாமி=பரமாத்மா.

நிஷ்தத்வம்=புருஷோத்தமன் சிருஷ்டி செய்யாதபொழுது நிஷ்தத்வம். அதுவே பிரஹ்மமும் சிவமும் ஆம்.

இந்த ஸ்லோகத்தில் உள்ள பதங்கள் எந்த தத்துவங்களை குறிப்பிடுகின்றன என்பதை கீழே கண்டு கொள்க.

ஸத்=அபர தத்வம் = க்ஷேத்ரம் (13-1) = அபரப்ரக்ருதி (கீ 7-4) ஸ: (கீ 3-42) = க்ஷரபுருஷன் (கீ 15-16) = அதிபூதம் (கீ 8-4)= விராட், வைஸ்வானரன், 24வது தத்வம்.

அஸத்=பரதத்வம்=புருஷன்=புருஷ: ஸ: (கீ 8-22) அன்ய அவ்யக்தம் (கீ 8-20), அன்யாம்ப்ரக்ருதி, பராப்பிரக்ருதி, ஜீவ பூதாம் (கீ 7-5), அத்யாத்மா (கீ 8-3) = அதிதைவம் (கீ 8-21) = கூடஸ்தன், அக்ஷரபுருஷன் (கீ. 15-16) = ஹிரண்யகர்ப்பன், சூத்ராத்மா, அந்தர்யாமி, பிரத்தியகாத்மா, 25வது தத்வம்.

பாவம் = அதிதத்வம், அதியஜ்ஞன் (கீ 8-4), பகவான், புருஷோத்தமன் (கீ 15-18) வாசுதேவன் (கீ 7-19), துரியம், சர்வ அந்தர்யாமி, பரமாத்மா, 26வது தத்துவம்.

அபாவம் = நிஷ்தத்வம் = பகவான், ஜீவஜகத் இல்லாத அதிதுரிய நிலை, துரியாதீதநிலை.

இந்த ஸ்லோகத்தின் முதல் வரிக்கு அர்த்தம்.

(1) அஸத்தாகிய 25வது தத்வமாகிய ஜீவபூதத்துக்கு 26வது தத்வமாகிய பாவத்தை தெரியாது (ஏனென்றால் 26வதின் காரியமாகிய 25 தன்னுடைய காரணத்துடன் ஐக்கியப்படும் வரை அதை அறிய முடியாது.)

(2) அபாவமாகிய நிஷ்தத்வ மௌன துரியாதீதத்துக்கு 24வது தத்வமாகிய ஸத்தை தெரியாது. (ஏனென்றால் ஸமுத்ர அடிபாகமாகிய மௌனத்திற்கு மேலே அடிக்கிற அலைகளாகிய ஸம்சார சமுத்திரப் ப்ரபஞ்சம் தெரியவே தெரியாது)

ஒரு பதத்துக்கு அ முன் சேர்த்தால் சிலவிடங்களில் அந்த அ = அதி அதாவது மேலானதைக் காட்டும் இம்மாதிரி பதங்கள் பலவற்றை "அ" சேர்த்ததால் மேலான தத்துவமாகிறதை கீழ் காணலாம்.

25வது தத்துவம்	24வது தத்துவம்
அஸத் = புருஷன்	ஸத் = ப்ரக்ருதி

தைத்ரீய உபனிஷத் 7வது அத்யாயம்.

அஸத் வ இதம் அக்ரம் ஆஸீத்—ததோவாஸத் அஜாயத
ஐத்ரேய உபநிஷத் 1வது அத்யாயம் 1வது ஸ்லோகம்
ஆத்மா வ இதம் ஏக ஏவ அக்ரம் ஆஸீத்

இவைகளிலிருந்து அஸத் என்னும் பதத்துக்கு அர்த்தம் ஆத்மா என்று புலப்படும்.

பகவத் கீதை

அவ்யக்தம்	வியக்தம்
அன்ய அவ்யக்தம்	அவ்யக்தம்
அசலம்	சலம்
அக்ஷரம்	க்ஷரம்

அமிர்தபிந்து உபநிஷத்து 7வது ஸ்லோகம்

அஸ்வரம்	ஸ்வரம்

மோக்ஷ தர்மம் 323வது அத்தியாயம்

அவிச்வம்	விச்வம்
அதபஸ்	தபஸ்
அஸூர்யன்	ஸூர்யன்
அசலம்	சலம்
அஜரம்	ஜரம்
அக்ஷரம்	க்ஷரம்
மித்திரன்	வருணன்

வித்தியாரண்ணியர் ஜீவன் முக்தி விவேகம்

அசம்ப்ரஜ்ஞாத சமாதி	சம்ப்ரஜ்ஞாத சமாதி

மேலே சொல்லிய யாவையும் நிர்க்குணமும் குணமும் சேர்ந்த இரட்டை. அதுபோலவே சிவசக்தி, ஸாங்க்யயோகம் இவைகளை கடுதாசியில்தான் பிரித்துப் பார்க்கலாம். 4 வித அவஸ்தைகளி களிலும் 4 வித யோகத்திலும் பிரிக்கமுடியவே முடியாது. பலவானுயுள்ள ஒரு மனிதனிடமிருந்து அவனுடைய பலத்தை பிரிக்க முடியுமானல், தீபத்தின் பிரகாசத்திலிருந்து அதனுடைய வெப்பத்தை பிரிக்க முடியுமானல், சாங்க்யத்தையும் யோகத்திலிருந்து பிரிக்க முடியும். கிருஷ்ண சர்மா என்பவன் ஒருவனே, அவன் மனைவிக்குப் பிராண நாயகன், பிள்ளைக்கு அப்பா, மருமானுக்கு மாமா, தகப்பனுக்கு பிள்ளை. இதுபோலவே பிராஹ்மீஸ்திதி அதாவது சிவ சக்தியாகிய ஒன்றையே 4 விதயோகமாக காட்டலாமேயொழிய, 4 விதமும் வெவ்வேறு தனித்தனி வஸ்துவல்ல. ஒரே ஒரு வஸ்து தான்.

நிஷ்தத்துவ ப்ரஹ்மமே (1) ஈஸ்வரன் (2) ஜீவன் (3) ஜகத் இந்த 3ம் இணைபிரியாதது. எதையாவது ஒன்றினுடைய நிலைமை நன்ருய் விசாரணை செய்தால் பாக்கி இரண்டினுடைய விசாரணையும் ஆச்சு. இதனுல்தான் பகவத் கீதை 5-4ல் பகவான் ஸாங்க்யம் யோகம் இரண்டும் ஒன்றே, எதிலாவது ஒன்றில் நிலைத்து நின்ருல் இரண்டின் பலனையும் அடைகிருன் என்கிருர். கௌஷிதாகி உபநிஷத் 3வது அத்யாயம் 2வது ஸ்லோகத்தில் ப்ராணன் அதாவது சிவசக்தி என்பது ஞானம், சக்தி ஆகிய இரண்டையும் குறிக்குமென்றும், ஞானமே சக்தி என்றும், சக்தியே ஞானம் என்றும் சொல்லியிருக்கிறது.

இந்த ஸ்லோகத்தின் 2வது வரிக்கு அர்த்தம்.

இந்த மேலே சொல்லிய (1) 25 ஆமவன் 26 ஆமவனை அறிகிறதில்லை (2) நிஷ்தத்துவத்துக்கு 24வது ப்ரபஞ்சத்தை தெரியாது என்னும் இரண்டினுடைய அந்தரங்க அர்த்தத்தை 26வது தத்துவமாகிற ஜகதீசனுகிய புருஷோத்தம அதிதத்துவத்திலிருந்துகொண்டு 25வது தத்துவமாகிற ஜீவனையும் 24வது தத்துவமாகிற ஜகத்தையும் பார்க்கிறவனே தத்வதர்சி.

தத்வதர்சி என்ருல் 26வது வாசுதேவ அதிதத்துவத்திலிருந்து கொண்டு 24, 25வதாகிய ஜீவன் ஜகத்தை பார்க்கிறவன் என்பது அர்த்தம். உண்மையைப் பார்க்கிறவன் என்னும் அர்த்தம் தப்பு. உண்மை போலத் தோன்றும் பொய்யை பொய்யென்று பார்க்கிறவன், காரண காரியங்களில் காரியங்களை, காரியங்களாகவே பார்க்கிறவன் என்பவையே சரியான அர்த்தம். பகவத் கீதை 13-2, 11ல் ஞானத்தின் லக்ஷணம் இந்தவிதமாகவே சொல்லப்பட்டு இதற்கு அன்னியமானவை எல்லாம் அஞ்ஞானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

17. அவிநாசி[5] து தத்[3] வித்தி[3] யேந[4] ஸர்வம் இதம்[3] ததம்
விநாசம்[5] அவ்யயஸ்ய அஸ்ய ந[5] கச்சித் கர்த்தும் அர்ஹதி

(அ-ம்) இந்த (பிரபஞ்சம் ஜீவர்கள் உள்பட) எல்லாரும் எதனுல் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அந்த வஸ்துவை விகார நாசம்

அதாவது ஸ்தூல நாசம் அற்றதென்று நீ அறிவாயாக. விகார மில்லாத அதினுடைய நாசத்தை உண்டுபண்ண ஒருவராலும் முடியாது.

(வி-ம்) 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷனுக்கு விநாசம் கிடையாது. விநாசம் என்றால் விகார நாசம். ப்ரக்ருதி அதாவது 24வது தத்துவமாகிய க்ஷேத்திரத்துக்குத்தான் விகாரநாசம் அதாவது விநாசம் சம்பவிக்கிறது சாதாரண பிரளயத்தில் 16 தூல தத்வ விகாரநாசம், மகாபிரளயத்தில் 8 ஸூக்ஷ்ம தத்வங்களோடுகூட 24 தத்வங்களுக்கும் நாசம் உண்டாகிறது. விநாசம் வேறு நாசம் வேறு. சாதாரணமாய் அனுபவமில்லாத புத்தக பண்டிதர்கள் "வி" சேர்த்தால் அதிகம் மேலானது என்று எண்ணிக்கொண்டு கீழ்கண்ட பிறகாரம்

சேஷம்	கீழ்	விசேஷம் மேல்
ஜ்ஞானம்	கீழ்	விஜ்ஞானம் மேல்
நாசம்	கீழ்	விநாசம் மேல்

என்று சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையாக சேஷம் 26வது தத்வம், விசேஷம் 25வதும் அதற்கு கீழுமுள்ள தத்வங்களும். ஜ்ஞானமும் அதே மாதிரியே. ஜ்ஞானத்தை புத்தக ஜ்ஞானம் என்றும், விஜ்ஞானத்தை அனுபவஜ்ஞானம் என்றும் அர்த்தம் சொல்லுவது தப்பு. இரண்டும் அனுபவஜ்ஞானமே. விஜ்ஞானம் கீழ் அனுபவம், ஜ்ஞானம் மேல் அனுபவம். விநாசம் என்றால் விட்டு விட்டு தற்காலிக நாசம்—நாசம் என்றால் என்றும் நிலைத்திருக்கும் நாசம். நாசத்தைவிட விநாசம் ஒருபடி கீழேயுள்ளதென்று அறிந்துகொள்ளவேண்டியது. ப்ரக்ருதிக்கு விநாசம் உள்ளதைப்போல அக்ஷரபுருஷனுக்கு விநாசம் இல்லாததால் அவன் அவிநாசி என்றும், நிலைத்துள்ள நாசமும் அவனுக்கு இல்லாததால் அடுத்த ஸ்லோகத்தில் அவன் அநாசி என்றும் சொல்லப்படுகிறான். அவிநாசி = அக்ஷரபுருஷன் = (1) கீதை 8-22ல் சொல்லிய புருஷ: ஸ: பர: = (2) கீதை 8-20ல் சொல்லியிருக்கும் அன்ய அவ்யக்தம் = (3) கீதை 9-4ல் சொல்லிய அவ்யக்த மூர்த்தி = (4) கீதை 10-42ல் சொல்லிய புருஷோத்தமனுடைய அஹம் அம்ஸத்தின் ஒரு அணு = (5) கீதை 7-5ல் சொல்லிய ஜீவபூதம்.

இந்த அவிநாசி சிருஷ்டி முழுவதையும் வியாபித்துக் கொண்டு அதை தரித்துக்கொண்டு இருக்கிறது.

இந்த ஸ்லோகத்தில் ப்ரக்ருதியினின்றும் விடுபட்ட பிரத்தியகாத்மா அதாவது அக்ஷரபுருஷனைப்பற்றி சொல்லியிருக்கிறது.

18. அந்தவந்த: இமேதேஹா: நித்யஸ்ய உக்தா: சரீரிண:
அநாசிந: அப்ரமேயஸ்ய தஸ்மாத் யுத்யஸ்வ பாரத

(அ-ம்) ஹே பாரத! (இந்த தேகத்தை உபாதியாயுடைய) ஆத்மா முக்காலத்தும் உள்ளவன் என்றும், நாசமற்றவன் என்றும், இந்திரியங்கள் முதலிய பிரமாணங்களால் அறியமுடியாதவனென்றும், மற்றோ அவன் தரித்துள்ள தேகங்கள் அழியக்கூடியவையென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் நீ யுத்தம் செய்.

19 ய: ஏநம் வேத்தி ஹந்தாரம் ய: ச ஏநம் மந்யதே ஹதம்
உபௌ தௌ ந விஜாநீத: ந அயம் ஹந்தி ந ஹந்யதே

(அ-ம்) எவன் இதை (ஆத்மாவை) கொல்லுபவனென்று அறிகிறானோ எவன் இது (ஆத்மா) கொல்லப்படுகிறவன் என்று நினைக்கிறானோ இவர்கள் இருவர்களும் அறிந்தவர்கள் ஆகார்கள் இது (ஆத்மா) கொல்கிறதுமில்லை, கொல்லப்படுகிறதுமில்லை.

(வி-ம்) விஜாந என்றால் 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷனிலிருந்துகொண்டு 24வது க்ஷரபுருஷனை விடயமாகப் பார்த்தல் —ஜாந என்றால் 26வது தத்துவமாகிய புருஷோத்தமனில் இருந்துகொண்டு 25வது அக்ஷரபுருஷனையும் 24வது க்ஷரபுருஷனையும் விடயங்களாக பார்த்தல்.

20. ந ஜாயதே ம்ரியதே வா கதாசிந் ந அயம் பூத்வா
பவிதா வா ந பூய:
அஜ: நித்ய: சாச்வத: அயம் புராண: ந ஹந்யதே
ஹந்யமானே சரீரே

(அ-ம்) இது (ஆத்மா) ஒருக்காலும் பிறக்கிறதில்லை அல்லது இறக்கிறதில்லை, அல்லது (ஒருக்கால்) இருந்து மறுபடியும் ஒருக்கால் இல்லாமல் இல்லை. தேகம் கொல்லப்படுகிறதே தவிர பிறப்பில்லாததும் எக்காலத்திலும் உள்ளதும் விகாரமடையாமல் ஒரே படித்தாயிருப்பதும் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாயிருப்பதுமாகிய இது (ஆத்மா) கொல்லப்படுகிறதில்லை.

(வி-ம்) அஜம் என்பது பிறப்பற்றதென்பதோடு மூலப் ப்ரக்ருதியையும் குறிக்கும். இந்த 26வது தத்துவமாகிய மூலப்பிரக்ருதி 25வது தத்துவமாகிய பரப்ரக்ருதிக்கும் 24வது தத்துவமாகிய அபரப்ரக்ருதிக்கும் காரணமாகும். அஜம் என்பது பசுக்கள் அதாவது ஜீவர்களுக்கு அரசன் என்று அஸ்வமேத பர்வம் 43வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அஜ என்பது "யவோஸி-தான்ய-ராஜாஸி" என்னும் வாக்கியத்திலிருந்து கோதுமை அதாவது விதை தான்யங்களுக்கு ராஜாவைக் குறிக்கும். இந்த அர்த்தங்களிலிருந்து ஆட்டை பலியிடும் யாகத்தின் உண்மையான அர்த்தம் புலப்படும். அதாவது ஈஸ்வரன் தன்னுடைய சிருஷ்டிகளை சாக்ஷி மாத்திரமாய் தரித்துக் கொண்டிருக்கும் 4வது துரியாவஸ்தையையும் கடந்து அதற்கு மேலுள்ள நிஷ்தத்துவ நிலையில் நிலைத்திரு என்பதே. இந்த ஸ்லோகத்திலுள்ள நித்ய சாச்வத என்னும் பதங்களின் அர்த்தத்தில் கொஞ்சம் வித்தியாசமிருக்கிறது. நித்ய என்பதற்கு காலத்தைக் குறித்து எக்காலத்திலுமுள்ளதென்று அர்த்தம், சாச்வத என்பதற்கு விகாரத்தோடு கூடிய தேகத்தை குறித்து விகாரமடையாமல் ஒரேபடித்தாயிருப்பதென்று அர்த்தம்.

21. வேத[3] அவிநாசி[5]நம் நித்யம் ய: ஏநம் அஜம் அவ்யயம்
கத[2]ம் ஸ: புருஷ: பார்த்த[2] கம் காத[4]யதி ஹந்தி கம்

(அ-ம்) ஹே பார்த்த! இதை (ஆத்மாவை) வியத்த (விகாரமற்றது) நாசமற்றது எக்காலத்திலுமுள்ளது பிறப்பில்லாதது, நாசம் செய்விக்கக்கூடாதது என்று எவன் அறிகிறானோ அந்த புருஷன் எவ்வாறு யாரைக் கொல்வான்? யாரைக் கொல்விப்பான்?

(வி-ம்) எக்காலத்திலும் ஒரே இடத்தில் சலித்துக்கொண்டிருப்பதை நித்யமென்றும் எக்காலத்திலும் ஒரே இடத்தில் சலிக்காமல் இருப்பதை சாச்வத நித்யம் என்றும் சொல்லுவார்கள்.

22. வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய நவானி க்ரஹ்ணாதி நர: ஆபராணி
ததா சரீராணி விஹாய ஜீர்ணானி அந்யானி ஸம்யாதி நவானி தேஹீ

(அ-ம்) எப்படி ஒரு மனிதன் கிழிந்துபோன வஸ்திரங்களை எறிந்துவிட்டு புதிய வேறு (வஸ்திரங்களை) தரித்துக்கொள்ளுகிறானோ அப்படியே ஆத்மா சிதலமான (உளுத்துப்போன) சரீரங்களை எறிந்துவிட்டு புதிய வேறு (சரீரங்களை) கிரகிக்கின்றது.

(வி-ம்) பிண்ட கிருஷ்ண சர்மா கிழிந்துபோன வஸ்திரத்தையெறிந்து விட்டு புதிய வேறு வஸ்திரம் கட்டிக் கொள்வதைப் போல், அண்ட விராட் வைஸ்வானரனும் ஒவ்வொரு வருஷமும் ஒரு பருவத்தில் மரங்களின் இலைகளை காய்ந்து உதிர்த்துவிட்டு ஒரு பருவத்தில் மறுபடியும் புதிய வேறு இலைகளை தரித்துக் கொள்கிறான். இந்த ஸ்லோகத்தில் சிதலமான சரீரம் கிழிந்த வஸ்திரத்திற்கும் புது சரீரம் புதுவஸ்திரத்திற்கும் ஒப்பிடப்பட்டிருப்பதை கவனிக்கவும். கீதை 6-11ல் "சைவாஜின குஸ: உத்தரம்" தர்ப்பையின் மீது மான்தோல் வஸ்திரம் விரிக்கப்பெற்ற ஆசனத்திலிருந்துகொண்டு தியானம் செய்யவேண்டுமென்று பகவான் சொன்னது ஜீவனுடைய தூல சூக்ஷ்ம காரண சரீரங்களாகிய ஆசனங்களை பகவான் குறிப்பிட்டிருக்கிறாரேயன்றி தூல தர்ப்பை மான் தோல் வஸ்திரத்தையல்ல.

23. ந ஏநம் சிந்தந்தி ஸஸ்த்ராணி ந ஏநம் தஹதி பாவக:
ந ச ஏநம் க்லேதயந்தி ஆப: நசோஷயதி மாருத:

(அ-ம்) ஆயுதங்கள் இதை (ஆத்மாவை) வெட்ட முடியாது. நெருப்பு இதை தகிக்கமுடியாது. தண்ணீர் இதை நனைக்க முடியாது. காற்று (இதை) உலர்த்த முடியாது.

(வி-ம்) கேனோபநிஷத்து 3வது 4வது பாகங்களில் சிருஷ்டிக்கு ஆதிகாரணமாகிய மூலப்ரக்ருதியாகிய மாதா, அக்னி வாயு வருணனுக்கு எதிரே தன்னுடைய அம்சத்தோடு கூடிய ஒரு துரும்பைப்போட்டு அதை அவர்களுடைய சக்தியால் எரிக்கவோ உலர்த்தவோ நனைக்கவோ செய்யும்படி சொன்னாள். அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனென்றால் அவர்களெல்லாம் மூலப் ப்ரக்ருதியின் காரியங்கள். காரியம் காரணத்திற்கு அடக்கமானதால் காரியங்கள் காரணத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை.

24. அச்சேத்ய:[2] [3] அயம் அதாஹ்ய:[3] அயம் அக்லேத்ய:[3]
அசோஷ்ய:[5] ஏவ ச
நித்ய: ஸர்வகத:[3] ஸ்தாணு: அசல: அயம் ஸநாதந:

(அ-ம்) இது (ஆத்மா) வெட்டுப்படக்கூடாதது, இது தகிக்கக் கூடாதது, நனைக்கக் கூடாதது மேலும் உலர்த்தக் கூடாததுமாம். இது எக்காலத்திலுமுள்ளது, சர்வ வியாபியாயுள்ளது ஸ்திரமாய் (நிலைத்து) உள்ளது (மரக்கட்டைபோல) சலனமில்லாதது அநாதியாயுள்ளது.

(வி-ம்) ஸர்வகத: (சர்வ வியாபியாயுள்ளது) என்னும் இதே லக்ஷணத்தையே கீதை 3-15ல் பகவான் நிஷ்தத்துவமாகிய ப்ரஹ்மத்துக்கும் சொல்லியிருக்கிறார் என்பதை இங்கு குறிப்பிடத்தக்கது.

25. அவ்யக்த: அயம் அசிந்த்ய: அயம் அவிகார்ய:
அயம் உச்யதே
தஸ்மாத் ஏவம் விதித்வா[3] ஏநம் ந. அநுசோசிதும்[5]
அர்ஹஸி

(அ-ம்) இது (ஆத்மா இந்திரியங்களால் அறியக்கூடிய) காரியங்களுக்கு மேலுள்ளது. இது (ஆத்மா மனதினால் அறியக்கூடிய) எண்ணங்களுக்கு மேலுள்ளது. இது (ஆத்மா) விகாரமில்லாதது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் நீ இதை (ஆத்மாவை) இவ்விதமாக உணர்ந்துகொண்டு திரும்பத்திரும்ப துக்கிப்பதை விட்டுவிடு.

(வி-ம்) இந்த ஸ்லோகத்தில் விதித்வா என்னும் பதம் உப யோகிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வஸ்துவை உணர்வது என்பது அந்த வஸ்துவாய் இருப்பதேயாகும். ஈண்டு 25வது தத்துவ மாகிய அநாதியாய் எக்காலத்திலுமுள்ள அக்ஷரபுருஷனை (ஸநா தன பீஜத்தை கீதை 7-10) உணர்ந்த பிற்பாடு துக்கம் நிவர்த்தி யாகிறதென்று பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்கிறார். 'சோகம் தரதி ஆத்மவித்' என்று வித்யாரண்யர் பஞ்சதசியில் சொல்லியிருக்கிறார். ஆகையால் சரீரம் எது ஆத்மா எது என்று உணராமல் வெறும் புத்தக ஞானத்தைக்கொண்டு துக்கம் நிவிர்த் தியாகாது. கீதை கடைசி அத்யாயத்தில்தான் (18-73ல்) அர்ஜு னன் முடிவாக மேலே சொன்ன பிரகாரம் ஆத்மாவை உணர்ந்து பிறகு யுத்தம் செய்ய ஒப்புக்கொண்டதாக சொல்லப்பட்டிருக் கிறது. ஆங்கு அர்ஜுனன் சொல்லுகிறான் "என்னுடைய மோகம் (கீதை 2-7ல் உள்ள கார்ப்பண்ய தோஷ உபஹதஸ்வ பாவ: தர்மஸம்மூட சேதா:) நிவிர்த்தியாயிற்று. ஹே அச்சுதா உம்முடைய அருளால் நான் என்னை உணர்ந்தேன். நீர் சொல்லு கிறபடி செய்வேன் (அதாவது யுத்தம் செய்வேன்)". ஆகையால் தன்னை உணர்ந்த பிறகுதான் சாங்க்யயோகம் கர்மயோகம் முதலி யவை செய்ய முடியும்.

பகவான் கீதை 10வது அத்யாயத்தில் அவருடைய விபூதி மகிமைகளைச் சொன்ன பின்னர் அர்ஜுனன் கீதை 11-1ல் 'மோஹோயம் விகதோமம அதாவது என்னுடைய மோகம் தாற் காலிகமாக நீங்கிற்று என்று சொன்னான். மோகம் ஒரேயடியாக திரும்பிவராதபடி நீங்கவில்லை. விகதோ என்றால் விட்டு விட்டு அதாவது அப்போதைக்கப்போது (தாற்காலிகமாக) நீங்கிற்று என்பது அர்த்தம். கதோ (நஷ்டோ) ஒரேயடியாய் திரும்பி வாராதபடி சாஸ்வதமாய் நீங்கிற்று என்பது அர்த்தம். இதிலி ருந்து பல பதங்களில் வி என்னும் எழுத்தை முன் சேர்த்தால் முடிவான நிலைக்கு ஒருபடி கீழான நிலையை உணர்த்துமென்பது அறியத்தக்கது.

இதுவரை பகவான் 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷனைப் பற்றி சொல்லி வந்தார் இதன்மேல் 24வது தத்வமாகிய க்ஷரபுரு ஷனைப்பற்றி சொல்லப் போகிறார்.

29. அத[2] ச ஏநம் நித்யஜாதம் நித்யம் வா மந்யஸே ம்ருதம்
ததா அபி த்வம் மஹாபா[3]ஹோ ந ஏவம் சோ[5]சிதும்
அர்ஹஸி

(அ-ம்) ஆனால் இதை (ஆத்மாவை) க்ஷணத்துக்கு க்ஷணம் (மின்மினிப்பூச்சிபோல) பிறப்பதாகவும் க்ஷணத்துக்கு க்ஷணம் (மின்மினிப்பூச்சி போல) இறப்பதாகவும் நினைத்தாலும்கூட ஹே மஹாபாஹோ (அர்ஜுனா) நீ இவ்விதமாக துக்கிக்கக் கூடாது.

(வி-ம்) இந்த சரீரமானது ஒவ்வொரு க்ஷணமும் மாறுதலை யடைந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் சரீரம் குழந்தை பருவம், பாலியம், யௌவனம், மூப்பு முதலிய மாறுதல்கள் அடையும் எல்லா காலங்களிலும் அஹம் (நான்) என்னும் சொரூபமாக அந்தர்யாமி மாறுதலில்லாமல் நிலைத்து இருக்கிறான். எல்லா அவஸ்தைகளிலும் உள்ள அஹம் என்பது ஒரே அஹம்தான். குழந்தை பருவம் அஹம், பாலிய அஹம், யௌவன அஹம் மூப்பு அஹம் என்று வெவ்வேறு அஹம் அல்ல. அஹம் என்பது ஒன்றே. அதற்கு மாறுதல் கிடையாது.

27. ஜாதஸ்ய ஹி த்ரு[4]வ: ம்ருத்யு: த்ரு[4]வம் ஜந்ம ம்ருதஸ்ய ச
தஸ்மாத் அபரிஹார்யே அர்த்தே[2] ந த்வம் சோ[5]சிதும்
அர்ஹஸி

(அ-ம்) பிறக்கிறதற்கு இறப்பு நிச்சயம். இறக்கிறதற்கு பிறப்பு நிச்சயம். ஆகையால் (இந்த உன்னால்) தவிர்க்கமுடியாத விஷயத்தைப்பற்றி நீ துக்கிப்பது கூடாது.

28. அவ்யக்தாதீ[3]நி பூ[4]தாநி வ்யக்த மத்[4]யாநி பா[4]ரத
அவ்யக்த நித[4]நாநி ஏவ தத்ர கா பரிதே[3]வநா

(அ-ம்) ஹே பாரத! அவ்யக்தத்தினது பார்க்க முடியாத நிலையிலேயே பிராணிகள் மறைந்து போகின்றன (லயத்தை அடைகின்றன). இவை இரண்டிற்கும் மத்திய காலத்திலேதான்

(ப்ராணிகள் நாம ரூப) தோற்றமாய் தெளிவாய் பார்க்கக்கூடிய நிலையில் இருக்கின்றன (இப்படியாயுள்ள) அவர்களைப்பற்றி எதற்காக உனக்கு துக்கம்?

(அ-ம்) 24வது தத்வமாகிய அவ்யக்தத்திலிருந்து 23வது தத்வமாகிய புத்தி முதல் 1வது தத்வமாகிய பூமி வரையுள்ள எல்லா பிராணிகளும் சமஸ்த பிரபஞ்சமும் உதித்து அதிலேயே லயிக்கின்றன.

29 ஆஸ்சர்யவத் பஸ்யதி கஸ்சித்[3] ஏநம் ஆஸ்சர்யவத்
வததி[3] ததா[2] ஏவ ச அந்ய:
ஆஸ்சர்யவத் ச ஏநம் அந்ய: ச்ருணோதி[5] ச்ருத்வா[5]
அபி ஏநம் வேத[3] ந ச ஏவ கஸ்சித்

(அ-ம்) ஒருவன் இதை (ஆத்மாவை, ஒரு அதிசயத்தைப் போல (இதின் பிந்து அதாவது ஜோதி ரூபத்தை) பார்க்கிறான். இன்னொருவன் (இதை) அவ்விதமாகவே (ஒரு) அதிசயத்தைப் போல (இதின் கலை அதாவது வாக்கு ரூபத்தை) பேசுகிறான். மற்றும் ஒருவன் இதை (ஒரு) அதிசயத்தைப் போல (இதின் நாத அதாவது சப்த ரூபத்தை) கேட்கிறான். (இவ்வாறு) கேட்ட போதிலும் (பார்த்தபோதிலும் பேசினபோதிலும்) இந்த மூவர்களில் ஒருவனுக்காவது அது இன்னதென்று தெரிகிறதேயில்லை.

(வி-ம்) இது கீதையில் ஒரு முக்கியமான அனுபவ ஸ்லோகம். இந்த ஸ்லோகத்தில் 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷனை முதன் முதலில் தரிசிக்கிறவனுடைய அனுபவத்தை அதாவது கீதை 13-1ல் சொல்லியிருக்கும் க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ ஜ்ஞான உணர்வை பகவான் வர்ணித்திருக்கிறார். பார்த்தல், பேசுதல், கேட்டல் ஆகிய மூன்றுவித வர்ணனையும் ஒரே அனுபவமாகும். வெவ்வேறு அனுபவமல்ல என்று அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். இதற்கு மேலுள்ள 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனை அடைந்த பின்னரே கீழுள்ள 24வது க்ஷரபுருஷனுடைய சொரூபத்தை செவ்வையாய் அறியமுடியும். அது வரையில் அவர்கள் முதன் முதலில் அனுபவித்தது இன்னதென்று விளங்காது.

கீதை 13-13, 14ல் இந்திரியங்களில் ஒன்றேனும் புருஷனுக்கு இல்லாவிட்டாலும் சகல இந்திரியங்களின் தொழில்களை செய்வதைப்போல் பிரகாசிக்கிறான் என்று பகவான் அருளியிருப்பதைப் போலவே இந்த க்ஷரபுருஷ அனுபவத்திலும் வாயில்லாமல் பேசுகிறதையும் கண்ணில்லாமல் பார்ப்பதையும் காதில்லாமல் கேட்கிறதையும் அனுபவிக்கிறான். இந்த ஸ்லோகத்தில் ஸ்ருத்வா என்னும் பதத்திற்கு செவியின் தொழிலாகிய கேட்டல் என்று அர்த்தம் இருந்தபோதிலும் மற்ற இந்திரியங்களின் தொழில்களாகிய பார்த்தல் பேசுதல் முதலியவையும் அந்த பதத்தில் அடங்கியிருக்கின்றனவென்று ஊகித்துக் கொள்ளவேண்டியது. இந்த க்ஷரபுருஷ அனுபவமானது மேகத்தால் மூடியுள்ள வானில் மின்னல் ஒளியைப் போலவும் இருட்டில் மின்மினிப் பூச்சியைப் போலவும் ஒரு தொட்டியில் லேசான அலைகளோடு கூடிய தண்ணீரில் தோன்றும் சூரிய பிம்பத்தைப் போலவும் வலது மார்பு பிரதேசத்தில் தெரியும். அருணகிரிநாதர் திருப்புகழில் சொல்லியிருக்கிற நாதபிந்து கலாதி நமோ இந்த அனுபவமே. இந்த அனுபவமே சுருதி அதாவது சிரவணமாகும். மாமிச பிண்டமாகிய குருவினால் உபதேசிக்கப்பட்ட தூலமந்திரம் சிரவணம் ஆகாது. இந்த அனுபவத்தில் வாயில்லாமல் சொன்னவனே குரு. செவியில்லாமல் கேட்டவனே சிஷ்யன். இந்த சிரவணமே உண்மையான உபதேசம்.

உபநிஷத்துகளில் எல்லாவற்றிற்கு மேலாக் சொல்லப்படுகிற உபதேச மகா வாக்கியங்களின் அனுபவம் பின்வருமாறு.

1. அயம் ஆத்மா பிரஹ்மம் - என்பது 24வது தத்வமாகிய க்ஷரபுருஷ அனுபவம். இதுவே சிரவணம்.

2. தத்துவமஸி என்பது 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனுடைய அனுபவம். அக்ஷரபுருஷனை தரிசித்து மீண்டு க்ஷரபுருஷனாயிருந்து கொண்டு திரும்ப திரும்ப அக்ஷரபுருஷ அனுபவத்தை நினைத்தலுக்கு மனனம் என்று பெயர்.

3. அஹம் ப்ரஹ்மாஸ்மி என்பது 26வது தத்வமாகிய புருஷோத்தமனுடைய அனுபவம். இதுவே நிதித்தியாஸம்.

4. பிரஜ்ஞானம் ப்ரஹ்மம் என்பது நிஷ்தத்வத்தின் அனுபவம். புருஷோத்தமனை தொட்டு அந்த தன்மய நிஷ்டையில் இருப்பவனுக்கு ஒன்றுக்குமேல் ஒன்முக 1, 2, 3 மூன்றுவித அனுபவங்களும் தெரியும் ஆகையினுல்தான் இந்த 24வது க்ஷர புருஷனை பார்த்த மாத்திரத்தில் சாக்ஷாத் ஸ்வரூபம் புரியாது என்று இங்கே பகவான் சொல்லியிருக்கிறுர்.

இந்த 24வது க்ஷரபுருஷனை தர்சனம் பண்ணினவனே த்விஜன். அஞ்ஞான பிறவியிலிருந்து ஞானபிறவியடைந்த இவன்தான் பிராமணத் தொழிலோடு கூடினவன். இவனுக்குத் தான் உபநிஷத்துக்கள், கீதை முதலியவைகளை வாசிக்க அதிகாரம் உண்டு என்று சொல்லியிருக்கிறதேயொழிய ஸ்தூல பூணூல் போட்டுக்கொண்டிருக்கும் பிராமண ஜாதியில் பிறந்தவர்களுக்கு அந்த அதிகாரம் உண்டு என்று எங்கும் சொல்லப்படவில்லை. சாக்ஷாத்காரத்தைப் பொருத்தமட்டில் அவர்களும் பறையர்களும் ஒன்றே. அதினுல்தான் கீதை 5-18ல் புருஷோத்தமனை தொட்ட பண்டிதனுக்கு பிராமணனும் நாய் மாமிசம் தின்னும் பறையனும் ஒன்று என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உபநிஷத்துகளிலும் வசிஷ்ட யோகவாசிஷ்டத்திலும் ஸ்வாநுபூதி அதாவது அனுபவம் பிரமாணம் என்று குறிப்பிட்டுள்ள சுருதிப்பிரமாணத்தை (விவேக சூடாமணி 478வது ஸ்லோகத்தைப் பார்க்கவும்) ஸ்ரீ சங்கராச்சாரியரும் தங்களுடைய சுயபுத்தியை உபயோகித்து அனுபவத்தை பெருத அவருடைய பாம்பரையில் வந்த புஸ்தக பண்டிதர்களும் சுருதி என்பதற்கு புஸ்தகத்தில் எழுதியுள்ள உயிரில்லாத எழுத்துக்களை பிரமாணம் என்கிறுர்கள். உயிரோடு கூடிய எழுத்தாகிய சுருதியை பனை ஓலை சுவடியில் எழுதிவைத்துள்ள செத்த எழுத்துக்களென்று மாறுபாடாகச் சொல்லி எல்லா ஜனங்களையும் ஆயிரம் வருஷமாக தப்பான வழியை பின்பற்றும்படி செய்து அதோகதியில் அழுத்திவிட்டார்கள்.

இந்த க்ஷரபுருஷ, அக்ஷரபுருஷ, புருஷோத்தம அநுபவங்களை ஸ்ரீ கோபாலகிருஷ்ண சாஸ்திரி நந்தனர் சரித்திரத்தில் வெகு அழகாக வர்ணித்திருக்கிறுர் அதாவது.

கனவோ நினைவோ கண்டதும் வினே
மனதில் உறுதிகொள்ள வகையொன்றும் காணேனே.
நித்திரை தன்னில் ஒரு சித்தன் வடிவாய் வந்து
முத்தி தருவேனென்று நத்திப் பேசினதுண்டு
(கனவோ நினைவோ)

இது க்ஷரபுருஷ அநுபவம்.

யாரும் இகழ்ந்து தள்ளும் நாறும் புலையன் என்னை
வாரும் பரமபதம் சேரும் என்று உரைத்தது
(கனவோ நினைவோ)

இது அக்ஷரபுருஷ அநுபவம்.

நித்திரை தன்னில் வந்து தட்டி எழுப்பி என்னை
வெட்ட வெளியை காட்டி கட்டளையிட்டது
(கனவோ நினைவோ)

(இது புருஷோத்தம அநுபவம்)

இந்த ஸ்லோகத்தில் சொல்லியுள்ள க்ஷரபுருஷ அநுபவமானது ப்ரஸ்நோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கும் ப்ராண-ரதி புருஷ-ப்ரக்ருதி வித்யா-அவித்யா மிதுனம் அதாவது இரட்டையாகும். இந்த இரட்டைகளையும் சேர்த்து ஒன்ருகவே உபாசிக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் வித்தையையும் அவித்தையையும் வேறு பிரித்து உபாசித்தால் அவித்தையை உபாசிக்கிறவர்கள் நரகத்தை அடைவார்கள். வித்தையை உபாசிப்பவர்கள் நரகத்திற்கும் கேடுகெட்ட ரௌரவாதி நரகத்தை அடைவார்கள் என்று ஈசாவாசிய உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சிவபூஜையில் கரடி புகுந்துகொண்டது என்னும் பழமொழியைப் போல அதாவது மனக்குரங்கானது எண்ணங்களாகிய கிளைகளில் இடைவிடாமல் தாவிக்கொண்டு செய்யும் வெள்ளித் தகடுகள் அடித்த கட்டைகள் அணிந்த ஆசார்யர்கள் பாதபூஜை, சாலிக்ராம பூஜை சாரதா தேவி பூஜை முதலியவைகளெல்லாம் வித்யா உபாசனை. இது ரௌரவ நரகத்தைதான் கொடுக்கும். வித்தை அவித்தைகளை பிரித்து செய்வதால் வரும் தீங்குகளை விஸ்தாரமாய் அறிய பிரஹதாரண்ய உபநிஷத்தையும் ஈசாவாசிய உபநிஷத்தையும் படித்துப் பார்த்துக்கொள்ளவும்.

கதா உபநிஷத்து 2வது அத்யாயம் 7வது ஸ்லோகத்தில் கீதை 2-29ல் சொல்லியிருக்கிற மாதிரியே க்ஷரபுருஷனது சப்த ரூபத்தை அநேகர் கேட்டும் அதன் உண்மையான சொரூபத்தை அறிகிறதில்லை, இந்த இடத்தில் குருவும் சிஷ்யனும் ஆச்சர்ய மானவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

30. தே[3]ஹீ நித்யம் அவத்[4]ய: அயம் தே[3]ஹே ஸர்வஸ்ய பா[4]ரத
தஸ்மாத் ஸர்வாணி பூ[4]தாநி ந த்வம் சோசிதும்[5]
அர்ஹஸி

(அ-ம்) பாரத! இந்த சமஷ்டி சரீரத்தில் (அவ்யக்தத்தில்) உள்ள சரீரியாகிய அக்ஷரபுருஷன் எல்லா காலங்களிலும் உள்ள வன் நாசம் இல்லாதவன். ஆகையால் எல்லா பிராணிகளைக் குறித்து நீ துக்கிப்பது கூடாது.

(வி-ம்) தாவர ஜங்கமங்களாகிய எல்லா சரீரங்களையும் தனித் தனியாய் பார்க்கும்பொழுது அவை வியஷ்டி சரீரங்கள். எல்லா வற்றையும் சேர்த்து ஒன்றாய் பார்க்கும்பொழுது ஒரே சமஷ்டி சரீரம், மரங்களும் தோப்பும்போல. மரங்களை தனித்தனியாய் பிரித்துப் பார்ப்பது வியஷ்டி. எல்லா மரங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து ஒரே தோப்பாய்ப் பார்ப்பது சமஷ்டி-மேலே சொன்ன சமஷ்டி சரீரமே அவ்யக்தம், ஸர்வம், விராட் என்று பலவிதமாக சொல்லப்படும். இதை சரீரமாக தரித்திருக்கும் 25வது தத்வ மாகிய அக்ஷரபுருஷன், எல்லா வியஷ்டி தேகங்களிலும் அந்தர் யாமியா யிருக்கிறான். அவன் அழிவு இல்லாதவன். ஆனபடி யால் எந்த பிராணிகளைக் குறித்தும் துக்கிக்கவேண்டிய அவசி யமில்லை என்று பகவான் அருளியிருக்கிறார்.

31. ஸ்வத[4]ர்மம் அபி ச அவேக்ஷ்ய ந விகம்பிதும் அர்ஹஸி
த[4]ர்ம்யாத் ஹி யுத்[3]தா[4]த் ச்[5]ரேய: அந்யத் க்ஷத்ரியஸ்ய
ந வித்[3]யதே

(அ-ம்) (நீ) உன்னுடைய கடமைகளை உணர்ந்தால் (உன்னு டைய மனம் சஞ்சலம் அடைதல் கூடாது. ஏனென்றால் க்ஷத்தி ரியனுக்கு வலுவில் (தானாகவே) வரும் யுத்தத்தைவிட நன்மை கொடுக்கக் கூடியது வேறொன்றுமில்லை.

(வி-ம்) ப்ராம்மண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரர்களுக்கு தனித்தனியே ஏற்பட்டிருக்கும் ஜீவன மார்க்கமே ஸ்வதர்ம மென்று மோக்ஷ தர்மம் 300வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. குணசாம்யத்தோடு (சத்துவ ரஜஸ் தமசாகிய மூன்று குணங்களும் ஒன்றை ஒன்று அதிகரிக்காமல் சமத்தோடு) கூடிய 24வது தத்வமாகிய அவ்யக்தத்தை தரித்திருக்கும் ப்ராம்மணன் பிரயத்தனமில்லாமல் கிடைப்பதைக்கொண்டு ஜீவனம் செய்யவேண்டும். சத்வகுணம் மேலிட்ட 23வது தத்வமாகிய புத்தியைத் தரித்திருக்கும் க்ஷத்ரியன் வலுவில் வந்த யுத்தத்தில் ஜெயித்தவைகளைக்கொண்டு ஜீவிக்கவேண்டும். ரஜோகுணம் மேலிட்ட 22வது தத்வமாகிய மனதைத் தரித்திருக்கும் வைசியன் வியாபாரம் செய்து துலாதரனைப்போல் சொற்ப லாபத்தைக்கொண்டு ஜீவனம் செய்யவேண்டும். தமோகுணமேலிட்ட 21 முதல் 17 வரை தத்வங்களாகிய பஞ்சமஹா பூதங்களை தரித்திருக்கும் சூத்திரன் மற்ற மூன்று ஜாதிகளுக்கும் பணிவிடை செய்து ஜீவனம் செய்யவேண்டும். கீதை 18-44ல் சூத்திரன் பிராமணனுக்கு சமையல் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறது. அதுபோலவே, பிராமணர்களுக்கு தேவ பூஜைக்கு வேண்டிய உதவிகளையும் க்ஷத்திரிய வைசியர்களுக்கு யுத்தத்திலும் வியாபாரத்திலும் வேண்டிய உதவிகளை சரீரத்தினால் செய்கிறான். ஆகையால் இந்த ஜாதிகளில் ஒன்று உயர்ந்தது ஒன்று தாழ்ந்ததென்பதில்லை. எல்லோரும் பிரம்ம புத்திரர்கள் அதாவது பிராமணர்கள்தான். மோக்ஷ தர்மத்தின்படி ஜீவர்களின் குணங்களின் பிறகாரம் ஜீவனமார்க்கம் ஏற்படுத்தியிருக்கிறது.

விகம்பம் என்பதற்கு அர்த்தம் சரீர மனங்களின் படபடப்பு அதாவது நடுங்குதல், இதுவே கீதை 2-29ல் சொல்லப்பட்ட அனுபவம், வண்டியின் நுகத்தடியின் இரண்டு முனைகளிலும் உட்கார்ந்துகொண்டு விளையாடும் சிறுவர்கள் மேலும் கீழும் மாறிமாறி செல்வதைப்போலும். சமமில்லாத ஒரு திராசை சமப்படுத்துவதற்காக தட்டில் வேண்டுமான எடையை போட்டவுடனே கீழ் நின்ற முள் மேல் முள்ளுக்கு நேரே ஸ்த்திரமாகு முன் இருபக்கமும் மாறிமாறி ஆடுவதைப் போலவும் இந்த அனுபவமிருக்கும். அவிகம்பம் என்பதற்கு அர்த்தம் ஸ்த்திரமா

யிருத்தல். அதாவது சலிக்காமலிருத்தல். கீதை 10-7ல் அவிகம்ப யோகம் அதாவது 25வது அக்ஷரபுருஷனிடம் சலிக்காமலிருக்கும் யோகத்தைப்பற்றி சொல்லியிருக்கிறது. அதாவது மேல் சொன்ன திராசின் கீழ் முள்ளும் மேல் முள்ளும் நேருக்கு நேராக நிலைத்திருத்தல். இந்த ஸ்லோகத்தின் உள் அர்த்தம் பின்வருமாறு :

யோகதாரணையில் 24வது தத்வத்தை அடைந்தவனுக்கு கடமை என்னவென்றால் மனதை எண்ணங்களாகிய பிரவாகத்தில் விடுதலாகிய சஞ்சலத்தை அடைவது தகாது. 1 முதல் 23 வரை தத்வங்களை ஜெயிப்பதுதான் அவனுடைய ஸ்வதர்மம் வேறொன்றும் அவனுக்கு 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனை அடைவதாகிய ச்ரேயசை (நன்மையை) கொடுக்காது.

கீதை 18-47ல் நன்றாய் அனுஷ்டிக்கப்படுகிற பரதர்மத்தைக் காட்டிலும் சிறிது லோபத்தொடு கூடிய ஸ்வதர்மமே மேலானதென்று பகவான் அருளியிருப்பதை இங்கு கவனிக்கவும்.

32. யத்ருச்சயா ச உபபந்நம் ஸ்வர்க்க த்வாரம் அபாவ்ருதம்
ஸுகிந: க்ஷத்ரியா: பார்த்த லபந்தே யுத்தம் ஈத்ருசம்

(அ-ம்) ஹே பார்த்த! ஸ்வர்க்க வாசல் திறந்து (ஸ்வர்க்கம் அடைவிப்பதற்கு காரணமாயிருப்பதால்) பிரயத்தனமில்லாமலேயே(வலுவில்) வருகின்ற அப்பேர்ப்பட்ட யுத்தத்தில் (ஈடுபடுகின்ற) புண்ணியவான்கள் (ஸ்வர்க்க) லாபத்தை அடைவார்கள்.

(வி-ம்) இந்த ஸ்லோகத்தின் உள் அர்த்தம் இதுவாம். புருஷோத்தமனுடைய பிரசாதத்தினால் (அருளினால்) 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷனை தரிசித்து 1 முதல் 23 வரை உள்ள தத்வங்களை ஜயிக்கும் யுத்தத்தில் ஈடுபட்ட புண்யவான்கள் கீதை 4-32ல் சொல்லியிருக்கும் பிரஹ்மமுகம் (ஸ்வர்க்கத் துவாரம்) ஆகிய அக்ஷரபுருஷன் மூலமாய் புருஷோத்தமனை தரிசித்தலாகிய லாபத்தை அடைவார்கள்.

33. அத சேத் த்வம் தர்ம்யம் இமம் ஸங்க்ராமம் ந கரிஷ்யஸி
தத: ஸ்வதர்மம் கீர்த்திம் ச ஹித்வா பாபம் அவாப்ஸ்யஸி

(அ-ம்) ஆனால் இந்த வலுவில் வந்த போரை புரியாவிட்டால் அப்பொழுது (உன்னுடைய) ஸ்வதர்மத்தையும் கீர்த்தியையும் இழந்து பாபத்தை நீ அடைவாய்.

(வி-ம்) இந்த ஸ்லோகத்தில் பாபத்தின் லக்ஷணம் சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது விதிக்கப்பட்ட தர்மத்திலிருந்து நழுவுவதே பாபமாம். ஆகையால் ஒரே செய்கை ஒரே சமயத்தில் ஒரு வருணத்தாருக்கு பாபமாயிருப்பது இதர வருணத்தாருக்கு பாபமற்றதாயிருக்கலாம். இங்கே தர்ம்யம் என்பது தர்மத்தை தரித்துக்கொண்டிருப்பது. அதே மாதிரி கீதை 4-13ல் வர்ண்யம் என்பது வர்ணம் அதாவது தொழிலைத் தரித்தல்

34. அகீர்த்திம் ச அபி பூ[4]தாநி கத[2]யிஷ்யந்தி தே அவ்யயாம்
ஸம்பா[4]விதஸ்ய ச அகீர்த்தி: மரணாத் அதிரிச்யதே

(அ-ம்) மேலும் (சகல) சீவர்களும் (மறதியினால்) அழியமுடியாத உன்னுடைய அபகீர்த்தியைப்பற்றி பேசிக்கொள்ளுவார்கள். கண்ணியமுள்ளவர்களுக்கு அபகீர்த்தி உயிரை விடுதலைவிட இழிவானது.

35. ப[4]யாத் ரணாத் உபரதம் மங்யந்தே த்வாம் மஹாரதா[2]:
ஏஷாம் ச த்வம் ப[3]ஹுமத: பூ[4]த்வா யாஸ்யஸி லாக[4]வம்

(அ-ம்) மேலும் பெரிய ரத வீரர்கள் உன்னை(ப்பற்றி) பயத்தினால் யுத்தத்தினின்றும் பின் வாங்கினதாக நினைப்பார்கள். பெரிதாய் மதித்திருக்கப்பட்ட அவர்களால் நீ (இப்பொழுது) அற்பமாய் மதிக்கப்படுவாய்.

36. அவாச்ய வாதா[3]ம்ச ப[3]ஹூந் வதி[3]ஷ்யந்தி தவ அஹிதா:
நிந்த[3]ந்த: தவ ஸாமர்த்[2]யம் தத: து:க்க[2]தரம் நு கிம்

(அ-ம்) உன்னுடைய சத்துருக்கள் உன்னுடைய சமார்த்தியத்தை நிந்தித்து அநேக சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லுவார்கள். இதைவிட அதிக துக்கமான விஷயம் என்ன (இருக்கிறது).

(வி-ம்) துக்கம் துக்கதரம் துக்கதமம் வரிசையாக ஒவ்வொரு அளவு அதிகத்தைக் குறிக்கும். ஈண்டு துக்கதரம் என்றது சாதாரண துக்கத்திற்கு ஓர் அளவு அதிகம்.

37. ஹத: வா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்க்கம்[3] ஜித்வா வா
போக்ஷ்யஸே[4] மஹீம்
தஸ்மாத் உத்திஷ்ட[2] கௌந்தேய யுத்தாய[3,4] க்ருத நிச்சய:[5]

(அ-ம்) நீ (யுத்தத்தில்) கொல்லப்பட்டால் (வீர ஸ்வர்க்கத்தை அடைவாய் அல்லது (யுத்தத்தில்) ஜயித்தால் (இந்த சரீரத்திலேயே வைகுண்டமாகிய) பரம சுகத்தை அனுபவிப்பாய். ஆகையால் ஹே கௌந்தேய! (அர்ச்சுன) யுத்தம் செய்ய பிடிவாதத்துடன் எழுந்திரு.

(வி-ம்) மஹீம் என்னும் பதத்திற்கு புஸ்தக பண்டிதர்கள் பூமண்டல போகங்களையே அர்த்தம் கொடுத்திருக்கிறார்கள். அப்படியானால் யுத்தத்தில் ஜெயிப்பதைவிட இறந்துபோவதேமேல் என்று அர்ச்சுனனுக்கு தோன்றியிருக்கும். ஏனென்றால் பூமண்டல போகங்களைவிட சுவர்க்கலோக போகங்கள் உயர்ந்தவை. மஹீம் என்னும் பதத்திற்கு சரியான அர்த்தம் மஹத் = ப்ருஹத் = பிரஹ்மம் = காயத்ரி மந்திரத்திலிருக்கும் தீமஹீ. இது ஸமஷ்டி. எல்லா லோகங்களையும் குறிக்கும். வியஷ்டியாகிய பூலோகத்தை மாத்திரம் அன்று. அதர்மத்தோடு கூடிய துர்யோதனன்கூட யுத்தத்தில் இறந்த பின்னர் அவனுடைய கிஞ்சித் புண்ணிய பலனை அனுபவிப்பதற்காக ராஜ உடை கிரீடத்துடன் ஸ்வர்க்கத்தில் கொஞ்சகாலம் இருந்ததாகவும் இதை பஞ்சபாண்டவர்களே பார்த்ததாகவும் பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் சமத்வத்துடன் (25வது அக்ஷரபுருஷனில் நிலைத்து) யுத்தத்தை ஜெயிப்பவனுக்கு உண்டாகும் லாபம் இந்த பூலோக சுவர்க்கலேக போகங்களுக்கு மேற்பட்டதாகும். இதற்கு சமானமும் இல்லை. இதைவிட உயர்வானதும் இல்லை.

கீதை 11-33ல் மறுபடியும் பகவான் அர்ச்சுனனுக்கு இதையே சொல்லுகிறார், அதாவது யுத்தத்தில் ஜயித்தால் அர்ச்-

சுனன் ராஜ்யம் ஸம்ருத்தத்தை அடைவானென்று ராஜ்ய ஸம்ருத்தமும் மஹீமும் ஒப்புயர்வற்ற மேலான புருஷோத்தம பதத்தையே குறிக்கும்.

38. சுக[2] து:கே[3] ஸமே[2] க்ருத்வா லாப அலாபௌ[4] ஜய அஜயௌ[4]
தத:[3] யுத்தாய[4] யுஜ்யஸ்வ ந ஏவம் பாபம் அவாப்ஸ்யஸி

(அ-ம்) சுக துக்கங்களையும் லாப நஷ்டங்களையும் ஜயம் தோல்விகளையும் சமமாகச் செய்து (பார்த்து) பிறகு யுத்தத்தை ஆரம்பிப்பாயாகில் அல்லது செய்வாயாகில் பாவத்தை அடைய மாட்டாய்.

(வி-ம்) சங்கல்பம் (எண்ணங்கள்) பெருகுங்கால் துக்கம் உண்டாகும். சங்கல்பம் சுருங்குங்கால் சுகம் உண்டாகும். இதற்கு திருஷ்டாந்தம் கரும்பும் சாக்கரீன் மாத்திரையும் (சர்க்கரையை விட அளவுக்களவு நூற்றுக் கணக்காய் அதிக தித்திப்புள்ளது). ரேசகம் அதாவது சிருஷ்டியில் துக்கம். பூரகம் அதாவது சம்காரத்தில் சுகம். இவை இரண்டும் கும்பகம் அதாவது சாங்கிய புத்தியின் இரு பிரிவுகளாகும். 24வது தத்வமாகிய அவ்யக்தத்தில் (ப்ரக்ருதியில்) மோக்ஷம்-பந்தம், சுகம்-துக்கம், வித்தை-அவித்தை முதலிய சகல துவந்தங்களும் பின்னி கலந்து இருக்கின்றன.

கீதை 10-34ல் பகவான் எல்லா வஸ்துக்களுக்கும் நான் உற்பத்திஸ்தானம் அவைகளை சங்காரம் செய்பவனும் நானே என்றும், கீதை 10-20ல் அவைகளின் உற்பத்தி ஸ்திதி நாசங்களுக்கு காரணபூதன் நானே என்றும் சொல்லியிருக்கிறார். ஆகையால் இந்த ஸ்லோகத்தில் குறிப்பிட்ட துவந்துவங்களை (பரஸ்பரம் விரோதமான இரட்டைகளை) எல்லாம் ஒரே வஸ்துவின் இரண்டு பிரிவுகளாக பார்ப்பதே 'ஸமேக்ருத்வா' சமமாக செய்வதாகும். இந்த சமமாகிய கும்பகம் அடயோகத்தினால் (பலவந்தத்தினால்) வரும் கும்பகமல்ல. ஆத்ம ஞானத்தினால் வரும் கேவல கும்பகம் (பிரயத்தனமில்லாமல் வரும் கும்பகம்). ஆத்ம ஞானம் வராமல் இந்த கும்பக ஸமத்தை மனதால் சிந்திக்கவே முடியாது.

இங்கே பாபம் என்று சொன்னது பந்தங்களுக்கு காரணமாகிய பொன் சங்கிலி போன்ற புண்ணியத்தையும் இருப்புச் சங்கிலி போன்ற பாபத்தையும் குறிக்கிறது. இதே அர்த்தத்தில் பகவான் கீதை 18-66ல் சர்வ பாபங்களினின்றும் உன்னை விடுவிப்பேன் என்று அர்ச்சுனனுக்கு சொல்லுகிறார்.

இந்த சர்வ பாபத்தினின்றும் விடுபடுவதற்கு அப்பியாசிக்க வேண்டிய யோக தாரணையைப்பற்றி கீதை 8-12ல் சொல்லியிருக்கிறார். அதாவது 10 இந்திரியங்களையும் மனதில் அடக்கி இப்படிப்பட்ட மனதை புத்தியில் நிறுத்தி அப்படிப்பட்ட புத்தியை 24வது தத்வமாகிய அவ்யக்தத்தில் வைப்பதாகும். இந்த யோக தாரணை சித்தித்த பிறகுதான் சுக துக்கங்களை சமமாக பார்ப்பதும், கர்ம யோகம், பக்தி யோகம், ராஜ யோகம், ஞான யோகம் என்று பலவிதமாய் சொல்லப்பட்ட ஒரே வஸ்துவை அடைய சாதனமாயிருக்கும் யோகமும் சாத்தியமாகும்.

39. ஏஷா தே [4]அபிஹிதா [2]ஸாங்க்யே [3 3 4]புத்தி யோகே [3]து
இமாம் [5]ச்ருணு
[4]புத்யா யுக்த: யயா [2]பார்த்த [3]கர்ம[4]பந்தம் ப்ரஹாஸ்யஸி

(அ-ம்) ஹே பார்த்த! (அர்ச்சுன) உனக்கு முன் ஸ்லோகங்களில் சொல்லப்பட்டது ஸாங்கிய புத்தி (சமத்துவமுள்ள புத்தி அல்லது யோகபுத்தி அல்லது புத்தியோகம்) ஆகும். (இப்பொழுது) மேலே சொன்ன (இதே) யோகத்தை (சமத்துவ புத்தி யோகத்தை)ப்பற்றி (நான் பின்னும் சொல்லப்போகிறதை நீ) கேட்பாயாக: அந்த சமத்துவ புத்தியோடுகூட நிலைத்து இருந்தால் கர்ம பந்தத்தினின்றும் (குணப் பிரக்ருதியோடு பின்னிக்கொண்டு ஐக்கிய மடைந்திருக்கும் பந்தத்திலிருந்தும் நீ) நிவிருத்தித்துக் கொள்வாய்.

(வி-ம்) ஸங்க்யே = சண்டை, ஸாங்க்யே = சமாதானம். இந்த ஸ்லோகத்தில் புத்தி என்னும் பதம் சமஷ்டி புத்தியாகிய 24வது தத்வமாகிய அவ்யக்தத்தை குறிக்கிறது. ஆகையால் புத்தி, கர்ம என்னும் பதங்கள் ஒரு பொருளையே குறிக்கின்றன. ஒரே பொருளை (அர்த்தத்தை)க் கொடுக்கும் இருபதங்களை ஸ்லோ

கங்களில் முதல் வரியில் ஒரு பதத்தையும் இரண்டாவது வரியில் வேறொரு பதத்தையும் பகவான் கீதையில் பலவிடங்களில் உபயோகித்திருக்கிறார். ஸ்வானுபவ மில்லாத புத்தக பண்டிதர்கள் ஒரே அர்த்தமுள்ள இரண்டு பதங்களுக்கும் வெவ்வேறு அர்த்தம் பண்ணி, படிக்கிறவர்கள் மனதில் சமுசயத்தையும், குழப்பத்தையும் உண்டுபண்ணியிருக்கிறார்கள்.

திருஷ்டாந்தங்கள் :

கீதை 2-49ல் கர்ம புத்தி என்னும் பதங்களுக்கு ஒரே அர்த்தம், அதாவது 24வது தத்வமாகிய அவ்யக்தம்

கர்ம யோகம், புத்தி யோகம் 25வது தத்வமாகிய அக்ஷர புருஷனில் நிலைத்திருத்தல்.

கீதை 5-14, 15ல், ஸ்வபாவ: விபு: என்னும் பதங்களுக்கு ஒரே அர்த்தம், அதாவது 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன்.

கீதை 8-12ல் ஹ்ருதி, ப்ராணம் என்னும் பதங்களுக்கு ஒரே அர்த்தம். அதாவது 23வது தத்வமாகிய புத்தி.

இந்த 2-39ல் பகவான் யோகம் என்னும் பதத்தை உபயோகித்து இருக்கிறார். அதற்கு புத்தக பண்டிதர்கள் கர்மயோகமென்று அர்த்தம் சொல்லுகிறார்கள். இந்த இரண்டாவது அத்யாயம் ஸாங்க்ய யோகத்தைப்பற்றி சொல்லுவது. இதிலேயே பிரித்து கர்மயோகத்தை தனியாக பகவான் சொல்லப்போகிறார் என்று அர்த்தம் செய்திருக்கிறது தப்பு - ஏனென்றால் இந்த இரண்டு யோகமும் வெவ்வேறல்ல. ஒரே சமத்துவ நிஷ்டைதான். ஒரு நிவாத (அசையாத) தீபத்தில் பிரகாசம், சூடு என்பதாக இரண்டு விதமான தன்மைகளுண்டு. அவைகளைப் பிரிக்க முடியாது. இதைப் போலவே அக்ஷரபுருஷனுடைய ஒரே சமத்துவத்தில் ஸாங்க்யம் (சலியாத ஞானம், ஆடாத ஜோதி) கர்மம் (ஆடாத பௌருஷம் அல்லது சக்தி) ஆகிய இரண்டு சலிக்காத தன்மைகள் உண்டு. இவைகளில் இது வரைக்கும் ஸாங்க்யம் அல்லது சலியாத ஜோதித் தன்மையைப்பற்றி சொல்லியாயிற்று. இனிமேல் அதே சமத்துவத்திலுள்ள சலியாத பௌருஷம் அதாவது சக்தித் தன்மையைப்பற்றி சொல்லப்போகிறார். இந்த

இரண்டு விதத்தையே ஈரிரண்டு 4 விதமாகவும் (கர்மயோகம் ராஜயோகம், ஞானயோகம், பக்தியோகம்) பகவானல் காட்டப் பட்டிருக்கிறது. முன்னமேயே கீதை 8-3ல் சொல்லப்பட்டிருக் கும் புருஷோத்தமனிடம் விடாது நடனம்புரியும் சிருஷ்டிக்கு காரணமாகியும் சலித்துக்கொண்டு மிருக்கிற ஈஸ்வர சக்தியாகிய கர்மா என்பதற்கு அர்த்தம் சித்-சக்தி இரட்டை, வித்யா-அவித்யா இரட்டை, ப்ராண-ரதி இரட்டை, புருஷ-ப்ரக்ருதி இரட்டை, க்ஷர-அக்ஷர இரட்டை, ஸாங்க்ய-யோக இரட்டை என்று சொல்லி இருக்கிறேன். இந்த மிதுனத்தை கடுதாசியில் தான் பிரித்துப் பார்க்க முடியுமேயொழிய ஸ்வானுபவத்தில் பிரிக்கமுடியாது. சர்மாவாகிய சலனம் பந்தத்தை (முடிச்சை) எவ்விதமாய் உண்டாக்குகிற தென்பதைப்பற்றி கீழே காட்டி யிருக்கிறேன்.

திருச்சி ரயில்வே ஸ்டேஷனில் கிருஷ்ண சர்மா ஒரு ரயில் வண்டியில் உட்கார்ந்து கொண்டிருக்கிருர். அப்பொழுது வேருெரு ரயில் வண்டி பக்கத்து லயனில் வேகமாய் ஓடுகிறது. அந்த ஓடுகிற வண்டியைப் பார்த்து தன்னுடைய வண்டி ஓடுகிற தாக அவர் மதிக்கிருர். இந்த அத்தியாசமாகிய பந்தம் 2 விதங் களால் நீங்கும் (1) அவர் தன்னுடைய சரீரத்தைப் பார்க்கிற பொழுது (2) ஓடுகிற அந்த ரயில் வண்டி பூராவும் போன பிற் பாடு. இந்த இரண்டு விதங்களாலும் அவர் தன்னுடைய ரயில் வண்டி நின்ற விடத்திலேயே அசையாமல் நிற்கிறதென்று அறி கிருர். இதைப் போலவே, புருஷோத்தமனிடம் ஒரே யிடத்தில் விடாது சலித்துக்கொண்டு இருக்கும் ஈசுவர சக்தியாகிய ப்ரக்ரு தியின் நடனமானது சரீரத்திலிருக்கும் சரீரிக்கு மோகத்தை உண்டுபண்ணும். அதாவது சரீரத்திற்கு எற்பட்ட தாபங்களை சரீரியாகிய தனக்கு வந்ததாக எண்ணி பந்தத்தை யடைகிருன். இந்த பந்த நிவிருத்திக்கு வழியாகிய ஸாங்க்யபுத்தி அதாவது புத்தியோகமே இந்த கீதை 2-39ல் குறிப்பிட்டிருக்கிறது. அதா வது சரீரியானவன் சலனத்திற்கும் தாபத்திற்கும் காரணமாகிய பிரக்ருதியை நோக்காமல் தன்னுடைய நிஜ ஸ்வரூபமான அந்தர் யாமியாகிய அக்ஷரபுருஷனை நோக்கினல் பந்தம் நீங்கும். அக்ஷர புருஷனில் நிலைத்திருத்தலேயே ஸாங்க்ய புத்தி, ஸ்திரபுத்தி, ஸ்திதப்ரஜ்ஞா, ஸ்திரமதி, புத்தியுக்த, கும்பகம், சாந்தரஜசம்,

கர்மகௌசலம், துக்க ஸம்யோக—வியோகம் (6-23) என்று பல விதமாக சொல்லுவார்கள்.

சலத்வம்—நாட்டியம் = காமம்

அசலத்வம்—சமம் = நிஷ்காமம்

மோக்ஷ தர்மப் பிரகாரம் சமம் என்பது காமத்திற்கு நேர் எதிரிடையானது. ஆகையால் ஸாங்க்ய யோகத்தையடையாமல் நிஷ்காம கர்மம் பண்ணவே முடியாதென்று அறியவும்.

40. ந இஹ அபிக்ரமநாஸ: அஸ்தி[4] ப்ரத்யவாய: ந வித்யதே[3]
ஸ்வல்பம் அபி அஸ்ய தர்மஸ்ய[4] த்ராயதே
மஹதோ பயாத்[4]

(அ-ம்) இதில் (இந்த ஸாங்க்ய புத்தியோகத்தில்) சாதனைகள் வீணாயிற்றென்பது இல்லை - எதிர்பார்த்ததற்கு விரோதமான பலனைக் கொடுத்தன என்பதும் கிடையாது. இந்த ஸமாதான புத்தியை கொஞ்சம், (ஒரு க்ஷண காலம் ஒரு அணு ரூபமானதை வலது மார்பு பிரதேசத்தில்) அடைந்தாலும் கூட மஹத் அதாவது 24வது தத்துவமாகிய அவ்யக்தத்தின் பயம் அதாவது சலனத்தினின்றும் மீள்விக்கிறது (காப்பாற்றுகிறது).

(வி-ம்) 24வது க்ஷரபுருஷன் குளிரினால் பயத்தினால் நடுக்கமடைகின்றவனைப் போலவும் காளஹஸ்தி சிவன்கோவில் லிங்கத்திற்கு பக்கத்திலுள்ள தீபத்தைப் போலவும் எப்பொழுதும் ஓரே யிடத்தில் சலித்துக் கொண்டிருக்கிறான். வானத்தில் பிரகாசம் பொருந்திய ஒரு ஊசி முனைப்புள்ளியைப் போல் சலனமற்ற துருவ நக்ஷத்திரத்தை போன்ற 25வது அக்ஷரபுருஷனை தனது சாக்ஷாத் சொரூபமாக தரிசித்து கீதை 2-29ல் வர்ணிக்கப்பட்ட க்ஷரபுருஷனின் சலனத்தினின்றும் சாதகன் விடுபடுகிறான். 'ஸ்வல்ப' என்னும் பதம் காலத்தின் ஒரு அணுபாகத்தையும் தேசத்தின் ஒரு அணு பாகத்தையும் குறிக்கிறது.

கீதை 2-29ல் சொல்லப்பட்ட க்ஷரபுருஷ தர்சனம் சாதகனுக்கு முதலாவது அனுபவம். இங்கே 2-40ல் சொல்லப்பட்ட அக்ஷரபுருஷ தர்சனம் இரண்டாவது அனுபவம். இந்த அனுபவம் அடைந்தவனுக்கே ஸ்திதப்ராஜ்ஞை, ஸாங்க்யபுத்தி, ஸ்திர

புத்தி, கர்ம கௌசலம் (2-50) சமாதான மனம் (2-48) என்று சொல்லப்பட்டவைகள் இன்னதென்று தெரியும். புருஷோத்தம தரிசனமே மூன்ருவது அனுபவம். இந்த மூன்று சந்திகளையும் அதாவது காயத்திரியை எல்லா மனிதர்களும் அனுபவத்திற்கு கொண்டுவரவேண்டும். இந்த மூன்றும்தான் முன்னமே கீதை 2-29ன் வியாக்கியானத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் வேதாந்த சிரவணம், மனனம், நிதித்தியாஸம் ஆகும். புத்தகப் பண்டிதர்களின் இதர அர்த்தங்கள் அனுபவமில்லாத உளறல் ஆகும். கீதை 3-26ல் சொல்லியிருக்கும் "நபுத்திபேதம் ஜனயேத்" (புத்தி பேதத்தை உண்டு பண்ணுதே) என்பதற்கு மாருக அவர்கள் ஏற்கனவே குருடராயிருந்த பாமர ஜனங்களை பின்னும் அதிக குருடராக்கி புத்தி பேதம் செய்து படுகுழியில் தள்ளுகிற பாபத்தை ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள். இந்த 2-40ன் முதல் வரியின் அர்த்தத்தையே கீதை 6-40 முதல் 44 வரையில் யோகப்ரஷ்டனுக்கு நாசமில்லை, யோகிகள் வம்சத்தில் பிறந்து பூர்வஜன்மத்தில் யோகத்தில் எந்தப்படியில் இருந்தானே அங்கிருந்து மேல் ஏறி மோக்ஷத்தை யடைகிருன் என்று பகவான் சொல்லியிருக்கிருர்.

3 3 4 3

41. வ்யவஸாய ஆத்மிகா புத்தி : ஏகா இஹ குருநந்தந

3 5 2 3 3 4

பஹுசாகா: ஹி அநந்தா: ச புத்தய: அவ்யவ

ஸாயிநாம்.

(அ-ம்) ஹே குருநந்தன (அர்ச்சுன)! இந்த ஸாங்க்யபுத்தி (அணுவில்) உழுதுகொண்டு குதிக்கும் ஆத்மாவினுடைய புத்தி ஒரே வித குணமாகவே நாட்டியம் (செய்கிறது). ஆனுல் (இதற்கு கீழான) அவ்யவஸாய புத்தியின் எண்ணங்களோ கோடிக் கணக்காய் பலவழிகளில் ஓய்வு ஒழிவு இல்லாமல் (உற்பத்தி இடத்தை விட்டு விட்டுச்) செல்லுகிறது.

(வி-ம்) ஒரு குளத்தின் மேலுள்ள மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டு சிறு சிறு கற்களைப் போட்டால் கற்கள் விழும் இடத்திலிருந்து கணக்கற்ற வட்டவடிவமான அலைகள் குளத்தில் பரவிக்கொண்டே போவதைக் காணலாம். ஒரே யிடத்தில் ஒரு கல்லுக்குப் பிறகு ஒரு கல்லைவிடாமல் போட்டுக்கொண்டிருந்த

லுக்கு சமானம் வ்யவஸாய புத்தி. அந்த இடத்திலிருந்து கணக்கற்ற வட்டவடிவமான அலைகள் குளத்தில் பரவுவதற்கு சமானம் அவ்யவாஸய புத்தி.

1. அவஸாயபுத்தி = ஸாங்க்ய புத்தி = 25வது தத்வம் அக்ஷரபுருஷன்.

2. வி + அவஸாயபுத்தி = விவஸாயபுத்தி = 24வது தத்வம் க்ஷராக்ஷரபுருஷன்.

3. அ + விவஸாயபுத்தி = அவ்யவஸாயபுத்தி = 23வது தத்வம் முதல் கீழ் உள்ள தத்வங்கள்–க்ஷரபுருஷன்.

இதில் 2வதாகிய அக்ஷரக்ஷர இரட்டையை மிதுனமாக சேர்த்து ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்காமல் கீதை 2-49ல் சொன்ன பிறகாரம் உபாசனை செய்யவேண்டும். அதாவது 24வது தத்வமாகிய அவ்யக்தத்தில் சரணமடையவேண்டும். க்ஷர அக்ஷரபுருஷனை பிரித்து உபாசனை செய்வதால் வரும் தீங்குகளைப்பற்றி கீதை 2-29 உரையில் முன்னமே சொல்லியிருக்கிறது. அங்கு மறுபடியும் வாசித்துப் பார்த்துக் கொள்ளவும். மோக்ஷதர்மம் 327வது அத்தியாயத்தில் கீழ்கண்டபடி சொல்லியிருக்கிறது.

(1) 25வது தத்வம்-முதல் புருஷன். 24வது தத்வமாகிய அவ்யக்தத்தை தரித்தவன். இவனே அக்ஷரபுருஷன். எங்கும் வியாபித்திருப்பதாலும் குணங்களால் அறியக்கூடியதாயிருப்பதாலும் கிருதி, வ்யக்தம், உத்தமம், ரஜஸ், ஸத்வம், பிரதானம், தத், தத்வம், அக்ஷரம், அஜரம், பெரிய முதலை, வித்து, ஜடம், இவை முதவியவை அவ்யக்தத்துக்கு பெயர்கள்.

(2) 24வது தத்வம், இரண்டாம் புருஷன், 23வது தத்வமாகிய புத்தி அதாவது வ்யக்தத்தை தரித்திருப்பவன் இவனே க்ஷராக்ஷரபுருஷன். அவ்யக்தத்திலிருந்து உண்டானது வ்யக்தம். மகத், புத்தி, ஸத்தை, ஸத்தா, ஸ்மிருதி, த்ருதி, மேதை வ்யவஸாயம், ஸமாதிப்ராப்தி இவை முதலியவை வ்யக்தத்திற்கு பெயர்களாம்.

(3) 23வது தத்வம் மூன்றும் புருஷன். 22வது தத்வமாகிய அஹங்காரத்தைத் தரித்திருப்பவன். இவனே க்ஷர புருஷன்.

விரிஞ்சம், அபிமானியிடமிருக்கிற அவிவேகம், பொருமை, காமம், குரோதம் லோபம், மதம், கர்வம் மமதை இவைகள் அஹங்காரத்திற்கு பெயர்களாம்.

இந்த ஸ்லோகத்திலுள்ள வியவஸாய ஆத்மா ப்ரத்யகாத்மாவில் எப்பொழுதும் தாண்டவமாடுகிறுன். அதாவது அணுரூபமான ஒரே இடத்தில் நாட்டியம் செய்கிறுன். அதாவது காலன் என்னும் ரூபத்துடன் கால காலனில் நிலைத்து நடனம் செய்கிறுன்.

42. யாம் இமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவத[3]ந்தி
அவிபஸ்சித:
வேத[3]வாத[3]ரதா: பார்த்த ந அந்யத் அஸ்தி இதி வாதி[3]ந:

43. காமாத்மாந: ஸவர்க்க[3]பரா: ஜந்ம கர்ம ப[2]லப்ரதா[3]ம்
க்ரியா வி[5]சேஷ ப[3]ஹுலாம் போ[4]கை[3]ச்[5]வர்ய
க[3]திம் ப்ரதி

44. போ[4]கை[3]ச்[5]வர்ய ப்ரஸக்தாநாம் த[2]தா அபஹ்ருத
சேதஸாம்
வ்யவஸாய ஆத்மிகாபு[3]த்[3]தி[4]: ஸமாத[4]ௌ ந வித[4]ீயதே.

(அ-ம்) ஹே பார்த்த! (அர்ச்சுன) (22வது தத்வமாகிய அஹங்காரத்தை தரித்திருக்கும் அவ்யவஸாய புத்தியோடுகூடிய) அறியாமையோடு கூடிய பாமரர்கள் வேதத்தில் அபிமானம் அடைந்து (இதைத்தவிர) வேறு ஒன்றும் (மேலானது) இல்லையென்று இதையே வாதம் செய்து கொண்டும் கர்மங்களின் பலத்தை அனுபவிக்க பிறப்புகளைக் கொடுக்க காரணமாயிருந்தும் போகங்களையும் செல்வங்களையும் அடையும் பொருட்டு பலவிதமான கர்மங்களை (செய்ய வேண்டுமென்று) சொல்லும் புஷ்பத்தைப்போல ரமணீயமான வேதவாக்கியங்களை சிறப்பித்துக் கூறிக்கொண்டும், சுவர்க்கமே மேலான பதவியென்று ஆசையால் நிறம்பப்பெற்றும் செல்வ போகங்களில் அழுத்த முற்றிருப்ப

தால் தங்களுடைய பகுத்தறிவை இழந்தவர்களாய் (23வது தத்வமாகிய புத்தியைத் தரித்திருக்கும்) வ்யவஸாய புத்தியின் கண் சமாதி நிலையை அடைகிறதில்லை.

(வி-ம்) இந்த ஸ்லோகங்களினின்றும் கீதை 2-45ல் சொல்லியிருக்கும் 'த்ரை குண்யா விஷயவேதா' (வேதம் 3 குணங்களைப் பற்றியே சொல்லுகிறது) என்பதிலிருந்தும் வேதம் மேலான விஷய சுகத்தைப்பற்றி சொல்லுகிறதென்று அறிந்துகொள்ளலாம். வேதம் மேலான விஷய சுகத்திற்கும் மேலான மோக்ஷத்தைப்பற்றி சொல்லுகிறதில்லை. ஆகையால் புத்தக பண்டிதர்கள் வேதம் பிரமாணம் என்று சொல்லுவது சரியல்ல. வேதாந்தமாகிய பிரத்தியக்ஷ ஞானமே பிரமாணம் என்று கைவல்லிய உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபஸ்தம்ப தர்ம சாஸ்திரம்தான் வேதம் பிரமாணம் என்று சொல்லியிருக்கிறது. அது தர்ம சாஸ்திரமேயொழிய உபநிஷத்து அல்ல.

45. த்ரை[3] குண்ய விஷயா: வேதா:[3] நிஸ்த்ரைகுண்ய:[3] பவ[4] அர்ஜுந
நிர்[3]த்வந்[3]த்வ: நித்ய ஸத்வஸ்[2]த: நிர்யோக[3] க்ஷேம: ஆத்மவாந்

(அ-ம்) வேதங்கள் மூன்று குணங்களோடு கூடிய ப்ரக்ருதியைப்பற்றி சொல்லுகின்றன ஹே அர்ச்சுனா! மூன்று குணங்களையுடைய வனாயிராதே (அதாவது அவைகளில் ஒன்றைவிட்டு இரண்டு குணங்கள் உடையவனாய் இரு-பின்னர்) இரண்டு குணங்களையுடைய வனாயிராதே (அதாவது இரண்டில் ஒன்றை விட்டு ஒரு குணத்தை உடையவனாயிரு-பின்னர்) நிலைத்து (அந்த ஒரு குணமாகிய) சத்துவத்தில் இரு. (பின்னர்) அந்த ஒரு குணத்தில் இருப்பதையும் விட்டு (நிர்க்குணமான) ஆத்மாவாய் இரு.

(வி-ம்) கீதையில் இது ஒரு அருமையான ஸ்லோகம். குணங்களை விடுதலாகிய நிவர்த்தி மார்க்கத்தைப்பற்றி சொல்லுகிறது. அண்டம் எப்படி முக்குணங்களோடு கூடியிருக்கிறதோ அப்படியே பிண்டமும் முக்குணங்களோடு கூடியிருக்கிறது. மனிதர்கள் முக்குணப் பிண்டங்கள். ஏககாலத்தில் (ஒரே காலத்

தில்) மூன்று குணங்களையும் தள்ளமுடியாது. ஆகையால் சாதனை யால் முதலில் தமசைத்தள்ளு - பிறகு ரஜசைத்தள்ளு - சத்து வத்திலும் ஆசை வைக்காதே - அதையும் தியாகம் செய்து நிர்க் குணமாகிய பிரத்தியக ஆத்மாவாக நின்றுவிடு என்று நிவர்த்தி மார்க்க வரிசைக் கிரமத்தை பகவான் அருளியிருக்கிறார்.

இந்த சரியான அர்த்தத்தை விட்டு அனுபவ ஞானமில்லாத புத்தக பண்டிதர்கள் - நிஸ்த்ரைகுண்ய: என்பதற்கு மூன்று குணங்களையும் விட்டுவிடு என்று அர்த்தம் எழுதியிருக்கிறார்கள். மூன்று குணங்களையும் விட்டபிறகு த்வந்த்வமாகிய இரண்டு குணங்கள் எங்கேயிருக்கின்றன விடுவதற்கு? ஒரு குணமாகிய சத்துவம்தான் எங்கே யிருக்கிறது?

ஸத்வமே யோகம் - நிர்யோக க்ஷேமம் என்பதற்கு பதிலாக நிர்ஸத்வ க்ஷேமம் என்றும் சொல்லலாம். யோகக்ஷேமம் என்ப தற்கு புத்தக பண்டிதர்கள் சரீரயோக க்ஷேமம் என்றும், பக வான் இல்லாததை கொண்டுவந்து சேர்க்கிறார் இதற்கு யோகம் என்றும், இருக்கிறதைக் காப்பாற்றுகிறார் இதற்கு க்ஷேமம் என்றும் அர்த்தம் செய்திருக்கிறார்கள். இதைவிட மோசமான அர்த்தம் வேறு இல்லை. யோகம் என்பது மனஸமாதானம், மனதின் சாந்தி அதாவது விஷயங்களில் அலையும் மனது புரு ஷோத்தமனிடம் ஒருமுகப்படும் நிலை - க்ஷேமம் என்பது அந் நிலையைவிட்டு நழுவாமல் நிலைத்து நிறுத்துவது. பகவான் கீதை 9-22ல் கீழ்கண்டவாறு சொல்லியிருக்கிறார். 'எந்த சாதகர்கள் மேலான உபாசனையான அதாவது நிஷ்டையான தானே நான், அதாவது அந்த புருஷோத்தமனே தான் என்று அனுபவம் வந்து என்னை நினைக்கிறார்களோ இப்படி நித்யமாக நிரந்தரமாக ஸமாதான புத்தியில் இருப்பவர்களுடைய (யோக க்ஷேமம் வஹாம்யஹம்) மனோ சாந்தியின் ரக்ஷணையை நான் வகிக்கிறேன்.

யோக க்ஷேமத்தை வகிக்கிறதென்பது சாதகனுடைய மனைவி பிரசவத்துக்காக பிறந்த வீடு போயிருக்கும்பொழுது அந்த மனைவியின் காரியங்களை பகவான் சாதகனுக்குச் செய்வ தல்ல. அல்லது சாதகனும் அவனுடைய மனைவியும் ஏதோ காரி யமாய் வீட்டை விட்டு வெளியே போயிருக்கும்பொழுது அவர்

களுடைய வீட்டில் விட்டுப்போன குழந்தைகளையும் சாமான்களை யும் காத்துக்கொண்டு அவர்கள் திரும்பி வருவதற்குள் காரியங் களையெல்லாம் செய்து முடித்து வைத்திருப்பதல்ல.

யோகம் என்பதற்கு கீழே ஒரு உபமானம் கொடுத்திருக் கிறேன். மூன்று கால்களுள்ள ஒரு முக்காலியில் ஏறி நிற்பது சுலபம். ஒரு காலை எடுத்துவிட்டால் இரண்டு கால்களுள்ள அந்த முக்காலியில் கொஞ்சம் சிரமப்பட்டால் நிற்க முடியும். இரண்டு கால்களை எடுத்துவிட்டால் ஓரே காலுள்ள முக்காலியில், சுவர், தொங்கும் கயிறு முதலிய வேறு ஏதொன்றையாவது பிடித்துக் கொண்டால் தான் நிற்கமுடியும். இதைப்போலவே 25வது தத்துவ மாகிய கவி அணுவானது இந்திரியங்களையும் மனதையும் விட்ட பிறகு புத்தியில் நிற்கும்பொழுது 24வது தத்துவமாகிய அவ்யக் தத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பிடியையும் விடு தலாகிய நிஸ்ப்ருஹ: அல்லது நிக்ரஹ: நிலையை அடைந்தால்தான் அகண்ட சொரூபத்தில் கலந்து பரம சாந்தியை அடையும்— இதற்கே இன்னொரு உபமானம். பாரதத்தில் துச்சாதனன் துரோபதையைத் துகில் உரிந்தபொழுது (புடவையை அவிழ்த்த பொழுது) அவள் தன்னுடைய மானத்தைக் காப்பற்றுவதற்காக புடவையின் இக்குமடியைத் தன் கையில் பிடித்துக்கொண்டு மற்ற பாகத்தை துச்சாதனனிடம் விட்டுக்கொண்டு வந்தாள். தன்னுடைய சமார்த்தியத்தினல் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்று கடைசியாக அவளுக்கு நிச்சயமுண் டாகி இக்குமடியையும் விட்டுவிட்டு “கிருஷ்ணா, யாதவா, நீயே கதி” என்று கைகளை தலைக்குமேலே தூக்கி பிரார்த்தித்தாள். அப்பொழுது பகவான் அருளால் புடவை வளர்ந்து கொண்டே வந்து துர்ச்சாதனன் துகிலை உரிக்க முடியாமல் மூர்ச்சித்து கீழே விழுந்தான். துரோபதையின் மானமும் காப்பாற்றப்பட்டது.

க்ஷேமம் என்பதற்கு கீழே ஒரு உபமானம் கொடுத்திருக் கிறேன். ஒரு பசுங்கன்றுக் குட்டியை ஒரு வயலில் முளை அடித்து 50 கஜம் நீளமுள்ள கயிற்றால் கட்டி மேயவிட்டிருக்கிறது. அது இந்த கயிறுள்ள சுற்றளவுக்குள் சுயராஜ்யமாய் மேயலாம். இந்த எல்லையைத் தாண்ட முயற்சிக்கும்பொழுது முளையானது வரம்பு

மீருமல் செய்கிறது. இதைப் போலவே ஞானியை வரம்பு மீருமல் பகவான் தன்னிடம் இழுத்துக்கொள்ளுகிருர்.

46. யாவாந் அர்த்தம் உதபானே ஸர்வத: ஸம்ப்லுதோதகே

தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:

(அ-ம்) நல்ல தண்ணீருள்ள கிணறு (ஸ்நானபானங்களாகிய) பிரயோசனத்துக்குப் போதுமானதாயிருக்கும் (ஒருவனுக்கு) எங்கும் சுற்றிலும் நிறைந்துள்ள தண்ணீர்ப் பெருக்கால் (வெள்ளத்தால்) என்ன பிரயோசனம்? அதைப்போல (26வது தத்வமாகிய புருஷோத்தமனுடைய வியஷ்டியாகிய) அணுரூபமான 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷ அனுபவமே சம்சார தாபத்தைப் போக்குதற்கு போதுமானதாயிருக்கும் பிராஹ்மணனுக்கு (சமுத்திரத்தைப் போல் விரிந்துள்ள) சகல வேதங்களால் ஒரு பிரயோஜனமுமில்லை.

(வி-ம்) 26வது தத்வமாகிய புருஷோத்தமனுடைய அணுரூபமாயும் ஆனந்த ரூபமாயும் உள்ள பிரத்தியகாத்மாவால் (25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷனுல்) சிருஷ்டி முழுவதும் வியாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த அணு பூலோகம், சுவர்க்க லோகம் முதலிய எல்லா லோகங்களையும் வியாபித்திருக்கிறது. சாதகன் தன்னுடைய இந்திரியங்கள், மனது புத்திகளை ஒன்றிலொன்றை வரிசைக் கிரமமாக லயம் செய்து, புத்தியை அவ்யக்தத்தில் வைத்து அவ்யக்தத்தைத் தரித்திருப்பவனுகிய அணு (ரஸம்) ஆனந்தத்தை (அக்ஷரபுருஷனை) தன்னிடத்திலேயே சாக்ஷாத்கரித்து இருப்பதினுல் அவனுக்கு கீதை 2-42, 2-43, 2-44ல் வர்ணித்துள்ள வேத சம்பந்தமான மேலான விஷய போகங்களினுல் என்ன பியோசனம்? ஒரு பிரயோசனமுமில்லை என்று அறிந்து கொள்ளவும். பகவான் 2-40ல் ' இந்த ஸமாதான புத்தியை கொஞ்சம் (ஒரு க்ஷண காலம் ஒரு அணு ரூபமானதை வலது மார்பு பிரதேசத்தில்) அடைந்தாலும்கூட மஹத் அதாவது 24வது தத்வமாகிய அவ்யக்தத்தின் பயம் அதாவது

சலனத்தினின்றும் மீள்விக்கிறது (காப்பாற்றுகிறது)' என்று சொல்லியிருக்கிறார். அதையே திரும்பவும் இந்த 2-46 ஸ்லோகத்திலும் அருளியிருக்கிறார்.

விஜாநத: என்பதற்கு அர்த்தம் 25வது தத்வமாகிய அக்ஷர புருஷன் மூலமாக 26வது புருஷோத்தமனை தொட்டு கீழ் நிலைக்கு நழுவி மறுபடியும் தொட்டு மறுபடியும் கீழ் நழுவி இவ்விதமாய் தொட்டுத் தொட்டு நழுவி நழுவியுள்ளவன். இவனே ஜீவன் முக்தன்.

ஜாநத: என்பதற்கு அர்த்தம் 26வது புருஷோத்தமனைத் தொட்டு அதிலேயே நிலைத்திருப்பவன். இவனே விதேக முக்தன்.

ஜாநத: என்னும் பதத்தில் வி என்னும் எழுத்தை முன்னால் சேர்ப்பதால் முடிவான நிலைக்கு ஒருபடி குறைந்த நிலையென்று அறிந்துகொள்ளவும். விஜ்ஞானியும் விஜாநத:வும் ஒன்று, ஞானியும் ஜாநத:வும் ஒன்று.

47. கர்மணி ஏவ [4]அதிகார: தே [2]மா பலேஷு [3]கதாசந
மா [2]கர்மபல [4]ஹேது: பூ: மா தே [3]ஸங்க: அஸ்து
அகர்மணி

(அ-ம்) தொழில்களில் ஈடுபடுவதில் அதாவது சோம்பலின்றி சுறுசுறுப்பாயிருப்பதில் உனக்கு பாத்தியதை இருக்கிறதேயல்லாமல் அவைகளினின்றும் பிறந்த காரியங்களில் (பலன்களில்) உனக்கு ஒருக்காலும் பாத்தியதையில்லை. தொழில்களைச் செய்யும்பொழுதும் அவைகளின் காரியங்களை (பலன்களை) அனுபவிக்க வேண்டுமென்னும் உத்தேசத்துடன் நீ இருக்கக்கூடாது. விருத்திகள் அற்ற சமாதி நிலையிலும் உன்னுடைய அபிமானத்தை வைக்காதே.

(வி-ம்) பல என்னும் பதத்துக்கு காரியங்கள் என்பது முதல் அர்த்தம். லாபம் என்பது இரண்டாவது அர்த்தம். ஒருவன் காரியங்களில் ஆசைப்பட்டாலும் சரி ஆசைப்படாவிட்டாலும் சரி. மாங்கொட்டையை ஊன்றி மாஞ்செடி உண்டாக்

கினல் காலக்கிரமத்தில் அது மாம்பழத்தைக் கொடுக்கும் மரமாகுமென்பது நிச்சயம். அந்த மாம்பழத்தை தானே பின் அனுபவிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் ஒருவன் மாஞ்செடியை உண்டாக்கக் கூடாது. ஏனென்றால் அவனுடைய முன்னோர்கள் பயிர் பண்ணிய தென்னை, பலா, மா முதலிய கன்றுகள் இப்பொழுது மரமாகிக் கொடுக்கும் தேங்காய், பலாப்பழம், மாம்பழம் முதலியவைகளை அவன் அனுபவிக்கிறான். அவனுடைய முன்னோர்களைப் போலவே அவனும் லாபத்தைத் தானே அடையவேண்டுமென்னும் எண்ணமின்றி மேல்கண்ட செடிகளை பயிர்செய்யவேண்டும். ஏனென்றால் ஒவ்வொருநாளும் ஒரு சிறு நேரம் சமாதி அவஸ்தையிலிருந்தபோதிலும் ஒவ்வொருவரும் நீண்ட நேரம் ஏதாவது கர்மங்களில் ஈடுபட்டுத் தான் இருக்கவேண்டும். கீதை 3-5லும், 18-11லும் எவனும் ஏதாவது தொழில்களைச் செய்யாமல் எப்பொழுதும் சும்மாவிருக்கமுடியாதென்று பகவான் வற்புறுத்தி சொல்லியிருக்கிறார்.

24வது தத்வமாகிய கர்ம அதாவது அவ்யக்தத்தின் முதல் காரியம் 23வது தத்வமாகிய புத்தி. இதற்குப் பெயர் பல அல்லது பலம். 22வது தத்வமாகிய அஹங்காரத்திற்கு புஷ்பம் என்று பெயர். 21 முதல் 17 வரை தத்வங்களாகிய மஹாபூதங்களுக்கு பத்ரம் (இலை) என்று பெயர். இவைகளைப்பற்றி விஸ்தாரமாய் கீதை 9-26க்கு உரை எழுதும்பொழுது சொல்லப்படும். அவ்யக்தத்திலிருந்தும் முதல் உதித்த புத்தி என்னும் தத்வம் புருஷோத்தமனுடைய ஸ்தூல சரீரத்தின் ஒரு அணு இதுவே வியஷ்டி விபூதி என்றும் மம அம்சமென்றும் சொல்லப்படும். இந்த அணுவே அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும் ஜீவன். 22வது தத்வமுதல் 1வது தத்வம் வரையுள்ள திரைகளால் மேன்மேலும் தன்னை மூடிக்கொள்ளுதலே அஞ்ஞானமென்று சொல்லப்படும். கீதை 10-41ல், 15-7ல் பகவான் சொல்லியிருக்கிற மம அம்சமாகிய புத்தி தன்னுடைய ஆத்ம சொரூபத்திலிருந்து நழுவி மெய் மறந்து மனிதன், மிருகம், புழு, மீன், பறவை முதலிய காரியமாகிற கூடுகளில் பிறப்பை யடைகிறது. இப்படிப்பட்ட புத்தியே கீதை 2-41ல் சொல்லப்பட்டிருக்கிற அவ்யவஸாயபுத்தி. இந்த 2-47ல் பலத்தைவிட்டு தொழில்களில் ஈடுபடு என்று பக

வான் சொல்லியிருக்கிறதின் உண்மையான அபிப்பிராயமென்ன வென்றால் புருஷோத்தமனுடைய சமஷ்டி சரீரமாகிய அவ்யக்தத் தில் ஜீவனுடைய வியஷ்டி சரீரமாகிய 'பல' மாகிய புத்தியை வைத்து தான் இதுகாலும் மறந்திருந்த தனது நிஜசொரூபத்தை அனுபவத்தால் உணர்ந்து பின்னர் தொழில்களில் ஈடுபடவேண்டு மென்பதாம்.

48. யோகஸ்த்த: குரு கர்மாணி ஸங்கம் த்யக்த்வா தநஞ்ஜய
ஸித்த்யஸித்தயோ: ஸம: பூத்வா ஸமத்வம் யோக உச்யதே

(அ-ம்) வியஷ்டி புத்தியை புருஷோத்தமனுடைய சமஷ்டி சரீரமாகிய அவ்யக்தத்தில் அர்ப்பணம் செய்து (யோகஸ்த்த:) உன்னுடைய வியஷ்டி தன்மையை விட்டுவிட்டு தொழிலில் ஈடு படு. இவ்விதமாக தொழில்களில் ஈடுபடுதலே ஹே தனஞ்சய! (அர்ச்சுனா) அபிமானத்தை விடுதலாகும். ஜயத்தையும் தோல்வி யையும் (இரண்டு பக்கங்களுள்ள ரூபாய் நாணயத்தைப்போல) ஒரே வஸ்துவாகக் கருதி மனச்சாந்தியுடன் (சஞ்சலமில்லாமல்) இருப்பாயாக. இந்த மனச்சாந்தியே (சஞ்சலமில்லாத தன் மையே) யோகத்தின் லக்ஷணமென்று சொல்லப்படுகிறது.

(வி-ம்) இங்கே முக்கியமாய் கவனிக்கவேண்டியது என்ன வென்றால் சாங்கியபுத்தி அதாவது சமாதான மனம் சித்தித்த பிறகுதான் நிஷ்காம கர்மம் அல்லது பல அர்ப்பணம் செய்ய முடியு மென்பதே. பல அர்ப்பணத்திற்கு பிறகு ஸமாதான புத்தி சித்திக்குமென்று பகவான் எங்கும் சொல்லவில்லை. ஆனால் ஸ்வானுபவம் இல்லாத புத்தக பண்டிதர்கள் எல்லா பாபங்களும் (மலங்களும்) போன பிறகு தான் ஆத்ம தரிசனம் சித்திக்கும் என்று அவர்கள் உரைகளிலும் பிரசங்கங்களிலும் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள். மலம் எல்லாம் போன பிறகு நிர்மல மாகிய புருஷோத்தமன் தான் மிச்சம். அப்படியானால் கீதை 2-64ல் சொல்லியிருக்கிற புருஷோத்தமனுடைய ப்ரஸாதத்துக்கு (அருளுக்கு) வேலையே யில்லாமல் போய்விடுகிறது. அந்த புத் தக பண்டிதர்களுக்கு அனுபவ ஞானமில்லாதபடியால் ஆத்ம தரி

சனத்துக்கு பின்னரே தான் சித்தசுத்தி அதாவது சீவர்களுடைய ஆணவமல நீக்கம் ஆரம்பமாகிற தென்பது தெரியாது. இந்த சித்த சுத்தியானது அநேக ஜன்மங்களில் பூர்த்தியாகிற தென்று கீதை 6-45, 7-19ல் பகவான் அருளியிருக்கிறார். புருஷோத்த மனை அடைய படிக் கிரமங்கள் நான்கும் பின்வருமாறு.

1. ஆத்ம தரிசனம் அதாவது தேஹம் எது, தேஹி எவன் என்று உணர்தல். இதுவே வேதந்தத்தில் சிரவணம்.

2. ஆத்ம சுத்தி - இதுவே வேதாந்தத்தில் மனனம்.

3. ஆத்ம லாபம் அதாவது நிர்வாணம். இதுவே வேதாந் தத்தில் நிதித்யாசம்.

4. ஆத்ம அனுபவம் இதுவே பரநிர்வாணம் அல்லது தேன் குடித்தல் அல்லது வாஸுதேவ ஸ்திதி.

இதையே பகவான் கீதை 12-12ல் சுருக்கமாகச் சொல்லி யிருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய ஸ்வானுபவத்தி லிருந்து மேலே நான் எழுதியிருப்பவை எல்லாம் சத்தியமென்று இதைப் படிப்பவர்கள் எல்லோருக்கும் தெரிவிக்கிறேன். ஆனல் அவைகளை கண்ணை மூடிக்கொண்டு ஒப்புக்கொள்ளும்படி நான் கோறவில்லை. நான் கேட்டுக் கொள்வதெல்லாம் பிராமணர்கள் காயத்ரி ஜபத்தையும், இதர ஜாதியர்கள் ஏதோ ஒரு நாமஜபத்தை யும் விடாமல் தினந்தோறும் இராத்திரி உறங்குவதற்கு முன்ன தாக ஒரு மணி நேரமும், படுக்கையைவிட்டு எழுந்தவுடனே காலையில் ஒரு மணி நேரமும் செய்வார்களானல் 3 வருஷத்தி லிருந்து 5 வருஷத்துக்குள்ளாக ஆத்ம தரிசனம் உண்டாகும். உங்களுக்கு அனுபவம் வந்த பிறகுதான் நான் சொல்வது உண் மையா அல்லது பாஷாண்ட மதத்தை சொல்லிக்கொண்டு திரியும் புத்தக பண்டிதர்கள் சொல்லுவதுண்மையா வென்று உங்களுக்கே தெரியும். என்னுடைய சகோதர சகோதரிகளைப் பொய் சொல்லி ஏமாற்றுவதில் எனக்கு ஒருவித லாபமுமில்லை. ஏனென்றால் எனக்கு பொருள் முதலிய பிரதி பிரயோசனத்திலாவது பட்டம் பதவி முதலியவைகளிலாவது மோகம் கிடையாது. என்னுடைய லாபமெல்லாம் வாசுதேவனிடத்தில் தான் இருக்கிறது. புத்தக பண்டிதர்களுடைய பாஷாண்டமதத்திலிருந்து ஒரு சிலரையா வது விடுவித்து புருஷோத்தமனுடைய அருளுக்குப் பாத்திர

மாக்கி வைத்தால் அப்பொழுது நான் என்னுடைய கடமையை செய்தவனுவேன். இதைப் படிக்கும் சகோதர சகோதரிகளை நான் வேண்டிச்கொள்வதென்ன வென்ருல் "உன்னை அறிந்துகொள். மாாக்கெட்டிலிருந்து நாலு பவுண்டு எடையுள்ள காய்கரிப் பையை வீடு கொண்டுவந்து சேர்ப்பதற்குள் பலதடவை கைக்குக் கை மாற்றி சிரமப்படுகிருய். 120 பவுண்டு முதல் 200 பவுண்டு வரை எடையுள்ள உன்னுடைய சரீரத்தை அனுயசமாய் தூக்கிக் கொண்டு ஓடக்கூடிய சக்தி உனக்கு எங்கிருந்து வந்ததென்று ஆராய்ந்துபார். அந்த சக்திக்கு ஆதாரமாயுள்ள உன்னுடைய நிஜஸ்வரூபமாகிய ஆத்மாவை அனுபவத்தால் உணர்ந்த பினபு நான் சொல்லுவது சரியா அல்லது புத்தக பண்டிதர்கள் சொல் லுவது சரியாவென்று உனக்கு நன்ருய் புலப்படும்". இத்துடன் அனுபவ ஞானமில்லாமல், புத்தக ஞானத்தை வைத்துக்கொண்டு பாமர ஜனங்களை ஏமாற்றிக்கொண்டு திரியும் சாஸ்திரிகளுக்கும் சந்நியாசிகளுக்கும் ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். அதாவது "புருஷோத்தமன் அருளினல் எனக்கு கிடைத்திருக் கும் பொக்கிஷத்தை - சாதி, ஆச்சிரம, மத பேதமின்றி பகிர்ந்து கொள்ள ஆவலாயிருக்கிறேன். நீங்கள் முதலில் உங்களை சீர் திருத்திக்கொண்டு புருஷோத்தமனைத் தொடுங்கள். பின்னர் பிறருக்கு உபதேசிக்கலாம். அப்படிக்கல்லாமல் பாஷாண்ட மதப் பிரசாரங்களை பாமர ஜனங்களுக்கு செய்வீர்களானுல் அவர் களையும் நரகத்தில் தள்ளி நீங்களும் நரகத்தைச் சேர்வீர்கள்."

49 தூ[3]ரேண ஹி அவரம் கர்ம பு[3]த்[3]தி[4] யோகாத்[3] த[4]நஞ்ஜய
பு[3]த்[3]தௌ[4] சரணம்[5] அந்விச்ச க்[2]ருபணா: பலஹே[2]தவ:

(அ-ம்) (24வது தத்வமாகிய) கர்ம அல்லது புருஷோத்தம னுடைய சலித்துக்கொண்டிருக்கும் சக்தியானது (25வது தத்வ மாகிய) புத்தி ஸமாதானம் அதாது சலிக்காமல் ஒரேயிடத்தில் அமைதியாயிருக்கும் புருஷோத்தமனுடைய சக்தியைவிட மிக வும் இழிவானது. ஹே தநஞ்சய! (அர்ச்சுன) நீ முதலில் புத்தி யில் அதாவது 24வது தத்வமாகிய கர்மத்தில் சரணமடை வாயாக. காரியங்கள் (பல) ஆகிய 23 முதல் 1 வரை தத்வங் களில் பின்னிக்கொண்டு உழலுபவர்கள் அதமர்கள் ஆவார்கள்.

(வி-ம்) புத்தி, கர்ம, என்னும் பதங்கள் ஒரே பொருளைக் குறிக்கின்றனவாதலால் அவைகளை ஒன்றுக்கு பதிலாக மற்றொன்றை ஸ்லோகங்களில் மாற்றி வைத்தால் அர்த்தம் கெடாது. இப்படி பகவான் கீதையில் பதங்களை உபயோகித்திருப்பதைப் பற்றி கீதை 2-39ன் உரையில் முன்னமே எழுதியிருக்கிறேன். கௌஷிதாகி உபநிஷத்து 3-3லும் ப்ராணன் (கர்ம) புத்தி இரண்டும் ஒன்றே. பிராணனே புத்தி புத்தியே பிராணன், இவை யிரண்டும் ஓரேவஸ்துவின் இரண்டுவிதமான தன்மைகள் ஆனபடியால் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்ம என்றால் ரேதஸ் என்றும் ஈஸ்வர சுக்லமென்றும் முன்னமே சொல்லியிருக்கிறேன். புத்தி யோகம் அதாவது கர்மயோகம் இரண்டும் ஒரே ஊர்த்துவரேதஸ் சாஸ்வத பீஜம், அல்லது 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன். 'யோகம்' என்னும் அடைச்சொல் சேராத கர்ம, புத்தி என்னும் பதங்கள் இரட்டையாயுள்ள பீஜம், சாஸ்வதமல்லாத பீஜம் அதாவது 24வது தத்வ க்ஷரபுருஷனைக் குறிக்கும். இந்த க்ஷர புருஷன், ஆண்மை-பெண்மை, ஜெயம்-தோல்வி, மானம்-அவமானம், சீதம்-உஷ்ணம், லாப-நஷ்டம், சுக-துக்கம், ராகத்-வேஷம் முதலிய துவந்துவங்களோடு கூடியவனாயிருக்கிறான். இந்த மேல்கண்ட வித்யா-அவித்யா இரட்டையை பிரிக்காமல் உபாசிக்கவேண்டுமென்றும் பிரித்து உபாசித்தால் வரும் அநர்த்தத்தை (தீமைகளை)ப்பற்றி 2-29 உரையில் பிரமாணங்களுடன் சொல்லியிருக்கிறேன். அதை மறுபடியும் வாசித்துக்கொள்ளவும்.

கீதையில் மூன்று சரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

(1) முதலாவது சரணம் கீதை 2-49 'புத்தௌ சரணம் அந்விச்ச' இது 24வது தத்வமாகிய க்ஷரபுருஷன் அல்லது பகவானுடைய தூல சரீரமாகிய அவ்யக்தத்தில் சரணமடைதல்.

(2) இரண்டாவது சரணம் கீதை 18-61, 18-62,—'ஈஸ்வர: தம்ஏவ சரணம்' இது பகவானுடைய சூக்ஷ்ம சரீரமாகிய 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன் அல்லது அந்ய அவ்யக்தத்தில் சரணம்.

(3) மூன்றாவது சரணம் கீதை 18-66-'மாம் ஏகம் சரணம்' இது 26வது தத்வமாகிய புருஷோத்தமனிடம் சரணம்.

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஜீவனுடைய வலது மார்பு பிரதேசத்தில் ஒரேயிடத்தில் ஒவ்வொரு அனுபவமாக விளங்கும். இவை மூன்றுமே த்ரிகாயத்ரி என்று சொல்லப்படும்.

சலிக்கிரரேதஸ் அல்லது சுக்லம் சலியாதரேதஸ் அல்லது சுக்லத்துக்கு கீழானதென்று பகவான் சொல்லுகிறூர் அதாவது காலத்தால் கட்டுப்பட்ட பீஜம் காலாதீத (சாஸ்வத-காலத்தைக் கடந்த) பீஜத்துக்கு கீழானது. இதையே பகவான் கீதை 3-4ல் '**நகர்மணும் அநாரம்பாத் நைஷ் கர்ம்யம் புருஷ: அஸ்நுதே**' என்றும், கீதை 6-3ல் '**ஆருருக்ஷோ: முநே: யோகம் கர்ம காரணம் உச்யதே | யோகாரூடஸ்ய தஸ்ய ஏவஸம' காரணம் உச்யதே**' என்றும் சொல்லியிருக்கிறூர். ஆகையால் முதலில் வியஷ்டி புத்தியை சமஷ்டி விராட்டில் (புருஷோத்தமனுடைய சமஷ்டி சரீரத்தில்) அர்ப்பணம் செய்வதால் க்ஷரபுருஷனை அனுபவத்தில் உணர்ந்துகொள்ள வேண்டியது. எல்லா ஜீவர்களும் வியஷ்டி புத்திகளைத் தரித்தவர்களாவார்கள். பகவான் கீதை 3-42ல் இந்திரியங்கள், மனது, புத்தி, ஸ:(க்ஷரபுருஷன் அல்லது விராட்) இவைகள் ஒன்றுக்கொன்று வரிசைக் கிரமமாக உயர்ந்தது என்று சொல்லியிருப்பதையும் இங்கே கவனிக்கவேண்டும்.

      3 3 4   4
50. புத்தி யுக்த: ஜஹாதி இஹ உபே ஸுக்ருத
3
துஷ்க்ருதே
3   3
தஸ்மாத் யோகாய யுஜ்யஸ்வ யோக: கர்மஸு
5
கௌசலம்

(அ-ம்) முதலாவது சாணத்தை அடைந்திருக்கும் சாதகன் மன சமாதானத்தை யடைந்து மானமுள்ள தொழில்களையும் அவமானமுள்ள தொழில்களையும் திரஷ்கரிக்கிறுன் (விடுகிறுன்). ஆகையால் நீ மனசமாதானத்தை அடைவதில் ஈடுபடுக. இந்த மன சமாதானமே சர்வ சக்தியினுடைய அசைவு இல்லாத உன்னத நிலையாகும்.

(வி-ம்) இந்த ஸ்லோகத்தில் 'இஹ' என்னும் பதத்துக்கு இங்கே யென்று பதார்த்தம் மாத்திரம் கொடுத்தால் விஷயம் புரியாது. ஆகையால் "இஹ" என்பதற்கு கீதை 2-49ல் சொல்

லப்பட்ட முதலாவது சரணத்தை அடைந்த சாதகன் என்று அர்த்தம் கொடுத்திருக்கிறேன். புத்தி யுக்த: என்பது சமாதான புத்தி அதாவது சாங்கியபுத்தி. யோகம் என்பதற்கு ஐக்கியம் பதார்த்தம். அதாவது சமஷ்டியுடன் வியஷ்டியின் ஐக்கியம். வித்தியாரண்ணியர் யோகம் என்பதற்கு சித்த நிரோதம் அதாவது எண்ணங்களை (நினைவுகளை) அடக்குவது என்று லக்ஷணம் சொல்லியிருக்கிறார். கௌடபாதர் மாண்டூக்கிய காரிகையில் யோகம் என்பதற்கு மனமானது கரைந்துபோகும் வரைக்கும் சோர்வு இல்லாமல் அப்பியசிக்கும் மனோநிக்கிரகம் என்று லக்ஷணம் சொல்லியிருக்கிறார். யோக வாசிஷ்டத்திலும்கூட மனோநாசம் வாசனக்ஷயம், விஞ்ஞானம் மூன்றும் ஒரே காலத்தில் அப்பியசிக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஒன்றுக்கு பின்னால் ஒன்றை வெவ்வேறு காலத்தில் அப்பியசித்தலாலும் அல்லது ஏதாவது இரண்டை ஒரு காலத்திலும் மூன்றாவதை வேறொரு காலத்திலும் அப்பியசித்தலாலும் பயனை அடைய முடியாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவை மூன்றும் ஒரே க்ஷரபுருஷனைக் குறிக்கின்றன. அதாவது க்ஷரபுருஷனுடைய (1) ஸ்மிருதி (மனதின் எண்ணங்கள்) (2) அவ்யக்தத்தில் அடங்கியிருக்கும் ஸம்ஸ்காரங்கள் (வாசனைகள்) (3) விஞ்ஞானம் (சரீரத்தையும் சரீரியையும் பிரித்து உணரும் போதம் அதாவது உள் அனுபவம்) இந்த மூன்றையும் குறிக்கின்றன. இந்த அப்பியாசத்தினால் க்ஷரபுருஷன் 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன் மூலமாய் 26வது தத்வமாகிய புருஷோத்தமனைத் தொட்டு அதினின்றும் நழுவி மறுபடியும் தொட்டு மறுபடியும் நழுவி இந்த விதமாக கீதை 6-45, 7-19ல் சொல்லிய பிறகாரம் ஒன்று அல்லது அதிக ஜன்மங்களில் பரிபக்குவமடைந்து புருஷோத்தமனை யடைந்து அதிலிருந்து நழுவாத நிலையை அடைகிறான்.

அமிர்தபிந்து உபனிஷத்து 4வது 5வது சுலோகங்களில் மனமானது ஹ்ருதயத்தில் கரைந்துபோகும் வரைக்கும் மனதை நிக்கிரகம் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இந்த சித்தநிரோதமே தான் ஞானமும் தியானமும். உபநிஷத்துக்கள் இப்படிச் சொல்லியிருக்க, ஸ்வானுபவமில்லாத புத்தக பண்டிதர்கள் ஜ்ஞானம் வேறு, யோகம் வேறு என்று சொல்லுகிறார்கள்.

இதை அர்த்தமில்லாத பேச்சாக ஒதுக்கித் தள்ளவேண்டும். சித்தநிரோதம் அதாவது சமாதான புத்தி எல்லா யோகங்களுக்கும் கீழ்கண்டபடி பொது என்று உணர வேண்டும்.

ஸாங்கிய யோகம்—கீதை 2-38, 2-39

கர்மயோகம்—கீதை 2-48, 50, 53, 4-21, 22

ராஜயோகம்—கீதை 6-7 முதல் 10 வரை, 15, 20

பக்தியோகம்—கீதை 12-13 முதல் 19 வரை.

இடைவிடாமல் நிற்காமல் ஓடிக்கொண்டிருந்த காவேரி நதியானது கதவுகளும் மதகுகளும் உள்ள மேட்டூர் அணையால் தேக்கப்பட்டு ஒரு பெரிய ஏரி ஆகி அதிலுள்ள தண்ணீர் பார்வைக்கு அசைவில்லாமல் அமைதியாயிருக்கிறது. ஆனால் அதற்குள் எவ்வளவோ அபாரமான சக்தி அடங்கிக் கிடக்கிறது. அணையிலுள்ள மதகின் கதவைத் திறந்தவுடன் தண்ணீர் அதிவேகமாய் கிளம்பி மின்சார சக்தி முதலியவை உற்பத்தி செய்வதிலிருந்து அபாரமான சக்தி அடங்கிக் கிடக்கிறது நமக்கு புலப்படுகிறது. இந்த 2-50ல் பகவான், கர்மஸு கௌசலம் என்று சொன்னது அபாரமான சக்தியின் ஒடுக்கமே. ஸ்ரீ சங்கராச்சாரியார் முதலிய எல்லோரும் இதற்கு அர்த்தமாக சொல்லியிருக்கும் தொழில்களை செய்யாமல் இருத்தல் அல்ல. கௌசிதாகி உபநிஷத்து 3வது அத்தியாயம் 5வது சுலோகத்தில் ஞானமே சக்தி என்றும் சக்தியே ஞானம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சக்தியைத் தேக்கினால் கூடவே போதமும் தேக்கப்பட்டு அசைவு அற்ற சாந்த நிலை உண்டாகிறது. இக்காரணத்தால் தான் கீதை 2-48ல் யோகம் என்பது ஸமத்வம் என்றும், கீதை 2-50ல் யோகம் என்பது ஈஸ்வர சக்தி அடங்கி அசைவற்றிருக்கும் நிலையென்றும் பகவான் அருளியிருக்கிறார். அதாவது அசைவோடு கூடியிருக்கும் ஈஸ்வர சக்தியை, பிறப்பு இறப்பாகிய இரட்டைத் தன்மையுள்ள பீஜத்தை (விதையை), கீதை 7-10ல் சொல்லியுள்ள பிறப்பு இறப்பு இரட்டைத் தன்மையற்று காலத்தையும் கடந்து, அதாவது இறப்பு அற்று கால காலனாய் (யமனுக்கு யமனாய்) என்றும் அழியாது அசையாது நிலைத்துள்ள சநாதந பீஜத்தில் (விதையில்) அர்ப்பணம் செய்வதே யோகமாகும்.

இந்த சுலோகத்தில் மனோசாந்தியை முதலில் அடைந்து துவந்துவங்களினால் விகாரத்தையடையாமல் தொழில்களில் ஈடு படவேண்டுமென்று பகவான் விதித்திருக்கிறார். கீதை 2-49ல் சித் சக்தியின் சாந்த நிலையானது ஓரே இடத்தில் அசைந்து கொண்டிருக்கும் நிலையைவிட உயர்ந்ததென்று சொல்லியிருக்கிறார். காரணம் என்னவென்றால் கல்பிள்ளையாரைப் போன்று அசைவற்றிருக்கும் அஸ்திவாரமாகிய அந்த சாந்தத்தின்பேரில் தான் சிருஷ்டிக்கு காரணமாயுள்ள கர்மமாகிய சித் சக்தி நடனம் புரிந்துகொண்டிருக்கிறது. இந்த ஸ்லோகத்தின் சரியான மேலே சொன்ன அர்த்தத்தை புரிந்துகொள்ளாமல் கீதை 3வது அத்தியாயத்தில் 1-2, சுலோகங்களில் அர்ச்சுனன் சில கேள்விகளைக் கேழ்க்கிறான். இந்த கீதை 2-50ல் சொன்ன விஷயத்தையே மறுபடியும் கீதை 3-4லும், 6-3லும் பகவான் அர்ச்சுனனுக்கு சொல்லுகிறார். கீதை 3-4ன் வியாக்கியானத்தில் இன்னும் விரிவாய் இதைப்பற்றி எழுதியிருக்கிறேன். ஆங்கே கண்டுகொள்க.

51. கர்மஜம் புத்தியுக்தா: ஹி பலம் த்யக்த்வா மநீஷிண:
ஜந்மபந்த விநிர்முக்தா: பதம் கச்சந்தி அநாமயம்.

(அ-ம்) மன ஸமாதானத்தோடுகூடிய மனிதர்கள் தொழில்களினின்றும் உண்டான காரியங்களை (பலன்களை) அபிமானிக்காமல் விடுகிறார்கள். (24வது தத்துவமாகிய அவ்யக்தத்தின் காரியமாகிய 23வது தத்வமாகிய புத்தியை அதாவது பலத்தை விடுவதால் அவர்கள்) பிறவிக்கட்டிலிருந்து விடுதலையடைந்து மலமற்ற பதவியை அடைகிறார்கள்.

(வி-ம்) கிரந்தமே கிரந்தி - கிரந்தம் என்றால் புத்தகம். வெறும் புத்தகப்படிப்பு எல்லோருடைய இருதயத்தையும் கட்டிப்போடும் முடிச்சாகும்.

கர்மத்திலிருந்து பிறந்த பலத்தை (கர்மஜம் பலம்) விடும்படி பகவான் சொல்லியிருக்கிறார். பலம் இரண்டு விதம் (1) மோக்ஷ பலம் (2) ஸம்ஸாரபலம். பகவான் இரண்டாவதாகிய சம்சார பலத்தைத்தான் விடும்படி கீதை பூராவும் சொல்லியிருக்கிறார். முதலாவது மோக்ஷ பலம்தான் ஈஸ்வர ப்ரஸாதம் அல்லது

அருள், கலங்கின, கஷாயமான, சம்சாரமான (பல) காரியங்களை விடுத்து, கலங்காத, சுத்தமான, நிர்மலமான, காஷாயத்துடன் கூடிய 'பழமே நீ' யென்ற காஷாயதாரியாகிய பழனிவேல னுடைய அநாமய பதத்தை சுவீகாரம் செய்யவேண்டுமென்று பகவான் அருளியிருக்கிறார். கீதை 4-9ல் ஜந்மகர்ம என்பது கர்மமே தான், பகவானுடைய தேஜோமயமான முதல் ஜன்மம் என்று பகவான் குறிப்பிட்டிருக்கிறார். ஒரே இடத்தில் இருந்து ஓயாமல் தாண்டவமாடிக்கொண்டிருக்கும் அதாவது துடித்துக் கொண்டிருக்கும் சித் சக்தியே முதல் ஜன்மம். இதுவே கர்மா, ஜன்ம, ஜபீஜம், க்ஷரபீஜம் என்று பலவிதமாகச் சொல்லப்படும். இது சநாதன அதாவது அஜ (பிறப்பில்லாத) பீஜத்திலிருந்து பிறக்கிறது. ஸ்ரீ கோவிந்த பாதாச்சாரியார் காரிகை 33வது சுலோகத்தில் 'அஜேந அஜம் விபுத்யதே' என்று சொல்லியிருக் கிற பிறகாரம் ஒரு சாதகன் மேலே சொன்ன அஜபீஜத்தை அடைவதற்கு அவன் தானே அஜம் ஆகவேண்டும். க்ஷரபுருஷ னனவன் அஜபுருஷனை அதாவது அக்ஷரபுருஷனை அடைவது மோக்ஷபலம். அதே க்ஷரபுருஷன் சம்சாரமாகிய கீதை 2-41ல் சொல்லியிருக்கிற அவ்யவஸாய புத்தியுடன் கூடி திரும்பத் திரும் பக் கோடிக் கணக்கான பிறப்பு இறப்புடன் கூடிய ஜன்மங்களை எடுப்பது சம்சாரபலம் அல்லது கர்மஜம் பலம்.

52. யதா[3] தே மோஹ கலிலம் புத்தி:[3] வ்யதி[3]தரிஷ்யதி[4]
ததா[3] கந்தா[3] அஸி நிர்வேதம்[3] ச்ரோதவ்யஸ்ய[5] ச்ருதஸ்யச[5]

(அ-ம்) எப்பொழுது உன்னுடைய புத்தியானது மயக்கத்தா லுண்டான (கீதை 2-41 இரண்டாவது வரியில் சொல்லப்பட்ட கோடிக் கணக்கான எண்ணங்களில் மனோராஜ்யம் செய்வதாகிய) மலத்தை விட்டுத் தாண்டுகிறதோ (அதாவது கீதை 2-51ல் சொல்லப்பட்ட 26வது தத்வமாகிய மலமற்ற புருஷோத்தம பத வியை அடைகிறதோ) அப்பொழுது (ச்ரோதவ்யஸ்ய) 24வது தத்வமாகிய ஜன்மபீஜமாகிய க்ஷரபுருஷனையும் (ச்ருதஸ்ய) 25வது தத்வமாகிய அஜன்ம (அஜ) ஸநாதன பீஜமாகிய அக்ஷரபுருஷனை யும் அறியவேண்டுமென்னும் விருப்பமற்றவனுவாய்.

(வி-ம்) ச்ரோதவ்யஸ்ய, ச்ருதஸ்ய என்பவை சுருதி அல்லது சிரவணத்தையும் அதாவது கீதை 2-29ல் சொல்லப்பட்ட ஜீவ (க்ஷரபுருஷ) தர்சனத்தையும் கீதை 2-45ல் சொல்லப்பட்ட ஆத்ம (அக்ஷரபுருஷ) தர்சனத்தையும் குறிக்கின்றன. புருஷோத்தம பதத்தை அடைந்தவனுக்கு புருஷோத்தமனுடைய சரீரங்களாகிய 25வது தத்வமாகிய அந்ய அவ்யக்தமும் 24வது தத்வமாகிய அவ்யக்தமும் இயல்பாய் விளங்கும். ஆதலால் அவன் இவைகளை அறிய பிரயத்தனம் செய்யவேண்டிய அவசியமில்லை என்பதை 'நிர்வேதம் கந்தாஸி' என்னும் பதங்கள் குறிப்பிடுகின்றன. வேதம் என்பதற்கு கீதை 2-45ல் மூன்று குணங்களைப் பற்றிச் சொல்லுவதென்று பகவான் லக்ஷணம் கொடுத்திருக்கிறார். ஆகையால் நிர்வேதம் என்னும் பதத்திற்கு நிர்குணம் நிர்மலம் என்று அர்த்தமும் கொடுக்கலாம். இந்த 2-52வது சுலோகத்தின் இரண்டாவது வரிக்கு கீதை 14-22 முதல் 14-26 முடிய லக்ஷணங்களோடு சொல்லியிருக்கிற திரிகுணாதீதனுய் ஆவாய் என்றும் பொருள்படும்.

புஸ்தக பண்டிதர்கள் ஓயாமல் ஒழியாமல் வேதம் பிரமாணமென்று சொல்லுகிறார்கள். வேதம் பிராமணமென்று உபநிஷத்துக்களிலாவது கீதையிலாவது சொல்லவில்லை. பிரத்தியக்ஷம் தான் பிரமாணமேயொழிய வேதம் பிரமாணமல்ல. ஆனால் ஆபஸ்தம்ப தர்ம சூத்திரத்தில் வேதம் பிரமாணமென்று சொல்லியிருக்கிறதேயென்றால் அப்படி சொல்லியிருப்பது சம்சாரத்தில் உழன்றுகொண்டிருப்பவர்களுக்குத் தான். ஏனெனில் கீதை 2-45ல் உள்ளபடி வேதங்கள் குணங்களைப்பற்றி சொல்லுகின்றன. குணங்களைப்பற்றிச் சொல்லுபவை யெல்லாம் தர்ம சாஸ்திரங்கள் என்று மோக்ஷ தர்மத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சம்சார சமுத்திரத்தை தாண்டுவதற்கு பிரத்தியக்ஷதாரக ஓடமே பிரமாணம். வேதத்தால் எள்ளளவும் ஒத்தாசை கிடையாது. கீதை 16-24ல் பகவான் சாஸ்திரம் பிரமாணம் என்று சொல்லியிருக்கிறார். இங்கே சாஸ்திரம் என்பதற்கு புத்தகங்கள் என்ற அர்த்தம் அல்ல, மற்றோ சஸ்திரஸ்வரூபி அதாவது ப்ரணவஸ்வரூபியாகிய 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன் என்று அர்த்தம். இதற்கு அத்தாக்ஷி முண்டகோபனிஷத்தில் 2வது அத்தியாயத்

தில் 3-4, சுலோகங்களில் தநு (சஸ்த்ரம்) என்றால் ப்ரணவம் என்று சொல்லியிருக்கிறது. சாஸ்திரமும் சாஸ்திரியும் ஒன்றே. அனுபவ ஞானம் வந்தவனுக்கு பிராமணன், சாஸ்திரி, கவி யென்று பெயர். இப்பேர்ப்பட்ட பிராமணர்களிடத்தில் சந்தேக நிவர்த்தி செய்துகொள்ளவேண்டுமென்று தைத்திரிய உபநிஷத்தில் 1-11-4ல் சொல்லியிருக்கிறது. வசிஷ்டருக்கும் பிரத்தியக்ஷமே பிரமாணம். ஸ்ரீ சங்கராச்சாரியார் சாக்ஷாத் சிஷ்யராகிய ஸ்ரீ சுரேஸ்வராசாரியார் தக்ஷிணாமூர்த்தி மானஸோல்லாஸிகாவில் 5-1ல் ப்ரத்யக்ஷம் ஏகம் (பிரத்தியக்ஷம் ஒன்றே) பிரமாணம் என்று சொல்லியிருக்கிறார். சாதாரணமாய் பாமரர்கள் கூட தங்கள் கண்ணால் கண்ட பிரத்தியக்ஷ பிரமாணத்தையே ஒப்புக்கொள்ளுவார்கள். இப்படியிருக்க ஸ்ரீ சங்கராச்சாரியாருக்கு மாத்திரம் விவேக சூடாமணி 534வது சுலோகத்தில் அவர் சொல்லியிருக்கிறபடி சுருதியே பிரமாணம். மேலும் ஸ்ரீ சங்கராச்சாரியர் விவேக சூடாமணி 474வது சுலோகத்தில் சுருதி, யுக்தி, குருவாக்கு முதல் பிரமாணமென்றும் இதை மனனம் செய்து வரும் அனுபவம் மற்றொரு பிரமாணமென்றும் சொல்லியிருக்கிறார். சர்க்கரை கூப்பன் கார்டை காப்பி, தேயிலை கஷாயத்தில் போட அது தித்திப்பை உண்டுபண்ணும் என்றால் ஸ்ரீ சங்கராசாரியார் சொல்லுகிறபடி சச்சிதானந்தம் என்ற செத்த எழுத்துக்களால் எழுதியிருக்கும் உயிரில்லாத பனை ஓலைச் சுவடிகளாகிய சுருதிகளும் சச்சிதானந்தமாகிய தித்திப்பை உண்டுபண்ணும்.

ப்ரஹ்ம சூத்திரத்தில் முதல் சுலோகத்தில் சொல்லிய பிரஹ்மத்தை அடையும் மார்க்கம் (1) ச்ருதஸ்யச்ச = தத்வ ஸமன்வயாத் = குணகாம்ய பிரக்ருதி = க்ஷரபுருஷன் = 24வது தத்வம் = ஆடி அசையும் சித் அணு = க்ஷேத்திரம் ஆகிய இதை அனுபவிப்பதாலும், பிறகு (2) ச்ரோதவ்யஸ்யச்ச = சாஸ்த்ர யோநித்வாத் = கவி = 25வது தத்வம் = அக்ஷரபுருஷன் = ஆடாத அசையாத அணுமூலமாய் (3) எதிலிருந்து சர்வ பிராணிகளும் பிரபஞ்சமும் உதிக்கிறதோ, உதித்தபின் எதனால் போஷிக்கப்படுகிறதோ, எதில் சடைசியில் அவைகள் லயத்தை அடைகிறதோ அந்த 26வது தத்வமாகிய புருஷோத்தமனாகிய பிரஹ்மத்தின் அனுபவம் உண்டாகிறது. இதுவே நிர்வேதம். புத்த

ரும், கீதையில் பகவானும் சொல்லியிருக்கும் மூன்று சாணங்களும் பிரஹ்ம சூத்திரத்தில் சொல்லியிருக்கும் மூன்றுபடிகளும் ஒன்றே.

53. ச்ருதி[5] விப்ரதி பந்நா தே யதா[3] ஸ்தாஸ்யதி[2] நிஸ்சலா
ஸமாதௌ[4] அசலா புத்தி:[3 3 4] ததா யோகம்[3] அவாப்ஸ்யஸி

(அ-ம்) எப்பொழுது கீதை 2-41ல் முதல் வரியில் சொல்லியிருக்கிறபடி ஓரேவித குணமாக் குதித்துக்கொண்டு நாட்டியம் செய்யும்) சிரவணத்தின் சாதனையில் திரும்ப திரும்ப ஜயத்தையடைந்த உன்னுடைய (வ்யவஸாய ஆத்மிகா) புத்தியானது ஆடாமல் அசையாமல் குதிக்காமல் (25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனிடம்) சமாதியில் நிலைத்து இருக்கிறதோ அப்பொழுது (சமத்துவமாகிய) யோகத்தை அடைவாய்.

(வி-ம்) ச்ருதி என்பது ஊமையான தக்ஷிணாமூர்த்தி செவிடனாகிய சீடனுக்கு வலது ஹ்ருதயத்தில் கீறும், சொறியும், குளவியைப்போல் கொட்டும் உபதேசமாகிய சிரவணம் என்று விரிவாய் கீதை 2-29 உரையில் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த சுலோகத்தில் ஸமாதியின் லக்ஷணம் அசல புத்தியும் யோகமும் ஆகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சிரவண மனனங்களுக்கு பல உபமானங்கள் சொல்லுகிறார்கள். குளவியால் கொட்டப்பட்ட புழு குளவியை நினைத்து நினைத்து எப்படி குளவி உருவத்தை அடைந்து விடுகிறதோ அதைப்போல் ஜீவனாகிய புழுவை பரமாத்மாவாகிய குளவி (ஸோஹம்-ஹம்ஸோ) நீ தான் நான், நான் தான் நீ என்னும் ஜோதி மின்னலால் கொட்டி, அந்த ஜீவன் அந்த ஜோதிக் கொட்டலை அனுசந்தானம் செய்து பரமேயாகிறது. (1) குளவி முதலில் புழுவை கொட்டுவது சிரவணம், (2) கொட்டிய குளவியை விடாமல் புழு நினைப்பது மனனம் (3) புழு குளவியாகவே ஆய்விடுவது நிதித்தியாசம்.

ஒரு பெண் சிங்கம் ஆட்டுமந்தையில் வந்து ஒரு ஆட்டைத் தின்றுகொண்டிருந்தபொழுது பிரசவ வேதனைபட்டு ஒரு சிங்கக் குட்டியை ஈன்றது இடையன் அதற்குள் வந்து கண்டு விரட்

டவே குட்டியை விட்டு விட்டு சிங்கம் ஓடிப்போயிற்று. அந்த சிங்கக் குட்டி ஆடுகளுடன் சேர்ந்து தழை புல்லே தின்றுகொண்டு ஆட்டுக் குட்டியைப் போலவே மியா மியாவென்று கத்திக் கொண்டு சில காலம் இருந்தது. பிறகு ஒரு நாள் பெண் சிங்கம் ஆட்டு மந்தைக்கு வந்தபொழுது தன்னுடைய குட்டியை அடையாளம் கண்டு கொண்டு வாயில் கௌவி தூக்கிக்கொண்டுபோய் அதினுடைய முகத்தையும் தன்னுடைய முகத்தையும் நீரில் தன்னுடைய குட்டிக்கு சாயையை காட்டி ஒரு கர்ஜனை செய்தது. அப்பொழுது சிங்கக்குட்டியும் கூடவே கர்ஜனை செய்தது. குட்டிக்கு அப்பொழுது தான், தான் சிங்கக்குட்டி என்று விளங்கினதாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் வெகு அழகாக இந்த உதாரணத்தைக் கொடுத்திருக்கிறார்.

அனுபவமில்லாத புத்தக பண்டிதர்கள் ஒரு அறையில் (குகையில்) உட்கார்ந்துகொண்டு இடைவிடாமல் (அகம் பிரஹ்மாஸ்மி) நான் பிரஹ்மம் என்று சொல்லிக்கொண்டிருந்தால், தான் பிரஹ்மம் ஆய்விடலாமென்று சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். இந்த புரளிகளில் மயங்கிவிடவேண்டாம். புழுவைக் குளவி கொட்டாமல் புழு குளவியை நினைத்துக்கொண்டிருக்கமுடியுமா? சிங்கக்குட்டிக்கு தண்ணீரில் தன் சாயையைக் காட்டி கர்ஜிக்காமல் அதற்கு தான் சிங்கம் என்னும் ஞாபகம் வருமா? சோர நாயகன் திருஷ்டாந்தத்தில் சோரநாயகி வீட்டுவேலை செய்யும்பொழுது சோர நாயகன் நினைவாயிருக்கிறாள். சோர நாயகனை முதலில் பார்க்காமல் அவனுடைய நினைவு வருமா? பகவான் அருளால் ஹ்ருதயத்தில் ஜோதி மின்னலால் கொட்டி தன்னை தரிசிப்பிக்காவிட்டால் எப்படி பகவானை நான் பிரஹ்மம் என்று அனுசந்தானம் செய்ய முடியும்? முடியவே முடியாதென்று உணர்ந்து கொள்ளவும்.

54. ஸ்தித[2] ப்ரஜ்ஞஸ்ய கா[4] பாஷா ஸமாதிஸ்தஸ்ய[4] கேசவ[2]
ஸ்திததீ[2]: கிம்[4] ப்ரபாஷேத[4] கிம் ஆஸீத வ்ரஜேத கிம்

(அ-ம்) அர்ச்சுனன் கேட்கிறான் :-ஹே! கேசவ (கிருஷ்ண பகவானே) ஸமாதி அடைந்த ஸ்திதபிரஜ்ஞனுடைய (திட ஞானியினுடைய) லக்ஷணம் என்ன, அப்படிப்பட்ட ஸமாதானபுத்தி,

ஸாங்கியபுத்தி அல்லது யோக புத்தியையுடையவன் எப்படிப் பேசுவான் உட்கார்ந்திருப்பான் நடப்பான்?

(வி-ம்) ஸ்திதப்ரஜ்ஞ, ஸமாதி, ஸ்திததீ, ஸ்திரமதி, (கீதை 12-19) ஸாங்கிய புத்தி இவைகள் எல்லாம் ஒரே அர்த்தத்தை யுடைய பதங்கள். இந்த சுலோகத்திற்கு ஒரு குதர்க்கமான அர்த்தமும் சொல்லலாம். அதாவது சமாதி நிலையடைந்த ஒரு ஞானிக்கு (அஞ்ஞானிகளைப்போல) பேசுவதும், உட்காருவதும் நடப்பதும் எப்படி சாத்தியமாகும்? இந்த குதர்க்க அர்த்தத் திற்கு இடம் கொடாமல் பகவான் கீழ் சுலோகங்களில் விரிவாகச் சொல்லுகிறார்.

55. ப்ரஜஹாதி யதா[3] காமாந் ஸர்வாந் பார்த்த[2] மநோகதாந்[3]
ஆத்மந்யேவ ஆத்மநா துஷ்ட: ஸ்திதப்ரஜ்ஞ:[2] ததா[3]
உச்யதே

(அ-ம்) பகவான் பதில் சொல்லுகிறார்:—ஹே! பார்த்த! (அர்ச்சுன) எப்பொழுது ஒரு மனிதன் மனத்தினால் சங்கற்பிக் கப்பட்ட (உண்டாக்கப்பட்ட) (கீதை 2-14ல் சொல்லப்பட்ட மாத்ரா ஸ்பர்சங்களாகிய, துவந்துவங்களாகிய) எல்லா காமங்களை யும் திரும்பத் திரும்ப உதறித் தள்ளிவிட்டு, தன்னுடைய ஹ்ரு தயத்தின் கண்ணேயே ஆனந்தத்தை அனுபவிக்கிறானோ அப் பொழுது (அவன்) சாந்த அல்லது சமாதான புத்தியையுடைய ஞானி என்று சொல்லப்படுகிறான்.

(வி-ம்) கீதை 6-24ல் 'ஸங்கல்ப ப்ரபவான் காமான் த்யக்த்வா' அதாவது மனோ சங்கல்பத்தினின்றும் உண்டான (மாத்திரையில் கட்டுப்பட்ட அசுத்த) காமங்களை உதறித் தள்ளு வதைப்பற்றி பகவான் சொல்லியிருக்கிறார். இந்த அசுத்த காமத் துக்கு எதிரிடையான சுத்த காமத்தைப்பற்றி கீதை 7-11ல் 'தர்மாவிருத்தோ பூதேஷு காமோ அஸ்மி' என்று தர்மத் திற்கு விரோதமில்லாத சித் அம்பல நாட்டியமாகிய 24வது தத்வ மாகிய க்ஷரபுருஷ அனுபவத்தை பகவான் சொல்லியிருக்கிறார். இந்த இரண்டுவித காமங்களையும் திரும்பத் திரும்ப விட்டவனே

திடஞானி. கீதை 2-50ல் ‘ஜஹாதி’ என்னும் பதத்தை உப யோகித்திருக்கிறது. இந்த 2-55ல் ‘ப்ரஜஹாதி’ என்னும் பதத்தை உபயோகித்திருக்கிறது. ‘ப்ர’ என்பதற்கு திரும்பத் திரும்ப அதாவது அடிக்கடி என்று அர்த்தம்.

56. து3:கே2ஷு அநுத்3விக்3நமநா: ஸுகே2ஷு
விக3தஸ்ப்ருஹ:
வீத ராக3 ப4யக்ரோத4: ஸ்தி2ததீ4: முநி: உச்யதே

(அ-ம்) (திடீரென்று ஏற்படும்) துக்க சம்பவங்களால் துன் பத்தையடையாத மனதையுடையவனும் (திடீரென்று ஏற்படும்) சுக சம்பவங்களால் தலைகால் தெரியாமல் இன்பத்தில் அழுந்தாத வனும் விருப்பு (வெறுப்பு) பயம் கோபம் இவைகளால் ஏற்படும் மன சஞ்சலம் இல்லாதவனுமாகிய திடஞானி முனி என்று சொல்லப்படுகிறான்.

(வி-ம்) கீதை 13-6ல் ‘இச்சா த்வேஷ: ஸுகம் துக்கம்...... ஏதத்க்ஷேத்ரம்’ என்று பகவான் அருளியிருக்கிறார். ஆகை யால் ராகம் பயம் கோபம் முதலிய குணங்கள் பிரகிருதியைச் சேர்ந்தவைகள். ஒரே இடத்தில் புரியும் சித் அம்பல நாட்டியத் தின் நடுக்கம் போன்ற அசைவு இந்தக் குணங்களின் அறிகுறி யாகக் கொள்ளலாம். இந்த அசைவை நுட்பமான மைதுனத் திற்கு ஒப்பிடலாம். இந்த வ்யவஸாய (உழுதுகொண்டிருக்கும்) அசைவிலிருந்து தான் மனதின் சமத்துவமல்லாத நிலை முத லில் ஆரம்பமாகிறது. ஆகையால் 24வது தத்வமாகிய ஹம்ஸ, ரேதஸ், கர்மாவை 25வது தத்வமாகிய பரமஹம்ஸ, ஊர்த்வ ரேதஸ், அகில கர்மாவில் அர்ப்பணம் செய்வதே அல்லது ஸம் பிரஜ்ஞியாத ஸமாதியிலிருந்து அஸம்பிரஜ்ஞியாத ஸமாதிக்கு போவதே “வீதராக பயக்ரோத:” என்பதற்கு அர்த்தம். இந்த சுலோகத்தில் சொன்னதையே மறுபடியும் அடுத்த சுலோகத்தில் விஸ்தரிக்கிறார்.

57. ய: ஸர்வத்ர அநபி4ஸ்நேஹ: தத்தத் ப்ராப்ய சு5பாசு5பம்
ந அபி4நந்த3தி ந த்3வேஷ்டி தஸ்ய ப்ரஜ்ஞா
ப்ரதிஷ்டி2தா

(அ-ம்) யாரொருவன் சகலவிதமான நன்மை தீமைகள் வந்தடைந்தபொழுது (அவைகள் என்னுடையவை என்னும் அபிமானத்தால் அவைகளுடன் பின்னிக்கொள்ளாமல் (நன்மைகளைக் குறித்து) சந்தோஷிக்கிறதில்லையோ (தீமைகளைக் குறித்து) வெறுக்கிறதில்லையோ அப்பேர்ப்பட்டவனுடைய மனது சமத்துவ (சமரஸ அல்லது ஏகரஸ) சாந்தத்தில் நிலைபெற்றிருக்கிறது.

58. யதா[3] ஸம்ஹரதே ச அயம் கூர்ம: அங்கானி[3]
இவ ஸர்வச:[5]
இந்த்ரியாணி[3] இந்த்ரியார்த்தேப்ய:[3][2][4] தஸ்ய ப்ரஜ்ஞா
ப்ரதிஷ்ட்டிதா[2]

(அ-ம்) ஆமையானது அதினுடைய எல்லா அவயவங்களையும் உள்ளுக்கு இழுத்துக்கொள்ளுதலைப்போல இந்திரியங்கள் (அவைகளின் உணவாகிய) இந்திரிய விஷயங்களினின்றும் முற்றும் இழுத்துக்கொள்ளப்படுகிறபொழுது அப்பேர்ப்பட்டவனுடைய மனது சமத்துவத்தில் நிலைபெற்றிருக்கிறது.

(வி-ம்) இந்த ஆமையின் உதாரணம் மற்றெல்லா உபமானங்களைவிட மிகவும் பொருத்தமானதென்று 26வது தத்வமாகிய புருஷோத்தம நிலையை அடைந்தவனுக்குத்தான் தெரியும். வடமருதை, பிருந்தாவனம், முதலியவிடங்களில் யமுனா நதியில் இந்த ஆமையின் காட்சியைக் காணலாம் நதியில் சோற்றுப் பருக்கைகளை எறிந்தவுடன் ஆமைகள் தலையையும் கால்களையும் நீட்டிக்கொண்டு ஓடிவந்து சோற்றுப் பருக்கைகளை எடுத்துக் கொண்டவுடன் அவயவங்கள் எல்லாவற்றையும் உள்ளே இழுத்துக்கொண்டு ஆமைகள் தண்ணீரில் மிதக்கும்பொழுது வட்டவடிவ மரத்தட்டுகள்போல் காணப்படும். இவைகளைப் போலவே ஒரு மனிதன் அஸம்பிரஜ்ஞ ஸமாதிக்குப் போகும்பொழுது இந்திரியங்கள், மனது, புத்தி, அவ்யக்தம், புருஷன் வரிசைக்கிரமமாக ஒன்றுக்குள் ஒன்று இழுக்கப்பட்டு கடைசியில் 26வது தத்வமாகிய வாசுதேவனில் இழுக்கப்படுகிறான். அப்பொழுது அவனுடைய வலது மார்பு பிரதேசத்தில் வட்டவடிவமாயுள்ள மரத்தட்டைப்போலுள்ள சூரியன் கிரணங்களை எல்லாம் உள்ளே இழுத்துக்கொண்டு ஜ்வலிப்பதை (பிரகாசிப்பதை)ப்போல உணர்

கிருன். வாசுதேவனுடைய அருள்பெற்று இந்த வாசுதேவ நிலையில் இருக்கும் உணர்ச்சிக்குப் பொருத்தமான திருஷ்டாந்தம் என்னவென்ருல் ஒருவன் கண்ணை கெட்டியாய் மூடிக்கொண்டு இருட்டறையில் இருக்கும்பொழுது மின்சார விளக்கை திடீரென்று வேருெருவர் போட்டால் கண்ணை மூடிக்கொண்டிருப்பவனுக்கு மின்சார விளக்கு எறிகிறதென்று ஏற்படும் உணர்ச்சியேயாகும். வாசுதேவ நிலையில் எண்ணங்கள் இன்றி பூர்ண உணர்ச்சியுடன் இருக்கிருன். இதை அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும். இதைவிட அதிகமாக எழுத்துக்கள் மூலம் விவரிக்க முடியாது. இந்த முடிவான அஸம்ப்ரஜ்ஞா ஸமாதிக்குப் போவதற்கு முன்னதாக ஸம்ப்ரஜ்ஞா ஸமாதி என்ற ஒருநிலை உண்டு. பின் சொன்ன நிலையில் இந்திரியங்கள். மனது, புத்தி, அவ்யக்தம் ஜீவன் இவைகள் வரிசைக் கிரமமாக ஒன்றுக்குள் ஒன்று இழுக்கப்பட்டு வானத்திலுள்ள ஆடாத அசையாத துருவ நக்ஷத்திரத்தை ஒத்த அனுபவம் ஏற்படும். இந்த நிலையைப்பற்றித் தான் அடுத்த சுலோகத்தில் (கீதை 2-59ல்) பகவான் சொல்லுகிருர்.

24வது தத்வம் = ரஸம், மினுமினுவென்று ஜொலிக்கிற (பிரகாசிக்கிற) வைரம் போன்றது.

25வது தத்வம் = ரஸதரம், ரஸபரம், ஒளி மழுங்கின வைரம், முத்து, அதிகாலையில் இலைகளின்மேலுள்ள முத்தின் உருவத்தையுடைய பனிநீரைப் போன்றது.

26வது தத்வம் = ரஸதமம், ரஸபரமம், ஜ்யோதி சமுத்திரம் போன்றது. பஞ்சதசியில் ஸ்ரீ வித்தியாரண்ணியருடைய கீழ் கண்ட அனுபவ சுலோகம் இங்கே கவனிக்கத்தக்கது.

ப்ரஹ்மவித் பரம் ஆப்னோதி சோகம் தரதி ஆத்மவித்
ரஸ: ப்ரஹ்மரஸம் லப்த்வா ஆனந்தீபவதீ ந அங்யதா

ரஸம் என்பது 24வது தத்வம். ரஸ: என்பது 24வது தத்வத்தை தரித்தவனுகிய 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷன். ப்ரஹ்மரசம் என்பது 26வது தத்துவமாகிய வாசுதேவஸ்திதி. இதையே பகவான் கீதை 2-72ல் ப்ராஹ்மீஸ்திதி என்று சொல்லுகிருர்.

59. விஷயா: விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந:[3]

ரஸவர்ஜம் ரஸ: அபி அஸ்ய பரம் த்ருஷ்ட்வா[3]
நிவர்த்ததே

(அ-ம்) நிவிருத்தி மார்க்கத்திலுள்ள சரீர உபாதியோடு கூடிய ஒரு மனிதனுடைய (1வது தத்வமாகிய பிருதிவி முதல் 23வது தத்வமாகிய புத்தி ஈருக உள்ள) விஷயங்கள் தாற்காலிகமாக (ஒன்றுக்குள் ஒன்று வரிசைக் கிரமமாக) லயத்தை யடைந்து (இந்த 1 முதல் 23 தத்வங்கள், ஒரே இடத்தில் இருந்துகொண்டு குதித்துக்கொண்டு நடனம் புரியும் ஆனந்த சித் அணுவாகிய) ரஸத்துக்குள் இழுக்கப்படுகின்றன. ஆனல் இந்த (சித் அணு ப்ரத்யகாத்மாவாகிய) ரஸம் மாத்திரம் எஞ்சி (மிச்சமாய்) இருக்கிறது. இந்த ரஸ அணுகூட அதினுடைய காரணமாகிய வாசுதேவ சொரூபத்தில் புதைந்துபோகும்பொழுது ரஸ அணுவின் தனிப்பட்ட (வியஷ்டி) சொரூபம் இல்லாமல் போகும்.

(வி-ம்) இந்த அனுபவம் முன்னமேயே கீதை 2-49 உரையில் சொல்லப்பட்டிருக்கிற ஸாயம் ஸந்தியாகிய மூன்றுவது சரணமாகிய புருஷோத்தமனிடம் சரணம் தன்னுடைய உண்மையான சொரூபமாகிய ஸ்வயம் ஜோதியாயிருக்கும் வாசுதேவன் ஒரு திரையைப் போட்டுத் தன்னை மூடிக்கொண்டாலன்றி சிருஷ்டி செய்ய முடியாது. ஒரு கடுகளவு அணுமாத்திரம் சித் அம்ஸம் நீங்கலாக தன்னுடைய ஸ்வயம் ஜோதி சரீரத்தை தமஸ் அல்லது இருளாகிய திரையால் தன்னை மூடிக்கொள்ளுகிருர். பரந்த வானத்தில் ஒரே ஒரு சின்ன நக்ஷத்திரம் மாத்திரம் வெளியே எட்டிப் பார்ப்பதை இது ஒத்திருக்கும். இந்த ஒண்டி நக்ஷத்திரமே ப்ரஹ்ம சூத்திரத்தில் சாஸ்திர யோனி என்றும் கீதை 11-8ல் திவ்ய சக்ஷு என்றும் கீதை 13-34ல் ஜ்ஞான சக்ஷு என்றும் சாஸ்திரக்கண் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்திரியங்களால் உணரமுடியாத இந்த திரைக்குள்ளே ஜொலித்துக் கொண்டிருக்கும் ஜோதி சமுத்திரம் உள்ளது. முலைக்கண் வழியாக தாய் குழந்தைக்கு பால் ஊட்டுவதுபோல் ஈசுவரனும் மேலே சொன்ன சித் அணுவாகிய பாலம் அல்லது சேது மூலமாக தன்னுடைய ஸம்சாரிக அல்லது மலடி

சிருஷ்டிக்கு சித் சக்தியை இடைவிடாமல் எப்பொழுதும் ஊட்டிக்கொண்டிருக்கிறார். இந்த சித் அணுக் கண்ணானது திரையின் பேரில் இடைவிடாமல் நடிக்கும் பிரபஞ்ச லீலைகளையே பகிர்முகமாக (வெளிமுகமாய்) பார்த்துக்கொண்டு சம்சாரத்தில் அழுந்தி விடுகிறது. எப்பொழுது இந்த ரஸ அணு வெளி முகமாய் பார்ப்பதை ஒழித்து அந்தர்முகமாய் (உள்ளுக்குள்ளே) பார்க்கிறதோ அப்பொழுது உள்ளே இருக்கும் ஜோதி சமுக்திரத்தில் அமிழ்ந்து விடும். இந்த 2-59 சுலோகத்தில் 2வது வரியில் பகவான் சொல்லியிருப்பது இதுதான். பரம் திருஷ்ட்வா என்னும் பதங்களை உபயோகித்திருக்கிறார். திருஷ்ட்வா என்றால் பார்ப்பது என்று பதத்தின் அர்த்தம் - பரமாயிருந்தால் தான் பரத்தைப் பார்க்கலாம். இந்த நிலையில் பார்க்கிறவனுமில்லை பார்க்கப்படுகிறவனுமில்லை.

இந்த சுலோகத்தில் முதல் வரியில் விநிவர்த்தந்தே என்னும் பதமும் 2வது வரியில் நிவர்த்தந்தே என்னும் பதமும் உபயோகப்பட்டிருக்கின்றன. 'வி' முன்கூட்டி சேர்த்த இடத்தில் விட்டுவிட்டு என்று அர்த்தம் செய்து கொள்ளவேண்டும். கீதை 3-12ல் கீழ் தத்துவங்கள் மேல் தத்வங்களுக்கு தங்களை உணவாகக் கொடுப்பதாகிய யஜ்ஞத்தால் மேல் தத்வங்கள் சந்தோஷமடைந்து கீழ் தத்வங்களுக்கு வேண்டிய போகத்தைக் கொடுப்பார்கள் என்று சொல்லியிருக்கிறது. ஆகையால் யஜ்ஞம் நின்றவுடன் சிருஷ்டியும் நின்று விடுகிறது. 3வது சரணமாகிய ஸாயம் ஸந்தியில் முடிவான யஜ்ஞம் நின்று போகிறது. ஆகையால் அதற்கப்புறம் ஸம்ஸார ஜன்மம் இல்லை.

'ரஸஸித்தா கவிஸ்வர:' என்று ஸ்ரீ பர்த்ரகிரி சொல்லியிருக்கிறார். இங்கே கவி என்றது ரஸன் அல்லது 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன்.

60. யததஃ ஹி அபி கௌந்தேய புருஷஸ்ய விபஸ்சித:

இந்த்ரியாணி[3] ப்ரமாதீநி[2] ஹரந்தி ப்ரஸபம்[4] மந:

(அ-ம்) ஹே கௌந்தேய (அர்ச்சுனா)! அடங்காத இந்திரியங்கள் (ரஸன் அல்லது அக்ஷரபுருஷனை அடைந்த) யதியினு

டைய மனதைக்கூட அவன் முயற்சிக்கு அடங்காமல் பலவந்த மாய் இழுத்துச் செல்லுகிறது.

(வி-ம்) யதி என்பவன் 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன். ஆடாத சித் அணு, ரஸக்கண், கவியில் இருப்பவன் ஆவன். கீதை 2-46ல் உள்ள 'விஜாநத' வைப்போல் இந்த 2-60ல் விபஸ் சித: என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இங்கேயும் 'வி' முன்கூட்டியிருப்பதால் முடிவான நிலைக்கு ஒரு படி குறைந்த நிலை என்று அறிந்து கொள்ளவும்.

இந்த சுலோகத்தில் சொன்னதையே மறுபடியும் பகவான் கீதை 3-33ல் ஞானிகூட தன்னுடைய இயல்பின் பிறகாரம் பிர விருத்திக்கிறான் என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் சேவக் ராமம், மடங்கள், ஆஸ்ரமங்களில் உள்ளவர்கள் உள்ளே ஞானப் பிரகாசமின்றி வெளியே செய்து வரும் அடத்தால் (பலவந்தத் தால்) இந்திரியங்களை அடக்க முயல்வது ஒரு பயனையும் கொடுக் காது என்று தெரிந்து கொள்ளவும்.

61. தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த: ஆஸீத மத்பர:

வசே[5] ஹி யஸ்ய இந்த்ரியாணி[3] தஸ்ய ப்ரஜ்ஞா

ப்ரதிஷ்டிதா[2]

(அ-ம்) சமத்துவத்திலிருப்பவன் அவைகள் (இந்திரியங்கள்) எல்லாவற்றையும் அடக்கி பரமாத்மாவாகிய என்னிடத்து உட் கார்ந்திருப்பான் (நிலைத்திருப்பான்). யாருடைய இந்திரியங்கள் அடங்கி இருக்கின்றனவோ அவனுடைய மனது சமத்துவ (திட) சாந்தத்தில் நிலைபெற்றிருக்கிறது.

(வி-ம்) இந்திரிய சித்த நிரோதமே கர்மயோகம், பக்தி யோகம், ராஜயோகம், ஞானயோகம். புத்தக பண்டிதர்கள் சொல்லுவதைப்போல இந்த நான்கு யோகமும் வெவ்வேறல்ல. அனுபவ ஞானமுள்ள ஸ்ரீரமணரிஷி உபதேச சாரம் 10வது செய்யுளில்

உதித்த விடத்தி லொடுங்கி யிருத்த
லது கன்மம் பக்தியு முந்தீபற
வது யோக ஞானமு முந்தீபற.

உதித்தவிடமாகிய 26வது தத்வமாகிய புருஷோத்தமனி-டம் ஒடுங்கியிருக்கும் நிலையே 4 வித யோகமுமென்று சொல்லியிருக்கிறார்.

62. த்4யாயத: விஷயாந் பும்ஸ: ஸங்க3: தேஷூ உபஜா4யதே
ஸங்கா3த் ஸம்ஜாயதே காம: காமாத் க்ரோத4:
அபி4ஜாயதே

(அ-ம்) (ஒரு) மனிதன் இந்திரிய விஷயங்களைச் சிந்திப்பதனால் அவைகளிடத்து அபிமானம் (பற்று) உண்டாகிறது (அந்த பற்றினால் ஆசை பிறக்கிறது. ஆசையிலிருந்து கோபம் வளர்கிறது.

(வி-ம்) எதை நினைத்தவுடன்காலிலேயே அடைந்து அனுபவிக்கவேண்டுமென்று விருப்பம் உண்டாகிறதோ அதற்கு காமம் என்று பெயர். அந்த காமம் உடனே பூர்த்தியாகாவிட்டால் அல்லது கிட்டி அனுபவிப்பதில் தாமதம் ஏற்பட்டால் கோபம் உண்டாகிறது. கீதை 16-21ல் காமம் க்ரோதம் (கோபம்) லோபங்களை நரகத்தின் கதவுகளாக சொல்லியிருக்கிறார். இந்த அர்த்தத்தையே அடுத்த ச்லோகத்திலும் அருளுகிறார்.

63. க்ரோதா4த் ப4வதி ஸம்மோஹ: ஸம்மோஹாத்
ஸம்ருதி விப்4ரம:
ஸ்ம்ருதி ப4ரம்ச5ாத் பு3த்3தி4 நாஸ: பு3த்3தி4 நாஸாத்
ப்ரணச5யதி

(அ-ம்) கோபத்திலிருந்து (சரீரத்தை நானென்றும் மனைவி புத்திர தன தான்யாதிகள் எனது என்றும் கருதுதற்கு காரணமாய) மோகத்தில் சிக்கிக்கொள்ளுதல் உண்டாகிறது. இந்த மோஹத்திலிருந்து தன்னுடைய நிஜ ஸ்வரூபத்தின் ஞாபகமறதி உண்டாகிறது. இந்த ஞாபக மறதியால் பகுத்தறிவு நாசமாகிறது, இந்த பகுத்தறிவு நாசத்தால் (பிறப்பு இறப்பாகிய) சம்சாரம் திரும்பித் திரும்பி உண்டாகிறது.

(வி-ம்) ப்ரணச என்பது பிறப்பிறப்பாகிய சம்சாரம். இந்த சம்சாரமே நரகம். ஸம்மோஹம் என்பது மோஹத்துடன்

பின்னிக்கொள்வது. ஸ்ம்ருதி என்பது 24வது தத்வமாகிய க்ஷேத்திரம் அல்லது க்ஷரபுருஷன்.

மோக்ஷ தர்மம் 327வது அத்தியாயத்தில் புருஷனுக்கு மகத் புத்தி, ஸத்தை, த்ருதி, ஸ்ம்ருதி, மேதை, வ்யவஸாயம் ஸமாதி பிராப்தி முதலிய நாமங்கள் சொல்லியிருக்கின்றது. கீதை 13-6ல் த்ருதியை 24வது தத்வமாக சொல்லியிருப்பதால் ஸ்ம்ருதியையும் புருஷோத்தமனுடைய வெளி சரீரமாகிய அதே 24வது தத்வமாகிய க்ஷரபுருஷனாக கொள்ளவேண்டும்.

அஸம்மோஹம் என்னும் பதம் கீதை 10-4ல் உபயோகிக்கப் பட்டிருக்கிறதை இங்கு குறிப்பிடத்தக்கது. மோஹம், ஸ்ம்ருதி என்னும் பதங்கள் கீதை 18-73ல் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

64. ராகத்வேஷ வியுக்தை: விஷயாந் இந்த்ரியை: சரந்
ஆத்மவஸ்யை: விதேயாத்மா ப்ரஸாதம் அதிகச்சதி

(அ-ம்) ஆனால் விருப்பு வெறுப்புகளினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டு தன்னுடைய இந்திரியங்களோடு விஷயங்களில் பொருந்தியிருந்தபோதிலும் அவைகளெல்லாம் தனக்கு அடங்கியுள்ளவனாய் (25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனைத் தொட்ட) 24வது தத்வமாகிய க்ஷரபுருஷனானவன் (26வது தத்வமாகிய புருஷோத்தமனுடைய) அருளை அடைகிறான்.

(வி-ம்) யோகவாசிஷ்டத்தில் வசிஷ்டர் ராமரிடம் மனதையும் இந்திரியங்களையும் தனக்கு கீழ் அடங்கவைத்து பிரபஞ்சத்தில் விளையாடலாம் என்று சொல்லியிருக்கிறார். இதற்கு திருஷ்டாந்தம் விஷப்பல்லைப் பிடுங்கின பாம்புடன் விளையாடுவதைப் போல.

ப்ரஸாதம் என்பது புருஷோத்தமனுடைய பரிசு (சாதகன்) பக்தனுடைய வலது மார்ப்பு பிரதேசத்தில் தோன்றும் பிரகாசம் அல்லது ஒளியே அந்த பரிசு.

65. ப்ரஸாதே ஸர்வது:கானாம் ஹானி: அஸ்ய உபஜாயதே
ப்ரஸந்நசேதஸ: ஹி ஆசு புத்தி: பர்யவதிஷ்டதே

(அ-ம்) (பகவானிடமிருந்து பரிசாக கிடைத்த இந்த ஜோதியாகிய) அருளினால் அவனுடைய எல்லாவித துன்பங்களும் இல்லாமல் போம் (அதாவது மோக்ஷத்தின் (விடுதலையின்) லக்ஷணமாகிய சர்வதுக்க நிவிருத்தி அடையப்படும்). ஏனென்றால் (அதுவரையிலும் கஷாயம் அல்லது மலத்தோடு கூடியிருந்த மனது மலம் நீங்கப்பெற்று) சீக்கிரத்தில் புத்தியானது சமத்துவத்தையடைந்து அசையாமல் ஆடாமல் திடசாந்தத்தைப்பெறும்.

(வி-ம்) ப்ரஸாதம் என்பது அருட்சோதி. சோகம் என்பது இருள். அருட்சோதி தோற்றத்தில் இருள் இருந்தவிடம் தெரியாமல் அழிந்துபோகும். பஞ்சதசியில் ஸ்ரீ வித்தியாரண்ணியர் 'சோகம் தாதி ஆத்மவித்' என்று சொல்லியிருப்பதை இங்கு குறிப்பிடத்தக்கது. துக்கமாகிய சோகத்தின் நிவர்த்தியை சர்வபாபங்களினின்றும் விடுபடுதலென்பதாக கீதை 3-13லும் 18-66லும் பகவான் அருளியிருக்கிறார்.

66. ந அஸ்தி[3] புத்தி[3] அயுக்தஸ்ய[4] ந ச அயுக்தஸ்ய[4] பாவநா
ந ச அபாவயத:[4] சாந்தி[5] அசாந்தஸ்ய[5] குத: ஸுகம்[2]

(அ-ம்) (சம்சார பிரவாகத்தில் அகப்பட்டு தத்தளித்துக் கொண்டிருக்கிற) சமத்துவமில்லாதவனுக்கு (அவ்யவஸாய ஆத்மாவுக்கு 24வது தத்வமாகிய சலித்துக்கொண்டிருக்கும் சித் சக்தி ஹம்ஸமாகிய) விவஸாய புத்தியை அடைதல் இல்லை. (இந்த) சமத்துவமில்லாதவனுக்கு (ஸோஹம் ஹம்ஸோ என்னும் அஜபா காயத்ரியின்) பாவனையாகிய ஜீவதர்சனம் இல்லை. (இந்த அஜபா காயத்ரியின்) பாவனை இல்லாதவனுக்கு (25வது தத்வமாகிய பரம ஹம்ஸத்வம், அக்ஷரபுருஷ அனுபவம், அல்லது ஆத்மரூபமாகிய) சாந்தி (சம, சமாதானபுத்தி, அவஸாயபுத்தி) இல்லை. (இந்த) சாந்தி இல்லாதவனுக்கு (ப்ரஹ்மரஸம் அவதூதத்வம் ஆகிய) சுகம் எவ்விதம் உண்டாகும்? (அதாவது மோக்ஷம் அல்லது விடுதலையின் லக்ஷணமாகிய பரமானந்த பிராப்தி கிட்டாது).

(வி-ம்) கீதை 6-3ல் சொல்லியிருக்கும் சமம் தான் இந்த 2-66ல் சொல்லியிருக்கப்பட்ட சாந்தி. கீதை 2-45ல் குணங்களை ஒன்றன்பின் ஒன்றாக விடுவதாகிய நிவிருத்தி மார்க்கம் சொல்லியிருக்கிறது. கீதை இந்த 2-66ல் கபில சாங்க்ய லயமார்க்கம் சொல்லியிருக்கிறது. மேலும் கீதை 8-12, 8-13ல் பதஞ்சலி யோக மார்க்கத்தைப்பற்றி பகவான் சொல்லுகிறார்.

கீதையிலுள்ள அனுபவ பூர்வகமான அநேக சுலோகங்களில் இந்த 2-66ம் ஒன்று. முதல் வரியில் சொல்லப்பட்ட புத்தியும் பாவனையும் ஒன்றே. விஷயம் அழுத்தமாய் பதியும் பொருட்டு இரண்டுவிதமாக பகவான் சொல்லியிருக்கிறார். ஸ்ரீ தியாகராஜர் 'சாந்தமுலேனி சௌக்கியமுலேது' என்று பாடியிருப்பதை இங்கு கவனிக்கத்தக்கது.

67. இந்த்ரி[3]யாணாம் ஹி சரதாம் யத் மந: அநுவிதீ[4]யதே
தத் அஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயு: நாவம் இவ அம்ப[4]ஸி

(அ-ம்) ஏனென்றால் (விஷயங்களில்) தாவிக்கொண்டிருக்கும் எந்த மனது இந்திரியங்களின் வசப்படுகிறதோ அது தண்ணீரிலுள்ள படகை காற்றானது அலைக்கழிப்பதைப்போல அவனுடைய (ஜீவதத்வமாகிய) பிரஜ்ஞையை (போதத்தை பலவந்தமாக இழுத்துச் சென்று) அலைக்கழிக்கிறது.

(வி-ம்) இதே அர்த்தமுள்ள விஷயத்தை கீதை 15-7ல் மனதோடுகூடிய இந்திரியங்கள் ஜீவனை விஷயங்களில் இழுக்கின்றன என்று பகவான் சொல்லியிருக்கிறார்.

68. தஸ்மாத் யஸ்ய மஹாபா[3]ஹோ நிக்ருஹீ[3]தாநி ஸர்வச:[5]
இந்த்ரி[3]யாணி இந்த்ரி[3]யார்த்தே[2]ப்[4]ய: தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டி[2]தா

(அ-ம்) ஹே மகாபாஹோ! (அர்ச்சுனா) ஆகையால் இந்திரிய விஷயங்களினின்றும் எவனுடைய இந்திரியங்கள் பூராவும் இழுக்கப்பட்டிருக்கின்றனவோ அப்பேர்ப்பட்டவனுடைய மனது சமத்துவத்தில் நிலைபெற்றிருக்கிறது.

(வி-ம்) ஸ்ரீ வித்தியாரண்ணியரும் கௌடபாதாச்சாரியரும் சித்த நிரோதமே யோகமென்று சொல்லியிருப்பதை இங்கு கவனிக்கத்தக்கது. இந்த சித்த நிரோதமே தான் யோகம், அதுவே ஞானம், தியானம் என்று அமிர்தபிந்து உபநிஷத்து 5வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறது.

69. யா நிசா[5] ஸர்வபூதாநாம்[4] தஸ்யாம் ஜாகர்த்தி[3] ஸம்யமீ
யஸ்யாம் ஜாக்ரதி[3] பூதாநி[4] ஸாநிசா[5] பச்யத:[5] முநே:

(அ-ம்) எது (அறியாமையோடு கூடிய) சகல ஜீவர்களுக்கும் இராத்திரியோ அதில் தன்னை அறிந்த யதியானவன் விழித்துக் கொண்டிருக்கிறான். எதில் (அஞ்ஞானத்தோடு கூடிய) சகல ஜீவர்களும் விழித்துக்கொண்டிருக்கிறார்களோ அதை தன்னை அறிந்த முனியானவன் இராத்திரியாகப் பார்க்கிறான்.

(வி-ம்) இந்த சுலோகத்தில் பஸ்யத என்னும் பதமும் கீதை 2-60ல் விபஸ்சித என்னும் பதமும் உபயோகித்திருக்கிறது. இவைகளுக்கு வித்யாசம் என்னவென்றால், பஸ்யத - திட அனுபவத்தைக் குறித்தும் விபஸ்சித - திடமில்லாத அனுபவத்தையும் அதாவது தொட்டுத்தொட்டு நழுவி நழுவி நின்ற நிலையைக் குறித்தும் உபயோகித்திருக்கிறதென்று உணரவும். முன்னமேயே சொல்லியபடி ஒரு பதத்துக்கு முன் 'வி' சேர்த்தால் முடிவான நிலைக்கு ஒருபடி கீழானதை உணர்த்தும்.

தன்னை அறிந்தவனுக்கு எதிலும் பற்று (அபிமானம்) இல்லாததால் உலக வியவகாரங்களில் பராமுகமாயிருக்கிறான். ஆனால் வாசுதேவ (புருஷோத்தம) ஜோதியில் ஜாக்கிரதையாய் விழித்துக் கொண்டிருக்கிறான். இதற்கு மாறாக அறியாமையோடு கூடிய பாமரஜனங்கள் பிரபஞ்ச வியவகாரங்களில் கண்ணும் கருத்துடன் ஜாக்கிரதையாய் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். வாசுதேவ ஜோதி ஒன்று உண்டு என்பதே அவர்களுக்கு தெரியாது. ஆதலால் அதனிடத்து அவர்கள் பராமுகமாயிருக்கிறார்கள். அதாவது தன்னை அறிந்தவனும் அறியாதவனும் ஒரே வஸ்துவையே வெவ்வேறு கண்களைக்கொண்டு பார்க்கிறார்கள். ஆகையினால் தான் அறியாமையோடு கூடிய புத்தக பண்டி

தர்கள் பகவான் அர்ச்சுனனுக்கு எந்த அர்த்தத்தை உத்தே சித்து சொல்லியிருக்கிறாரோ அதற்கு நேர் விரோதமான அர்த் தத்தை சொல்லுகிறார்கள்.

தன்னை அறிந்தவன் தன்னை அறியாதவனுடைய கண்கள் எப்படி வெவ்வேறு விதமாய் இருக்கின்றன வென்பதைப்பற்றி கீழே விவரிக்கப்பட்டிருக்கிறது. தன்னை அறிந்தவன் ஞானக் கண்ணை (திவ்யசக்ஷுவை, சாஸ்திரக்கண்ணை, தக்ஷிணாமூர்த் தியை)க் கொண்டு பார்க்கிறான். தக்ஷிணாவென்றால் கண் என்று அர்த்தம். மூர்த்தி என்றால் சொரூபம் என்று அர்த்தம். தக்ஷிணா மூர்த்தி என்றால் கண்ணே சொரூபமாயுள்ளவன். ஸ்ரீ சங்கராச் சாரியார் அர்த்தம் கொடுத்திருக்கிறபடி தெற்கு முகமாய் நோக்கி இருக்கும் மூர்த்தியல்ல. ஏனென்றால் அந்த பரம் பொருளுக்கு எல்லா திக்குகளை நோக்கியும் முகங்களும் கண்களும் இருக்கின் றனவென்று கீதை 13-13லும் விஷ்ணு சகச்ரநாமம் இறுதி (கடைசி) சுலோகத்திலும் சொல்லியிருக்கிறது. இந்த தக்ஷிணா மூர்த்தியாகிய தன்னை அறிந்தவனுடைய ஞானக்கண்ணானது பரந்த வெளியில் தனித்திருக்கும் அசையாத நக்ஷத்திரம் போன்றது. அந்த ஞானக்கண்ணினுடைய நடுப்பாகமாகிய விழி வெண்மையாயும் சுற்றிலுமுள்ள பரந்த வெளிப்பாகம் நீலமேக சியாமள வர்ணமாயுமிருக்கும். இதற்கு மாறாக தன்னை அறி யாதவனுடைய ஊனக்கண்ணினுடைய நடுப்பாகமானது கருப்பா யும் சுற்றிலுமுள்ள வெளிப்பாகம் வெண்மையாயுமிருக்கும். இந்தக் காரணத்தினால் தான் இருதிறத்தாரும் ஒரே வஸ்துவை நேர் மாறான இரண்டு விதமாய் பார்க்கிறார்கள். 26வது தத்வ மாகிய புருஷோத்தமனை தரிசித்தவர்களுக்குத்தான் அனுபவத் தில் இதின் உண்மை தெரியும்.

இந்த சுலோகத்தில் ஸம்யமீ என்னும் பதத்தின் விரிவுரை :- வாசுதேவ ஜோதியில் அமிழ்ந்து அந்த ஜோதியை முன்னிட்டுக் கொண்டு அதின் பின்னால் தன்னை யறிந்தவன் செல்வான் என்ப தாம். பாராங்கல்லைப்போல அசைக்கமுடியாத கெட்டி அஸ்தி வாரமாகிய வாசுதேவ ஜோதியில் சிருஷ்டி பிரபஞ்சங்கள் எல் லாம் மிதந்து கொண்டிருப்பதாக தன்னை அறிந்தவன் காண் கிறான். தன்னையறிந்தவனை அடையாளங்கள் கண்டுபிடிக்க

கொம்பு, வால் முதலியவைபோன்ற சிறப்பு வெளிலக்ஷணங்கள் ஒன்றும் இல்லை. வெளிப்பார்வைக்கு அவனும் மற்றவர்களைப் போலத்தான் இருப்பான். வித்தியாசமெல்லாம் உள்ளுக்குள்ளே தான் இருக்கிறது. தன்னை அறிந்தவன் உயிர்வாழ்வதற்காக (உடம்பிலுள்ள பிராணன் சோர்வடையாமல் இருப்பதற்காக) சாப்பிடுகிறான். அறியாமையோடு கூடிய பாமரன் சாப்பிடுவதற்காகவே (வேறு எந்த உயர்ந்த நோக்கமு மின்றி) உயிர்வாழ்கிறான்.

தன்னை அறிந்தவன் கீழ்கண்ட இரண்டுவித அனுபவத்தில் ஏதாவது ஒரு அனுபவத்தின் ஞாபகத்துடன் நித்திரையினின்று விழித்தெழும்பொழுது, சமஷ்டி உலகத்தின் க்ஷேமத்திற்காக பகவான் நாமத்தை உச்சாரணம் செய்கிறான். (1) ஆலிங்கனம் செய்வது போன்ற வாசுதேவ ஜோதியில் கலந்திருக்கும் அனுபவம் (2) முத்தம் கொடுப்பதுபோன்ற வாசுதேவ ஜோதியைத் தொட்ட அனுபவம். இதற்கு நேர் மாறாக அறியாமையோடு கூடிய பாமரன் நித்திரையினின்று விழித்தெழும் பொழுது ஸ்தூல பிண்டமாகிய ஸ்திரீயை ஆலிங்கனம் செய்வது அல்லது முத்தம் கொடுப்பது முதலிய அனுபவத்தின் ஞாபகத்தோடு தன்னுடைய வியஷ்டி பிரபஞ்சமாகிய சொந்த வியவகாரங்களாகிய லேவாதேவி, நன்மை தீமைகளைப்பற்றி மனக்கோட்டை கட்டுகிறான்.

இருதிறத்தாரும் நித்திரைக்குச் செல்லும்பொழுது உள்ள மனோநிலை கீழே விவரிக்கப்பட்டிருக்கிறது. தன்னையறிந்தவனுக்கு தூக்கம் முதலில் அவனது வலது மார்பு பிரதேசத்திலுள்ள இருதயம் அல்லது ஞானக்கண்ணை மூடி பின்னால் ஊனக் கண்ணை மூடுகிறது. அவன் படுக்கைத் தலையணையில் தலையை வைத்த முதற்கொண்டு பின் அவன் ஆனந்த சமுத்திரத்தில் நழுவுகிற வரைக்கும் பகவான் நாமத்தை உச்சரிக்கிறான். தானாகிய, கோபியாகிய ஆடும், ஆட்டிடையனாகிய கிருஷ்ணனும் ஆனந்த ஆலிங்கனத்தில் கலந்திருக்கும் இருதயமாகிய பள்ளியறையில் தூக்கமாகிய தமஸ் (இருட்டு) திரை தொங்கவிடப்படுகிறது. நல்ல பிரகாசத்தோடு கூடிய சந்திரனை சஞ்சரிக்கும் மேகங்கள் மறைத்து பிரகாசத்தை மங்கச் செய்து இருளை உண்டாக்குவதுபோல நித்திரையும் வலது மார்பு பிரதேசத்தில்

அடைந்துள்ள சித் ஆனந்த ஸ்திதியை (நிலையை) மறைத்து பின்னால் ஊனக் கண்கள் பாரத்தைத் தூக்கி வைத்ததைப் போன்ற உணர்ச்சியடைந்து மூடிக் கொள்ளுகின்றன. தன்னையறியாத பாமரனுக்கு தூக்கம் முதலிலேயே அவனுடைய ஊனக்கண்களையே மூடும்படி செய்கிறது. காரணம் என்னவென்றால் அவனுக்கு ஞானக்கண் ஒன்று இருக்கிறது என்பதையே அறியான். அவன் படுக்கைத் தலையணையில் தலைவைத்த முதற்கொண்டு பின் அவனுடைய ஊனக்கண் ஆழ்ந்த நித்திரையில் மூடுகிறவரைக்கும் தன்னுடைய சொந்த விவகாரங்களைப்பற்றி மனோராஜ்யம் செய்து கொண்டிருப்பான். அவன் பகவானை தரிசிக்காத காரணத்தால் அவனுக்கு பகவானுடைய நினைப்பே இருக்காது.

காலையில் நித்திரையினின்றும் எழுந்து ராத்திரியில் நித்திரை செய்வதற்கு போகும் முன் மத்திய காலத்தில் தன்னை அறிந்தவன் சமாதானமனம் அல்லது சாங்க்ய புத்தியில் இருந்து கொண்டு தன்னுடைய ஜீவன மார்க்கத்துக்கு ஏற்பட்டுள்ள தொழில்களில் ஈடுபடுகிறான். அவனுக்கு அடிக்கடி பகவான் ஞாபகம் உண்டாகி தான் செய்யும் தொழில்களை எல்லாம் மானஸீகமாக பகவானுக்கே அர்ப்பணம் செய்கிறான். தன்னை அறியாத பாமரனோ தன்னையும் பகவானையும் தரிசிக்காத காரணத்தால் தேகமே தான் என்றும் மனைவி புத்திர தனதான்யாதிகள் தன்னுடையதென்றும் மயக்கத்தில் விழுந்து அபிமானத்துடன் தொழில்களைச் செய்கிறான். இவன் ஈச்வரார்ப்பணமாய் தொழில்களைச் செய்யக்கூடும் என்று அனுபவமில்லாத புத்தகப் பண்டிதர்கள் சொல்லும் பாஷாண்ட மதத்தை நம்பி ஏமாந்து போகக் கூடாது.

70. அபூர்யமாணம் அசலப்ரதிஷ்ட[2]ம் ஸமுத[3]்ரம் ஆப:
ப்ரவிச[5]ந்தி யத[3]்வத்
தத[3]்வத் காமா: யம் ப்ரவிச[5]ந்தி ஸர்வே ஸ: சா[5]ந்திம்
ஆப்னோதி ந காமகாமீ

(அ-ம்) (பிரவாகத்தோடு வரும்)நதிகளின் ஜலமானது எல்லா பக்கங்களிலிருந்தும் பூரணமாய் பிரவேசித்தும் (நுழைந்தும்)

சமுத்திரமானது எந்தவிதமாக (சரைபுரண்டு வழிந்தோடாமல் முன்னிருந்தபடியே) ஒரே நிலையிலிருக்கிறதோ அந்த விதமே இச்சைகளெல்லாம் நுழைந்து (தாக்குகிறபொழுதும் ஒரே நிலையில் இருக்கிற) அவன் (மனசமாதானமாகிய) மனோ சாந்தியை அடைகிறான். காமத்தில் இச்சையுடையவர்கள் (காம பிண்டங்கள்) அப்படியல்ல. (அந்த விதமே ஒரே நிலையில் இருக்கமாட்டார்கள்).

71. விஹாய காமாந் ய: ஸர்வாந் புமாந் சரதி நிஸ்ப்ருஹ:

நிர்மம: நிர்அஹங்கார: ஸ:[5] சாந்திம் அ[4]தி[3]க[2]ச்சதி

(அ-ம்) எல்லா ஆசைகளையும் உதறித் தள்ளிவிட்டு ஆசையற்று என்னுடையது யான் என்னும் அபிமானமற்று எந்த புருஷன் சஞ்சரிக்கிறானோ அவன் (மன சமாதானமாகிய) சாந்தியை அடைகிறான்.

(வி-ம்) 'ஸர்வான் காமாந்' என்பதில் 'ஸங்கல்ப ப்ரபவாந் காமாந்' என்னும் சகாம காமமும் கீதை 7-11ல் 'தர்ம ஆவிருத்தே பூதேஷு காம' என்று சொல்லியிருக்கும் நிஷ்காம காமமும் அடங்கியிருக்கின்றன. கீதை 7-4ல் சொல்லியிருக்கிறபடி 24வது தத்வமே அஹங்காரமாகும். 23வது தத்வமாகிய புத்தி முதல் 1வது தத்வமாகிய ப்ருதிவி ஈறாக 24வது தத்வத்தின் (பல) காரியங்கள் ஆனபடியாலும் இவைகளை நான் என்னும் 24வது தத்வமாகிய அஹங்காரம் தரித்துக்கொண்டிருப்பதாலும் இந்த 23 முதல் 1 ஈறாக தத்வங்கள் 'மம (என்னுடையது)' என்பவையாகும். 24வது தத்வமாகிய அஹங்காரத்திற்கு ஆசை என்னும் மற்றொரு பெயரும் உளது. இதற்குச் சான்று கீதை 3-30ல் நிர் ஆஸீ: நிர் மம: என்று பகவான் சொல்லியிருப்பதே.

72. ஏஷா ப்ரா[3]ஹ்மீஸ்தி[2]தி: பார்த்த ந ஏநாம் ப்ராப்ய விமுஹ்யதி

ஸ்[2]த்தித்வா அஸ்யாம் அந்த்யகாலே அபி ப்ர[3]ஹ்ம நிர்வாணம் ரு[2]ச்சதி

(அ-ம்) பார்த்த! (அர்ச்சுனா) (மேலே சொல்லியிருக்கிற) இது (ஒப்பு உயர்வு அற்ற மிகவும் பெரிய) ப்ராஹ்மீஸ்திதி அல்

லது வாசுதேவ நிலையாகும் இந்த வாசுதேவ நிலையை அடைந்த வன் (நான் என்னும் 24வது தத்வமும் எனதென்னும் 23 முதல் 1 ஈருக உள்ள தத்வமாகிய) மோகத்தை அடைகிறதில்லை (அதாவது மோகத்தினின்றும் விடுபடுகிருன்). அந்திய காலத்தில் (உடல் சவமாய் (பிணமாய்) கீழே விழும்பொழுது)கூட அந்த வாசுதேவஸ்திதியில் நிலைபெற்றவனுய் சாயுஜ்யமாகிய பர நிர்வாணத்தை அடைகிருன்.

(வி-ம்) மஹாபாரதம் ஆஸ்வமேத பர்வம் 48வது அத்தியாயத்தில் அந்த்யகாலம் என்பதற்கு மரண காலத்தில் ஒரு மூச்சு அளவு காலமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த சுலோகத்தில் 2வது வரிக்கு மரண காலத்தில் ஒரு அற்ப நேரம் அந்த வாசுதேவஸ்திதியில் இருந்தாலும்கூட பரநிர்வாணத்தை அடைகிருன் என்னும் அர்த்தமும் பொருந்தும்.

மோகம் நீங்காத காமபிண்டங்களாகிய படித்த புத்தக பண்டிதர்களும் படிக்காத பாமரர்களும் எப்படி நிஷ்காம கர்மம் செய்ய முடியும்? மோகம் இருள் சம்சாரம் இல்லாத புருஷோத்தம ஸ்திதியை அடைந்த சாதுக்களான சனகன் துலாதரன் முதலியவர்கள் தான் நிஷ்காம கர்மம் செய்ய முடியும். புத்தக பண்டிதர்கள் சொல்வதைப்போல நிஷ்காம கர்மம் அவ்வளவு லேசானதல்லவென்று அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ஹரி: ஓம். தத். சத்.

ஓம் ஸ்ரீ வாசுதேவாய நம:

ஸ்ரீமத் பகவத் கீதை—3வது அத்தியாயம்

1. ஜ்யாயஸீ சேத் கர்மண: தே மதா புத்தி: ஜநார்தந
தத் கிம் கர்மணி கோரே மாம் நியோஜயஸி கேசவ

(அ-ம்) (அர்ச்சுனன் சொல்லுகிருன்)

ஹே ஜநார்த்தந! கேஸவ! (கிருஷ்ண பகவானே) புத்தியானது தொழிலைவிட உயர்ந்தது என்று உம்மால் கருதப்பட்டால் பிறகு ஏன் என்னை பயங்கரமான தொழிலில் ஈடுபடும்படி செய்கின்றீர்?

(வி-ம்) இந்த காலத்து புத்தகப் பண்டிதர்களைப் போலவே அர்ச்சுனனுக்கும் அநேகமாய் கடைசி வரைக்கும் பகவான் சொல்லுவது புரியவில்லை. ஒவ்வொரு தடவைகளிலும் புத்திசாலித்தனமுள்ளதும் யுக்திக்குப் பொருந்தினதும்போல் இருக்கும் கேள்விகளைக் கேட்கிருன். முன் இரண்டாது அத்தியாயத்தில் எவ்விடத்திலேயும் தொழிலைவிட புத்தி உயர்ந்ததென்று பகவான் சொல்லவில்லை. பகவான் சொல்லியிருக்கிறது என்னதான் என்ருல் கீதை 2-49ல் புத்தியோகம் கர்மத்தைவிட உயர்ந்தது என்றும் கீதை 2-37, 38ல் மன ஸமாதானத்தை அடைந்து யுத்தம் செய்யென்றும் கீதை 2-48ல் மன ஸமாதானத்தை அடைந்து தொழிலில் ஈடுபடு என்றும் சொல்லியிருக்கிருர். ஆகையால் பகவான் வற்புறுத்திச் சொல்லியிருப்பது முதலில் மன ஸமாதானத்தை யடைந்து பின்னல் தொழிலில் ஈடுபடு, சோம்பேறி மாதிரி சும்மா இராதே என்பதாம். பகவான் உபதேசத்தை புரிந்து கொள்ளாமல் அர்ச்சுனன் இந்த கேள்வியை கேழ்க்கிருன்.

2. வ்யாமிச்ரேண இவ வாக்யேந புத்திம் மோஹயஸி இவ மே
தத் ஏகம் வத நிச்சித்ய யேந ச்ரேய: அஹம் ஆப்நுயாம்

(அ-ம்) பரஸ்பரம் விரோதம் போல் தோன்றும் வாக்கியங்களால் என்னுடைய புத்தியை கலவரப்படுத்துகின்றீர். எதனல்

நான் மிகவும் மேலானதை அடைவேனே அந்த ஒன்றை நிச்சயித்து சொல்லும்.

(வி-ம்) ச்ரேயசு - நிர்குண ச்ரேயசு, சகுண ச்ரேயசு என்று இரண்டு விதம். நிர்குண ச்ரேயசு என்பது எல்லாவற்றிற்கும் மேலான நிலே. அது ஒப்பு உயர்வு இல்லாத நிலே. சகுண ச்ரேயசு என்பது குண சம்பந்தமான துவந்த்வங்களில் உயர்ந்த நிலே. அர்ச்சுனன் மனதில் உண்மையாய் நிர்குண ச்ரேயசை அடைய எண்ணங் கொண்டிருந்தும் வாயினுல் சொல்லும் பொழுது சகுண ச்ரேயசைப்பற்றி குறிப்பிடுகிருன். எப்படி யென்ருல் ச்ரேயசு என்ருல் சகுண ச்ரேயசையே குறிக்கும். நிர்குண ச்ரேயசுக்கு பகவான் கீதை 5-2ல் நிச்ரேயச் என்னும் பதத்தை உபயோகித்திருக்கிருர். அர்ச்சுனன் இன்னும் அநேக சந்தர்ப்பங்களில் இதே மாதிரியாக தனக்கு எது மிகவும் மேலானதென்றும் அந்த ஒன்றையே சொல்லும்படி பகவானே கேட்கிருன். பகவான் அந்த முடிவான மேலான பதத்தை (ஒரே வஸ்துவை ஏகதத் வஸ்துவை) இரண்டுவிதமாக உபதேசிக்கிருர். முடிவான பதம் என்னவோ அது ஏக ரஸம் (ஒரேவஸ்து) தான். ஆனல் பகவான் அந்த முடிவான பதத்தின் அனுபவத்தில் காணும் இரண்டு தன்மைகளேயும் பாரபக்ஷமின்றி (பக்ஷபாதமின்றி) வற்புறுத்திச் சொல்லுவதால் அவருடைய பதில் மனதுக்குக் குழப்பத்தை உண்டு பண்ணுவதுபோல் தோன்றுகிறது. 24வது தத்வமாகிய க்ஷரபுருஷ அனுபவம் அடைந்தவனுக்குத்தான் இந்தக் குழப்பம் உண்டாகாது. மற்றவர்கள் எல்லோருக்கும் அர்ச்சுனனேப் போலவே இந்த குழப்பம் இருந்து கொண்டேயிருக்கும்.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான சங்கதி சொல்லவேண்டியிருக்கிறது. அதாவது கீதை முழுவதிலும் உபயோகப்பட்டிருக்கும் சில முக்கியமான, விசேஷமான பதங்களுக்கு பகவான் ஆங்காங்கே லக்ஷணத்துடன் அர்த்தம் சொல்லியிருக்கிருர். இவைகள் இருக்கும் இடம் தெரியாமல் புத்தகப் பண்டிதர்கள் ஞானத்துக்கு ஞானமென்றும் கர்மத்துக்கு கர்மமென்றும் சாங்கியத்திற்கு சாங்கியமென்றும் நிஷ்டைக்கு நிஷ்டையென்றும் யோகத்திற்கு யோகமென்றும் இவ்விதமாக அந்த பதங்களேயே திரும்ப அர்த்தமாக எழுதியிருக்கிருர்கள். இந்த முக்கிய பதங்

களுக்கு பகவான் கொடுத்திருக்கும் லக்ஷணத்தோடு கூடிய அர்த்தங்கள் ஆங்காங்கு காண்பிக்கப்படும். இந்த அர்த்தங்களை வைத்துக்கொண்டு தான் கீதையிலுள்ள ஸ்லோகங்களுக்கு உரை சொல்லவேண்டும். அவரவர் மனதில் உதித்த பிறகாரம் உரை சொல்லக் கூடாது.

3. லோகே அஸ்மிந் த்விவிதா நிஷ்ட்டா புரா ப்ரோக்தா மயா அநக
ஜ்ஞான யோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம்

ஸ்ரீ கிருஷ்ண பகவான் பதில் சொல்லுகிறார்.

(அ-ம்) இந்த உலகில் (சிருஷ்டி) ஆரம்ப காலத்திலிருந்து (புருஷோத்தமனாகிய என்னை அடைவதாகிய தன்மயமாகிய ஒரே) நிர்மல நிஷ்டை இரண்டுவிதமாக என்னால் சொல்லப்பட்டு வருகிறது. கபில சாங்கிய மதத்தை சேர்ந்தவர்களுக்கு அந்த ஒரே நிஷ்டை சாங்கிய மென்றும், புத்திஸமத்வமென்றும், பதஞ்சலி யோகத்தைச சேர்ந்தவர்களுக்கு சக்தி ஸமத்வம் (பௌர்ஷ சமத்வம்) என்றும் சொல்லப்பட்டு வருகிறது.

(வி-ம்) வாசுதேவனுடைய பிராணன் - சித் சக்தி அதாவது பௌருஷம், சித்தின் அம்சமும் சக்தியின் அம்சமும் கலந்துள்ளது என்று கௌசிதாகி உபநிஷத்து 3-3ல் சொல்லியிருக்கிறது. பிரஸ்னோபநிஷத் 1-4ல் இதையே ப்ராண - ரதி மிதுனமென்று சொல்லியிருக்கிறது. ஈஸாவாஸ்ய உபநிஷத்து 11வது ஸ்லோகத்தில் இந்த வித்யா - அவித்யா (அக்ஷர - க்ஷர, ப்ராண - ரதி) ஜோடியைப் பிரிக்காமல் ஒன்றாகவே உபாசிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது.

சிருஷ்டி ஆரம்பம் செய்யும் தருணத்தில் ஒரே இடத்தில் துடித்துக்கொண்டு இருக்கும் சித் சக்திக்கு கர்ம என்று பெயர். இந்த சித் சக்தி ஒடுங்கியிருக்கும் நிலையில் அகர்மம், சம, நைஷ்கர்ம்யம் என்னும் பெயர்களால் அழைக்கப்படும். சம்சாரத்தில் உழன்று கொண்டிருக்கும் சகல ஜீவர்களும் முதலில் கர்மாவைத் தொடவேண்டும். 'கர்மா'வைத் தொடாமல் நேராய் அகர்மாவைத் தொடமுடியாது. இதையே பகவான் கீதை 3-4, 6-3ல்

சொல்லுகிறார். ஆனால் 24வது தத்வமாகிய இந்த வித்யா-அவித்யா, ப்ராண-ரதி, அக்ஷா-க்ஷர இரட்டையாகிய கர்மாவை அனுபவத்தால் தொடாத புத்தகப் பண்டிதர்கள் கீதை 3-4, 6-3ல் வரும் கர்மா என்னும் பதத்திற்கு பகவான் கீதை 8-3ல் லக்ஷணத்தோடு கொடுத்திருக்கும் அர்த்தம் தெரியாமல் நிஷ்காம கர்மம் தான் அர்த்தம் என்று உளறிக்கொண்டிருக்கிறார்கள்.

அநக என்னும் பதத்துக்கு பாபமற்றவனே யென்று புத்தக பண்டிதர்கள் அர்த்தம் கொடுத்திருக்கிறார்கள். இது சுத்த தப்பு. ஏனென்றால் இந்த சந்தர்ப்பத்தில் பாபம் இன்னும் அர்ச்சுனனை விட்டு விலகவில்லை. கீதை 18-73ல் தான் "நஷ்டோ மோஹ:" என்று அருச்சுனன் தெரிவித்துக் கொள்ளுகிறான். அநக என்பதற்கு நிர்மலமான (பாபமில்லாத) என்பதே சரியான அர்த்தமாகும். இந்தப் பதம் நிஷ்டை யென்னும் பதத்தைத் தழுவி 'ராமநாம' என்னும் பதங்களின் சேர்க்கையைப்போல் நிர்மலமான நிஷ்டை யென்னும் அர்த்தத்தைக் கொடுக்கும்.

4. ந கர்மணாம் அநாரம்பாத் நைஷ்கர்ம்யம் புருஷ: அஸ்நுதே
ந ச ஸம்ந்யஸநாத் ஏவ ஸித்திம் ஸம் அதிகச்சதி

(அ-ம்) (சிருஷ்டி ஆரம்பம் செய்யும் தருணத்தில் ஒரே இடத்தில் துடித்துக்கொண்டு இருக்கும் சித் சக்தியாகிய) கர்மாவைத் தொடாமல் (அசைவில்லாமல் ஒடுங்கியிருக்கும் சித் சக்தியாகிய) நைஷ்கர்மத்தை சாதகன் தொடமுடியாது. இந்த நைஷ்கர்ம்யமாகிய 25வது தத்துவ அக்ஷரபுருஷனைத் தரிசித்தலாகிய ஸம்ந்யாஸத்தினால் மாத்திரம் (26வது தத்வமாகிய புருஷோத்தமனைத் தொடுதலாகிய) ஸித்தியை அடைந்தவன் ஆகமாட்டான்.

(வி-ம்) இங்கே முக்கியமாய் கவனிக்கவேண்டியது 1வது க்ஷரபுருஷ தரிசனம், 2வது அக்ஷரபுருஷ தரிசனம், 3வது புருஷோத்தம தரிசனம். கீதை 10-10ல் புத்தியோகம் அதாவது 25வது அக்ஷர புருஷ தரிசனத்துக்குப் பிறகு தான் புருஷோத்தமனைத் தரிசிக்க முடியுமென்று பகவான் சொல்லியிருக்கிறார். கீதை 8-3ல் கர்ம என்னும் பதத்துக்கு பூதங்களின் சிருஷ்டி

ஆரம்பம் செய்யும் தருணத்தில் உள்ள சித் சக்தி என்று பகவான் லக்ஷணத்தோடு அர்த்தம் சொல்லியிருக்கிறூர். இதுவே ஈஸ்வர ரேதஸ். ஒரே இடத்தில் இருந்துகொண்டு அசையும் இந்த ரேதஸை அதே யிடத்தில் அசைவற்று நிலைத்திருக்கும் ஊர்த்துவ ரேதஸில் அர்ப்பணம் செய்வது தான் நைஷ்கர்ம்யம், அகர்மா, சம, என்று சொல்லப்படும்.

அதாவது 24வது தத்வம். கர்ம, காம கர்ம, ஆசை, கிலகர்ம, குணகர்ம. 25வது தத்வம் - அகர்ம, நிஷ்காமகர்ம (சம), நிராசை, அகில கர்ம, நிர்குண சர்ம. 24வது தத்வமாகிய கர்மத்தை (கீதை 2-52ல் சொன்ன ச்ரோத) இன்னதென்று அனுபவத்தில் தெரிந்து கொண்ட பிறகுதான் நிஷ்காம அனுபவம் (கீதை 2-52ல் சொன்ன ச்ருத உண்டாகும்.

கீதை 6-2ல் சம்ந்யாஸம் என்னும் பதத்திற்கு சங்கல்பத்தை விடுதல் என்று பகவான் லக்ஷணம் சொல்லியிருக்கிறூர். கர்மாவாகிய சித் சக்தியே நுணுக்கமான சங்கல்பத்தை சிருஷ்டிக்கிறது. இந்த சங்கல்பமே அநந்த கோடி எண்ணங்களாக பரிணமிக்கின்றன (மாறுகின்றன). யாவன் ஒருவன் இந்த நுட்பமான சங்கல்பத்தை அதினுடைய உற்பத்தி ஸ்தானமாகிய அக்ஷரபுருஷனிடம் அர்ப்பணம் செய்கிறுனே அவன் தான் சம்ந்யாசி. இப்படிக்கல்லாமல் வெளி வேஷமாகிய சூத்திரமாகிய பூநூலை எறிந்து விட்டு காவி வேஷ்டியைக் கட்டிக்கொள்ளுகிறவன் சம்ந்யாசி அல்ல. கீதையில் எந்த விடத்திலும் காவி வஸ்திர சம்ந்யாஸத்தைப்பற்றி சொல்லவேயில்லை. உண்மையான சூத்திரம் அதாவது பூநூல் என்பது முன் சொன்ன 24வது தத்வமாகிய கர்மா அல்லது துடிக்கும் சித் சக்தி. இதை 25வது தத்வமாகிய சம அல்லது அகர்மாவினிடம் அதாவது துடிக்காத சித் சக்தியிடம் அர்ப்பணம் செய்யும்பொழுது அதற்கு ப்ரம்ம சூத்ரம் என்று பெயர். இந்த ப்ரம்ம சூத்திரத்தை தரித்தவன் அதாவது அக்ஷரபுருஷனை தரிசித்தவனே கீதை 2-46ல் ப்ராஹ்மணஸ்ய விஜாநத: என்று சொல்லியிருக்கப்பட்ட உண்மையான ப்ராஹ்மணன். பிராமண சாதியில் பிறந்து பருத்திப் பூநூல் போட்டுக் கொண்டிருப்பவர்கள் உண்மையான ப்ராஹ்மணர்கள் அல்ல. சூத்திராத்மாவாகிய அக்ஷரபுருஷனை தரிசித்தவர்கள் தான் வேதம்,

வேதாந்தம், ப்ரஹ்ம சூத்ரம், கீதை முதலிய சாஸ்திரங்களை தொடுவதற்கு அதிகாரிகள். ப்ராஹ்மண சாதியில் பிறந்த மாத்திரத்தால் இந்த சாஸ்திரங்களை தொடுவதற்கு அதிகாரமில்லை.

மேலே சொன்ன பிறகாரம் ப்ரஹ்ம சூத்திரத்தைத் தரித்தவன்தான் பருத்தி பூநூலை கழற்றி எறிந்து சம்ந்யாசி என்று சொல்லிக் கொள்ளலாம். சங்கல்பத்தை விடாத ஏனையோர் பருத்திப் பூநூலை கழற்றி எறிந்துவிட்டு காவிவேஷ்டியைக் கட்டிக் கொண்டு கமண்டலத்தை கையில் ஏந்திக்கொண்டு நான் சம்ந்யாசி என்று சொல்லிக்கொண்டு திரிவார்களானல் அவர்கள் நரகத்துக்குத் தான் போவார்கள்.

எண்ணங்கள் எங்கிருந்து உதிக்கின்றன வென்பதையும் இந்த எண்ணங்களை எந்தவிடத்தில் அர்ப்பணம் செய்யவேண்டுமென்பதையும் அனுபவத்தில் அறிந்திருப்பதே கீதை 6-2ல் சொல்லப்பட்ட சங்கல்ப சம்ந்யாசம் என்பதற்கு பொருள். ஏனென்ருல் பகவான் கீதை 3-5ல் எவனும் ஒரு க்ஷணமாவது எண்ணங்கள் இல்லாமல் இருக்கமுடியாதென்றும் கீதை 5-11ல் யோகிகள் சரீரத்தாலும் மனதாலும் புத்தியாலும் இந்திரியங்களாலும் தொழிலைச் செய்கிருர்களென்றும் சொல்லியிருக்கிருர்.

கீதை 18-49ல் ஆசை அபிமானத்தை விட்டு அகங்காரத்தை வென்றவன் சம்ந்யாசம் மூலமாக 'பரமாம் நைஷ்கர்ம்யஸித்தி'யை அடைகிருன் என்று பகவான் சொல்லியிருக்க இந்த 3-4ல் சம்ந்யாசத்தால் மாத்திரம் 'ஸித்திம்ஸம்'ஐ அடைகிறதில்லை என்று சொல்லியிருக்கிறது பரஸ்பர விரோதம் போலத் தோன்றும். புத்தகப் பண்டிதர்கள் இதற்கு என்ன சமாதானம் சொல்லுகிருர்கள் என்ருல் 3-4ல் சொல்லியிருப்பது விவிதிச (அறியாமையோடு கூடிய) சம்ந்யாசமென்றும், 18-49ல் சொல்லியிருப்பது வித்வத் (அனுபவத்தோடு கூடிய) சம்ந்யாசமென்றும் சொல்லுகிருர்கள். பகவான் கீதை 6-2ல் சங்கல்பத்தை விடுவதே சம்ந்யாசம் என்று தெளிவாய் அர்த்தம் கொடுத்திருப்பதால் அவர்களுடைய சமாதானம் சரியல்ல. இரண்டு இடங்களிலும் சம்ந்யாசி என்னும் பதத்திற்கு அனுபவமுள்ள சம்ந்யாசி என்று தான் பொருள். அப்படியானல் சரியான சமாதானம் என்ன

வென்றால் இந்த 3-4ல் 'ஸம்' என்னும் பதத்தை பகவான் உப யோகித்திருக்கிறார். அதாவது ஏதோ ஒரு தடவை புருஷோத் தமனை தரிசனம் செய்வதால் அவனிடமிருந்து நழுவாமல் நிலைத்திருக்கும் நிலைமை ஏற்பட்டு விடாது. இந்த நிலையை அடைய அடிக்கடி அப்பியாசயோகம் செய்யவேண்டுமென்று பக வான் இந்த 'ஸம்' என்னும் பதத்தால் குறிப்பிடுகிறார்.

(1) முதல் முதல் பகவானை தரிசித்தல் அறிமுகப்படுத்திக் கொள்வதாகும். இதுவே சாலோகம்.

(2) பின் அடிக்கடி பகவானைத் தரிசித்தல் சிநேகிதமாகும். இதுவே சாமீபம்.

(3) நீண்டகால சிநேகம் பிரியமாக முதிர்ச்சியடையும். இதுவே சாரூபம்.

(4) நீண்டகால பிரியம் ஐக்கியத்தில் முடியும். இதுவே சாயுச்சியம்.

கீதை 3-4ல் மேலே சொன்ன (1)வது அறிமுகப்படுத்திக் கொள்ளுதலை மாத்திரம் அடையலாமே யொழிய (4)வது ஐக்கிய மாகிய சாயுச்சியத்தை அடையமுடியாதென்று குறிப்பிட்டிருக் கிறது. கீதை 18-49ல் (4)வது சாயுச்சியமாகிய "பரமாம் நைஷ் கர்ம்ய ஸித்தி" யடைகிறவனுடைய லக்ஷணத்தைக் குறிப்பிட்டி ருக்கிறது. ஆதலால் இந்த இரண்டு ஸ்லோகங்களில் சொல்லி யிருப்பதில் பரஸ்பர விரோதம் ஒன்றும் இல்லையென்று தெரிந்து கொள்ளவேண்டும்.

5. நஹி கச்சித் க்ஷணம் அபி ஜாது திஷ்டதி அகர்மக்ருத்
கார்யதே ஹி அவஸ: கர்ம ஸர்வ: ப்ரக்ருதிஜை: குணை:

(அ-ம்) வாஸ்தவமாக ஒருவராவது ஒரு க்ஷண நேரம்கூட வேலை செய்யாமல் ஒருக்காலும் சும்மாயிருக்கமுடியாது. ஏனென் றால் எல்லோரும் பிரக்ருதியினின்று தோன்றிய குணங்களினால் (எண்ணங்களினால்) தங்களுடைய சுவாதீனமற்று தொழில்களை செய்விக்கப்படுகிறார்கள்.

(வி-ம்) கீதை 5-11ல் மன சமாதானத்தை அடைந்த யோகி கள்கூட சும்மா யிருக்கமுடியாது, சரீரத்தாலும் மனதாலும்

புத்தியாலும் இந்திரியங்களாலும் ஏதாவது தொழிலில் அபிமான மின்றி ஈடுபட்டிருப்பார்கள் என்று பகவான் அருளியிருக்கிறார். இதையே கீதை 3-33ல் ஞானவான்கூட அவன் குணத்தை அனு சரித்து சும்மா இருக்கமுடியாமல் தொழில் செய்கிறான் என்று பகவான் சொல்லியிருக்கிறார். மன சமாதானத்தை அடைந்த பிறகு இந்தவிதமாக அபிமானமில்லாமல் தொழில்களில் ஈடுபடுவ தால் ஆத்ம சுத்தி உண்டாகும் என்றும் ஆங்கு பகவான் சொல்லி யிருக்கிறார். இந்த நிலையே ஸ்திதப்ரஜ்ஞ என்று சொல்லப்படும. முன்னமேயே கீதை 2-48 உரையில் ஆத்ம தர்சனத்துக்கு பின் னரே ஆத்ம சுத்தி உண்டாகுமென்று சொல்லியிருக்கிறேன். ஆனால் புத்தகபண்டிதர்கள் இதற்கு நேர்மாறாகவும் தலைகீழாகவும் ஆத்மசுத்திக்குப் பின்னரே ஆத்மதரிசனம் உண்டாகிறது என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையா அல்லது நான் சொல்வது உண்மையா என்று இதைப் படித்தவர் கள் தங்களுடைய ஆத்ம தரிசனத்துக்கு பின்னர் தெரிந்து கொள்ளமுடியும்.

கீதை 18-11, 18-40 சுலோகங்களில் தேகத்தைத் தரித்த பிராணி, மானுட தேவ பாதாளலோகத்திலிருந்தாலும் தொழி லில் ஈடுபடாமல் சும்மா இருக்கமுடியாது என்று பகவான் அருளி யிருக்கிறதை ஈண்டு கவனிக்கவேண்டும்.

6. **கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய: ஆஸ்தே மனஸா ஸ்மரந்**
இந்த்ரியார்த்தாந் விமூட்ாத்மா மித்யாசார: ஸ: உச்யதே

(அ-ம்) எவனொருவன் கர்மேந்திரியங்களை அடத்தினால் அடக்கிக்கொண்டு அவ்விந்திரியங்களின் விடய சுகங்களை மனதி னால் நினைத்துக்கொண்டிருக்கிறானோ அவன் (பொய்யான வேஷத் தால் தன்னையும் பிறரையும் ஏமாற்றிக்கொண்டிருக்கும் கெட்ட நடத்தையோடு கூடிய வஞ்சகனாகிய) மித்தியாசாரன் என்று சொல்லப்படுவான்.

(வி-ம்) வித்வத் சம்ந்யாசமின்றி பருத்திப் பூநூலை கழற்றி எறிந்துவிட்டு காவித் துணியைக் கிழித்து கௌபீனம் கட்டிக் கொண்டு கெட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் போலிச் சம்ந்யாசிகள் எல்லோரும் மித்யாசாரர்களே - உலகத்தில் கீழ்

கண்ட இருதிறத்தாரும் வேஷம் போடுவதில் நிபுணர்களாகிய மித்யாசாரர்கள்.

(1) உள்ளே மனதின் கண் கவலைகள் ரம்பம்போட்டு அறுத்துக்கொண்டிருக்கும்பொழுது வெளிக்கு புன்சிரிப்புடன் நடிக்கும் கபட சம்ந்யாசிகள். (2) உள்ளே மனதின்கண் எந்த உபாயங்களால் அசல் தேசத்தை ஆக்கிரமித்துக் கொள்ளலாமென்று திட்டம் போட்டுக்கொண்டு வெளிக்கு புன்சிரிப்புடன் அந்த அசல் தேசத்தாருடன் வஞ்சகமாய் நடந்துகொள்ளும் ராஜ தந்திரிகள்.

இவ்விருதிறத்தாரினின்றும் பகவான் தான் இந்த உலகத்தை காப்பாற்றவேண்டும்.

7. யஃ து இந்த்ரியாணி மநஸா நியம்ய ஆரபதே அர்ஜுந
கர்மேந்த்ரியைஃ கர்மயோகம் அஸக்தஃ ஸ விசிஷ்யதே

(அ-ம்) ஹே அர்ச்சுனா! எவன் இந்திரியங்களை மனதால் அடக்கிக்கொண்டு அபிமானமின்றி கர்மேந்திரியங்களால் சமத்வ நிலையுடன் தொழில்களைச் செய்கின்றானோ அவன் மேன்மையுடையவன்.

(வி-ம்) பகவான் 'அஸக்த:' என்னும் பதத்தை 'அபிமானமின்றி' என்னும் அர்த்தத்தில் கீதை பூராவும் உபயோகப்படுத்தியிருக்கிறார். சில புத்தகப் பண்டிதர்கள் இதையே அனாசக்த யோகம் என்று சொல்லுகிறார்கள். அசக்த: என்னும் பதத்திற்கு முன்னால் 'அ' என்னும் எழுத்தைக் கூட்டி ஆசக்த: ஆக்கப்பட்டு 'அபிமானத்தோடு கூடி' என்று பொருள்படுகிறது. ஆசக்த: என்னும் பதத்திற்கு மறுபடியும் 'அன்' என்னும் பதத்தை முன் கூட்டி அனாசக்த: ஆக்கப்பட்டு 'அபிமானமின்றி' என்று பொருள்படுகிறது. இப்படி அநாவசியமாய் ஒரு பதத்தை சிருஷ்டிப்பதின் அவசியம் இல்லை. நேரே மூக்கை தொடுவதற்கு பதிலாக தலையை சுற்றிக்கொண்டு சிரமத்துடன் மூக்கைத் தொடுவது போல இருக்கிறது இவர்கள் அசக்த: என்னும் பதத்திற்கு பதிலாக அனாசக்த: என்னும் பதத்தை சிருஷ்டித்திருப்பது. இது மாதிரி தந்திரங்களைக்கொண்டு தாங்கள் உலகத்தையே உய்விக்க வந்த மகான்கள் என்று பாமரர்களை ஏமாற்றுகிறார்கள்.

8. நியதம் குரு கர்ம த்வம் கர்மஜ்யாய: ஹி அகர்மண:

[5] சரீரயாத்ரா அபி ச தே ந ப்ரஸித்த்யேத்[3,4] அகர்மண:

(அ-ம்) சமத்துவ நிலையிலிருந்துகொண்டு நீ தொழில்களைச் செய். இந்த விதமாய் தொழில்களில் ஈடுபடுவது சமாதியில் இருப்பதைவிட மேலானது. ஏனென்றால் (நீ இந்த தேகத்துடன் கூடி இந்த உலகத்தில் உள்ள காலம் வரைக்கும் தொழில்களில் ஈடுபடாமல்) சும்மா இருந்தால் உன்னுடைய தேகத்தை காப்பாற்றுவதுகூட சித்திக்காமல் போய்விடும்.

(வி-ம்) கீதை 3-5லும் பின்னர் கீதை 18-11, 18-40லும் தேகத்தோடு கூடியவர்கள் ஒரு க்ஷண காலமேனும் தொழிலில் ஈடுபடாமல் சும்மா இருக்கமுடியாதென்று பகவான் சொல்லியிருக்கிறார். 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனிடம் ஒரு இமை நொடிப்பொழுது அளவு காலம் தான் இருக்க முடியும் இதைப் பற்றி முன்னமேயே 2-40 உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அக்ஷரபுருஷனையே அணுவென்றும், கவிம் என்றும், ஹரி த்வாரமென்றும், சேதுவென்றும், பிரஹ்மமுகமென்றும் பல விதமாய் சொல்லுகிறார்கள். பிரஹ்மத்தைக் காட்டுவதற்கு ஒரு கதவு துவாரம்போல் ஒரு இமை நொடிப் பொழுது அளவு காலமே அக்ஷரபுருஷன் தரிசனம் கொடுக்கிறான். அப்பொழுது ஜீவ அணு அந்த துவாரத்தின் வழியாக பிரஹ்ம சொரூபத்தில் நழுவி வளைந்து வளைந்து ஓடும் நதியானது சமுத்திரத்தை அடைந்தவுடன் சலனமற்றிருப்பதைப்போல் தன்னுடைய சலனங்களெல்லாம் நீங்கி தேன்குடிக்கிறது. சூரியன் உதித்த பிறகு தாமரையிலுள்ள பனி நீர்த்துளி ஜோதிமயமான தடாகத்தில் நழுவி விழுகிறதை இந்த அனுபவத்திற்கு உதாரணமாக புத்தர் சொல்லியிருக்கிறார். இந்த நிலை எப்படியிருக்குமென்று விவரிக்க முடியாது. அனுபவத்தில் தான் தெரிந்து கொள்ளவேண்டும். மேல் சொன்ன பிரஹ்ம துவார தரிசனம் ஒரே ஒரு முறை தான் உண்டாகும். பின் அப்பியாசங்களில் பிரஹ்ம துவார தரிசனம் இல்லாமல் நேரே பிரஹ்ம சொரூபத்தில் ஜீவ அணு கலந்து தேன் குடிக்கும். இதற்கு திருஷ்டாந்தம் காவேரிப்பட்டிணத்தில் காவேரி ஆறு சமுத்திரத்தில் சேருகிறது. முதல் வெள்ளம்

வரும்பொழுது கடல் தண்ணீருடன் சேருமிடம் நன்றாய் தெரியும். கடல் நீரும் காவேரி நீரும் ஒன்றாய் கலந்த பிறகு காவேரி ஆற்றில் கொஞ்சதூரம் தண்ணீர் தேங்கி நிற்கும். ஆகையால் மறுபடி இரண்டும் சேருகிற இடம் தெரியாது. எவ்விதமாய் ஜீவ அணு பிரஹ்ம சொரூபத்தில் கலக்கிறது, எந்த விதமாய் மறுபடியும் வெளியே தள்ளப்படுகிறது என்பது தெரியவில்லை. இது ஒரு மர்மமாயிருக்கிறது. இப்படியே இந்த மர்மத்தை கண்டு பிடிக்கமுடியவில்லை என்று ஸ்ரீ ராமகிருஷ்ணரும் சொல்லியிருக்கிறார்.

9. யஜ்ஞார்த்[2]தாத் கர்மண: அந்பத்ர லோக: அயம் [3] [4] கர்மபந்தந:

[3]தத[2]ர்த்தம் கர்ம கௌந்தேய முக்[3]தஸங்க: ஸமாசர

(அ-ம்) செய்யும் தொழில்களை யஜ்ஞத்துக்கு (அர்ப்பணத்துக்கு) எஜமானனாகிய புருஷோத்தமனிடத்து அர்ப்பணம் செய்தாலன்றி இந்த உலகத்திலுள்ளவர்கள் (ரஜஸ்நூல், ரேதஸ் சூத்ரம், கர்ம ரேதஸ், கர்ம சூத்ரம் என்று பலவிதமாக சொல்லப்படுகிற) கர்ம முடிச்சால் கட்டப்படுவார்கள். ஆகையால் அந்த புருஷோத்தமனிடம் அர்ப்பணம் செய்யும் பொருட்டு - ஹே - குந்தி புத்திரனே! (அர்ச்சுனா) அபிமானத்தை விடுத்து தொழிலைச் செய்.

புருஷோத்தமனாகிய விஷ்ணு அல்லது வாசுதேவனை தரிசிக்காமல் ஒருவன் தன்னுடைய தொழிலை விஷ்ணுவுக்கு அர்ப்பணம் செய்யமுடியாது. ஆகையால் அர்ப்பணம் செய்வதற்கு முன்னதாக விஷ்ணுவை தரிசிக்க வேண்டுமென்பது அவசியம் என்பதாயிற்று. இதைப் போலவே அர்ப்பணம் செய்கிறவனாகிய ஜீவ அணுவாகிய தன்னையும் தரிசித்த பின்னரே அர்ப்பணம் செய்ய முடியும். கீதை 4-14, 9-9ல் பகவான் "என்னை சிருஷ்டியாதி தொழில்கள் கட்டுப்படுத்த மாட்டா. தொழில்களாலுண்டாகும் பிரயோசனத்தை நான் இச்சிக்கிறதில்லை. இவ்விதமாய் எவன் என்னை அறிகிறானோ அவன் தொழில்களால் கட்டுப் படுகிறதில்லை" என்று சொல்லியிருக்கிறார். அனுபவமும் பகவான் உபதேசமும் இவ்விதமாயிருக்க அனுபவம் இல்லாத புத்தகப்

பண்டிதர்கள் ஜீவர்கள் தங்களைக்கூட அறியாமல் கர்மங்களை ஈச்வரார்ப்பணமாகச் செய்தால் சித்த சுத்தியடைந்து பின்னுல் ஞானத்தால் பிரஹ்ம சொரூபத்தை அடைவார்கள் என்று பிதற்றுகிறூர்கள்.

கீதை 8-4ல் பகவான் கீழ் கண்டபடி சொல்லியிருக்கிறூர்.

அதிபூதம் = க்ஷரோ பாவ = தெய்வம் = 24வது தத்வம்

அதிதெய்வம் = புருஷன் = யஜ்ஞம் = 25வது தத்வம்

அதியஜ்ஞம் = அஹம் = புருஷோத்தமன் (வாசுதேவன்) = 26வது தத்வம்.

யஜ்ஞகர்மாவென்பது நிவிருத்தி கர்மாவும் லயத்தொழிலில் ஈடுபடுவதுமாகும். யஜ்ஞ என்றூல் காரியத்தை அதனுடைய காரணத்தில் லயப்படுத்தி வைப்பது என்று அர்த்தம். இந்த விதமாய் 25வது தத்வமாகிய ஹிரண்யகர்ப்பனை (அக்ஷரபுருஷனை) 26வது தத்வமாகிய வாசுதேவனில் (புருஷோத்தமனில்) லயப்படுத்தி வைப்பது அதியஜ்ஞமாகும்.

கீதை 4வது அத்தியாயத்தில் பகவான் அநேக விதமான யஜ்ஞங்களைப்பற்றி சொல்லுகிறூர். அதாவது இந்திரிய விடயங்களை இந்திரியங்களிடம் வைப்பதும், இந்திரியங்களை மனதில் வைப்பதும், மனதை புத்தியில் வைப்பதும், புத்தியை அவ்யக்தத்தில் வைப்பதும், அவ்யக்தத்தை அக்ஷரபுருஷனில் வைப்பதும், அக்ஷரபுருஷனை புருஷோத்தமனிடத்தில் வைப்பதுமாகிய யஜ்ஞங்களில் கீதை 4-33ல் ஜ்ஞானயஜ்ஞமே எல்லாவற்றிற்கும் உன்னதமான முடிவான யஜ்ஞமென்று சொல்லியிருக்கிறூர். கீதை 7வது அத்தியாயத்தில் பகவான் "எதனை அறிந்துகொண்டால் வேறு ஒன்றையும் அறிந்துகொள்ள தேவையில்லையோ அப்பேர்ப்பட்ட ஜ்ஞானம் விஜ்ஞானங்களைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லுகிறேன்" என்று ஆரம்பித்தவர் பின்னுல் அந்த 7வது அத்தியாயம் பூறுவும் ஒரு ஸ்லோகத்திலாவது ஜ்ஞானம், விஜ்ஞானம் என்னும் பதங்களை உபயோகப்படுத்தவில்லை. ஆனுல் உடன் காலிலேயே 25வது தத்வமாகிய பராப்ரக்ருதியைப்பற்றியும் 24வது தத்வமாகிய அபராப்ரக்ருதியைப் பற்றியும் சொல்லுகிறூர். இதிலிருந்து ஜ்ஞானம் என்பது 25வது தத்வமாகிய

அக்ஷரபுருஷன் என்றும் விஜ்ஞானம் என்பது 24வது தத்வமாகிய க்ஷரபுருஷன் என்றும் நாம் அர்த்தம் செய்துகொள்ளவேண்டும். ஜ்ஞான யஜ்ஞம் என்பது 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனை 26வது தத்வமாகிய புருஷோத்தமனிடம் வைப்பது என்று அர்த்தமாகும். இந்த யஜ்ஞமே எல்லாவற்றிற்கும் மேலானதும் முடிந்ததுமான யஜ்ஞம் என்று அறிந்து கொள்ளவும். 1 முதல் 23வது தத்வம் வரை 24வது தத்வமாகிய க்ஷரபுருஷனுல் சம்பாதிக்கப்பட்டதால் அவைகளுக்கு திரவியம் என்று பெயர். 24வது தத்வத்திற்கு திரவியமயம் என்று பெயர்.

யஜ்ஞம் என்பது அர்ப்பணம் செய்யப்பட்ட தொழில் ஆகும். இப்படிப்பட்ட தொழிலோடு கூடவே அதினுடைய காரியமும் (பலனும்) லயத்தை அடைந்துவிடுகிறது. ஆகையால் காரியம் (பலன்) மிஞ்சி நிற்கிறதில்லை. மோக்ஷ தர்மம் 276வது அத்தியாயத்தில் மேலே சொல்லப்பட்ட உண்மையான யஜ்ஞத்தை செய்பவர்களே உண்மையான பிராமணர்கள், அவர்கள் அஸ்வினி முதலான நக்ஷத்திரங்கள் போல அநேக நக்ஷத்திர கூட்டங்களாகி ஆகாயத்தில் காணப்படுகிறுர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கீதை 7-7ல் சொல்லப்பட்ட 'ஸூத்ரே மணிகண:' கயிற்றில் கோக்கப்பட்ட மணிகளாகிய மேலே சொன்ன நக்ஷத்திரங்கள் பகவானுடைய சரீரம் ஆகும். இந்த பிராஹ்மணனுக்கும் பிராம்மண ஜாதியில் பிறந்த மாத்திரத்தால் நான் பிராஹ்மணன் என்றும் மற்ற ஜாதியில் பிறந்தவர்களைவிட உயர்ந்தவன் என்றும் கர்வம்கொண்டு திரியும் தோல் துருத்தி பிராம்மணர்களுக்கும் ஆகாயம் பாதாளம்போல் வித்தியாசமிருக்கிறது. இவர்கள் மற்ற ஜாதியர்களைவிட எந்த விதத்தில் உயர்ந்தவர்கள்? பலர் பார்த்து மெச்சுவதற்காக மூக்கைப் பிடித்துக்கொண்டு ஜபம் செய்வதைப்போல் பாசாங்கு செய்வதற்காகவா அல்லது சில புத்தகங்களிலுள்ள செத்த எழுத்துகளைப் படித்து அர்த்தம் தெரியாமல் ஒப்பிக்கிறதற்காகவா? இவர்களும் மற்றவர்களைப் போல் தினசரி சாப்பிடுகிறுர்கள், வேலை செய்கிறுர்கள், தூங்குகிறுர்கள். இந்த தினசரி வேலையை விலங்குகள்கூடச் செய்கின்றன. ஆகையால் மேலே சொன்ன முடிவான ஞானயஜ்ஞத்தைச் செய்தவன் தான் எந்த ஜாதியில் பிறந்தவனுயிருந்தாலும் சரி

பிராம்மணன் என்று அழைக்க யோக்கியதை உடையவன் ஆவான்.

10. ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா புரா உவாச ப்ரஜாபதி:

4
அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏஷ: வ: அஸ்து இஷ்ட காமதுக் 4

(அ-ம்) சிருஷ்டி ஆரம்ப காலத்தில் பிரஜாபதியானவர் (ஆண் பெண் குணங்களடங்கிய) புருஷ-ப்ரக்ருதி மிதுனமாகிய இரட்டையை சிருஷ்டித்து இந்த மிதுனத்தால் நீங்கள் வம்ச விருத்தியை யடையுங்கள் இது உங்களுக்கு பிரியமான ஆனந்தத்தைக் கொடுக்கும் பசுவாகும் என்று சொன்னார்.

(வி-ம்) ப்ரஜா: என்றால் அஷ்ட(எட்டு) ப்ரக்ருதிகள் — (மோக்ஷ தர்மம் 315-316 அத்தியாயங்களைப் பார்க்கவும்) பஞ்ச மஹா பூதங்கள் 5 அகங்காரம் 1, புத்தி 1, அவ்யக்தம் 1 ஆக 8. ப்ரஜா: என்றால் சரீரம் என்று அர்த்தம். சரீரத்திற்குள்ளிருப்பவனாகிய சரீரியே யஜ்ஞா: என்னும் பதத்திற்கு அர்த்தம். அவ்யக்தத்தைத் தரித்திருப்பவன் பிராம்மண சமஷ்டி. புத்தியைத் தரித்திருப்பவன் க்ஷத்திரிய சமஷ்டி. அகங்காரத்தைத் தரித்திருப்பவன் வைசிய சமஷ்டி. பஞ்ச பூதங்களைத் தரித்திருப்பவன் சூத்திர சமஷ்டி. இந்த நான்கு வர்ணமும் 4 சனத்குமாரர்கள். இவர்கள் நுண்ணிய ஆண் பெண் சுபாவங்கள் கலந்தவர்கள். இவர்கள் தூல ஆண் பெண்களாக பிரிந்து மைதுனத்தால் வம்ச விருத்தி செய்ய மறுத்துவிட்டார்கள். அப்பொழுது பகவான் நுணுக்கமான ஆண் பெண் சுபாவங்களோடு கூடிய ப்ருகு, அத்ரி, முதலான சப்த (ஏழு) ரிஷிகளை மானஸீகமாய் சிருஷ்டித்தார். இவர்கள் தூல ஆண்களாகவும் பெண்களாகவும் பிரிந்துகொண்டு மைதுனத்தால் வம்ச விருத்தி செய்தார்கள். ஆகையால் இந்த பிரபஞ்சத்திலுள்ள ஜீவர்களெல்லோரும் மேல்கண்ட சப்த ரிஷிகளின் சந்ததிகள். இந்த 3-10ல் இஷ்ட காமதுக் என்று சொன்னது ப்ரஸவத்துக்கும் வம்சவிருத்திக்கும் காரணமாயிருக்கும் மைதுனத்தையே. இந்த மைதுனத்தால் மேலே சொன்ன ஆண் அம்சமாகிய பீஜம் பீஜத்தை விருத்தி செய்கிறது. பெண் அம்ச

மாகிய கூடு, கூடுகளை (சரீரங்களை) விருத்தி செய்கிறது. கீதை 10-6லிருந்து பகவானுக்கும் மைதுனத்தாலுண்டான தூல சிருஷ்டிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்று அறிந்துகொள்ள வேண்டியது. ஆகையால் பகவான் நான்கு விதமான தூல சரீரங்களாகிய சாதிகளை சிருஷ்டித்தார் என்று கீதை 4-13க்கு புத்தக பண்டிதர்கள் எழுதியிருக்கும் அர்த்தம் சுத்த தப்பு. இந்த 3-10ல் ப்ரஜா: என்னும் பதத்திற்கு மூன்று ஜாதியோடு கூடிய மனித வர்க்கம் என்று ஸ்ரீ சங்கராச்சாரியார் வியாக்கியானம் செய்திருக்கிறார். இவரைப் பின்பற்றும் புத்தகப் பண்டிதர்கள் இந்த மூன்று ஜாதியைப்பற்றி ஒன்றுமே சொல்லுகிறதில்லை.

இந்த 3-10ல் ப்ரஜா: யஜ்ஞா: என்னும் பதங்கள் பன்மைப் பதங்களாயிருப்பதால் சமஷ்டியைக் குறிக்கின்றன. கடற்கரையிலுள்ள எண்ணிக்கைக்கு அடங்காத மணல்கள் எல்லாம் சேர்ந்து சமஷ்டியாக பீச்சு என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு மணலும் வியஷ்டி. இதைப்போல சமஷ்டியாகிய ஈஸ்வர சக்தி எண்ணிக்கையற்ற வியஷ்டி ஜீவர்களாக பிறந்து நிற்கிறது. வியஷ்டியாய் அநேகமாய் பார்ப்பது சாங்கிய மதம். சமஷ்டியாய் ஏகமாய் பார்ப்பது வேதாந்த அத்வைதமதம். இரண்டு மதமும் சரியே. ஆனால் சாங்கிய மத கர்த்தாவாகிய கபிலரை பகவான் கீதை 10-26ல் ‘சித்தர்களில் கபிலர் நானே’ என்று கூறியிருந்தும் கூட அனுபவம் பெறாத புத்தக வேதாந்திகள் கபிலரைப்பற்றி இழிவாகப் பேசுகிறார்கள். முதலில் நீ யார் என்னும் அனுபவத்தை அடை. அப்பொழுது வியஷ்டி ஜீவர்களும் சமஷ்டி ஈசுவரனும் ஒரே புருஷோத்தமனென்று உனக்குத் தெரியும். அப்பொழுது கபிலரைக் குற்றம் கூறமாட்டாய். கீதை 4-35ல் சராசர பூதங்கள் யாவையும் முதலில் உன்னிடத்தும் பின்னால் என்னிடத்தும் தரிசிப்பாய் என்று பகவான் அர்ச்சுனனுக்கு சொல்லியிருப்பதை இங்கு கவனிக்கவும். அநுபவம் வந்தால் த்வைத, விசிஷ்டாத்வைத அத்வைத வாதங்களில் ஈடுபடமாட்டாய். கபிலரையும் குறை கூறமாட்டாய். இந்த மூன்றும் ஒன்றின்மேல் ஒன்றாகிய அனுபவங்கள் என்று நீ தெரிந்து கொள்வாய். அதாவது க்ஷரபுருஷனை தரிசித்தல் த்வைதம், அக்ஷரபுருஷனைத் தரிசித்தல் விசிஷ்ட்டாத்வைதம், புருஷோத்தமனைத் தரிசித்து அவனுடன்

ஐக்கியப்படுதல் அத்துவிதம். ஒவ்வொருவரும் அனுபவத்தில் இவைகளை வரிசை கிரமமாக ஒன்றன்பின் ஒன்ருகத்தான் கொண்டுவரமுடியும். அப்படிக்கிருக்க க்ஷரபுருஷ அனுபவங்கூட அடையாத புத்தக அத்வைதிகள் பாமரர்களிடம் அத்துவிதத்தை உபதேசம் செய்து அவர்களுடைய புத்தி பேதம் செய்து தாங்கள் கெட்டதுமல்லாமல் அவர்களையும் கெடுத்துவிடுகிருர்கள். தங்களுடைய அனுபவத்திற்கு வாராதவைகளாகிய புத்தகங்களிலுள்ள செத்த எழுத்துக்களைப் படித்து நெட்டுருப்போட்டு அனுபவத்திற்கு வந்ததுபோல் பாசாங்கு பண்ணிக்கொண்டு பிறருக்கு உபதேசம் செய்யும் இதுவே பாஷாண்ட மதம் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன்.

முண்டகோபநிஷத்து 1வது அத்தியாயம் 1வது 2வது ஸ்லோகங்களில் ஒரே மரத்தில் ஒரே மாதிரியான இரண்டு பறவைகள் இருக்கின்றன, அவைகளில் ஒரு பறவை அந்த மரத்தின் கனிகளை நன்று நன்று எனத்தின்னும், மற்ற பறவை கனிகளைத் தின்னுமல் சாக்ஷி மாத்திரமாய் பார்த்துக் கொண்டிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே கனிகளை தின்னும் பறவை 24வது தத்துவமாகிய க்ஷரபுருஷன். இதுவே பிரஜா: சாக்ஷி மாத்திரமாய் பார்த்துக்கொண்டிருக்கும் பறவை அக்ஷர புருஷன். இதுவே யஜ்ஞா:

11. தே[3]வாந் பா[4]வயத அநேந தே[3]தேவா: பா[4]வயந்து வ:

பரஸ்பரம் பா[4]வயந்த: ச்ரே[5]ய பரம் அவாப்ஸ்[2]யத

(வி-ம்) இந்த ஸ்லோகத்திலுள்ள சில பதங்களுக்கு விரிவாய் லக்ஷணத்துடன் அர்த்தம் சொன்னுல்தான் ஸ்லோகத்தினுடைய மொத்த அர்த்தம் புரியும். ஆகையால் முதலில் வியாக்கியானம் எழுதியிருக்கிறது. தேவா: என்ருல் தேவர்கள். ஒவ்வொரு தத்வமும் வரிசைக் கிரமத்தில் அடுத்தபடியாக கீழ்உள்ள தத்துவத்திற்கு தேவதா. அதாவது விஷயங்களுக்கு தேவதை இந்திரியங்கள். இந்திரியங்களுக்கு தேவதை மனது. மனதுக்கு தேவதை புத்தி. புத்திக்கு தேவதை அவ்யக்தம் அல்லது க்ஷர புருஷன். அவ்யக்தத்துக்கு தேவதை அக்ஷரபுருஷன். அதே மாதிரியாக மேலேயுள்ள தத்துவங்கள் வரிசைக் கிரமத்தில் அடுத்த

படியாக மேலேயுள்ள தத்துவங்களுக்கு உணவு (ஆகாரம்) ஆகும். இந்த முறைப்படியே மிதுன இரட்டையின் லக்ஷணங்களாகிய யஜ்ஞா-பிரஜா, ப்ராண-ரதி, வித்யா-அவித்யா முதலியவைகளில் யஜ்ஞா, ப்ராணு, வித்யாவாகிய மேலேயுள்ள தத்துவங்கள் ஒவ்வொன்றிற்கும் அவைகளுக்கு வரிசை கிரமத்தில் அடுத்தபடியாக கீழேயுள்ள தத்துவங்கள் பிரஜா, ரதி, அவித்யா ஆகும். இந்த ஸ்லோகத்தில் 'அநேந' என்னும் பதத்திற்கு யஜ்ஞாவென்று புத்தகப் பண்டிதர்கள் அர்த்தம் கொடுத்திருக்கிறார்கள் இது தப்பு. மிதுன இரட்டையாகிய யஜ்ஞா-ப்ரஜா இரண்டையும் அர்த்தமாகக் கொள்ளவேண்டும். தூலமாக பார்க்கும்பொழுது மைதுனத்தால் ஆண் பெண்ணுக்கு இன்பத்தைக் கொடுக்கிறான். பெண் ஆணுக்கு இன்பத்தைக் கொடுக்கிறாள். ஆகையால் ஆண் பெண்ணுக்கு ஆகாரம் ஆகிறான். பெண் ஆணுக்கு ஆகாரமாகிறாள். இந்த விதமாக ஆணும் பெண்ணுமாகிய இருவர்களுக்கும் பரஸ்பரம் (ஒருவருக்கொருவர்) இன்றியமையாதவர்களாய் போஷித்துக்கொள்ளுகிறார்கள். இப்படியே சூக்ஷ்ம தத்துவங்களுக்குள்ளும் மேலுள்ள தத்துவத்துக்கும் வரிசைக் கிரமத்தில் அதற்கு கீழ் உள்ள தத்துவத்திற்கும் நுணுக்கமான மைதுனமும் இன்பமும் ஆகாரமாகிற தன்மையும் பரஸ்பரம் (ஒருவருக்கொருவர்) போஷித்துக் கொள்ளும் தன்மையும் ஏற்படுகிறது. 24வது க்ஷரபுருஷனின் தரிசனத்தின் பொழுதுதான் இந்த சூக்குமை மைதுனத்தின் அனுபவம் தெரியும். இதுதான் கீதை 7-11ல் சொல்லப்பட்டுள்ள "தர்மா விருத்தோ பூதேஷு காம:" அதாவது சூக்குமமான ரேதஸ், சுக்ல, விசர்க, மிதுன கர்ம, மிதுன காம. இதுதான் குணஸ்ரேயசு. இந்த ஸ்லோகத்தில் சொல்லியிருக்கும் 'பரம ஸ்ரேயஸ்' என்பது கீதை 5-2ல் சொல்லியிருக்கும் நிஸ்ரேயசு, நிர்குண ஸ்ரேயசு, மோக்ஷம் அதாவது தனக்குத்தானே மாத்ராஸ்பர்ஸம் அதாவது வேறு ஒன்றோடு தேய்த்துக்கொள்ளும் சம்பந்தமில்லாமல் ஆனந்தமாய் தேனைக் குடிக்கும் நிலைமை. இந்த நிலைக்கு ஒருவாறு ஏதோ ஒரு திருட்டாந்தம் சொல்லவேண்டுமென்றால் தூல மைதுனத்தைத் தான் சொல்லலாம். மைதுனத்தின்பொழுது மான அவமானமில்லாமல் ஆண் பெண் என்பதையும் மறந்து சுக்ல ரேதஸ் கலிதமாகும்பொழுது ஒருவரோடொருவர் ஒட்டிக்கொண்டு ஐக்கியமாய் உள்

வெளி அனுபவங்கள் எல்லாவற்றையும் மறந்து அந்த நேரத்தில் சக்தியோடுகூடிய சாந்தியையும் ஆனந்தத்தையும் அடைந்து தேன் குடிக்கிறார்கள். ஒருவரோடொருவர் சக்தியுடன் ஒட்டிக் கொண்டு சலனமில்லாமல் சாந்த நிலையில் இருப்பதற்கு உபமேயம் ரேதஸ் அதாவது 24வது தத்துவமாகிய மிதுன இரட்டையை ஊர்த்துவ ரேதஸ் 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷனில் ஒட்டவைத்து சாந்த நிலையில் இருப்பது. இது விசிஷ்டாத்வைதம். அத்துவிதம் என்பது அதற்கு மேலே, இரண்டும் ஒன்றும், பன்மை ஒருமை அற்ற இடம். இப்பொழுது இந்த ஸ்லோகத்தின் மொத்த அர்த்தம் கீழ்கண்டு கொள்க.

(அ-ம்) தேவர்களாகிய மேல் தத்துவங்களும் நீங்களாகிய கீழ் தத்துவங்களும் ஆகிய இரட்டைகளின் நுணுக்கமான மைதுனத்தால் உண்டாகும் இன்பத்தாலும் (கீழ் தத்துவங்கள் மேல் தத்துவங்களுக்கு ஆகாரமாகப் போகிறதாலும் ஆகிய) இதனால் (கீழ் தத்துவமாகிய) நீங்கள் (மேல் தத்துவங்களாகிய) தேவர்களை சந்தோஷப் படுத்துங்கள் (போஷியுங்கள்). அந்த தேவர்கள் உங்களை சந்தோஷப்படுத்துவார்கள் (போஷிப்பார்கள்). இப்படி ஒருவருக்கொருவர் சந்தோஷப் படுத்துவதால் (போஷிப்பதால் கிரமமாக) எல்லாவற்றிற்கும் மேலான புருஷோத்தம பதவியை நீங்கள் அடைவீர்கள்.

4 3 3 3
12. இஷ்டாந் போகாந் ஹி வ: தேவா தாஸ்யந்தே
4
யஜ்ஞபாவிதா:
3 3 4 4
தை: தத்தாந் அப்ரதாய ஏப்ய: ய: புங்க்தே ஸ்தேந:
ஏவ ஸ:

(அ-ம்) கீழ் தத்துவங்கள் மேல் தத்துவங்களுக்கு தங்களை ஆகாரமாக கொடுப்பதாகிய) யஜ்ஞத்தால் சந்தோஷமடைந்து (போஷிக்கப்பட்டு) (மேல் தத்துவங்களாகிய) தேவர்கள் (கீழ் தத்துவங்களாகிய) நீங்கள் விரும்புகிற (மாத்ராஸ்பர்ஸங்களாகிய) போகங்களை உங்களுக்கு கொடுப்பார்கள். ஆகையால் எவன் அவர்களுக்கு (பதிலுக்கு பதிலாக) கொடுக்காமல் அவர்கள் கொடுக்கப்பட்டதை மாத்திரம் புசிக்கிறானோ அவன் உண்மையாக ஒரு திருடன்.

(வி-ம்) கீதை 4-17ல் கர்மாவின் கதியை (முடிவை) அறிந்து கொள்வது துர்லபம் என்று பகவான் சொல்லியிருப்பதுபோல மோக்ஷ தர்மம் 269வது அத்தியாயத்தில் "யஜ்ஞத்தை அறிந்தவனே மிகவும் துர்லபன். கர்மத்தின் முடிவை அடைந்த அந்தப் பிராமணர்கள் பிரஜைகளை அனுக்கிரகிப்பதில் விருப்பத்தால் தம்மையே திரவியமாகச் செய்துகொண்டு யாகத்தைச் செய்கிறார்கள்" என்று துலாதரன் ஜாஜலிக்கு உபதேசிக்கிறான். ச்ரேயஸ், யஜ்ஞம், தர்மம், இவைகளெல்லாம் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களுக்கு வெவ்வேறு சொல்லப்பட்டிருக்கின்றன. இவர்கள் எல்லோரும், குண ச்ரேயஸ், குண தர்மம், குண யஜ்ஞம் இவைகளில் கட்டுப்பட்டவர்கள். எந்த ஜாதியானாலும் எவன் நிர்குண-குண இரட்டையாகிய (துவிதமாகிய) ரேதஸை (கர்மாவை) அனுபவத்தில் கண்டானோ (24வது தத்துவமாகிய க்ஷர புருஷனை தரிசித்தானோ) அவனுக்குத் தான் கீதை 3-11ல் சொல்லப்பட்ட பரம்ஸ்ரேயஸ் (நிஸ்ரேயஸ் அதாவது எல்லாவற்றிற்கும் மேலான புருஷோத்தம பதவி) கிடைக்கும். புத்தகப் பண்டிதர்கள் தோல் துருத்தி மேல் ஜாதியில் பிறந்த மாத்திரத்தில் இந்த மேலான பதவி கிட்டாதென்று நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது.

13. யஜ்ஞ[5] சி[5]ஷ்டாசிநம் ஸந்த: முச்யந்தே ஸர்வ [3]கில்பிஷை:

பு[4]ஞ்சதே தே து அக[4]ம் பாபா: யே பசந்தி ஆத்மகாரணாத்

(அ-ம்) (ஜீவ அணு முழுதும் தேய்தலின் நிமித்தம் தன்னையே புருஷோத்தமனுக்கு உணவாய் கொடுக்கும்) யஜ்ஞத்தின் சேஷம் (மிச்சமாய் நிற்கும்) புருஷோத்தமனிடம் கலந்து தேன் குடிப்பவர்கள் (பரமஹம்சர்கள்) ஸர்வ பாசம், மலம், வாசனை என்னும் பெயர்களோடு கூடிய 24வது தத்துவமாகிய க்ஷரத் தன்மையிலிருந்து விடுபடுகிறார்கள் (அதாவது வாசனா க்ஷயத்தை அடைகிறார்கள்). ஆனால் தன் வயிற்றை மாத்திரம் நிறப்புவதற்காக யார் ஆகாரத்தைப் பக்குவம் செய்கிறார்களோ பாபியாகிய அவர்கள் மலத்தை (பாபத்தையே) சாப்பிடுகிறார்கள்.

(வி-ம்) 24வது தத்துவம் = கர்ம, காமம், மலம், விஸ்வ, ஸர்வ-சிருஷ்டி செய்யும் தருணத்தில் ஒரே இடத்தில் துடித்துக் கொண்டிருக்கும் சித் சக்தி. 25வது தத்துவம் = நிஷ்கர்ம, நிஷ் காமம், நிர்மலம், அஸர்வ, அவிஸ்வ, (மோக்ஷதர்மம் 323வது அத்தியாயத்தைப் பார்க்கவும்) யஜ்ஞும் (மோக்ஷதர்மம் 276வது அத்தியாயத்தைப் பார்க்கவும்) - அசைவில்லாமல் ஒடுங்கி இருக்கும் சித் சக்தி. 25வது தத்துவமாகிய சித் அணு அல்லது கவியாகிய வியஷ்டியை 26வது தத்துவமாகிய சேஷ, அனந்த, வாஸுதேவ, புருஷோத்தம, அதியஜ்ஞ, அஜ, மூலப் பிரக்ருதியாகிய சமஷ்டியில் அர்ப்பணம் செய்கிறவனே பரமஹம்ஸன்.

கீதை 8-4ல் கீழ்கண்டவாறு பகவான் பதங்களை உபயோகித்திருக்கிறார்.

அதிபூதம் = க்ஷரோபாவம் = தைவம் = 24வது தத்துவம்

புருஷன் = அதிதைவம் = யஜ்ஞியம் = 25வது தத்துவம்

அஹம் அல்லது புருஷோத்தமன் = அதியஜ்ஞியம் (சேஷம்) 26வது தத்வம்.

சிருஷ்டியில் அடங்கிய சகல பிராணிகளும் பிரபஞ்சங்களும் லயமடைந்த பொழுது சேஷம் அல்லது மிஞ்சியிருப்பது சிருஷ்டி கர்த்தாவாகிய புருஷோத்தமன் அல்லது சச்சிதானந்தம். சமஷ்டியாகிய இந்த சச்சிதானந்தத்தை வியஷ்டியாகிய சித் அணு உணர்வோடு கூட சுவைத்துக் கொண்டிருப்பதே மோக்ஷம் அல்லது விடுதலை என்று சொல்லப்படும். இந்த நிலையில் சித் அணுவாகிய பரமஹம்ஸன் காரியங்கள் கோசங்கள் உரைகள் என்று சொல்லப்பட்ட எல்லாதத்துவங்களும் தோன்றாத அவதூத (சச்சிதானந்த)த்தில் கலந்து விடுகிறான். இந்த அவதூதமும் சேஷமும் ஒன்றே. ஒரு சாதகனுடைய சித் அணு சச்சிதானந்தத்தில் கலந்திருக்கும்பொழுது அவன் உணர்வுடன் அந்த சமஷ்டி அமிர்தம் அல்லது ஆனந்தத்தை அனுபவிக்கிறான். இப்பேர்ப்பட்டவனையே இந்த ஸ்லோகத்தில் பகவான் யஜ்ஞ சிஷ்டாசினம் ஸந்த: என்று சொல்லியிருக்கிறார்.

'ஸன்' என்பது அஜ, அவ்யய, ஆத்மா, ப்ரக்ருதி, புருஷ பூதங்களுக்கு ஈஸ்வரன், மஹேஸ்வரன் ஆகிய 26வது தத்துவத்

தைக் குறிக்கும். 'ஸந்த:' என்பது 'ஸன்' ஆகிய 26வது தத்துவத்தைத் தொட்டவனைக் குறிக்கும். 'ஸர்வகில்பிஷை' என்பது 1 முதல் 23 தத்துவம் உள்பட தன்னுள் அடங்கியிருக்கும் 24வது தத்துவமாகிய அவ்யக்தத்தைக் குறிக்கும். இதையே கீதை 13-6ல் பகவான் 'ஸங்காதம்' என்னும் பதத்தால் குறிப்பிட்டிருக்கிறார். இதையே 18-66ல் பகவான் ஸர்வதர்மமாகவும் ஸர்வபாபமாகவும் சொல்லியிருக்கிறார். இதுவே மோக்ஷ தர்மம் 308வது அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற சிருஷ்டி ப்ரளய தர்மத்தோடு கூடிய ப்ரக்ருதியாகும்.

புத்தப் பண்டிதர்கள் பிராம்மண சாதியில் பிறந்தவர்கள் தான் நித்ய கர்மானுஷ்டானம் அக்னி ஹோத்ரம் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதர சாதியில் பிறந்தவர்கள், இந்த சாதி வித்யாச மில்லாத இதர தேசத்திலுள்ளவர்கள், அவர்களுக்கு ஜீவர்களாகவும் அவர்களும் நல்ல கதியை அடைய வேண்டுமென்றும் தோன்றுகிறதில்லை. அவர்கள் அர்த்தம் எழுதியிருப்பது எல்லாம் இந்தியா தேசத்திலுள்ள பிராமண சாதியில் பிறந்தவர்களுக்கே. அவர்களுக்கு அக்னிஹோத்ரம், சாதுர்மாஸ்யம் என்பவைகளுக்கு உண்மையான அர்த்தம் தெரியாது. மோக்ஷ தர்மம் 251வது அத்தியாயத்தில் இந்திரியங்கள், மனது, புத்தி முதலியவைகளை முறையே அவைகளுக்கு காரணமாயுள்ள மேல் தத்துவங்களில் அர்ப்பணம் செய்யும் ஹோமம் என்பது அக்கினி ஹோத்ரமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை எல்லா ஜீவர்களும் செய்யலாம். இதுவே பதஞ்சலி யோகத்தில் சொல்லப்பட்டுள்ள பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியாகிய நிவிருத்திமார்க்கமாகும். வைதீகப் பிராமணர்கள் கைகளையும் தலையையும் உடம்பையும் ஆட்டிக்கொண்டு செய்கின்ற கர்மம் அல்ல. சாதுர்மாஸ்யம் என்பது மடாதிபதிகளும் இதர காவி வேஷ்டி சம்ந்யாசிகளும் ஒரே ஊரில் சேர்ந்தாற்போல் ஏதோ நான்கு மாதங்கள் இருந்துகொண்டு சாரதாதேவி முதலிய விக்கிரக பூஜை செய்துகொண்டு பிராம்மண போஜனம் செய்விப்பதல்ல. நாரத பரிவ்ராஜிக உபநிஷத்தில் இதைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறதென்றால் சம்ந்யாசிகள் கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்தில் ஒரு நாளைக்கு மேல் தங்கியிருக்கக்

கூடாது, பட்டணங்களாயிருந்தால் ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு சில நாட்களுக்கு மேல் சேர்ந்தாற்போல் தங்கியிருக்கக் கூடாது. ஆனால் மழை காலத்தில் மாத்திரம் சேர்ந்தாற்போல் ஒரேயிடத்தில் சுமார் 4 மாதங்கள் மழை காலம் பூராவும் தங்கியிருக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. காலடியிலுள்ள மடாதிபதி வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் அங்கு மழை கால மானதால் இந்த மாதங்களில் சாதுர் மாஸ்யம் கொண்டாடினால் வெயில் கொளுத்திக்கொண்டு இந்த மாதங்களில் மழையில்லாத இதர பிரதேசங்களிலும் மடாதிபதிகள் இதே மாதங்களில் சாதுர் மாஸ்யம் கொண்டாடுகிறார்கள் என்றால் இவர்களுடைய அறியாமையை என்னென்று சொல்வது? அர்த்தம் தெரியாமல் கண்மூடித்தனமாய் பழக்கவழக்கங்களை அனுசரித்துவரும் இந்த மடாதிபதிகளிடமிருந்து இவர்களை குரு என்று நம்பியிருக்கும் தென்னிந்திய பிராமணர்களை பகவான் தான் காப்பாற்ற வேண்டும்.

14. அந்நாத் ப^{4}வந்தி பூ^{4}தானி பர்ஜந்யாத் அந்ந ஸம்ப^{4}வ:
யஜ்ஞாத் ப^{4}வதி பர்ஜந்ய: யஜ்ஞ: கர்ம ஸமுத்ப^{4}வ:

15. கர்ம ப்^{3}ரஹ்மோத்^{3}ப^{4}வம் வித்^{3}தி^{4} ப்^{3}ரஹ்ம அக்ஷர ஸமுத்ப^{4}வம்
தஸ்மாத் ஸர்வக^{3}தம் ப்^{3}ரஹ்ம நித்யம் யஜ்ஞே ப்ரதிஷ்டி^{2}தம்

(அ-ம்) (21 முதல் 17 ஈறுகவுள்ள தத்வங்களாகிய கீதை 3-42லுள்ள இந்திரியங்கள், 7-4லுள்ள தன்மாத்திரைகள் அல்லது 13-5லுள்ள மஹா பூதங்களாகிய) அந்நத்திலிருந்து சகல பிராணிகளும் உண்டாகின்றன. (22வது தத்வமாகிய கீதை 3-42, 7-4லுள்ள மனது அல்லது கீதை 13-5லுள்ள அஹங்காரமாகிய) பர்ஜன்யத்துடன் கூடவே அந்நமானது சேர்ந்தாற்போல உண்டாயிற்று. (23வது தத்வமாகிய கீதை 3-42, 7-4, 13-5லுள்ள புத்தியாகிய) யஜ்ஞத்திலிருந்து பர்ஜன்யம் (மனது அல்லது அஹங்காரம்) உண்டாயிற்று. (24வது தத்வமாகிய கீதை 3-42லுள்ள ஸ:, 7-4லுள்ள அஹங்காரம், 13-5லுள்ள அவ்யக்தமாகிய) கர்மாவுடன் கூடவே யஜ்ஞமானது (புத்தி) சேர்ந்தாற்

போல் உண்டாயிற்று. (25வது தத்வமாகிய கீதை 8-22லுள்ள ஸ: பா: 7-5லுள்ள ஜீவபூதம், 13-2லுள்ள க்ஷேத்ரஜ்ஞன், 8-20ல் உள்ள அந்ய அவ்யக்தம், 9-4லுள்ள அவ்யக்தமூர்த்தி, 4-6லுள்ள ஆத்மமாயை, 4-32லுள்ள ப்ரஹ்மமுகமாகிய அக்ஷரபுருஷன் மூலமாக 26வது தத்வமாகிய கீதை 15-18லுள்ள (புருஷோத்தமனுகிய) ப்ரஹ்மத்திலிருந்து கர்மா உண்டாயிற்று. இந்த (புருஷோத்தமனுகிய ப்ரஹ்மமும் (25வது தத்வமாகிய) அக்ஷரபுருஷனும் சேர்ந்தாற்போல் தோன்றினுர்கள். இவைகளை நீ அறிந்து கொள்வாயாக. ஆகையால் சர்வ வியாபியாயுள்ள (எங்கும் நிறைந்துள்ள) ப்ரஹ்மமானது (புருஷோத்தமன்) யஜ்ஞத்தில் (புத்தியின் கண்ணே) நிலைபெற்றிருக்கிறுர்.

(வி-ம்) இந்த சுலோகங்களில் பவ, ஸம்பவ என்னும் இரண்டு பதங்கள் உபயோகிக்கப்பட்டிருப்பதை கவனிக்கவேண்டும். பவ என்பதற்கு (ஒன்றிலிருந்து மற்றென்று) உற்பத்தி என்று அர்த்தம். ஸம்பவ என்பதற்கு (ஒரே ஜோடியாக) சேர்ந்தாற்போல் தோன்றின என்று அர்த்தம். ஈண்டு ஒன்றிலிருந்து ஒன்று உற்பத்தியில்லை. இவ்விதமாய் சேர்ந்தாற்போல் உதித்த ஜோடிகள் மூன்று. (1) ப்ரஹ்ம-அக்ஷரம், (2) யஜ்ஞா-கர்மா, (3) பர்ஜன்ய-அந்நம். ஒவ்வொரு ஜோடியும் இரண்டு விதமான இயல்புகளோடு கூடிய ஒரே வஸ்துவைக் குறிக்கின்றன. சிருஷ்டி அல்லது ப்ரவிருத்தி செய்வது ஒரு இயல்பு - லயம் அல்லது நிவிருத்தி அடைவது மற்றொரு இயல்பு. கீதை 10-20ல் பகவான் நானே ஆதி நானே அந்தம் என்றும் கீதை 7-6ல் நானே ஜகம் பூரா வுக்கும் உற்பத்தி ஸ்தானம் என்றும் சொல்லியிருக்கிறுர். இந்த விதமாக முதல் ஜோடியாகிய ப்ரஹ்மாக்ஷரத்தில் சிருஷ்டி செய்வதை புருஷோத்தமனுகிய ப்ரஹ்ம மென்றும் லயம் அடைவதை அக்ஷரபுருஷனென்றும் சொல்லப்படும் இரண்டாவது ஜோடியாகிய யஜ்ஞகர்மாவில் சிருஷ்டி செய்வதை கர்மாவென்றும் லயம் அடைவதை யஜ்ஞம் என்றும் சொல்லப்படும். மூன்றுவது ஜோடியாகிப பர்ஜன்ய அந்நத்தில் சிருஷ்டி செய்வது பர்ஜன்யம் என்றும் லயம் அடைவதை அந்நமென்றும் சொல்லப்படும்.

சென்னைப் பட்டணம் சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனிலுள்ள எடை குறிக்கும் மெஷினில் ஒரு அணு நாணயத்தை

ஒரு துவாரத்தின் வழியாக உள்ளே போட்ட பிற்பாடு தான் ஒரு எடை குறித்த டிக்கட்டு வெளியே வருகிறது. கிணற்றில் ஒரு செம்பை உள்ளே அமிழ்த்தினபிறகே ஒரு செம்பளவு தண்ணீரை வெளியே எடுக்கலாம். இந்த உதாரணங்களைப் போலவே லயம் (அர்ப்பணம்) செய்யப்படுகிறது எதுவோ அதுவே சிருஷ்டி ரூபமாய் வெளியே வருகிறது.

1. பிரஹ்ம - அக்ஷர ஜோடி = 26வது தத்துவமும் - 25வது தத்வமும் = அகாரண - காரணம்.

2. யஜ்ஞ - கர்ம ஜோடி = 23வது தத்வமும் 24வது தத்வமும் = சூக்ஷ்ம - காரணம்.

3. பர்ஜன்ய அந்ந ஜோடி = 22வது தத்வமும் 21 முதல் 1 ஈறுக உள்ள தத்வங்களும் = சூக்ஷ்ம - தூலம்.

அறுவடையாகிற தானியமே விதைகளாக விதைக்கப்பட்டு மறுபடியும் அறுவடையாகிற தானியத்தைக் கொடுக்கிறது. பிரக்ருதியின் தன்மை அதாவது தர்மம் இந்த விதமாக ஒரு சக்கரத்தைப்போல் எப்பொழுதும் இடைவிடாமல் சுற்றிக்கொண்டிருக்கிறது.

சிருஷ்டியின் கண்ணே வெளியே வந்த ஜீவனானவன் இந்த சக்கரத்தை பூரா சுற்றிக்கொண்டு திரும்ப உதித்த இடத்திற்கு போய்ச் சேரவேண்டியிருக்கிறது. உதித்த இடத்தை அடைந்த ஜீவன் மறுபடியும் வெளியே அனுப்பப்படமாட்டான். இந்த சக்கரத்தின் ஒரு பாதி ஜனன மரணமாகிய சம்சாரம். மற்றொரு பாதி விடுதலையாகிய மோக்ஷம். சம்சாரமாகிய ஒரு பாதி சக்கரத்திலேயே யிருக்கின்ற ஜீவர்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு அழகான திருஷ்டாந்தம் கொடுத்திருக்கிறார். ஒரு கிளியின் ஒரு காலில் ஒரு சங்கிலியின் முனையைக் கட்டி மற்றொரு முனையை ஒரு சக்கரத்தில் கட்டி யிருக்கிறது. கிளி சக்கரத்தின் ஒரு பாதியை வலம் வந்து மறுபாதியின் வழியாய் போகாமல் பயந்துகொண்டு திரும்பவும் வந்த வழியே புறப்பட்ட இடத்திற்குப் போய்ச் சேருகிறது. இந்த விதமாக கணக்கிலடங்காத தடவைகள் ஜீவர்கள் சம்சாரமாகிய சக்கரத்தின் ஒரு பாதியிலேயே கீழும் மேலுமாக சுழன்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த சுலோகத்திலுள்ள ப்ரஹ்மம் என்னும் பதத்திற்கு புத்தகப் பண்டிதர்கள் வேதம் என்று அர்த்தம் செய்திருக்கிருர்கள். அவர்கள் வேதம் பிரமாணமென்று ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். இதற்கு சான்று (அத்தாக்ஷி) எங்கும் இல்லை. பகவான் கீதை 2-52ல் நிர்வேதத்தை அடையவேண்டுமென்றும் கீதை 15-15ல் நான் வேதாந்தக்ருத், வேதவித், என்றும் சொல்லியிருக்கிருர். வேதம் என்ருல் அறியக் கூடியது அதாவது விஷயம். வேதாந்தம் என்ருல் வேதம் உதித்த இடம் அதாவது அறிகிறவன். ஆகையால் வேதாந்தம் பிரமாணமேயொழிய வேதம் பிரமாணம் இல்லை. இதைப்பற்றி இன்னும் விரிவாய் கீதை 2-52ன் வியாக்கியானத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆங்கு கண்டுகொள்க.

16 ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம் ந அநுவர்த்தயதி இஹ யஃ
அகாயுஃ இந்த்ரியராமஃ மோகம் பார்த்த ஸஃ ஜீவதி

(அ-ம்) ஹே பார்த்த! (அர்ச்சுன) எவன் இவ்விதமாக மேலே சொல்லியிருக்கிற சக்கரத்தை பூருவும் சுற்றி உதித்த விடத்திற்கு திரும்பி வருகிறதில்லையோ அவன் இங்கே பாபத்தில் உழன்று கொண்டும் இந்திரியங்களால் திருப்தி யடைந்து கொண்டும் விருதாவாக உயிர்வாழ்கிருன்.

(வி-ம்) இந்த சுலோகத்தில் இந்திரியாராமஃ என்னும் பதத்திற்கு நேர் எதிரிடையான ஆத்மரதிஃ (ஆத்மாராமஃ) அடுத்த சுலோகத்தில் உபயோகித்திருக்கிறது. மோக்ஷ தர்மம் 212வது அத்தியாயத்தில் சக்கரம், ப்ரதானம், ப்ரக்ருதி அல்லது காலத்தைப்பற்றி சொல்லியிருக்கிறது என்னவென்ருல் "ப்ரதானமென்னும் காலச் சக்ரமானது மூன்று உலகத்திலுமுள்ள எல்லாப் பிராணிகளிடங்களிலும் உருளைபோலச் சுற்றிக் கொண்டிருக்கிறது." கீதை 18-61ல் எல்லா ஜீவர்களையும் மாயையினுல் யந்திரத்தில் ஏற்றிவைத்து சுழற்றி விட்டுக்கொண்டிருப்பதாக பகவான் சொல்லியிருக்கிருர்.

இந்த 3-16 சுலோகத்தில் இந்திரியங்களில் மூழ்கியிருக்கும் இந்திரியாராமனை 'அகா' என்று சொல்லுகிருர். இதற்கு நேர் எதிரிடையான பதமாகிய 'அநகா' கீதை 3-3ல் உபயோகித்

திருக்கிறது. அடுத்த 3-17ல் இந்திரியங்களின் வசமாகாமல் மிருக சுபாவத்தை ஜயித்தவனை (அநகாவை) 'மாநவ' என்று சொல்லியிருக்கிறது.

17. யஃ து ஆத்மரதிஃ ஏவ ஸ்யாத் ஆத்மத்ருப்தஃ ச மாநவஃ
ஆத்மநி ஏவ ச ஸந்துஷ்டஃ தஸ்ய கார்யம் ந வித்யதே

(அ-ம்) (தன்னுடைய உண்மையாகிய சொரூபமாகிய அந்தர் யாமியாகிய ஆத்மாவையே முத்தம் கொடுத்துக்கொண்டு) இந்த ஆத்மாவினுடனேயே கிரீடை செய்பவனும், இந்த ஆத்மாவினிடமே திருப்தியை யடைந்தவனும், இந்த ஆத்மாவையே (தழுவிக் கொண்டு தேனை குடித்துச்கொண்டு) சந்தோஷத்தை அடைந்தவனுயுள்ள (இந்திரியங்கள் வசமாகாமல் மிருக சுபாவத்தை ஜெயித்த) மனிதன் (ஒரு சரீரத்தை விட்டு வேறு ஒரு சரீரத்தை அடைவதாகிய மறு பிறப்பாகிய) காரியத்தை அறிகிறதில்லை.

(வி-ம்) 24வது தத்வமாகிய கர்மாவினுடைய காரியங்களாகிய 23 முதல் 1 ஈருக உள்ள சத்வங்களெல்லாம் 'கார்ய' என்று இந்த சுலோகத்தில் கொடுத்திருக்கும் பதத்துக்கு அர்த்தமாகும். இவைகளே ஜீவர்களுடைய ஸ்தூல சரீரமும் சூக்ஷ்ம சரீரமுமாகும். 24வது தத்வம் ஜீவர்களுடைய காரண சரீரமாகும். ஸ்ரீ சங்கராச்சாரியாரும் அவரிடம் தங்களுடைய பகுத்தறிவை அடகு வைத்திருக்கும் புத்தக பண்டிதர்களும் 'கார்ய ந வித்யதே' என்பதற்கு செய்யவேண்டிய தொன்றுமில்லை என்று அர்த்தம் செய்திருப்பது தப்பு. காரணம் என்னவென்றால் பகவான கீதை 3-5லும் 3-33லும் தன்னை அறிந்தவனும்கூட ஏதாவது தொழிலில் அவனவன் இயல்பின் பிறகாரம் ஈடுபடாமல் இருக்கமுடியாது என்றும், கீதை 5-11ல் ஆத்ம சுத்திக்காக யோகிகள் சரீரத்தாலும் மனதாலும் புத்தியாலும் இந்திரியங்களாலும் தொழில்களைச் செய்கிறார்கள் என்றும், கீதை 18-11, 18-40ல் தேகத்தைத் தரித்த பிராணி மானுட தேவ பாதாள லோகத்திலிருந்தாலும் தொழிலில் ஈடுபடாமல் சும்மா இருக்கமுடியாதென்றும், கீதை 3-22ல் பகவானே இடைவிடாமல் தொழில்களில் ஈடுபட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். ஆகையால் தன்னை யறிந்தவன் இடைவிடாமல் அபிமானமற்ற தொழில்

களில் ஈடுபட்டிருப்பான். தன்னுடைய சுயநலத்தையே பெரிதாக மதித்து தனிமையான இடத்துக்கு ஓடிப்போய் தன்னுடைய ஆத்மாவில் அதே வேலையாய் தேன் குடித்துக் கொண்டிருக்கமாட்டான். குருக்களுக்கெல்லாம் அரசனுகிய வாசுதேவனுடைய கூட்டாளியானபடியால் இதர ஜீவர்களின் ஆத்ம முன்னேற்றத்துக்காக சதா பாடுபடுவான். இப்படிப்பட்டவனே ராஜ ரிஷி எனறு அழைக்கப்படுகிருன். ராஜ ரிஷி என்ருல் ஜனகர் புத்தரைப்போல் அரச குலத்தில் பிறந்திருக்க வேண்டுமென்ற நியமமில்லே. வாசுதேவ ஸ்திதியை அடைந்துள்ள எந்த பரம ஹம்ஸனும் ராஜ ரிஷியே. சரீரமாகிய ஜெயிலில் அவன் அடைபட்டிருக்கும் வரை, வாசுதேவனது கட்டளேயால் ஏற்பட்டவைகளேயெல்லாம் செய்ய கடமைப்பட்டிருக்கிருன். அவன் ஓவ்வொரு நாளும் வாசுதேவனிடம் சிறிது நேரம் தேன் குடித்துக் கொண்டிருக்கும் காரணத்தால் 'நான்சரீரம்' என்னும் உணர்ச்சி அவனுக்கு கிடையாது. ஆகையால் சரீர குணமாகிய வயோதிகம் மரணம் இவைகளே அவன் உணர்கிறதில்லே. கீதை 2-16லும் 'நவித்யதே' என்னும் பதங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. அங்கேயும் அறிகிறதில்லே என்பதே சரியான அர்த்தம்.

18. ந ஏவ தஸ்ய க்ருதேந அர்த்த²: ந அக்ருத்தேந இஹ கச்சந[5]
ந ச அஸ்ய ஸர்வபூ⁴தேஷு[4] கச்சித் அர்த்த²வ்யபாச்ரய:[5]

(அ-ம்) (இந்திரியங்களுடைய வசம் ஆகாமல் மிருக சுபாவத்தை ஜயித்த) அந்த மனிதனுக்கு தொழில்களில் ஈடுபட்டிருக்ருக்கும்பொழுதும் தொழில்களில் ஈடுபடாமல் சமாதி நிலேயில் இருக்கும்பொழுதும் சிறிதும் அபிமானமற்றவனுய் இருக்கிருன். எல்லாப் பிராணிகளிலும் எவனிடமாவது எந்த பயனேயும் உத்தேசித்து அவன் செல்லவேண்டிய அவசியமில்லே.

(வி-ம்) மேலான பயன் ஆகிய வாசுதேவ பதத்தை அடைந்திருப்பதால் கீழான பிரபஞ்ச பயன்களே உத்தேசித்து அவன் யாரிடமும் செல்லவேண்டிய அவசியமில்லே என்பது இந்த சுலோகத்தின் கருத்து.

19. தஸ்மாத் அஸக்த: சததம் கார்யம் கர்ம ஸமாசர
அஸக்த: ஹி ஆசரந் கர்ம பரம் ஆப்நோதி பூருஷ:

(அ-ம்) ஆகையால் அபிமானமற்றவனுய் பிரவிருத்திக் கேதுவாகிய தொழில்களில் நீ எப்பொழுதும் ஈடுபடு. ஏனென்முல் அப்படி அபிமானமற்று தொழில்களைச் செய்வதால் அந்த பூருஷ: (மனிதன்) அடுத்தபடி மேலேயுள்ள (25வது தத்வமாகிய அக்ஷரபுருஷ) நிலையை அடைகிருன்.

(வி-ம்) பூருஷ: என்முல் ஹம்சன். இவன் நேரே 26வது தத்வமாகிய புருஷோத்தமனைத் தொடமுடியாது. 25வது அக்ஷர புருஷனைத் தரிசித்த புருஷ: அல்லது பரமஹம்சன் அல்லது கூடஸ்தன் ஆனபிறகு தான் புருஷோத்தமனை அடையமுடியும். 24வது தத்வமாகிய சலனம், காமம், சித் சக்தியின் நடனத்திலிருந்து விடுபட்டவனே தாமரையிலையிலுள்ள தண்ணீரைப் போலவும் சிமெண்டு தரை மேலுள்ள முத்தும்பான்ற ரசத்தைப் போலும் ஒட்டாமல் பற்றில்லாமல் இருக்கமுடியும். வெறும் புத்தகத்தைப் படித்த பேச்சளவில் மாத்திரம் இந்த நிஷ்காம நிலை அடையமுடியாது என்று உணரவும். சாதனையில் சம்பாதிக்கப்பட்ட அனுபவத்தால் தான் அடைய முடியும்.

'ஸமாசர' என்னும் பதத்தில் ஸம், ஆசர என்னும் இரண்டு பதங்கள் உள்ளன. ஸம் என்முல் கூடவே சேர்ந்துகொண்டு, நன்முக என்று இரண்டு அர்த்தங்கள் உண்டு. ஆசர என்முல் ஈடுபடு அல்லது செய் என்று அர்த்தம். கர்மா அல்லது 24வது தத்வமாகிய சித் சக்தியுடன் கூடவே சேர்ந்துகொண்டு பிரவிருத்தி தொழிலில் ஈடுபடு என்று ஒரு அர்த்தம். தொழில்களில் ஏற்படும் ஒவ்வொரு நுணுக்கமான அம்சங்களிலும் பூரண கவனம் செலுத்தி அதாவது மேலெழுந்த வாரியாயில்லாமல் பிரவிருத்தி தொழில்களில் ஈடுபடு என்று மற்ருெரு அர்த்தம் பொருந்தும். பூருஷ என்னும் பதம் கீதை 3-36லும் கூட ஹம்சன் என்னும் அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறதை இங்கு கவனிக்கத்தக்கது.

பரம் என்முல் அடுத்தபடியாயுள்ள மேல் நிலையைக்குறிக்கும். எல்லாவற்றிக்கும் மேலான நிலையைக் குறிப்பதாக புத்தக பண்டிதர்கள் எழுதியிருக்கும் அர்த்தம் தப்பு.

20. கர்மணை ஏவ ஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா ஜநகாதய:
லோகஸங்க்ரஹம் ஏவ அபி ஸம்பச்யந் கர்த்தும் அர்ஹஸி

(அ-ம்) தொழில்களில் ஈடுபட்டதினலேயே ஜநகர் முதலியோர் உண்மையாக, முடிவான பதத்தை அடைந்தார்கள். உலக உபகாரத்தை உத்தேசித்தும்கூட நீ தொழிலில் ஈடுபடவேண்டும்.

(வி-ம்) ஜநகர் ஒரு கிரஹஸ்தர். மிதிலை நகரத்தில் ராஜவம்சத்தில் பிறந்தவர். இவரைப்பற்றி புராணங்களில் ஒரு கதை உண்டு. ஜநகருக்கும் இன்னும் சில சந்நியாசி சீடர்களுக்கும் வசிஷ்டர் பாடம் சொல்லிக்கொண்டு வந்தார். எல்லோரும் வந்து சேர்ந்தபோதிலும் ஜநகர் வருகிற வரைக்கும் வசிஷ்டர் காத்திருந்து பின் உபந்யாசம் செய்வது வழக்கமாயிருந்தது. ஜநகர் ராஜவம்சத்தைச் சேர்ந்தவராயிருப்பதால் அவருக்கு சலுகை காண்பிப்பதாக மற்றவர்களுக்கு அசூயை உண்டாயிற்று. இதை யறிந்த வசிஷ்டர் ஒரு நாள் தன்னுடைய சித்தியினல் மிதுலை நகரம் எரிவதுபோல் ஒரு தோற்றத்தை உண்டு பண்ணினார். பாடம் கேட்டுக்கொண்டிருந்த சந்நியாச சீடர்கள் எல்லாம் தங்களுடைய கமண்டலம் கோவணங்களைக் காப்பாற்ற பாடத்தை விட்டு ஓடிவிட்டார்கள். எரிந்துகொண்டிருந்த பட்டணத்துக்கே சொந்தக்காரராகிய ஜநகரோ மிதிலை அல்லது மித்யாபட்டணம் எரிந்தால் எனக்கு என்ன என்னுடைய தொன்றும நஷ்டமாக வில்லை என்று உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. சற்றுநேரம் பொறுத்து வசிஷ்டர் தனது சித்தியால் நெருப்பு பிடித்து எரியும் தோற்றத்தை நிவர்த்தித்தார். திரும்ப பாடத்திற்கு வந்த சந்நியாசிகள் ஜநகர் சலனமற்ற நிலையில் இருப்பதைப் பார்த்து வெட்கிப் போய் குருவினிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்கள்.

இந்த சுலோகத்தில் ஸம்பச்ய என்னும் பதம் வந்திருக்கிறது. இதைச் சேர்ந்த பதங்கள் ப்ரபச்ய என்பது கீதை 2-8லும் அபச்ய என்பது கீதை 11-13லும் பச்ய என்பது கீதை 11-15லும் விபச்ய என்பது கீதை 2-60லும் பகவான் உபயோகித்திருக்கிறார். புத்தகப் பண்டிதர்கள் இந்த பதங்கள் எல்லா

வற்றிற்கும் ஒரே 'பார்த்தல்' என்னும் அர்த்தத்தைப பொது வாக எழுதியிருக்கிறார்கள். இந்த பதங்கள் ஒவ்வொன்றிற்கும் சிறப்பு அர்த்தம் கீழ்கண்டபடி இருக்கிறதென்பதை அவர்கள் அறியார்கள்.

அபச்ய = திவ்ய கண்ணினால் வியஷ்டி பிரபஞ்சங்கள் அடங்கிய சமஷ்டி சரீரத்தைப் பார்த்தல்

பச்ய = திவ்ய கண்ணினல் சமஷ்டி சரீரத்தில் வியஷ்டி பிரபஞ்சங்களைப் பார்த்தல்

ப்ரபச்ய = ஊன (மாமிச) கண்ணினல் பார்த்தல்

ஸம்பச்ய = ஊகத்தினல் பார்த்தல்

விபச்ய = ஒருதரம் ஒரு அரை நொடிப்பொழுது ஞானக் கண் அனுபவம் வந்து பின் அந்த அனுபவம் விட்டு விலகின போது அவன் விபச்யனாகிறான்.

21. யத் யத் ஆசரதி ச்ரேஷ்ட்ட: தத் தத் ஏவ இதர: ஜந:
ஸ: யத் ப்ரமாணம் குருதே லோக: தத் அநுவர்த்ததே

(அ-ம்) (ப்ரபஞ்ச வியவகாரத்திலும் சரி ஆத்மவியவகாரத்திலும் சரி) மேலான பதவியிலிருப்பவர்கள் எதை எதைச் செய்கிறார்களோ, மற்ற பாமரர்களும் அதை அதையே செய்கின்றார்கள். மேலான பதவியிலிருப்பவர்கள் எதை பிரமாணமாக ஒப்புக்கொள்ளுகின்றார்களோ அதையே பாமரர்களும் பின்பற்றுகிறார்கள்.

(வி-ம்) பிரபஞ்சத்தில் பெரிய மனிதனாகக் கருதப்படும் ஒருவன் எவ்விதமாய் தலைமயிரை வெட்டிக்கொள்ளுகிறானோ, மீசையை வைத்துக்கொள்ளுகிறானோ, உடை தரித்துக் கொள்ளுகிறானோ அவ்விதமாக அவனைச் சேர்ந்த பாமரர்களும் பின்பற்றுவது உலகப் பிரசித்தமான விஷயம்.

22. ந மே பார்த்த அஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சக
ந அநவாப்தம் அவாப்தவ்யம் வர்த்தே ஏவ ச கர்மணி

(அ-ம்) மூன்று லோகங்களிலும் நான் செய்யத்தக்கது ஒன்றுமில்லை, நான் அடையாததாவதும் அடையத்தக்கதாவதும் இல்லை. இப்படியிருந்த போதிலும் நான் கர்மாவில் ஈடுபட்டவனுயிருக்கிறேன்.

(வி-ம்) இங்கே கர்மாவென்று சொன்னது நாகம் அல்லது பிரக்ருதியில் எப்பொழுதும் இடைவிடாமல் நாட்டியம் செய்து கொண்டிருக்கும் ஈச்வரசக்தி. இந்த சக்தியே எங்கும் வியாபித்து எல்லாப் பிராணிகளையும் தொழில்களில் ஈடுபடச் செய்கிறது. இந்த சக்தியினுல தான் சகல பிராணிகளும் ஜீவித்திருக்கிருர்கள். கீதை 7-9ல் நான் எல்லாப் பிராணிகளுடைய ஜீவனம் என்றும் 7-10, 11ல் நான் எல்லாப் பிராணிகளுக்கும் ஸநாதன பீஜம் (சுக்லம், ரேதஸ்) என்றும் எல்லாப் பிராணிகளுடைய தர்மத்திற்கு விரோதமல்லாத காமம் (சலிக்கும் சித் சக்தி) என்றும் பகவான் அருளியிருக்கிருர். இந்த விதமாக பகவானே தொழிலில் இடைவிடாமல் ஈடுபட்டிருக்கும்பொழுது அவருடைய சிருஷ்டிகளாகிய நாம் எவ்விதம் அரைநொடிப் பொழுது கூட சும்மா இருக்கமுடியும்? இந்த அர்த்தத்தையே பகவான் கீதை 3-5, 18-11, 5-11, 18-40ல் சொல்லியிருக்கிருர். மின்சாரத்திற்கு காரணமாயிருக்கும் இடைவிடாமல் சுழன்றுகொண்டிருக்கும் சக்கரம் நின்றுவிட்டால் மின்சார சக்தியின் உற்பத்தியும் நின்று போகும் இதைப் போலவே பகவான் தன்னுடைய சக்தியின் சலனத்தை ஒடுக்கிக்கொண்டால் சகலப் பிராணிகளும் லயத்தை அடைவார்கள். இதை கீழ் சுலோகங்களில் விவரமாய் சொல்லியிருக்கிறது.

23. யதி[3] ஹி அஹம் ந வர்த்தேயம் ஜாது கர்மணி அதந்த்ரித:[3]
மம வர்த்ம அநுவர்த்தந்தே மனுஷ்யா:[2] பார்த்த ஸர்வச:[5]

(அ-ம்) ஹே பார்த்த (அர்ச்சுன)! நான் ஓய்வு எடுத்துக் கொள்ளாமல் எப்பொழுதாவது கர்மாவில் ஈடுபடாமல் இருப்பேனுகில் நிச்சயமாக மனிதர்களும் என்னுடைய வழியை பூருவும் பின்பற்றுவார்கள் (அதாவது தொழில்களில் ஈடுபடாமல் சோம்பேறியாயிருப்பார்கள்).

24. உத்3ஸீதேயு: இமே லோகா: ந குர்யாம் கர்ம சேத் அஹம்
ஸங்கரஸ்ய ச கர்த்தா ஸ்யாம் உபஹந்யாம் இமா: ப்ரஜா:

(அ-ம்) நான் கர்மாவில் ஈடுபடவில்லையானால் இந்த பிரபஞ்சம் எல்லாம் (தொழில்களில் ஈடுபடாமல்) நாசத்தை யடையும். இந்த பிராணிகளெல்லாம் (தங்கள் தங்கள் தூல சூக்ஷும சரீரங்களை விட்டு) ஏகமாய் கலந்து லயத்தை (நாசத்தை) அடைவதற்கு நான் காரணமாய் விடுவேன்.

(வி-ம்) இங்கே ஸங்கரஸ்ய என்பதற்கு ஸ்ரீ சங்கராச்சாரியார் ஜாதிக் கலப்பு என்று அர்த்தம் எழுதியிருக்கிறார். பிரளயத்தில் ஜாதி எங்கிருக்கிறது கலப்பு உண்டாவதற்கு? பகவான் கீதை 8-16 முதல் 19 முடிய சுலோகங்களில் பிரம்மாவின் பகல் தோறும் சிருஷ்டி, இராத்தோறும் லயம் என்று சொல்லியிருக்கிறதை இங்கு கவனிக்கவும்.

25. ஸக்தா: கர்மணி அவித்3வாம்ஸ: யதா2 குர்வந்தி பா4ரத
குர்யாத் வித்3வாந் ததா2 அஸக்த: சிகீர்ஷு: லோகஸங்க்3ரஹம்

(அ-ம்) ஹே பாரத (அர்ச்சுனா)! அறியாமையோடு கூடிய பாமரன் அபிமானத்தோடு கூட தொழில்களைச் செய்வதைப் போல தன்னையறிந்த வித்வான் உலகத்தை உய்விக்கும்பொருட்டு அபிமானமின்றி (நிஷ்காமமாக) தொழில்களில் ஈடுபடவேண்டும்.

(வி-ம்) இந்த அர்த்தமுள்ள விஷயத்தையே முன் கீதை 3-20ல் பகவான் சொல்லியிருக்கிறார். இதையே மறுபடியும் வற்புறுத்தி சொல்லியிருக்கிறார். தன்னை அறிந்து தன் நிலையை விடாமல் நிஷ்காமமாய் தொழிலில் ஈடுபடுகிறவன் வித்வான். தன்னை யறியாமல் தேகமே தானென்றும், மனைவி புத்திர தன தான்யாதிகள் தன்னுடையதென்றும் அபிமானித்துத் தொழிலில் ஈடுபடுகிறவன் அவித்வான். கொட்டாங்கச்சியில் (ஓட்டில்) ஒட்டாமல் விடுபட்டு தனியாய் ஆடிக்கொண்டிருக்கும் கொப்பறைத் தேங்காய்க்கு வித்வான்களை ஒப்பிடலாம். கொட்டாங்

கச்சியில் (ஓட்டில்) ஒட்டாமல் விடுபட்டு தனியாய் ஆடிக்கொண் டிருக்கும் கொப்பறைத் தேங்காய்க்கு வித்வான்களை ஒப்பிடலாம். கொட்டாங்கச்சியில் (ஓட்டில்) கெட்டியாய் ஒட்டிக்கொண்டிருக் கும் (ஈஷிக்கொண்டிருக்கும்) இளநீர் தேங்காய்க்கு அவித்வானை ஒப்பிடலாம்.

26. ந புத்திபேதம் ஜநயேத் அஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம்
ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வாந் யுக்த: சமாசரந்

(அ-ம்) தொழில்களில் அபிமானத்தோடு கூடி ஈடுபட்டிருக் கும் அறியாமையோடு கூடிய பாமரர்களுடைய மனது குழப் பத்தை யடையும்படி (அனுபவமில்லாத புத்தக பண்டிதர்கள்) செய்யக்கூடாது. தன்னை யறிந்த வித்வான்கள் மனஸமாதானத் துடன் (சாந்தியுடன்) அபிமானமற்று தொழில்களில் ஈடுபடுவத னால் அவர்களையும் தங்களை பின்பற்றி எல்லா கர்மங்களிலும் ஈடு படச் செய்வார்கள்.

(வி-ம்) பின்னும் இந்த சுலோகத்தில் வித்வான் லக்ஷணம் யுக்த: அதாவது மனசமாதானத்தோடு கூடியவன் என்று சொல் லப்பட்டிருக்கிறது. புத்திபேதத்தைச் செய்யக் கூடாதென்று பகவான் எச்சரிக்கை செய்திருப்பது அனுபவமில்லாத புத்தக பண்டிதர்களையே. இவர்கள் அனுபவபூர்வமாக ஒன்றும் தெரியா விட்டாலும் புத்தகத்தைப்படித்த மாத்திரத்தால் வாசுதேவ நிலையை அடைந்திருப்பதாக பாசாங்கு செய்துகொண்டு, தங்களு டைய பாஷாண்ட மதங்களை வெகு ருசிகரமான வார்த்தைகளால் பாமரர்கள் மனதில் புகுத்தி தாங்கள் கெட்டது மல்லாமல் அவர் களையும் கெடுத்து விடுகிறார்கள். இதற்கு ஒரு அழகான உதா ரணம் ஒழிவிலொடுக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பிரவாகத்தில் குட்டிகளோடு அடித்துக்கொண்டு போகும் ஒரு கரடியை கரையிலுள்ள ஒரு ஆட்டிடையன் ஆடு என்று மயங்கின வனாய் தண்ணீரில் குதித்து நீந்திப்போய் கரடியைக் கட்டிக் கொள்ள கரடியும் ஆட்டிடயனை ஒரு தெப்பக்கட்டை இதைக் கொண்டு நாம் தப்பி கரையேறலாம் என்று அவனைக் கட்டிக் கொள்ள இருவரும் தண்ணீரில் மூழ்கி இறந்தார்கள்.

27. ப்ரக்ருதே: க்ரியமாணனி குணை: கர்மாணி ஸர்வச:[3][5]

அஹங்கார விமுடாத்மா கர்த்தா அஹம் இதி மந்யதே[4]

(அ-ம்) (சித் சக்தியாகிய) பிரக்ருதியின் குணங்களாலேயே எல்லாவிடங்களிலும் தொழில்கள் செய்யப்படுகின்றன. ஆனல் (24வது தத்வமாகிய) அஹங்காரத்திலும் அதன் கார்யமாகிய 23 முதல் 1 வரை தத்வங்களிலும் நான் என்னுடையதென்று) பின்னிக்கொண்டு மயக்கத்தை யடைந்திருப்பவன் இந்தத் தொழில்களை எல்லாம் செய்கிறவன், தானேயென்று கருதுகிறான்.

(வி-ம்) இந்த ஸ்லோகத்திலுள்ள அஹங்காரம் கீதை 7-4ல் சொல்லப்பட்டுள்ள அஹங்காரம், 8-4ல் உள்ள அதிபூதம், 13-6ல் உள்ள சங்காதம், 13-5லுள்ள அவ்யக்தம் ஆகிய 24வது தத்வம். விமூடாத்மா என்னும் பதத்தில் வி முன்கூட்டியதின் சிறப்பு அர்த்தம் தாற்காலிகமாக மயக்கமுள்ளவன் என்பதாம். சாதனத்தால் வாசுதேவன் அருள்பெற்று தன்னை அறியும் பொழுது இந்த மயக்கம் நீங்குமென்பது தொக்கி நிற்கின்றதென் பதை ஊகித்துக் கொள்ளவும். 'கர்த்தா அஹம்' என்பதற்கு விரிவுரை :—புருஷனுக்கு எதிரில் ப்ரக்ருதியானது 'மாயாப் பிர பஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை' என்று பாடிக்கொண்டு நடன மாடுகிறது. புருஷனும் பிரக்ருதியுடன் சேர்ந்துகொண்டு அந்தப் பாட்டையே கூடபாடிக்கொண்டு நடனத்தில் ஈடுபடுகிறான். வாசுதேவன் அருளால் தன்னைப் பிறித்து பிரக்ருதிக்கும் வேறாகப் பார்க்கும்பொழுது அந்தப் பாட்டை நிறுத்திவிட்டு 'மாயாப் பிரபஞ்சத்தில் ஆனந்தமேயில்லை' என்னும் பாட்டை பாடிக் கொண்டு நடனம் செய்கிறான். பிரக்ருதி இப்பொழுது தன்னுடைய பாட்டை நிறுத்திக்கொண்டு இவனுடைய பாட்டையே பாடிக்கொண்டு இவனுடன் கூடவே ஆனல் பின்னிக்கொள்ளாமல் நடனம் ஆடுகிறது. இப்பொழுது தன்னுடைய சரீரங்களாகிய இவ்விருவர் தோள்களிலும் வாசுதேவன் கைபோட்டுக் கொண்டு நடராஜ நர்த்தனம் செய்கிறார். இதுவே 'கோபிகளின் மெய்யான கோலாட்ட ஆனந்தமே குதூகலம்'.

28. தத்வவித் து மஹாபா3ஹோ கு3ணகர்ம விபா4கயோ:

கு3ணா: கு3ணேஷு வர்த்தந்தே இதி மத்வா ந
ஸஜ்ஜதே

(அ-ம்) (16 தூல தத்துவங்களும் 8 சூக்ஷும தத்துவங்களும் ஆகிய மொத்தம் 24 தத்வங்களாக பிரிந்திருக்கும் மூன்று) குணங்களாகிய சித் சக்தியை அறிந்தவனே பிரக்ருதியை அறிந்தவனுவான். ஹே மஹாபாஹோ! (அர்ச்சுனு) அவன் இந்த குணங்கள் பிரிந்து பலவிதமாய் கலந்து பிரவிருத்தியை உண்டு பண்ணுகிறதென்பதை அறிந்துகொண்டு தான் அந்த குணங்களோடு பின்னிக் கொள்வதில்லை.

(வி-ம்) இந்த சுலோகத்தில் உபயோகித்திருக்கும் தத்வம் என்னும் பதமும் முன் சுலோகமாகிய 3-27ல் உபயோகித்திருக்கும் ப்ரக்ருதி என்னும் பதமும் ஒரே 24வது தத்வத்தைக் குறிக்கின்றன. தத்வம் = ப்ரக்ருதி = வேதம் = க்ஷேத்ரம் = த்ரிகுணி = தைவம் = மலம் = கர்ம = 24வது தத்வம்.

29. ப்ரக்ருதே: கு3ணஸம்மூட4ா: ஸஜ்ஜந்தே கு3ணகர்மஸு

தாந் அக்ருத்ஸ்நவித3: மந்தா3ந் க்ருத்ஸ்நவித்
ந விசாலயேத்

(அ-ம்) (சித் சக்தியாகிய) பிரக்ருதியின் குணங்களால் ஜயிக்கப்பட்டு மயக்கத்தை அடைந்துள்ளவர்கள் அந்த ப்ரக்ருதியின் குணங்களை பின்னிக்கொண்டு அபிமானித்திருக்கிறுர்கள். அறியாமையும் மந்த புத்தியோடும் கூடிய அவர்களை, தன்னை அறிந்த ஞானிகள், புத்தி குழப்பம் அதிகரிக்கும்படி செய்யக்கூடாது.

(வி-ம்) க்ருத்ஸ்நம் = ஸர்வம் = விச்வம் = ப்ரக்ருதி = வேதம் = 24வது தத்வம். க்ருத்ஸ்நவித் = குணஸாம்யம் (சத்துவ, ரஜஸ், தமஸ், ஆகிய மூன்று குணங்களும் ஒன்றுக்கொன்று அதிகப்படாமல் சமமாயிருப்பது) பொருந்திய ப்ரக்ருதியாகிய 24 தத்வத்தை அறிந்தவன். இவனே வேதவித்.

30. மயி ஸர்வாணி கர்மாணி ஸம்ந்யஸ்ய அத்யாத்ம[4]
சேதஸா
நிராஸீ: நிர்மம: பூத்வா[4] யுத்யஸ்வ[4] விகதஜ்வர:[3]

(அ-ம்) (மனோவாக்கு காயத்தால் செய்யப்படும்) எல்லா தொழில்களையும் என்னுடைய (25வது தத்வமாகிய) பாபர்க்கு திக்கு அர்ப்பணம் செய்து, அதாவது அக்ஷரபுருஷனில் புத்தி நிலைத்துள்ளவனாய், அதாவது (24வது தத்வமாகிய) ஆசையையும் (23 முதல் 1 ஈறாக உள்ள தத்வங்களாகிய) மம என்பதையும் கடந்தவனாய், அதாவது (24வது தத்வமாகிய க்ஷரபுருஷனின் நடுக்கம்போன்ற) ஜ்வரத்தினின்றும் விடுபட்டவனாய், நீ யுத்தத்தைச் செய்வாயாக.

(வி-ம்) சல அல்லது க்ஷரபுருஷனானவன் அசல அல்லது அக்ஷரபுருஷனை அடைவதாகிய ஒன்றையே இந்த சுலோகத்தில் நான்கு விதமாக வர்ணித்திருக்கிறது. கீதை பூராவும் இந்த சுலோகத்திற்கு ஒப்பானதும் உயர்வான சுலோகம் வேறொன்றுமில்லை என்று சொல்லலாம். பகவான் இந்த சுலோகத்தில் சொல்லியிருப்பதை தன்னுடைய மதம் என்பதாக அடுத்த சுலோகத்தில் சொல்லுகிறார். இங்கே பகவான் சொல்லியிருப்பதை நன்றாய் கவனிக்கவும். முதலில் 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனை அடைந்து மன சமாதானமடைந்த பிறகு யுத்தத்தை நிஷ்காமமாகச் செய்யச் சொல்லுகிறார். அனுபவமில்லாத புத்தக பண்டிதர்களும் போலி சந்நியாசிகளும் பகவான் மதத்திற்கு நேர் மாறாக முதலில் ஈசுவரார்ப்பணமாகவும் நிஷ்காமமாகவும் கர்மங்களைச் செய், அதனால் மனதிலுள்ள பாபங்களெல்லாம் போகும், சலனமெல்லாம் போகும், பின்னால் நான் உனக்கு பிரஹ்மோபதேசம் செய்கிறேன், நீ ப்ரஹ்மமே ஆய் விடுவாய், என்று சொல்லி தாமும்கெட்டு பிறரையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மன சமாதானம் அடையுமுன் நிஷ்காம கர்மம் செய்ய முடியாதென்பதைப்பற்றி அநேக இடங்களில் விவரமாய் எழுதப்பட்டிருக்கிறது. இந்த சுலோகத்திலுள்ள அர்த்தத்தையே பகவான் கீதையில் இன்னும் பல இடங்களில் சொல்லியிருக்கிறார். கீதை 12-6லும் 18-57லும் எல்லா கர்மங்களையும்

எனக்கு சமர்ப்பி என்றும், 9-27ல் செய்யும் கர்மத்தையும் புசிக்கும் பதார்த்தங்களையும் எனக்கு அர்ப்பணம் செய் என்றும், 12-16, 14-25, 6-4ல் ஸர்வ ஆரம்பம், ஸர்வ சங்கல்பம் ஆகிய 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷனைக்கூட சித்தானந்த சமுத்திரத்தில் அர்ப்பணம் செய்யவேண்டுமென்றும் அருளியிருக்கிறார்.

இந்த ஸ்லோகத்திலுள்ள விகதஜ்வர:வும் கீதை 18-49ல் உள்ள விகதஸ்ப்ருஹ:வும் ஒரே அர்த்த முள்ளவை—வி எழுத்தை முன் கூட்டி சேர்த்ததால் தாற்காலிகமாக அந்த க்ஷர நடுக்கம் விட்டிருக்கிறது, பூர்த்தியாய் ஒரேயடியாய் விட்டுப்போகவில்லை என்று அர்த்தம் செய்துகொள்ளவேண்டும். அதாவது மேல் ஸ்திதியை தொட்டு நழுவி பின்னும் தொட்டு நழுவியிருக்கும் நிலையில் இருக்கிறான் என்பது பொருள்.

31. யே மே மதம் [3]இதம் நித்யம் அநு[2]திஷ்டந்தி மாநவா:
[5]ச்ர[3]த்[4]தாவந்த: அநஸூயந்த: முச்யந்தே தே அபி [4]கர்மபி:

(அ-ம்) நான் மேலே சொல்லியிருக்கிற என்னுடைய இந்த முடிவான நிச்சயமாகிய மதத்தை எப்பொழுதும் (இடைவிடாமல் அடிக்கடி) பின்பற்றி எந்த பாமர மனிதர்கள் சிரத்தை (ஊக்கம்) உடையவர்களாயும் அஸூயை (பொறாமை) இல்லாதவர்களாயும் நடந்துகொள்ளுகிறார்களோ, அவர்கள் (24வது தத்வமாகிய) கர்மாவிலிருந்தும் கூட விடுபடுகிறார்கள். (அதாவது 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன் மூலமாக 26வது தத்வமாகிய புருஷோத்தம நிலையை காலக்கிரமத்தில் அடைகிறார்கள்)

(வி-ம்) இந்த சுலோகம் அக்ஷரபுருஷனைத் தொட்டு திரும்பி க்ஷரபுருஷ நிலைக்கு நழுவியிருக்கிறவனை நோக்கிச் சொல்லியிருக்கிறது. இதற்கு முந்தின 3-30வது சுலோகத்தில் திடசாந்தம் அல்லது சமத்தை அடைந்திருக்கும் அக்ஷரபுருஷனை நோக்கிச் சொல்லியிருக்கிறது.

சிரத்தா சத்துவகுணமுள்ளவளும் (25வது தத்வமாகிய) சூரியனுடைய புத்திரியென்றும் மோக்ஷதர்மம் 270வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சிரத்தாவந்த: = 24வது

தத்வமாகிய க்ஷரபுருஷன். அசூயை கீழ்கண்டவிதம் ஏற்படுகிறது. புருஷோத்தம ஸ்திதியை அடைந்த ஒரு நண்பன் நம்முடைய நன்மையை உத்தேசித்து வலுவில் அதை அடையும் கிரமத்தைச் சொல்ல முன்வருவான். அப்பொழுது 'இவனும் பிரபஞ்ச விவகாரத்தில் நம்மைப் போலவேயிருக்கிறான். இவனுக்கு ஆத்மபோதம் வந்திருக்கிறதென்பது வீண்பிதற்றல்' என்று எண்ணி அவனை சட்டை செய்யாமலிருத்தல் அசுயையாகும். உலகத்தில் பெரும்பான்மையோர்கள் இந்த அசுயை உள்ளவர்களே. வாசுதேவ அருள்பெற்ற மிகச்சிலரே ஆத்மபோதம் பெற்றவர்களின் வார்த்தைகளில் நம்பிக்கைவைத்து தாங்களும் புருஷோத்தம பதவியை அடைவார்கள். கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுடைய (ஆப்த) ஆத்ம நண்பன். கீதை 18-64ல் அர்ச்சுனா! நீ எனக்கு பிரியன். ஆகையால் இந்த ஹித (நன்மை பயக்கக்கூடிய) உபதேசத்தை உனக்குச் சொல்லுகிறேன் என்று அருளுகிறார். அர்ச்சுனன் அதை நம்பியதால் மேலான பதத்தை அடைகிறான். அசுயையால் நம்பாதவர்கள் எல்லோரும் கெட்டுப் போவார்கள் என்று அடுத்த 2-32 சுலோகத்தில் அருளுகிறார்.

32. யே து ஏதத் அப்4யஸூயந்த: ந அநுதிஷ்ட2ந்தி மே மதம்
ஸர்வஜ்ஞாந விமூ4டாந் தாந் வித்3தி4 நஷ்டாந் அசேதஸ:

(அ-ம்) ஆனால் எவர்கள் இந்த என்னுடைய மதத்தை தூஷித்துக்கொண்டு (அதில் சொல்லியிருக்கும் மார்க்கங்களை) சாதனம் செய்கிறதில்லையோ அவர்கள் தங்களுடைய (24வது தத்வமாகிய) ஸர்வத்தினுடைய அனுபவ ஞானம் (அறியாமையாகிய புகைப்படலத்தால்) மூடப்பெற்றவராயும் அதாவது பகுத்தறிவு (புத்தி) இல்லாதவர்களாய் கெட்டுப் போவார்கள் என்று நீ அறிந்துகொள்.

(வி-ம்) புத்தி நாசம் எந்த வரிசைக் கிரமத்தில் உண்டாகிறதென்பதை பகவான் கீதை 2-62, 63ல் விஷயங்களில் அபிமானம், விஷய போகங்களில் இச்சை, இந்த இச்சைக்கு தடையுண்டானபொழுது கோபம், அவிவேகம், புத்தி நாசம் உண்டாகு

மென்று முன்னமேயே அருளியிருக்கிறார். இதையே மறுபடியும் சுருக்கிச் சொல்லியிருக்கிறார்.

கீதை 3-30ல் அக்ஷரபுருஷனிடம் புத்தி நிலைத்திருக்க வேண்டுமென்னும் அர்த்தத்தில் அத்யாத்ம சேதஸா என்று சொல்லியிருக்கிற இடத்தில் புத்தியானது ஒளியில் (பிரகாசத்தில்) மூழ்கி இருக்கிறது. இங்கே அசேதஸ: என்று சொன்னவிடத்தில் புத்தி இருளில் மூழ்கியிருக்கிறதென்று உணரவும்.

33. ஸத்ருஸம்[3] சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதே:
ஜ்ஞாநவாந் அபி

ப்ரக்ருதிம் யாந்தி[4] பூதாநி நிக்ரஹ[3] கிம் கரிஷ்யதி

(அ-ம்) ஆத்ம அனுபவம் உள்ள ஞானியும்கூட தன்னுடைய குணத்துக்குத் தகுந்த பிறகாரம் நடிக்கிறான். (எல்லா) பிராணிகளும் (அவர்கள் குணங்களை ஒட்டி எல்லோருக்கும் அன்னையாகிய, குணியாகிய பிரக்ருதியை பின்பற்றிச் செல்லுகிறார்கள். (ஆகையால் அடத்தினால் சும்மா இருக்க முயல்வதாகிய) நிக்கிரகம் என்ன செய்யும்? (நிக்கிரகத்தால் ஒரு பிரயோஜனமுமில்லை).

(வி-ம்) விசுவாமித்திரருடைய நிக்கிரகம் மேனகையிடம் பலிக்காததுபோல உள்ளே பிரகாசமில்லாமல் வெளியே நிக்கிரக வேஷம் போட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்து போலி சந்நியாசிகளின் நிக்கிரகமும் அவர்களைக் கைவிட்டுவிடும் என்பதற்கு சந்தேகமில்லை. அவர்களில் சிலருடைய கெட்ட நடவடிக்கைகள் கோர்ட்டுகளுக்குக்கூட வந்து விசாரணை நடந்து கொண்டிருப்பதை நீங்கள் கேழ்விப்பட்டிருக்கலாம். வசிட்டர் அகஸ்தியர் ஜனகர் முதலானோர் இல்லற வாழ்விலிருந்தே பரமபதம் அடைந்திருக்கிறார்கள். பரமபதம் அடைவதற்கு துறவறமாகிய வெளிவேஷம் அவசியமே இல்லை.

கீதை 14-22ல் பகவான் திரிகுணாதீதனாகிய ஞானியின் லக்ஷணத்தைச் சொல்லியிருக்கிறார். பிரக்ருதியின் குணங்களாகிய சத்துவ குணமாகிய பிரகாசத்தைப் பொருந்தியிருக்கும் பொழுதும், ரஜோ குணமாகிய பிரவிருத்தியில் ஈடுபட்டிருக்கும் பொழுதும், தமோ குணமாகிய தூக்கம், மூடத்தில் இருக்

கும்பொழுதும் அவன் வெறுப்பு அடையமாட்டான். அவைகள் நிவிருத்தியானபொழுதும் விருப்புக் கொள்ளமாட்டான். மேலும் கீதை 18-59, 18-60ல் பகவான் அர்ச்சுனனைப் பார்த்துச் சொல்லுகிறார். "ஹே அர்ச்சுனா! பிரக்ருதியின் குணங்களுக்குட்பட்ட நீ எந்தத் தொழிலையாவது உன்னுடைய அவிவேகத்தினால் செய்யக்கூடாது என்று நிச்சயித்திருக்கிறாயோ அந்த தொழிலையே ப்ரக்ருதி உன்னைப் பரவசமாக்கி செய்விக்கும். சகல பிராணிகளுடைய இதயத்தில் இருப்பவனாகிய ஈச்வரன் தன்னுடைய மாயையினால் எல்லா ஜீவர்களையும் இயந்திரத்தில் ஏற்றிவைத்து சுழற்றி விடுவதைப்போல் பிரவிருத்திக்கச் செய்கிறார்". ஆகையால் ஸ்ரீ வித்தியாரண்ணியர் சொல்லியிருக்கும் வித்வத் ஸந்நியாசம் அதாவது ஆத்ம ப்ரசாதத்தோடுகூடிய சந்நியாசம் அல்லாத பாமரர்களால் இக்காலத்தில் வெறும் வெளிவேஷத்தோடு கூடிய போலி சந்நியாசம் அதாவது அடத்தால் நிக்கிரகம் செய்வது ஒருபயனையும் அளிக்காது.

34. இந்[3]த்ரியஸ்ய இந்[3]த்ரியஸ்ய அர்த்[2]தே ராக[3]த்[3]வேஷௌ வ்யவஸ்த்[2]திதௌ

தயோ: ந[5] வசம் ஆக[3]ச்சேத் தௌ[2] ஹி அஸ்ய பரிபந்[4]திநௌ

(அ-ம்) இந்திரியங்களிலும் இந்திரியங்களுடைய விஷயங்களிலும் விருப்பு வெறுப்பு என்னும் குணங்கள் இயல்பாய் மறைந்து நிற்கின்றன. அவைகள் இரண்டின் வசமாகி (அடிமையாகி)ப் போய் விடக்கூடாது. ஏனென்றால் அவைகள் இந்தப் பிராணிகளினுடைய சத்துருக்களாகும்.

(வி-ம்) மோக்ஷ தர்மம் 182வது அத்தியாயத்தில் 'இந்திரியங்கள் எனப் பெயர் வாய்ந்தவைகளான செவியும், மூக்கும், நாக்கும், த்வக்கும், கண்ணும் ஐந்து பூதங்களைச் சேர்ந்தவைகள் தாம்' என்று சொல்லியிருக்கிறது. பகவான் கீதை 15-7ல் மனதை ஆறாவது இந்திரியமாகச் சொல்லியிருக்கிறார். ஆகையால் இந்த சுலோகத்தின் உள் அர்த்தம்:—23வது தத்வமாகிய புத்தியானது 22வது தத்வமாகிய மனதின் வசமாகாமலும் 21 முதல் 17 ஈறாகவுள்ள இந்திரியங்கள் வசமாகாமலும் 24வது

தத்வமாகிய சலனத்தோடு கூடிய சித் சக்தியின் வசமாக வேண்டும். இதுவே இந்திரிய நிக்கிரகமென்றும், மனோ நிக்கிரகமென்றும், யோகமென்றும், ஜிதேந்திரியமென்றும் பலவிதமாகச் சொல்லப்படும்.

35. ச்5ரேயாந் ஸ்வத4ர்ம: விகு3ண: பரத4ர்மாத் ஸவநுஷ்2
டிதாத்
ஸ்வத4ர்மே நித4நம் ச்5ரேய: பரத4ர்ம: ப4யாவஹ:

(அ-ம்) உயர்வாகக் கருதப்படும் பிறருடைய மதத்தைப் பின்பற்றுவதைப் பார்க்கிலும் தாழ்வாகக் கருதப்படும் ஒருவனுடைய சொந்த மதத்தை பின்பற்றுவதே மேலான காரியம். சொந்த மதத்திலேயே பிராணனை விடுவதுகூட மேலான காரியம். (ஏனென்றால்) அந்நியருடைய மதமானது பயத்தை உண்டாக்கக் கூடியதாகும்.

(வி-ம்) பிரபஞ்ச சுகத்துக்காக ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறுகிறவர்கள் இரண்டு மதத்திலும் ஆத்ம போதமடையாமல் முதல் மதத்தில் பாபங்களுக்கு விதித்திருக்கும் நரகத்தையும் பின் இரண்டாவது மதத்தில் பாபங்களுக்கு விதித்திருக்கும் நரகத்தையும் அனுபவிக்கவேண்டிவருமே என்று அவர்களுடைய மனது இரண்டு பங்கு சஞ்சலத்தை அடையும். ஆகையால் சொந்த மதத்திலேயே இருப்பவர்களுக்கு ஆத்ம போதம் அடையாவிட்டாலும் மனச் சஞ்சலம் மதம் மாறினவர்களைவிட குறைவாயிருக்குமென்று ஊகித்துக்கொள்ளவும்.

இந்த 3-35ல் உள்ள முதல் வரியும் கீதை 18-47ல் உள்ள முதல் வரியும் கொஞ்சம்கூட மாறாமல் அப்படியே ஒன்றாய் இருக்கிறது. 18-47ல் இரண்டாவது வரியிலுள்ள 'ஸ்வபாவ நியதம் கர்ம குர்வந் ந ஆப்நோதி கில்பிஷம்' என்பதற்கு அர்த்தம் (25வது தத்வமாகிய அத்யாத்மா அல்லது) அக்ஷரபுருஷனில் நிலைத்துள்ள சமாதான மனதுடன் பிரவிருத்தி செய்தால் பாபம் அணுகாது.

கீதை 2-38ல் சுகதுக்க இரட்டைகளை ஸாம்யப்படுத்தி (சமப்படுத்தி) யுத்தம் செய்தால் பாபம் இல்லையென்று முன்பே பக

வான் அருளியிருக்கிறார். கீதை 2-39ல் ஸமாதான புத்தியில் இருந்தால் கர்ம முடிச்சைத் தாண்டுகிறான் என்று சொல்லியிருக்கிறது. இதுவே கீதையின் மதம் என்று கீதை 3-31ல் பகவான் சொல்லியிருக்கிறார்.

இந்த 3-35 சுலோகத்திலுள்ள தர்மம் என்னும் பதத்திற்கு வர்ண ஆசிரம கர்மம் என்று அர்த்தம் செய்துகொண்டால் அவரவர் வர்ண ஆசிரமம் தாழ்வாகக் கருதப்பட்டாலும் உயர்வாகக் கருதப்படும் பிறருடைய வர்ண ஆசிரமத்தைப் பின்பற்றுமல் சொந்த வர்ணுசிரமத்தை பின்பற்றுவதே மேலான காரியம் என்று சுலோகத்தின் அர்த்தம் ஆகும். இப்படிக்கிருக்க ஸ்ரீ சங்கராச்சாரியார் பிரஹ்மச்சாரி ஆசிரமத்திலிருந்து சந்நியாசி ஆசிரமத்தை ஏற்றுக்கொண்டதாகவும் காவிவேஷம் பூண்டவர் ஒரு ஸ்திரீயை வாதத்தில் ஜெயிக்கும் நிமித்தம் தன்னுடைய சித்தியினுல் தன்னுடைய சரீரத்தை காட்டில் ஒரு குகையில் ஒளித்து வைத்துவிட்டு இறந்துபோன அமருகன் என்னும் அரசனுடைய தேகத்தில் புகுந்து அந்த அரசனுடைய பத்தினிமார்களுடன் ஸரச சல்லாபம் செய்ததாகவும் அவருடைய சரித்திரத்தில் எழுதியிருக்கிறது. தர்ம விரோதமானவையென்றும் மதத்துக்கே இழிவைக் கொடுக்கக்கூடிய இப்பேர்ப்பட்ட விஷயங்களை சரித்திரத்திலிருந்து களைந்துவிடுவது நல்லதென்றும் தோன்றுகிறது.

இந்த சுலோகத்தில் விகுண என்னும் பதம் வந்திருக்கிறது. குண என்னும் பதத்திற்கு வி என்னும் எழுத்தை முன் கூட்டியதால் குணத்துக்கு ஒருபடி கீழ் என்ற அர்த்தம் கொடுக்கிறது. இதே மாதிரியே விஜ்ஞானம், விமல, விகுண என்னும் பதங்களுக்கு ஜ்ஞான, மல, குண என்னும் பதங்களுக்கு ஒருபடி கீழாகவே அர்த்தம் பண்ணிக்கொள்ளவேண்டும். இவ்விதமாக ஞானம் = அபேத ஞானம், விஜ்ஞானம் = பின்னஜ்ஞானம். ஆகையால் ஸ்ரீ சங்கராச்சாரியாரும் அவரைப் பின்பற்றும் புத்தகப் பண்டிதர்களும் ஜ்ஞானம் = சாஸ்திர அல்லது புத்தக ஞானம், விஜ்ஞானம் = அனுபவஞானம் என்று அர்த்தம் செய்திருப்பது தப்பு என்று முன்னமே தெளிவாய் எழுதியிருக்கிறேன். அவா

வர் அனுபவத்திலிருந்து நான் சொல்வதின் உண்மையை தெரிந்து கொள்ளவும்.

36. அத கேந ப்ரயுக்த: அயம் பாபம் சரதி பூருஷ:
அநிச்சந் அபி வார்ஷ்ணேய பலாத் இவ நியோஜித:

(அ-ம்) அர்ச்சுனன் கேழ்க்கிறுன் :—ஹே இடையர் குலத்தில் பிறந்தவரே! (கிருஷ்ண பகவானே) அப்படியானுல் இச்சியாதிருந்தும்கூட இந்த மனிதன் பலவந்தத்தினுல் கட்டுப்பட்டதைப்போல எதனுல் பிரேரிப்பிக்கப்பட்டு (தூண்டப்பட்டு) பாபத்தொழில்களைச் செய்கிறுன்?

(வி-ம்) கீதை 3-19ல் பூருஷ: என்னும் பதம் வந்திருக்கிறது. இந்த 3-36லும் பூருஷ: என்னும் பதம் அதே அர்த்தத்தில் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஒரு பதத்திலுள்ள குறில் எழுத்து நெடில் எழுத்தாக மாற்றப்பட்டால் நேர் எதிரிடையான அர்த்தத்தைக் கொடுக்குமென்று நிதநம் = மரணம், நிதாநம் = உற்பத்தி முதலிய உதாரணங்களுடன் கீதை 2-4ன் வியாக்கியானத்தில் முன்னமே சொல்லியிருக்கிறேன். அதைப் போலவே பூருஷ: என்ருல் கூட்டுக்கும் ஆவிக்கும் (சரீரத்துக்கும் சரீரிக்கும்) உள்ள வித்தியாசத்தைப் பிரித்து உணர்ந்தவனுகிய 24வது தத்வத்திலிருப்பவன்—புருஷ: என்ருல் 25வது தத்துவமாகிய அக்ஷரபுருஷ நிலையை அடைந்தவன்.

37. காம: ஏஷ: க்ரோத: ஏஷ: ரஜோகுண ஸம் உத்பவ:
மஹாசந: மஹாபாப்மா வித்தி ஏநம் இஹ வைரிணம்

(அ-ம்) ரஜோகுணத்தோடு கூடவே பிறந்த இந்த ஆசையும், கோபமும் (எவ்வளவு கிடைத்தாலும்) திருப்தியடையாததும் மிகுந்த பாபத்தோடு கூடியதுமாம். இவ்வுலகத்தில் இவைகளை (உன்னுடைய) சத்துருக்களாக அறிந்து கொள்.

(வி-ம்) கீதை 14-17ல் ரஜோகுணத்தோடுகூட லோபம் பிறக்கின்றது என்று பகவான் சொல்லியிருப்பதால் ஆசையும் கோபத்தோடும் கூட லோபத்தையும் மனிதர்களின் சத்துருக்

களாக கொள்ளவேண்டும். இந்த மூன்று குணங்களே நரகத்தின் கதவுகள் என்று பகவான் கீதை 16-21ல் அருளியிருக்கிறார். இவைகளில் 24வது தத்வமாகிய காமத்துக்கு எதிரிடையாகிய 25வது தத்வமாகிய சமத்தையடைந்து காமத்திலிருந்து விடுபட்டவனே தீரன் என்று மோக்ஷ தர்மம் 257வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்த மூன்று சுலோகங்களிலும் புருஷோத்தமன் வரிசைக் கிரமமாக கோசங்களினால் (திரைகளினால்) சூக்ஷ்ம தூல ரூபங்களை யடைகிற விஷயத்தைப்பற்றி பகவான் வெகு அழகாக உதாரணங்களோடு சொல்லுகிறார்.

38. தூமேந[4] ஆவ்ரியதே வஹ்நி யதா[2] ஆதர்ச:[3] மலேந[5] ச
யதா[2] உல்பேந[3] ஆவ்ருத: கர்ப:[3][4] ததா[2] தேந இதம்[3]
ஆவ்ருதம்

(அ-ம்) (1) எப்படி நெருப்பு சாம்பலினால் மூடப்படுகிறதோ

(2) எப்படி கண்ணாடி அழுக்கினால் மூடப்படுகிறதோ

(3) எப்படி சிசு (குழந்தை) கர்ப்பப் பையால் மூடப்படுகிறதோ, அந்தவிதமாகவே புருஷோத்தமனுடைய சரீரமாகிய பரப்ரக்ருதி மூடப்படுகிறது.

(வி-ம்) தூமம் என்பதற்கு புகை என்று அர்த்தம் புத்தக பண்டிதர்களால் கொடுத்திருப்பது தப்பு. ஏனென்றால் புகை நெருப்பை மறைக்க முடியாது. தூமம் என்பதற்கு சாம்பல் என்பது தான் சரியான அர்த்தம். ஒரு தணல் கட்டையை வெளியே இழுத்துப் போட்டால் தானாகவே சாம்பல் மூடிக்கொள்ளும். 24வது தத்வமாகிய அபரப்பிரக்ருதி, அல்லது அவ்யக்தம் அல்லது ப்ரதானம் இங்கே சாம்பலுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. இதினின்று சூக்ஷ்ம தூல சிருஷ்டிகள் உண்டாகின்றன. இந்த சாம்பலாகிய அவ்யக்தத்தில் ஜீவர்களுடைய காரண சரீரங்கள் அடங்கியிருக்கின்றன. இது முதல் மூடம். இதம் என்னும் பதத்தை ப்ரப்ரக்ருதி என்னும் அர்த்தத்தில் கீதை 2-17ல் பகவான் உபயோகித்திருக்கிறார். இதே அர்த்தத்திலேயே இந்த 3-38லும் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

(2) பிரக்ருதியானது கண்ணுடியைப்போல் பிரதிபிம்பிப்பதால் இதற்கு பிரதானம் என்று பெயர் வந்தது. 23வது தத்வமாகிய புத்தி, 22வது தத்வமாகிய அஹங்காரம், 21 முதல் 17 ஈருக உள்ள தத்வங்களாகிய பஞ்ச மகா பூதங்கள் ஒன்று கூடின சூக்ஷ்ம சரீரம் அல்லது லிங்க சரீரம் அழுக்குக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. இது இரண்டாவது மூடம்.

(3) 16 முதல் 1 ஈருக உள்ள தத்வங்களாகிய தூல சரீரம் கர்ப்பப்பைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. இது மூன்ருவது மூடம்.

கீதை 7-5ல் சொல்லப்பட்டிருக்கும் ஜீவ தத்வமாகிய 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன் மேலே சொன்ன மூன்று மூடங்களால் மூடப்பட்டிருக்கிறது. இப்படி மூடப்பட்ட புருஷனுக்கு 'பூருஷ' என்னும் பெயரை பகவான் கொடுத்திருக்கிறுர். இந்த பூருஷனைத் தான் 24வது தத்வமாகிய ஆசை அல்லது பாசம் நரகத்துக்கு இழுக்கிறது.

39. ஆவ்ருதம் ஜ்ஞாநம் ஏதேந ஜ்ஞாநிந: நித்யவைரிணு
காமரூபேண கௌந்தேய துஷ்பூரேண அநலேந ச

(அ-ம்) ஹே கௌந்தேய (அர்ச்சுன)! நெருப்பானது (உணவு எவ்வளவு கொடுத்தாலும்) திருப்தி யடையாதது போலவும் (25வது தத்வத்திலிருக்கும்) ஞானியினுடைய நிலைபெற்ற சத்துருவாயுமுள்ள (ஆசையாகிய 24வது தத்வமாகிய) காமத்தின் ரூபமாகிய இதனல் சித் ஜோதியாகிய ஞானமானது மறைக்கப்படுகிறது.

(வி-ம்) இந்த சுலோகத்தில் காமம் ஒன்றே சொல்லியிருந்தபோதிலும் நரகத்தின் துவாரமாகிய இதர கோபம் லோபத்தைதையும் கூட்டிக்கொள்ளவேண்டும். இந்த சுலோகத்தில் அநல் என்னும் பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. கீதை 3-38ல் வன்னி என்னும் பதமும் 8-24ல் அக்னி என்னும் பதமும் வந்திருக்கிறது. அநல் என்னும் பதம் தூல நெருப்பைக் குறிக்கும். வன்னி என்னும் பதம் ஸ்தூல நெருப்பையும் சித் ஜோதியையும் குறிக்கும். அக்னி என்னும் பதம் சித் ஜோதியை மாத்திரம் குறிக்கும்.

இந்த காமம் முதலிய ரஜோகுணங்களின் இருப்பிடத்தை அடுத்த சுலோகத்தில் பகவான் சொல்லுகிருர்.

40. இந்த்[3]ரியாணி மந: பு[3]த்[4]தி: அஸ்ய அதி[4]ஷ்ட்டா[2]நம் உச்யதே
ஏதை: விமோஹ்யதி ஏஷ ஜ்ஞாநம் ஆவ்ருத்ய தே[3]ஹிநம்

(அ-ம்) (21 முதல் 17 ஈருக உள்ள தத்வங்களாகிய) இந்திரியங்களும் (22வது தத்வமாகிய) மனதும் (23வது தத்வமாகிய) புத்தியும் காமம் முதலிய ரஜோ குணங்களாகிய இவைகளினுடைய இருப்பிடம் என்று சொல்லப்படுகிறது. இவைகள் சித்ஜோதியாகிய ஜ்ஞானத்தை மறைத்து (25வது தத்வமாகிய) அக்ஷரபுருஷனுக்கு (தான் 24வது தத்வமாகிய க்ஷரபுருஷனென்னும்) மயக்கத்தை உண்டு பண்ணுகிறது.

(வி-ம்) 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன் அல்லது பரப்ராக்ருதி 24வது தத்வமாகிய அபாப்ரக்ருதியில் மாத்திரம் இருந்துகொண்டு கீழ் 23வது தத்வமாகிய புத்தி முதலியவைகளுக்குச் செல்லாமலிருந்தால் அப்போது மோகம் (மயக்கம்) இல்லை. 23 முதல் கீழ் உள்ள தத்வங்களுக்குச் செல்லும் பொழுது, நின்று கொண்டிருக்கும் ரயில் வண்டியிலுள்ள மனிதன் ஓடிக்கொண்டிருக்கும் ரயில் வண்டியைப் பார்த்து தன்னுடைய வண்டியும் ஓடுகிறது என்று மயக்கத்தை அடைவதைப் போல அந்த 23வது முதல் கீழ் உள்ள தத்வங்களின் சலனத்தை தன் மேல் ஏற்றிக்கொண்டு தானும் சலிப்பதாக மோகத்தை அடைகிருன். பிரக்ருதியின் காரியங்களாகிய 23 முதல் கீழே யுள்ள தத்வங்களில் கலந்து பின்னிக் கொள்வதால் புருஷன் பிறப்பு இறப்பாகிய சம்சாரத்தை அடைகிருன் என்று பகவான் கீதை 13-20லும் 13-21லும் சொல்லியிருக்கிருர்.

கீதையில் 'ஞானம்' என்னும் பதம் 24வது தத்வம், 25வது தத்வம், 26வது தத்வமாகிய மூன்றுக்கும் ஆங்காங்கே உபயோகப் படுத்தப் பட்டிருக்கிறது. ஆகையால் இந்த ஞானங்களை ஒன்றுக் கொன்று உயர்வாகக் கொள்ளவேண்டும். இம்மூன்றில் கீழ்ப்படையானது 24வது தத்வமாகிய க்ஷரபுருஷ ஞானம் அல்லது விஞ்

ஞானம். இதற்கு உயர்ந்தது கீதை 5-16ல் சொல்லப்பட்ட 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷ ஞானம் அல்லது பரம் ஞானம். இதற்கும் உயர்ந்தது கீதை 14-1ல் சொல்லப்பட்ட புருஷோத்தம ஞானம் அல்லது உத்தம ஞானம். ஆகையால் ஸ்ரீ சங்கராசாரியாரும் அவரிடம் தங்கள் மூளையை அடகு வைத்திருக்கும் புத்தக பண்டிதர்களும் ஞானம் என்பதற்கு புத்தக ஞானம் என்றும் விஞ்ஞானம் என்பதற்கு அனுபவ ஞானம் என்றும் அர்த்தம் சொல்லுவது சுத்த தப்பென்று அனுபவத்தால் அறிந்துகொள்ளவும்.

41. தஸ்மாத் த்வம் இந்த்ரியாணி ஆதௌ நியம்ய
பரதர்ஷப
பாப்மாநம் ப்ரஜஹி ஹி ஏநம் ஜ்ஞாந விஜ்ஞாந நாசநம்

(அ-ம்) ஹே பரதவம்சத்தில் ரிஷபம் போன்றவனே (அர்ச்சுனா)! ஆகையால் முதல் காரியமாக நீ இந்திரியங்களை அடக்கி 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷ) ஞானத்தையும் (24வது தத்வமாகிய க்ஷரபுருஷ) விஞ்ஞானத்தையும் நாசம் செய்கிறதும் எல்லா பாபங்களுக்கும் காரணமாயிருக்கிறதுமான காமமாகிய இதை கொல்வாயாக.

(வி-ம்) இந்த சுலோகத்திலுள்ள ஞான விஞ்ஞானம் வித்யா அவித்யா இரட்டையைக் குறிக்கிறது. கீதை 13-2ல் ஸர்வ க்ஷேத்திரத்திலிருக்கும் தான் க்ஷேத்திரஜ்ஞனென்னும் அனுபவ ஞானமே ஞானமென்றும் இதையே பகவானுடைய மதமென்றும், கீதை 13-11ல் அத்தியாத்மத்தில் (25வது தத்வத்தில்) நிலைபெற்று நின்றுகொண்டு க்ஷேத்திர தத்துவத்தை அன்னியமாக பார்க்கிற ஒன்றே ஞானம் என்றும், இதைத் தவிர மற்ற எல்லாம் அஞ்ஞானம் என்றும் பகவான் தள்ளுபடி செய்திருப்பதால், விஞ்ஞானம் கூட அஞ்ஞானத்தில் அடங்கிபோயிருக்கிறதென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. விஜ்ஞானத்தை அஷ்டபுரி ஜ்ஞானமென்றும், ஜ்ஞானத்தை நவபுரி ஜ்ஞானமெனறும் அழைப்பதுண்டு.

42. இந்த்ரியாணி பராணி ஆஹு: இந்த்ரியேப்ய:
பரம் மந:
மநஸ: து பரா புத்தி: ய: புத்தே: பரத: து ஸ:

43. ஏவம் புத்தே: பரம் புத்வா ஸம்ஸ்தப்ய ஆத்மாநம் ஆத்மநா
ஜஹி சத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம்

(அ-ம்) 21 முதல் 17 ஈறுன தத்வங்களான) இந்திரியங்கள் (அவைகளுக்கு கீழுள்ள தத்வங்களைவிட) உயர்ந்தவை என்றும் (22வது தத்வமாகிய) மனம் இந்திரியங்களைவிட உயர்ந்ததென்றும் (23வது தத்வமாகிய) புத்தி மனதைவிட உயர்ந்ததென்றும் (24வது தத்வமாகிய ஸ: வாகிய அதாவது க்ஷரபுருஷனுகிய) அவன் புத்தியைவிட உயர்ந்தவனென்றும் (தன்னையறிந்தவர்கள்) சொல்லுகிருர்கள். இந்த விதமாக (23வது தத்வமாகிய வியஷ்டி ஜீவ) புத்திக்கு உயர்ந்ததான (24வது தத்வமாகிய சமஷ்டி புத்தியாகிய) க்ஷரபுருஷனை அனுபவத்தால் அறிந்துகொண்டு (அல்லது வியஷ்டி புத்தியை சமஷ்டி புத்தியில் அர்ப்பணம் செய்து அதாவது கீதை 2-49ல் பகவான் சொன்ன பிறகாரம் சமஷ்டி புத்தியில் சரணமடைந்து க்ஷரபுருஷனை அனுபவத்தால் அறிந்துகொண்டு) ஹே மஹாபாஹோ (அர்ச்சுனு)! ஜயிப்பதற்கு அருமையான காம (ஆசை) ரூபத்தோடு கூடிய (24வது தத்வமாகிய க்ஷரபுருஷனையும்கூட கீதை 8-12, 13ல் சொல்லப்பட்ட யோகதாரணையினுலும் 25வது தத்வமாகிய அக்ஷரபுருஷன் மூலமாய் 26வது தத்வமாகிய புருஷோத்தமனை தரிசிப்பதாலும்) ஜயிப்பாயாக.

(வி-ம்) கீதை 8-12ல் சொல்லப்பட்ட யோகதாரணையும் 8-13ல் சொல்லப்பட்ட புருஷோத்தம தரிசனமும் கீழே விவரிக்கப் பெற்றிருக்கிறது. பத்து இந்திரியங்களையும் மனதில் அடக்கி இப்படிப்பட்ட மனதை புத்தியில் நிறுத்தி இப்படிப்பட்ட புத்தியை அதினுடைய உற்பத்தி ஸ்தானம் (இடம்) ஆகிய அவ்யக்தத்தில் வைக்கும் யோகதாரணையில் ஊன்றி, ஓம் என்றும் ஏகாக்ஷரம் என்றும் சொல்லப்படும் அக்ஷரபுருஷனை உள்ளுக்குள் இழுத்து அதாவது அணுரூபமாகிய அக்ஷரபுருஷனுகிய வியஷ்டியை சமஷ்டியாகிய புருஷோத்தமனிடத்து சேர்ப்பித்து புருஷோத்தமனை தரிசிக்கவேண்டும் என்பதாம். இந்த சுலோகத்தினுள்ள அர்த்தத்தையே கதா உபநிஷத்தில் 3-10, 3-11ல் சொல்லியிருக்கிறது.

ஹரி ஓம் தத் ஸத்.

பிழை திருத்தங்கள்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	6	கௌசிகாகி	கௌசிதாகி
7	7	கற்பனை	கற்பவை
30	25	அஹலோகே	இஹலோகே
33	1	ஆப்நுத்யாத்	அபநுத்யாத்
36	27	ஆகமாபாயிநா:	ஆகமாபாயிந:
41 42	19 1	புருஷ: ஸ:	புருஷ: ஸ: பர:
48	5	ஆபராணி	அபராணி
48	23	ஆசனங்கனை	ஆசனங்களை
51	1	29	26
51	2	பிராணிகள் மறைந்து	பிராணிகள் உற்பத்தியாகி, அதிலேயே மறைந்து
55	11	நித்திரை தன்னில்	கிட்ட நெருங்கி
59	23	பஹுந்	பஹூந்
60	27	சுவர்க்கலேக	சுவர்க்கலோக
65	8	அபிச்ரமநாஸ:	அபிக்ரமநாஸ:
72	3	அர்த்தம்	அர்த்த:
72	27	பியோசனம்	பிரயோசனம்
75	4	இதுகாலும்	இதுகாறும்
77	27	அதாது	அதாவது
83	12	ஸ்ரீ கோவிந்த	ஸ்ரீ கௌட
83	21	கவிலம்	கலிலம்
83	28	ச்ரோதவ்யஸ்ய	ச்ருதஸ்ய
83	29	ச்ருதஸ்ய	ச்ரோதவ்யஸ்ய
85 85	7 10	'ஸ்ரீ சங்கராச்சாரியார்' முதற்கொண்டு 'சொல்லியிருக்கிறார்' வரைக்கும்	இந்த வரிகளை அடித்து விடவும்
85	26	குணகாம்ய	குணசாம்ய
90	19	மருதை	மதுரை
93	15	நிவர்த்தந்தே	நிவர்க்ததே
96	12	வியுக்தை: விஷயாந்	வியுக்தை: து விஷயாந்
96	26	மார்ப்பு	மார்பு
119	11	பண்மை	பன்மை
120	22	ச்ரேய	ச்ரேய:
122	22	யஜ்ஞுபாவிதா:	யஜ்ஞாபாவிதா:
129	16	இந்த்ரியபராம:	இந்த்ரியாராம:
134	28	கிஞ்சக	கிஞ்சந
142	17	2-32	3-32

கோயில் பிரஸ்,
திருச்சி.